நேபாளச் சிறுவனை சந்தோசப்படுத்திய ரொனால்டோ



பக். 23


# உதயன்

சுடர் 30 | கதிர் 277 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆவணி 13, ஞாயிற்றுக்கிழமை 30.08.2015


# கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டாராம் பிரபா

## கருணா வெளியிடும் புதுக் கதை இது

யாழ்ப்பாணம், ஓக. 30

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், போரின் இறுதிக் கட்டத்தில் தனது கைத் துப்பாக்கியால் தன்னைத்தானே, சுட்டுத் தற்கொலை செய்து கொண் டார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியும், முன்னாள் அமைச் சருமான கருணா என்று அழைக் கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். அத்துடன் பொட் டம்மான், வெடிவைத்துத் தன்னைத் தானே அழித்துக் கொண்டார் என வும், பிரபாகரனின் மனைவி மற் றும் மகள் போரின் இறுதிக் கட்டத் தில் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபாகரன் போரின் இறுதியில், அப் போதைய ஜனாதிபதி மகிந்தவிடம் கொண்டு செல்லப்பட்டு கொடூர மாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று கருணா அம்மான் தெரிவித்ததாக, தேர்தலின்

பக்கம் 21.....



## ஓமந்தை ராணுவச் சாவடியின் நடவடிக்கைகள் இடைநிறுத்தம்

சமாதான சூழ்நிலையே காரணம் என்று இராணுவம் அறிவிப்பு



வவுனியா, ஓக.30

ஓமந்தையில் அமைக்கப் பட்டிருந்த இராணுவச் சோத னைச் சாவடியின் சோதனை மற்றும் பதிவு நடவடிக்கை கள் தற்காலிகமாக நிறுத் தப்பட்டிருப்பதாக இராணு வம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலை மற்றும் மக்களின் சிரமங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜய நாத் ஜெயவீர தெரிவித்துள் ளார்.

நேற்றுச் சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகை யில் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏ- 9 வீதி ஓமந்தைப் பகுதி யில் சுமார் 20 ஆண்டு கால மாக இராணுவச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந் தது. யாழ்ப்பாணம், கிளி நொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச்

பக்கம் 21.....

# கொந்தளிக்கும் தமிழகம்

## இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கும் அமெரிக்காவின் நிலைப்பாட்டால்











யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 30

இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறி முறைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள் ளதை அடுத்து, தமிழகத்தில் பெரும் கொந் தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி உள் ளிட்ட பல தலைவர்களும் அமெரிக்காவின் துரோகத்தனமான நடவடிக்கை இது எனக் கண்டித்துள்ளதுடன், இதற்கு எதிராகத் தமி ழகத்திலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன் பாகப் போராட்டம் நடத்தவும் தீர்மானித் துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின் னர், கடந்த வாரம் இலங்கைக்கு வந்து சென்ற அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செய லாளர் நிஷா பிஸ்வால், ஐ.நா. அறிக்கையை உள்ளகப் பொறிமுறையின் ஊடாக நடை முறைப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவித்த துடன், இலங்கை அரசுக்குச் சார்பாக தீர் மானம் நிறைவேற்றப்படும் எனவும் தெரி வித்திருந்தார்.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டுக்கு

பக்கம் 21.....

## மைத்திரியுடன் இணைவதற்கு சமல் தயார்

கொழும்பு, ஓக. 30

மைத்திரிபாலவுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார் எனத் தெரிவித்துள்ள, முன்னாள் சபாநாயகரும் - மகிந்தவின் சகோதரருமான சமல் ராஜபக்ச, தேசிய அரசில் இணைந்து கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 21.....

## அஸ்பெஸ்ரஸ் சீற் 2018 முதல் தடை

கொழும்பு, ஓக.30

இலங்கையில் அஸ்பெஸ்ரஸ் சீற் வகைகள் பயன்படுத்துவதற்கு 2018 ஜனவரி முதல் முற்று முழுதாகத் தடை விதிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். இதன்படி அஸ்பெஸ்ரஸ் வகைகள் இறக்குமதி செய்வதற்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கும்

பக்கம் 17.....

## ஓமந்தை படை முகாம் அகற்றப்பட வேண்டும்

### அப்ரில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 30

ஓமந்தை சோதனைச்சாவடி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட மையைப் போன்று அப்பகுதியில் அமைக்கப்பட்ட இராணுவ முகாமும் அகற்றப்பட வேண்டும் என அப்ரில் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்: இலங்கையில் இடம்பெற்ற கொடூர போர் 2009ம் ஆண்டு நடுப்பகுதியில் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போதும், மக் களின் நாளாந்த நடவடிக்கையில் இராணுவத் தலையீடு பெரும் பாதிப்பை செலுத்தியிருந்தது.

இதன் ஒரு செயற்பாடாகவே வடக்கு-தெற்கு ஏ9 வீதியில் ஓமந்தை சோதனைச்சாவடி காணப்பட்டது.

பக்கம் 17.....

## அமெ. அணுகுமுறை இலங்கைக்கு ஆபத்து

பக். 03

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி கோருகிறது தமிழரசுக் கட்சி

வவுனியா, ஓக.30

இலங்கையின் புதிய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலை வராகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரை அங்கீகரிக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று அந்தக் கட்சியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதி களவான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, இரண்டாவதாக அதிக ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுள்ளது. இந்த நிலையில் இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை உருவாக்கவும் அமைச்சுப் பதவி களை ஏற்றுக் கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி ஆகியன அமைச்சரவையில் கூட்டாகப் பொறுப் புக்களை ஏற்கவுள்ளன.

இதனால், 16 ஆசனங்களுடன் அடுத்தபடியாக நாடாளுமன் றத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (இலங்கை தமி ழரசுக் கட்சி) நாடாளுமன்ற குழுத் தலைவர், எதிர்க்கட்சித் தலை வராக அங்கீகரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

பக்கம் 17.....

## கோத்தபாயவுக்கு சல்யூட் அடித்த பொலிஸ் அதிகாரி

கொழும்பு, ஓக. 30

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு, பொலிஸ் அதிகாரி ஒருவர் சல்யூட் செய்து மரியாதை செய்தமை தற்போது சர்ச்சையை உருவாக்கியுள்ளது. ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்துவரும் ஜனாதிபதி '

பக்கம் 17.....

## அரசமைப்பில் மூன்று திருத்தங்கள் விரைவில் சபைக்கு

கொழும்பு, ஓக.30

மூன்று அரசியல் சாசனத் திருத்தங்கள் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. புதிய அரசு எதிர்வரும் ஆறு மாத காலப் பகுதிக்குள்

பக்கம் 21.....

# மகிந்த ராஜபக்சவுக்கு முன்வரிசை ஆசனம்

கொழும்பு, ஓக. 30

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வுக்கு, நாடாளுமன்றத்தில் எதிர்தரப்பு முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்படும் என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் திச நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய அரசில் எத்தனை உறுப்பினர்கள் இடம்பெறுவர் என்பது பற்றிய தகவல்கள் தரப்படவில்லை. இதனால் நாடாளுமன்ற ஆசனங்களை ஒழுங்குபடுத்த முடியா துள்ளது. தேசிய அரசில் இடம்பெறப் போகின்ற உறுப்பினர்கள் பற்றிய விபரங் கள் தெரிய வந்த பின்னரே ஆசனங்களை ஒழுங்குபடுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான பிரேரணை செப்ரெம்பர் 30 ஜெனிவாவில்

ஜெனிவா, ஓக.30

ஜெனிவா மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு ஆதரவு வழங்கும் பிரேரணையை எதிர்வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி கொண்டுவர அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

அன்றைய தினமே இலங்கை மீது சுமத்தப்பட்டிருந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்திய விசாரணைக்குழுவின் அறிக்கையையும் வெளியிட ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

எனினும் இந்த அறிக்கையை 48 மணிநேரத்துக்கு முன்னர், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் வழங்க மனித உரிமைகள் சபை இணங்கியுள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் விசாரணைக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்த பின்னரே இலங்கைக்கு ஆதரவு வழங்கும் அமெரிக்காவின் யோசனை முன்வைக்கப்படும் என அந்நாடு, இலங்கைக்கு அறிவித்துள்ளது.

அமெரிக்கா தாக்கல் செய்யவுள்ள ஆதரவு வழங்கும் யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் என்ன என்பது இதுவரை தெரியவரவில்லை. போர்க்குற்றங்கள் தொடர்பான உள்நாட்டு விசாரணையில் சர்வதேசப் பங்களிப்பு குறித்த விடயம் அதில் உள்ளடக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கை மற்றும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் யோசனை மீதான வாக்கெடுப்பு மனித உரிமைகள் ச்பையில் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. வாக்கெடுப்பில் 47 நாடுகள் பங்கேற்க உள்ளனமை குறிப்பிடத்தக்கது. (த)

## குருந்தூர் மலை ஐயப்பன் கோவிலில் 32 வருடங்களின் பின்னர் பொங்கல்



முல்லைத்தீவு, ஓக. 30

32வருடங்களின் பின்னர் குருந்தூர் மலையின் உச்சியில் அமைந்துள்ள ஆதி சிவன் ஐயப்பன் கோவிலில் பொங்கும் வைபவம் நேற்றுச் சனிக்கிழமை வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் ஆகியோரின் பங்குபற்றலுடன் தண்ணிமுறிப்பு மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் கலந்துகொண்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவத்தின் கெடுபிடிகள் காரணமாக இந்தக் கோவிலுக்குத் தாம் வந்து மடை பரவிப் பொங்கல் பொங்கித் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற முடியாத நிலை இருந்ததாகவும், ஆனால் இன்று இப்படி ஒரு பொங்கல் நிகழ்வைச் செய்து முடித்ததையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்.

அத்துடன் 1983 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இந்த ஆலயம் கூரையிட்டு ஓடுகள் போடப்பட்டு முழுமையான ஆலயமாக இருந்ததாகவும், ஆனால் இப்போது அவை யாவும் அழிக்கப்பட்டு சூலாயுதமும் பழைய கட்டடக் கற்களுமே கோவில் இருந்தமைக்கான தடயங்களாகவும் சாட்சியங்களாகவும் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதில் கலந்துகொண்ட மக்கள் தம்மைத் தண்ணிமுறிப்புக் கிராமத்தில் மீள் குடியேற்றுமாறும், தமக்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்து தரப்படவேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தனர். இதற்கான நடவடிக்கைகளை தான் எடுப்பதாக விவசாய அமைச்சர் மக்களிடம் உறுதியளித்தார்

இந்த குருந்தூர் மலையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் குமுளமுனை தண்ணிமுறிப்புக் கிராமத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-102)

## ஒரே நாளில் 100 கோடி பேர் பேஸ்புக்கின் புதிய சாதனை

கொழும்பு, ஓக.30

சமூக வலைத்தளமான பேஸ்புக்கை ஒரே நாளில் உலகம் முழுவதும் இருந்து 100 கோடி பயனாளிகள் பயன்படுத்தியுள்ளனர். இதன் மூலம் சமூக வலைத்தள வரலாற்றில் புதிய மைல் கல்லை எட்டியுள்ளது பேஸ்புக்.

கடந்த திங்கட்கிழமை அன்று நிகழ்ந்த இந்தச் சாதனை குறித்து, முதன்முறையாக 100 கோடி பேர் ஒரே நாளில் பேஸ்புக்கைப் பயன்படுத்தியுள்ளார்கள். ஒரு முக்கிய மைல்கல்லை நாங்கள் கடந்துவிட்டோம் என பேஸ்புக் தலைமை அதிகாரியான மார்க் ஜுக்கர்பேர்க் கடந்த வியாழக்கிழமை தன் பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளது:-

கடந்த திங்கட்கிழமை ஏழு நபர்களில் ஒருவர் தங்கள் நண்பர்களுடனும் குடும்பத்தினருடனும் தொடர்பு கொள்ள பேஸ்புக்கைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் இடையில் புரிதல் மலர வேண்டும். அதே போல நவீன உலகில் உள்ள ஏராளமான வாய்ப்புகளை எல்லோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் எங்கள் நிறுவனம் இயங்குகிறது.

எங்கள் சமூகத்தின் அங்கமாகச் செயல்பட்ட ஒவ்வொருவருக்கும், இத்தகைய சாதனை படைக்க உதவிய அனைவருக்கும் நன்றி. அடுத்து நாம் இணைந்து படைக்கப் போகும் சாதனையை எதிர்பார்த்து ஆவலாகக் காத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு சிறிய அறையில் இருந்த போது மார்க் ஜுக்கர்பேர்க் 2004 இல் பேஸ்புக்கை உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## ஐ.தே.க. தேர்தல் சுவரொட்டியுடன் கைதான நோர்வே வாசிக்கு பிணை

கரணவாய், ஓக. 30

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளரின் சுவரொட்டிகளை வாகனத்தில் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நோர்வே வாசியான சந்தேகநபரைப் பிணையில் செல்ல பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாகத் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரின் தேர்தல் சுவரொட்டிகளை வாகனத்தில் கொண்டு சென்றமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி அமைச்சுக்குச் சொந்தமான வாகனத்தைச் செலுத்தியமை ஆகிய குற்றச் சாட்டில் நோர்வே நாட்டுப் பிரஜையான நடராசா சேதுரூபன் என்பவரை நெல்லியடிப் பொலிஸார் கடந்த 14 ஆம் திகதி கைது செய்து அவருக்கு எதிராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததை அடுத்து குறித்த நபரை நீதிவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று முன் தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிவான் [illegible].கணேசராசா முன்னிலையில் இடம்பெற்றது.

சந்தேகநபர் சார்பாக மன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி அவருக்குப் பிணை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். இதனை அடுத்து குறித்த சந்தேக நபரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இருவரின் ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததோடு, அவர் பயன்படுத்திய அமைச்சுக்குச் சொந்தமான வாகனத்தை 5 லட்சம் ரூபா பிணையில் விடுவித்துச் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

இந்த வழக்குத் தொடர்பான மேலதிக அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனப் பொலிஸார் கோரிக்கை விடுத்ததை அடுத்து இது தொடர்பான வழக்கு விசாரணைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(த-108)

## முழங்காவில் சந்தையின் பெயர்ப் பலகை சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 30

முழங்காவில் பொதுச் சந்தையின் பெயர்ப் பலகை விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. புதிய பெயர்ப் பலகை நடப்பட்டு 24 மணி நேரத்தினுள் இந்த விசமத்தனமான செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பிரதேச சபையினால், முழங்காவில் பொதுச் சந்தை என்ற பெயர்ப் பலகை நடப்பட்டது. அந்தப் பெயர் பலகையை இரவோடு இரவாக சில விசமிகள் சேதப்படுத்தியுள்ளனர்.



இதே போன்று ஒரு மாதத்திற்கு முன்னர் முழங்காவில் ஓட்டோ தரிப்பிடத்திற்கான பெயர்ப் பலகை நடப்பட்ட போதும், அதனையும் விசமிகள் பிடுங்கி எறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## எம்.பிக்கள் பெறும் வரப்பிரசாதங்கள்



கொழும்பு, ஓக .30

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஒரு உறுப்பினருக்குக் கிடைக்கப் பெறும் வரப்பிரசாதங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி,

01. சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் ரூபா 54,525
02.போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 10,000
03.உணவு, குடிபானக் கொடுப்பனவு ரூபா 1,000
04.தொலைபேசிக் கட்டணம் ரூபா 2,000
05.நாடாளுமன்றக்கூட்டமொன்றில் கலந்துகொள்வதற்கான கொடுப்பனவு -ரூபா 500
06.நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு அமைச்சர் எனின், அவரின் அடிப்படைச் சம்பளம் ரூபா 65,000
07.பிரதி அமைச்சருக்கு அடிப்படைச் சம்பளம் ரூபா 63,500
08.மாதாந்தம் கொடுக்கப்படும் எரிபொருள் கொடுப்பனவு மாவட்டத்துக்கு மாவட்டம் வித்தியாசப்படும்.

இதன்படி,

-கொழும்பு மாவட்டம் ரூபா 18,845
-கம்பஹா மாவட்டம் ரூபா 23,000
-கேகாலை, இரத்தினபுரி, காலி, கண்டி மற்றும் குருநாகல் ரூபா 28,000
-மாத்தளை, புத்தளம், மாத்தறை, நுவரெலியா ரூபா 32,000
-பொலனறுவை, பதுளை, அம்பாந்தோட்டை, வவுனியா, மொனராகலை, அம்பாறை, திருகோண மலை, கிளிநொச்சி ரூபா 37,745

இது தவிர, சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிலையான தொலைபேசி அழைப்புக்கள் இரண்டு வழங்கப்படும். இதற்கான மாதாந்த கொடுப்பனவை நாடாளுமன்றம் செலுத்தும்.

அத்துடன், உறுப்பினராக இருக்கும் காலத்தில் மாதிவெல கட்டடத் தொகுதியில் ஒரு வீடு வழங்கப்படும். அல்லது வீட்டுக்கான வாடகை வழங்கப்படும்.

மேலும், நாடாளுமன்றத்தில் ஐந்து வருடம் முழுமையாக உறுப்பினராக இருக்கும் சகலருக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. அணுகுமுறை இலங்கைக்கு ஆபத்து

*எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக*

கொழும்பு, ஓக. 30
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு ஆதரவு தெரிவிப்பதாக அமெரிக்கா விடுத்துள்ள அறிவிப்பு இலங்கைக்குச் சாதகமான தல்ல என்று முன்னாள் இராஜதந் திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக எச்சரிக்கை விடுத்தார்.

தற்போது மனித உரிமைகளுக் கா[illegible].நா. ஆணையாளர் அலுவலகத்தால் நடத்தி முடிக்கப்பட்டுள்ள சர்வதேச விசாரணை அறிக்கையை முழுமைப்படுத்தும் நோக்கில் உள்ளக விசாரணையை நடத்துவதற்கு அமெரிக்கா அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து சர்வதேச விசாரணையொன்றை வலியுறுத்தி வந்த அமெரிக்கா, தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றி உள்ளக விசாரணைக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளது. அண்மையில், இலங்கைக்கு பயணம் செய்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர்நிஷாபிஸ்வால்தேஷாய் இதனைக் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து வினவியபோதே கலாநிதி தயான் ஜயதிலக மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் குறிப்பிட்ட அவர்,

உள்ளக விசாரணைப் பொறிமுறையூடாக பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். ஏனெனில், உள்ளகப் பொறிமுறையை உருவாக்கும் விடயத்தில் இலங்கையின் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கவேண்டும் என இலங்கைக்கு பயணம் செய்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் குறிப்பிட்டுள்ளார். வேறு தரப்பினர் எனக் குறிப்பிடும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடமா காண சபை என்பன அதில் உள்ளடங்கும். முழுமையான சர்வதேச விசாரணையொன்றை நடத்தமுடியாவிட்டால், நடைபெறவுள்ள உள்ளக விசாரணை -சர்வதேச கண்காணிப்பு அவசியம். உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு சர்வதேச பங்காளர்களும் இருக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த உள்ளக விசாரணைப் பொறிமுறைக்குள் சர்வதேசத்தின் பங்கும் உள்வாங்கப்படவுள்ளது. அப்படியானால், இது உள்ளக விசாரணையாக அமையாது. இது உள்ளக விசாரணை என்ற முகமூடி அணிந்து மேற்கொள்ளும் விசாரணையாகும். இது உள்ளக விசாரணையை விட மோசமானதாகும்.

அமெரிக்கா தலையிட்ட அனைத்து உலக நாடுகளிலும் நல்லிணக்கம் வீழ்ந்துபோயுள்ளது. இல்லாத சிவில் யுத்தம் அந்த நாடுகளில் உருவாகியுள்ளன. நல்லிணக்கம் தொடர்பில் ஜெனிவாவில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள திட்டமானது ஆபத்தானது. இலங்கை அரசு அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அரசைப்போல ஜனாதிபதியும் இந்த விடயத்தில் அவதானமாக இருந்து அதற்கு இடமளிக்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடு- எனத் தெரிவித்துள்ளார். (த-சி)

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சேலை



வவுனியா, ஓக 30
அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளின் கற்பித்தல் செயற்பாட்டை ஊக்கிவிக்கும் முகமாக வவுனியாவில் இலங்கை இந்துப் பேரவையின் உதவியுடன் நேற்று வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் 25 இக்கும் மேற்பட்ட வவுனியா மாவட்டத்தில் உள்ள அறநெறி பாடசாலை ஆசிரியைகளுக்கு சேலைகள் வழங்கும் வைபவம் இடம் பெற்றது

இலங்கை இந்துப் பேரவையின் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி நடராஜா சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ முத்து ஜெயந்தி நாதக்குருக்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அறநெறிபாடசாலை ஆசிரியர்களுக்கு சேலைகள் வழங்கிவைத்தார். நாட்டில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அறநெறிக் கற்பித்தல் செயற்பாட்டை ஊக்கிவிக்க இது போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப் படும் எனத் தலைமை உரையில் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி தெரிவித்தார். (த-402)

## வைரவப்புளியங்குளம் அருகே வசிப்போர் ஜனாதிபதிக்கு மனு



வவுனியா, ஓக. 30
வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட சாள்ஸ் நிர்மலநாதனுடனான மக்கள் சந்திப்பு நேற்றுக் காலை வ[illegible]யா வைரவப்பளியங்குளத்தில் மக்கள் குடியிருக்கும் பகுதியில் நடைபெற்றது. இதில் வைரவப் புளியங்குளத்தை அண்மித்து குடியிருப்பவர்கள் ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் குளத்தை அண்மித்த பகுதியில் 141குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் தமது பிரச்சினைகள் அடங்கிய கடிதம் ஒன்றையே சாள்ஸ் நிர்மலநாதனிடம் கையளித்தனர்.

அதனைப் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனுவை ஜனாதிபதியின் செயலாளரிடம் ஒப்படைப்பதாகவும் தெரிவித்தார். (த)

## மூன்று அறிக்கைகளை உள்ளடக்கி உள்ளக விசாரணைப் பொறிமுறை

கொழும்பு, ஓக. 30
போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அரசால் நியமிக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையானது மூன்று அறிக்கைகளை மையப்படுத்தியதாக அமையவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனோர் தொடர்பில் ஆராயும் மக் ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவின் அறிக்கை, அந்தக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள டெஸ்மன் சில்வா தலைமையிலான குழுவின் அறிக்கை மற்றும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கை ஆகிய மூன்று அறிக்கைகளை மையப்படுத்தியே உள்ளகப் பொறிமுறை அமையவுள்ளதாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மக்ஸ்வெல் பரணகம ஆணைக் குழுவின் காணா மற்போனோர் இடைக்கால அறிக்கை ஜனாதிபதி மைத்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், போர்க்குற்றச் சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான இறுதி அறிக்கை நேற்று முன்தினம் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்தது.

இருப்பினும், அந்த அறிக்கையை அடுத்த மாதம் அதாவது ஐ.நா. அமர்வுக்கு முன்னதாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு ஆணைக் குழு தீர்மானித்துள்ளது. (த-சி)

## ஜனவரி முதல்பொலித்தீன் பாவனைக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, ஓக.30
அடுத்த வருடம் ஜனவரி முதல் பொலித்தீன் பாவனைகள் தொடர்பிலும் கடுமையான கட்டுப்பாடுகளை செயல்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சூழல் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி இல்லத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு அனைவரினதும் ஒத்துழைப்பு தேவையென [illegible] வாக்குவோம் என தெரிவித்தார். (த)

## வடமராட்சி கிழக்கில் இலவச மருத்துவ முகாம்



கரணவாய் ஓக. 30
வடமராட்சி கிழக்கில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இலவச மருத் துவ முகாமில் 200க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

வடமராட்சி லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நேற்று முன் தினம் மருதங் கேணிப் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. பிரிட்டனில் இருந்து வருகை தந்தபெண்ணியல் மருத்துவ நிபுணர் உட்பட நான்கு பொது வைத்திய நிபுணர்களுடன் லயன்ஸ் கழக மருத்துவர்களும் இணைந்து இந்த முகாமில் கலந்து கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமில் அப் பகுதியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன் பெற்றுள்ளனர். மருத்துவ முகாமுக்குக் கற்றாக் நோயால் பாதிக்கப்பட்டவர்களே அதிகம் வந்திருந்தனர் எனவும், அவர்களுக்கு வடமராடசி லயன்ஸ் கழகத்தால் இலவசமாக மேலதிக சிகிச்சை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்தனர்.(த-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற் போனோர் விவகாரம்: பயன்தரு நடவடிக்கை தேவை

✶ இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது, காணாமற்போனவர்களின் நிலைமை மற்றும் அவர்கள் இப்போது தங்கியுள்ள இடங்கள் குறித்து ஆவணப்படுத்துவதற்கு அரசும், சிவில் சமூகமும் இயன்றவரை என்று மட்டுப்படுத்தாமல், தொடர்ந்து உதவ வேண்டும். அதே வேளை பாதிக்கப்பட்ட -- கைவிடப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, இப்போது உள்ளதைவிட கூடுதலான உதவிகளை வழங்க வேண்டும்.

✶ போர் அல்லது புலம்பெயர்வு அல்லது இடரின் போது ஒருவர் காணாமற்போகும் பட்சத்தில், பாதிப்புற்றோரின் குடும்பங்களின் துயர நிலை தொடர்கிறது.

மேற்போந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் காணாமற் போனோரின் நலன்கள் தொடர்பில் பணியாற்றி வரும் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் மேரியன் பிக்காசோ.

குறிப்பாக, அவர்களது நிலைமை குறித்து உறவினர்களுக்குப் பதில் அளிப்பதற்கு, அதாவது அவர்கள் எங்கு இருக்கிறார்கள், என்ன ஆனார்கள் என்பது குறித்து எந்தத் தகவலுமே கிடைப்பதில்லை.

எனினும் அவர்கள் குறித்துத் தகவல்களைத் திரட்டுவது அவசியமாகும். சம்பந்தப்பட்டவர்கள் குறித்து, அவர்களின் குடும்பங்களுக்குப் பதில் அளிக்க வேண்டிய, வேளையில், அது மிகுந்த பயன் உடையதாக அமையும்.

பாதிப்புற்ற குடும்பங்கள் பலவற்றுக்கு உறுதியான பதில்களை வழங்க இயலாத நிலையும் உருவாகுவது உண்டு. பல சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு ஏற்பட்ட கதி குறித்து எதுவும் தெரியவருவதும் இல்லை.

ஒருவர் காணாமற் போவதால், அவர் சார்ந்த குடும்பம் பொருளாதாரத்துக்கு எவ்வித வழியும் இன்றி, அந்தரித்து அழியும் பேராபத்துக் கூட மேலுயரலாம்.

மேற்போந்த நிலைமை வராமல் இயன்ற வரையில் தடுத்தாக வேண்டும்; உதவ வேண்டும்.

அவற்றில் அந்தந்த நாடுகளின் அரசுகள் நடவடிக்கை மேற்கொள்வது தவிர்க்கக் கூடாத ஒன்றாகும்.

மேலும், காணாமற் போனவர்கள் உணர்வு ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், வாழ்வாதாரம் மிகக்குன்றி வாழ்வா, சாவா என்ற விரக்தி நிலைக்கு உந்தித் தள்ளப்படுவதுண்டு.

மொத்தத்தில், காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினர், இரத்த உறவுகளால் தனிமைப் படுத்தப்படல், கவலை மற்றும் பாகுபாடுகளுக்கு ஆளாகும் நிலைமை மேலுயரலாம்.

அவற்றை ஓரளவிலேனும் தணிப்பதற்கு, குறைப்பதற்கு அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் ஆதரவும் உதவிகளும் குறிப்பிடத்தக்கவை.

ஆயினும் மொத்தத்தில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரினால் காணாமற்போன பல்லாயிரக் கணக் கானோர் குறித்த சம்பவங்கள் பதிவாகி உள்ள போதிலும்--

இதுவரை ஒருசில சம்பவங்கள் மட்டுமே தீர்க்கப்பட்ட தாகவும் ஏனையவை கிடப்பில் இடப்பட்டதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் பலவும் கவலை வெளியிட்டு உள்ளன.

காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பங்களின் உளஆறுதலுக்கும், அவர்கள் கௌரவமாக உயிர்வாழ்வதற்கும் உகந்த நடவடிக்கை எடுப்பதற்கு--

அனைத்துலக அரசுகள் இன்றைய, காணாமற்போனோர் நாளில் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

வெறுமனே பிரகடனங்களுடன் தரிக்காது, உருப்படியான, பயன்தரவல்ல நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவது உலக மன்றமான ஐ.நா. சபையின் தார்மிகப் பொறுப்பும், தட்டிக்கழிக்க முடியாத கடமையும் ஆகும். உணர்ந்து செயற்படுமா?...... எப்போது?

# எதிர்க்கட்சித் தலைவராகும் வாய்ப்பு சமல் ராஜபக்சவுக்கு

கொழும்பு, ஓக. 30

எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி பிரதம கொறடா மற்றும் உப சபாநாயகர் ஆகிய பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் மத்திய செயற்குழு கையளித்துள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவை நியமிப்பதற்கான அதிக வாய்ப்புள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

7ஆவது நாடாளுமன்ற பதவிக் காலம் நிறைவடைந்ததும் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதற்குத் தீர்மானித்திருந்த முன்னாள் சபா நாயகர் சமல் ராஜபக்சவை பொதுத் தேர்தலில் போட்டியிடவேண்டும் என சுதந்திரக் கட்சித் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய நடைபெற்றுமுடிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட அவர் வெற்றியும் பெற்றிருந்தார். அவ்விருவருக்கும் நல்ல புரிந்துணர்வு உள்ள நிலையில், அவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரி பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும், எனினும், மைத்திரிக்கு நெருக்கமான கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இதே வேளை, இறுதித் தீர்மான த்தை கட்சித் தலைவர் மைத்திரியே எடுக்கவுள்ளார். அவர் எடுக்கும் தீர்மானங்களை எதிர்ப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் கடந்த பொதுத் தேர்தலின்போது நிலவிய பிளவுநிலை தற்போது ஓரளவுக்குத் தணிந்துள்ளதாகவும், குறிப்பிட்ட சிலரே இன்னும் மகிந்த ராஜபக்சவுடன் இருப்பதாகவும், விரைவில் கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளமையால் அவற்றின் அதிகாரங்களைச் சுதந்திரக் கட்சியின்கீழ் வைத்துக் கொள்ள தற்போது கட்சியை ஒற்றுமைப்படுத்திப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

இதற்கமைய கட்சி மறுசீரமைப்பதற்காக பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தலைமை யில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (த)

## நாடாளுமன்ற உறுப்பினரை எம்மால் பதவி நீக்கமுடியாது

### மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.30

இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றபோதும், நாடாளு மன்றத்துக்கு தெரிவான உறுப்பினர்களை நீக்கத் தேர்தல்கள் திணைக்களத்தால் முடியாது என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம். எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் அனைத்து நடவடிக்கைகளும் தற்போது பூர்த்தியாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானியில் இணைக்கப்பட்ட பின் அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது என அவர் கூறியுள்ளார்.

இரட்டைப் பிரஜாவுரிமை அல்லது வேறு காரணங்களின் நிமித்தம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நீதி விசாரணைகளின் பின் கிடைக்கப் பெறும் உத்தரவுக்கு அமைய, தேர்தல்கள் ஆணையாளர் திணைக்களத்தால் செயற்பட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(த)

## தீயினால் 18 கடைகள் நாசம்

அம்பாறை, ஓக. 30

அம்பாறை, டி.எஸ் சேனநாயக்க வீதியிலுள்ள மக்கள் வங்கி கிளைக்கு அருகாமையிலுள்ள 18 கடைகள் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாகவும் காலை 5 மணியளவில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை நகரசபை, உகண விமானப்படையினர் மற்றும் அம்பாறை சுகாதார பிரிவின் தீயணைப்புப்ப பிரிவினர் ஆகியோர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தீ விபத்துக்கான காரணம் இன்ன [illegible] விசாரணைகள் தொடர்வதாக மேலும் அவர்கள் தெரிவித்தனர். (த)

## அரசின் உள்ளக விசாரணையில் கிஞ்சித்தும் நம்பிக்கையில்லை

### மூத்த சட்டத்தரணி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

இலங்கையில் போர்க்கால குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அங்கு நடக்கக்கூடிய உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையில் சற்றும் நம்பிக்கை இல்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் விசாரணை ஆணைக்குழுக்களில் முன்னிலையாகிவரும் மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் கூறுகின்றார்.

கடந்த கால அனுபவங்களே இந்த நிலைப்பாட்டுக்கு காரணம் என்றும் பி.பி.சி தமிழோசையிடம் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்படுவதை ஆதரிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ள நிலையில் இவ்வாறான கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன.

ஐநா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான விசாரணை அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், அதற்கிடையில் அமெரிக்கா இப்படியான நிலைப்பாட்டை எடுத்திருப்பது கவலையளிப்பதாக ரட்ணவேல் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட பல ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் வெற்றியளிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச பிரதிநிதிகளின் கண்காணிப்பில் உள்நாட்டில் நடந்துள்ள விசாரணை ஆணைக்குழுக்கள் கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான தீர்வையும் வழங்கவில்லை

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ள சூழ்நிலையில், பெருமளவிலான அரசியல் கைதிகள் இன்னும் விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ரட்ணவேல் தெரிவித்தார். (த)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும்

### டிலான் பெரேரா வலியுறுத்து

கொழும்பு, ஓக.30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் கூட்டு அரசில் அங்கம் வகித்தால், எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு வழங்கப்படாவிட்டால், தமிழர் ஒருவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படக் கூடாது என அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



அதனைச் செய்யாவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படவேண்டுமென டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, ஜே.வி.பி கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Browns Tours

# சுற்றுலா அதிகாரி - Branch Operations
## யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு

பிறவுன்ஸ் குழுமம் 140 வருடகால பாரம்பரியத்தையும் நம்பிக்கையையும் கொண்ட முன்னணி கூட்டு நிறுவனம் என்பதுடன் பல மில்லியன் விற்பனை புரள்வும் கொண்ட நிறுவனமாகும்.

இந்நிறுவனம் பொறியியல் மற்றும் வன்பொருள், மின்சக்தி, விவசாயம், சுற்றுலா, வீட்டு மற்றும் அலுவலக சாதனங்கள், சுகாதாரம் போன்ற ஆறு துறைகளில் முன்னோடியாக திகழ்கின்றது.

குழுமம் தற்போது நிதிச்சந்தை, பெருந்தோட்டத்துறை, ஹைட்ரோ, திட்டங்கள், சீனித்துறை போன்றவற்றிலும் தடம்பதித்துள்ளது.

Browns Tours (Pvt) Limited, குழுமத்தின் சுற்றுலாத்துறையில் முன்னோடி நிறுவனம் என்பதுடன் உயர்தர உள்ளக மற்றும் வெளியக சுற்றுலா சேவைகளை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. குறித்த நிறுவனம் தொடர்ச்சியாக முன்னோடியாகத் திகழும் நோக்கில் வர்த்தக விரிவாக்கங்களையும் மேற்கொள்கின்றது. எனவே நாங்கள் எமது கிளையின் செயற்பாடுகளை திறமையாக கையாளக்கூடிய செயலத்திறன் வாய்ந்த புதிய அங்கத்தவர்களை தேடி வருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட வெற்றிடத்திற்காக கீழ்க்காணும் தகமைகளும் குறித்த கிளை நிறுவனத்திற்கு அருகில் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். இந்த பதவிக்காக தேர்வு செய்யப்படும் நபர் முழுமையான பயண முன்பதிவுகள், பயணசீட்டு ஒழுங்குகளை வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

- பயணவர்த்தகத்தில் இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமும்.
- சுற்றுலாத்துறையில் அனுபவமும் GDS, Galileo, Amddeus, தொடர்பான அறிவு மேலதிக தகமையாகக் கருதப்படும்.
- சிறந்த விற்பனை மற்றும் தொடர்பாடல் ஆளுமை.
- சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் அறிவும் வெளிப்புற பயணத்திற்கான ஆர்வமுடையவராகவும் இருந்தல்.

**மேற்குறிப்பிட்ட வெற்றிடத்திற்கு நீங்கள் தகுதியுடையவராக கருதுமிடத்து விளம்பரம் செய்யப்பட்ட திகதியில் இருந்து 14 நாட்களிற்குள் உங்களுடைய சுயவிபரக்கோவையில் உங்களை சிபாரிசு செய்யக்கூடிய இரண்டு உறவினர்கள் தவிர்ந்த நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாக மின்னஞ்சல் தலைப்பில் குறிப்பிடவும்.**

மின்னஞ்சல் - recruitment@brownsgroup.com
தொடர்புகளுக்கு : (011) 2663000

---

# BBCஇன் 12வது புதிய கிளை சுன்னாகத்தில்
## (NSB வங்கி முன்பாக)

**உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்**

**யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்**

BBC 12வது வருடத்தில்

**பாலர் பாடசாலை பிரிவுகள்**

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

**கற்பித்தல் மொழி**

ஆங்கில மொழி மூலம்
தமிழ் கட்டாய பாடம்

**சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்**

2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

- * Sports Meet
- * English Day Concert
- * முத்தமிழ் விழா
- * Art & Craft Exhibition
- * Carols
- * Pre School Graduation

**பாட விதானமும் கற்பித்தல் முறையும்**

NEW SYLLABUS

- *Dr. Maria Montessori Method
- *Canadian ECE Method
- *German LKG, KG, UKG System

எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்**

*கடந்த 11 ஆண்டுகளாக எமது 11 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

**பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்**

*Percussion Band, Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

**BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்**

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆனைச்சந்தி, மானிப்பாய். | சங்குவேலி [illegible] | Dr. சுபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல. 143, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக) | 1வது வாய்க்கால், இராச வீதி, நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | [illegible] | [illegible] |

British Business College — Where Students Come First

**BRITISH BUSINESS COLLEGE** 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
**Tel: 077 362 7055, 021 222 4060**


---

உயர்தர பரீட்சையின் பின் | என்ஜினிர் தொழிற்துறையில் சுதந்திர இலங்கையின் முன்னேற்றத்தில் பங்குபெறத் தயாரா?

# பிரித்தானிய என்ஜினியர் பட்டப்படிப்பிற்கு குறுகிய வழி!

SKILLS COLLEGE OF TECHNOLOGY

# City & Guilds Diploma in Engineering



பாடநெறியின் இறுதியில் தொழிற் பயிற்சி

கட்டார் நாட்டில் தொழில் வாய்ப்பிற்கு எங்களிடம் வரம்
2022 உலக காற்பந்து போட்டிற்கு தயாராகும் கட்டார் நாட்டில் என்ஜினியர் தொழிலுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பாடநெறி இலங்கையில் பூர்த்தி செய்து அதன் பின் பட்டப்படிப்பு இறுதி ஆண்டில் வேலை வாய்ப்புடன் எமது புதிய கிளை SCOT தோஹா கட்டார் கிளையில் தொடர வாய்ப்பு எங்களிடம்.

டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா பூர்த்தி செய்த அனைவருக்கும் Sheffield Hallam University, University of Derby, Northumbria University ஆகிய பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் எனஜினியர் பட்டப்படிப்பு (BEng) இறுதி ஆண்டு அல்லது City & Guilds Graduate Diploma பாடநெறி இலங்கையில் மற்றும் பிரித்தானியாவில் அல்லது கட்டார் நாட்டில் தொடர வாய்ப்பு.

**எமது விசேடத்துவம்**

- உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு உயர் அந்தஸ்துள்ள City & Guilds சான்றிதழ் எம்மிடம்
- இலங்கை என்ஜினியர் நிறுவனம் IESL அனுமதி பெற்ற பாடநெறி
- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு தேவையான TVEC அங்கீகாரம் எம்மிடம்
- பாடநெறி முழுத்தொகையை பகுதிகளாகச் செலுத்தும் இலகு முறை
- பல்கலைக்கழக மற்றும் என்ஜினியர் துறையில் நிபுணத்துவமுள்ள விரிவுரையாளர்கள்

புதிய வகுப்புகள் :
2015 செப்டம்பர் முதல்

**Hotline**

| | | | |
|---|---|---|---|
| யாழ்பாணம் | 021 4 666 699 | குருணாகல் | 037 3 616 868 |
| கண்டி | 081 4 666 699 | மாத்தறை | 041 4 501 501 |
| நுகேகொடை | 011 4 696 696 | | |

City & Guilds APPROVED CENTRE | Sheffield Hallam University | University of Derby | Northumbria University

**Skills College Of Technology - SCOT**

Nugegoda Campus — Nugegoda, 011 4 696 696
Kandy Campus — Kandy, 081 4 66 66 99
Kurunegala Campus — Kurunegala, 037 3 61 68 68
Jaffna Campus — Jaffna, 021 4 66 66 99
Matara Campus — No. 68, Dharmapala Mawatha, Matara, 041 4 501 501

Opening Soon: Gampaha Branch, Ampara Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### விற்பனைக்கு
Ceygra 90 (China) model மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
102, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தொடர்பு : 077 642 6171

### பந்தல் விற்பனைக்கு
சொக்கட்டான் பந்தல், மணவறை, மேடை விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 717 9778

### காணி விற்பனைக்கு
அரியாலை, இலந்தக்குளம் வீதி, புளியடி, 2 ஆம் ஒழுங்கையில் 3 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 021 222 6179
· 077 607 8888

### விற்பனைக்கு
Toyota Hiace KDH200, Unregistered Super GL, Just Cleared, Full Option, P/Shutter, P/Mirror, R/Wiper, C/Locking, Cut glass, Air Bags. Rear Spoiler, ABS, D/AC, R/Key, teak panal குறைந்த தூரம் ஓடியது. reverse camera, TV, DVD Player (option) தெரிவுகள் அதிகம்.



Contact: 077 233 1119

### வீடு காணி விற்பனைக்கு
கொக்குவில் மேற்கு, மணியர் பதிக்கு அருகில் புதுறோட்டும் பூநாறி லேனும் சந்திக்கும் மூலையில் நாற்புறமும் சுற்றுமதில் கட்டப்பட்ட 4பரப்பும் 9.5 குழியும் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற் பனைக்குண்டு. விவரங்களுக்கு **071 479 0755** எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சனி, ஞாயிறு தினங்களில் முன்னறிவித்தலுடன் பார்வையிடலாம்.

### நாய் விற்பனைக்கு
3 ½ மாதம் நிரம்பிய தடுப்பு ஊசி போடப்பட்ட டல்மெசன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 128 5423

### காணி விற்பனைக்கு
A9 பாதையிலிருந்து 200m தூரத்தில் கல்லடிலேன், சாவகச்சேரியில் அமைந்த வெறுங்காணி 7பரப்பு உடன் விற்பனைக்கு
தொடர்பு: 077 975 0921

### விற்பனைக்கு
நல்லநிலையிலுள்ள அலுவலக மேசைகள்,சுழல் கதிரைகள்,மர அலுமாரிகள் மற்றும் காட்சிப் படுத்தக்கூடிய கம்பி ராக்கைகள்என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 993 8232

### வீடு, காணி விற்பனைக்கு
யாழ், காரைநகர் பெருந்தெருவில் யாழ்ப் பாணக் கல்லூரிக்கு மிக அருகில் 4 நிலப்பரப்பு விஸ்தீரணமான பயன்தரு மரங் களுடன் கூடிய காணியும் (அதனோடிணைந்த) 6 பரப்பில் சகல வசதிகளுடன் கூடிய வீடும். இணைந்தபடி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 331 9137

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள்கள் சில விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 0212227329, 0776365802 என்ற இலக்கங்களுடனும் or 104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனும் வார நாள்களில் காலை 9.30 - 4.00 மணிவரை 2 கிழமைக்குள் தொடர்பு கொள்ளவும்.

### காணி விற்பனைக்கு
மருதனார்மடப் பகுதியில் "4" பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 077 328 8795

### காணி விற்பனைக்கு
யாழ். கொக்குவில் கிழக்கு, இலக்கம் 60, உடையார் லேனில் வெற்றுக்காணி சுற்றுமதிலுடன் விற் பனைக்குண்டு. துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும் . தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 3181149
0720431452

## தேவை





### பணிப்பெண் தேவை
யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 3 பேர் கொண்ட வைத்தியர் குடும்பத்துக்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 296 8879

### பணிப் பெண் தேவை
வெள்ளவத்தையில் வயதான தாயாரைப் பராமரிப்பதற்கும் மூவர் அடங்கிய குடும்பத்திற்கு வீட்டு வேலையில் செய்படக் கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் உடன் தேவை. சம்பளம் 17000/=
தொடர்பு: 071 430 8881

### தேவை
பிரபல ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், சுன்னாகம், சங்கானை , கோப்பாய், புத்தூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு : 077 468 2951
021 222 5796

### பணியாளர் தேவை
வெளிக்கள உத்தியோகத்தராக பணியாற்ற ஆண்/பெண் இருபாலார்களும் தேவை. வயது 18 இலிருந்து 30 வரையானவர்கள் தங்களது புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக் கோவையினை JFFFSL@JFFFSL.COM என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
தொடர்பு : 076 688 9008

### பணிப்பெண் தேவை
வயோதிபப் பெண் ஒருவரை பராமரிக்கவும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் தேவை. யாழ் நகரப்பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வமுடையவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 783 0562

### தேவை
புத்தளம் தென்னந்தோட்டத்திற்கு டிராக்ரர் டிரைவர் (Tracter Driver) ஒருவரும், தங்கிவேலை செய்வதற்கு குடும்பம் ஒன்றும் தேவை.
தொடர்பு : 077 798 2871

### காணி தேவை
யாழ் நல்லூரை அண்டிய பகுதிகளில்1 ½ பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 071 154 4960

### வீட்டுப் பணிப்பெண் தேவை
தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. வயதெல்லை 40 இற்கு மேல் சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்பு: 072 106 5173

### பணிப்பெண் தேவை
வெள்ளவத்தையில் 3 பேர் கொண்ட கௌரவமான குடும்பமொன்றுக்கு தங்கியிருந்து வேலை செய்ய பெண்ணொருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 935 0833

### வீடு வாடகைக்குத் தேவை
அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பத்துக்கு சிறு வீடோ அனெக்சாவோ/ வீட்டின் பகுதியாகவோ வாடகைக்குத் தேவை.
தொடர்பு:071 809 6820

### தேவை
இலங்கையின் பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு டிக்கெட்டிங் வேலை செய்வதற்கு பயிற்சியுள்ள, பயிற்சியற்ற ஆண், பெண் தேவை. வயது 18 - 45 தகைமைO/L, A/L சம்பளம் 32,000/= OT யுடன் 42,000/= தேவைப்படும் பிரதேசங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை இன்னும் பல பிரதேசங்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. மொழி அவசியமில்லை. வரும் நாளில் சேர்க்கப் படுவீர்கள். தொடர்பு கொண்டு நேர்முக பரீட்சைக்கு சமுகம் தரவும்.
சரண்யா, 077 102 0619,
48A1/1, Maharagama R/d,
Dehiwala, Colombo.

### மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986, சுவாதி நட்சத்திரம் 7இல் செவ்வாய், சூரியன் A/L படித்த டிப்ளோமா பட்டம் பெற்ற மணமகளுக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகிறார்கள்.
தொடர்பு : 077 706 9148
(தரகர் தேவையில்லை)

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு
அரியாலை AV றோட்டில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 048 7422, 076 660 2651

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் ,கே.கே.எஸ். வீதி,யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் மூன்று அறையுள்ள சகல வசதியுடன் வீடு,அரச,வங்கிஉத்தியோகத்தர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 851/34, கே.கே.எஸ் வீதி சிவலிங்கப்புளியடி,யாழ்ப்பாணம்
T.P : 021 222 1781

### வீடு வாடகைக்குண்டு
ஓட்டுமடச்சந்திக்கு அருகில் 2அறைகள் ஒரு ஹோல்,சமையலறை ,(அனெக்ஸ்) கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 011 487 8027

### வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல.8, புகையிரதவீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள், இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள், நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 011 250 4281
071 2991256

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

### வாடகைக்கு
யாழ்ப்பாணம், நீராவியடி இந்துக் கல்லூரி வீதி, கஸ்தூரியார் வீதி சந்திக்கடை வாடகைக்கு உள்ளது.
தொடர்பு: 011 250 3300, 021 222 7475

### கடை வாடகைக்கு
K.K.S வீதி உப்புமடச்சந்தி, கோண்டாவில் மாடி (இரு) கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 633 4467

### கொழும்பில் வீடு வாடகைக்குண்டு
கல்கிசையில் காலி வீதிக்கும் தெகிவளைக்கும் அண்மையில் மேல் மாடி வீடு குடும்பத்திற்கு அல்லது Rooms களாக கொடுக்கப்படும். Car park உண்டு.
தொடர்பு : 077 975 2313

### வீடு வாடகைக்கு உண்டு
சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்கும் அருகில் பழைய பூங்கா வீதியில் 4அறைகள் கொண்ட பெரிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 076 602 3324

### வாடகைக்கு
No.17, பிரப்பங்குளம் றோட்,வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம் எனும் மேற் காட்டிய விலாசத்திலுள்ள வீடுவாட கைக்கு உள்ளது. 3 அறைகள், 3விறாந்தைகள், சமையல் அறை, Attached Bathroom, [illegible] கிணறும் Pipe [illegible] விரும்பத்தக்கது . தரகர் தேவையில்லை
தொடர்பு: 0774322923

## ஏனையவை

### A/L CHEMISTRY BIOLOGY
இவற்றிற்கான Exampool பரீட்சை தடாகம் (2000-2014) விற்பனைக்குண்டு.வீடு வந்து இருமொழிகளிலும்கற்பித்தல்
சிங்கம் மாஸ்டர் :077 773 0840

### கணித பாட வகுப்பு
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு தனி மற்றும் குழுவாக கணிதம் கற்பிக்கப்படும்.
தொடர்பு : T.Sugan N.D.T (Civil)
021 568 9165, 071 791 5450
077 616 5290


### சாறி பிளவுஸ்
விரும்பிய வடிவங்களில் சாறி பிளவுஸ் தைப்பதற்கு காட்டிக் கொடுக்கப்படும் தைத்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 076 696 7301

### தவறிவிட்டது
சோமரத்தின கஸ்தூரியாராட்சி சாந்தகுமார் ஆகிய எனது பேஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஆவணங்களுடன் ஆள் அடையாள அட்டைகளுடனும் தொலைந்து விட்டது. புதுக்குடியிருப்பிற்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டு எடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 456 0984

### வேலை வாய்ப்பு
SOFA CUSHION வடிவமைக்கும் நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த **CUSHION BASS (குஷன் பாஸ்)** உடனடியாகத் தேவை. [illegible] வசதி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0776 538 672

FLEX Graphic

### German Swiss மொழி
ஜேர்மன், சுவிஸ் செல்வோருக்கான டொச் மொழி வகுப்புக்கள் எம்பசி பரீட்சைக்கான Course மற்றும் Spoken மிகத் தெளிவான விளக்கத்துடன் German ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.
இடம் மானிப்பாய் சந்தி.
தொடர்பு : 0768439423



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

பான்சி கடையில்
அனுபவம் உள்ளபெண்கள்
பாட்டா கடைக்கு தேவை.
தொடர்பு : 021 222 3525

**Honda CD 200 Byke உதிரிப்பாகம் தேவை**

பாவித்த 'ஜப்பான் மட்காட் .
கரியர்' தேவை.
தொடர்புகளுக்கு :- 0715523089




செல்லம் Dts 10.30, 2.30, 6.30
065 2240064

ராஜா Dts 10.30, 2.30, 6.30, 9.30, p.m
021 2227332

சினிசிட்டி Dts 10.30, 2.30, 6.30, 9.30
தொ.பே 077 3101080

சினிவேர்ட் Dts 10.30 2.30, 6.30, 9.30
தொ.பே 011 2330017

சரஸ்வதி Dts 10.30, 2.30, 6.30, 9.30
திருகோணமலை Tel 026 2222221

ICRC

### செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ICRC)

### வவுனியா அலுவலக இடமாற்றம்

வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அலுவலக கட்டிடத்தில் செயற்பட்டுவந்த எமது அலுவலகம் எதிர்வரும் 02.09.2015 முதல் புதிய இடமான இல:-70, வைரவர் கோவில் வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவில் இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

அலுவலக இடமாற்றசெயற்பாடுகள் காரணமாக எதிர்வரும் திங்கள் (31.08.2015) மற்றும் செவ்வாய் (01.09.2015) ஆகிய தினங்களில் எமது அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**Majestic** *Cineplex Jaffna*

### கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் — CEYLON THEATRES



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30

விசாரணை ☎ 021- 2227712

CeylonTheatres
www.ceylontheatres.lk

## WANTED

Wanted office space of 1200/1500 sq ft within close proximity of Jaffna Town. Preferably 1st or 2nd floor of a commercial building for immediate occupation.

**Please contact 021 222 0127 Week days.**

### வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்ற வருடாந்த ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும்

எமது மன்றத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 2015.09.20 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் செயலாளருடன் தொடர்பு கொண்டு அவரவரின் தற்போதைய நிரந்தர இருப்பிட முகவரியை அறியத் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன். முன் மொழிவுகள், பிரேரணைகள் சமர்ப்பிக்க உள்ளவர்கள் 2015.09.12 ஆம் திகதிக்கு முன்பதாக எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கலாம்.

124/1/1, கில்னர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். — செ.சுப்பிரமணியம் மன்றச் செயலாளர்.

TCT Multi Trade Centre (527, நாவலர் வீதி, யாழ்)
இல் Para Lights தயாரிப்புகள் விற்பனையாகின்றது!
தரத்தை விரும்புகிறவர்களுக்கு:அலுமினியம் HIGREEN LED
ஓர் ஆண்டு உத்தரவாதத்துடன்-5w(=50w)-700/=; 7w=(70w)-1000/=
தரம் வேண்டாம் குறைந்த விலை வேண்டும் என்று கூறுபவர்களுக்கு: பிளாஸ்டிக் LED பல்புகள், ஆறு மாத உத்தரவாதத்துடன் 3W-150/= 5W-250/= 7W-280W 9W-360/= 12W-420/=



Table Mate 2000/= / கலர் Tablemate IV - Cupholder உடன் 3000/=
அவசர மின்விளக்குடன் மின்விசிறி(Emergency Light+Fan)990/=
ரீச்சார்ஜபிள் சேச் லைட் with side light 690/=
அவசர மேசை விளக்கு (Emergency Table Lamp) - 790/=
மின்சாரம் இல்லாத வேளையில் 60 வாட்ஸ் மின்குமிழின் வெளிச்சத்தைப்பெற்றிட சோலார் மின் விளக்குகள் 990/=
மொத்த கொள்வனவிற்கு: 0789 13 08 13 / 0788 74 52 53




# சரவணா ரெக்ஸ்

நல்லூர்

ஒரு கொட்டன் ரெடிமேற் சல்வார் வாங்குவதற்கு 6000 ரூபா தேவையா? இல்லவே இல்லை 3500 ரூபா மட்டும் போதுமே...... 2500 ரூபா சேமிப்பு

(வேறு கிளைகள் இல்லை)

பல பல புத்தம் புதிய டிசைன்களில் என்னற்ற சாறி தெரிவுகளுக்கு

பான்சி திரட்வேக் கொட்டன் சாறி 2400 ரூபா இல்லை வெறும் 1650 ரூபா மட்டுமே

இது விள... வம்

52... (சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாய் நாட்டில் 5 நட்சத்திர ஹோட்டலில்

## கிளீனர்ஸ் வேலைவாய்ப்பு



### 30 கிளீனர்ஸ் ஆண்கள்

1100Dhs / சம்பளம்
Rs.39,600/-
கடன்வசதி செய்து தரப்படும்

**INTERVIEW 30,31.08.2015**

வயது : 35 வயதிற்கு கீழ்

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

நிபந்தனைகள் & சலுகைகள் :
- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வழங்கப்படும்.
- உணவு கம்பனியால் வழங்கப்படும்
- 2 வருட ஒப்பந்தம்
- வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் / வாரத்தில் 48 மணிநேரம்
- ஒரு நாள் லீவு வழங்கப்படும். • இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு 2 வருட சேவை முடிவின் பின்னர்.
- ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் டுபாய் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

**Hot Line : 072 720 0005**

1 DHS = Rs.36.00
அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் ரூ.94,772 அறவிடப்படும்.

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY — றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05
Tel : 0112552598|0726999386|0773074744

max adz

### பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

**English Medium {Grade 01-11} All subjects**

10 மாதங்கள்

தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

மேலதிகமாக சிங்களக்கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகள் :தெமட்டகொட,புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் (சுதுமலை), கல்முனை

நேர்முகத்தேர்வும் ஒருநாள் ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டமும் ஆரம்பமாகவுள்ளது பிரதான நிறுவனம் உட்பட புதிய கிளைகள் 45 இற்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டம்

**தகைமைகள்**

- ✓ க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ✓ ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களுக்கு ஆங்கிலப்பயிற்சி கொடுக்கப்படும்
- ✓ பயிற்சி கிழமையில் 5 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்கு கொடுக்கப்படும.
- ✓ பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்தப்படுவீர்கள்.
- ✓ போயாதினம் உட்பட அரசாங்கவிடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30- 5.00வரை வேலை நாட்களாகும்.

**கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்துதரப்படும்.**

**பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கொடுப்பனவு 34500/= வை சம்பளமாகக்கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத்தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.**

உங்கள் விண்ணப்பத்தினை பிறப்பு அத்தாட்சிபத்திரம் தராதரப்பத்திரக்குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45 முத்திரை ஒட்டப்பட்டு தபால் உறையின் மேல் மூலையில் 01-11ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

**BLOOMING BUDS INTRENATIONAL TEACHER TRAINING SCHOOL,**
Thavadi Road
Suthumalai, Manipay
021 225 6641/077 469 0044

தொலைபேசி:0715669641/0771529731/ 0112677641

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி:

**Officer**
**Blooming Buds International Teaching Training Institute**
**No.388/1/1, Base Line Road, Dematagoda, Colombo-09.**

# 7அம்சக் கொள்கை அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்

**டோனி பிளயர் விவரிப்பு**

கொழும்பு, ஓக. 30
ஏழு அம்சக் கொள்கைகளின் அடிப்படையில் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டோனி பிளயர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் லக்ஸ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரை நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது உரையில், வட அயர்லாந்தின் எனது அனுபவத்திலும் ஏனைய நாடுகளின் அனுபவ அடிப்படையிலும் ஏழு கொள்கைகளின் அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என நான் அடையாளப்படுத்துகின்றேன்

முதலாவது கொள்கை முரண்பாடுகள் அற்ற நிலைமை நீடிக்க வேண்டும். நல்லிணக்கம் வெற்றியளிக்கவேண்டுமாயின், முரண்பாடுகள் அற்ற நிலைமையை உறுதி செய்ய வேண்டியது அவசியமானது.

இரண்டாவதாக, நேர்மையான நல்லிணக்கத் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும், இலங்கை அரசினால் உள்ளக ரீதியாக நல்லிணக்கத் திட்டமொன்றை வகுக்க முடியும் .உண்மையில், அதிகாரப் பகிர்வு, உரிமைகளை உறுதி செய்தல், அபிவிருத்தி, கௌரமாகவும், நியாயமாகவும் நடத்துதல் போன்ற விடயங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

சரியான திட்டமொன்றை வகுத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தாமல் எதிர்காலத்தை சுபீட்சமானதாக மாற்ற முடியாது.வன்முறைகளற்ற சாதாரண அரசியல் நடவடிக்கைகளில் முரண்பாடுகளுக்கு தீர்வு காண அவகாசம் இருக்க வேண்டும்.

மூன்றாவது ஐக்கிய மற்றும் பல்வகைத் தன்மை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்த இரண்டினதும் சமநிலைத்தன்மை மிகவும் அடிப்படையானது.பல்லின மக்கள் பல்கலாசார சமூகக் கட்டமைப்புக்களின் இணைவு பல்வகைமையை அதிகரித்து ஐக்கியத்தை உறுதி செய்யும்.

பொருளாதார நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் நான்காவது முக்கிய கொள்கையாகவும், கல்வி ஐந்தாவது கொள்கையாகவும் காணப்படுகின்றது.

பேச்சு நடத்துவது ஆறாவது கொள்கை. ஆழமாகவும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாகவும், தொடர்ச்சியாகவும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்

ஏழாவதும் முக்கியமானதுமான கொள்கை கடந்த காலம் பற்றியது.

கடந்த காலத்தை அழித்துவிடவோ அல்லது மறந்துவிடவோ முடியாது. எவ்வாறெனினும், இந்த விடயம் எதிர் காலத்தை பாதிக்கும் வகையில் அமைந்துவிடக் கூடாது. உண்மையை வெளிக்கொணரும் வகையில் இந்த செயன்முறை அமைய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சரியான வழிமுறைகள் அணுகுமுறைகளைப் பின்பற்றி சரியான நபர்களை நியமித்து நல்லிணக்கம் முன்னெடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

பல்கலாசார மக்கள் பல்வேறு வழிகளில் வளர்ந்து வந்தாலும் அவர்களை இணைக்க ஏதேனும் ஓர் விடயம் பொதுவானதாக அமையும். அதன் அடிப்படையில் பல்வகைமையில் ஐக்கியத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் டோனி பிளயர் தனது உரையில் தெரிவித்துள்ளார். (த)

## அருள்நெறி விழாவின் பன்னிரெண்டாம் நாள்

யாழ்ப்பாணம், ஓக. 30
இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின் பன்னிரெண்டாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பி.ப 3.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமை வகிக்கவுள்ளதோடு பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் நெல்லண்டை அறநெறிப் பாடசாலை மாணவிகளான பா.ஆரணி, செ.அபிநயா, சி.சரத் டிலக்சனா ஆகியோரின் பேச்சு, பொலிகை விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை மற்றும் கீழ்ப்பிரிவு மாணவர்களான ஐ.டிலக் சன், க.ஜதுர்சினி ஆகியோரின் பேச்சு, அ.நர்மிலா மற்றும் அ.அனுஜா ஆகி யோரின் தனி நடனம், புற்றளை சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையினரின் பஜனை, பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மத்திய பிரிவு மாணவர்களின் குழு நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-10)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பொன்னம்பலம்
பொன்னுத்துரை

தோற்றம்
23.02.1945

மறைவு
09.09.2014

திதி: 30.08.2015

ஓராண்டு ஆனபோதும்
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு தீராத வேதனையால்
தினம் தினம் துடிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வரதகுமார் சந்திரவதனி
திதி: 19.08.2015



தோற்றம்
02 . 10 . 1961

மறைவு
30 . 08 . 2014

அம்மா ஓராண்டு ஆகியும்
உன் நினைவுகள் என்றும் பசுமையாக
எம் மனதில் – அவை
பல்லாண்டு ஆகியும் மாறாதம்மா.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.
தொ.இ - 077 0444769

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

திருமதி சகுந்தலாதேவி (ராகினி) சத்தியபாலன்
B.COM (Srilanka) Dip in Edu.
[ஆசிரியை - மேல்மாகாணம் - கொ/மாவத்தை சென் அன்ரனிஸ் தமிழ் மகா வித்தியாலயம், கொழும்பு -14]
திதி: பௌர்ணமி



தோற்றம்
1965 . 08 . 22

மறைவு
2015 . 07 . 31

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு, நேரிலும் தொலைத் தொடர்பு சாதனங்களின் ஊடாகவும் அனுதாபச் செய்தி வெளியிட்டவர்கள், மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பலவழிகளிலும் உதவி புரிந்தவர்கள்; வேறு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் எல்லோரையும் அழைக்கின்றோம்.

குமரேசு இல்லம்,
இணுவில் மேற்கு, இணுவில்

குடும்பத்தினர்.

பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி கந்தவனம்
தர்சிகா
(மாணவி, கொக்குவில் இந்துக்கல்லூரி)

திதி : 29.08.2015



சிந்தாமணி விநாயகர்
அருளியது
25.05.1990

சிந்தாமணி விநாயகர்
கழல் சேர்ந்தது
23.08.2002

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

கவி போட்டோ,
நவாலி தெற்கு.

அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, அத்தான், பெறாமகள்,
அண்ணி, உற்றார், உறவினர்.

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
கண்ணதாசன்
ரஜந்தன் (அன்பு)
(தரம் - 4 மாணவன்
இணுவில் இந்துக் கல்லூரி)

அன்னைமடியில்
25.06.1998

பரமன் அடியில்
30.08.2007



அன்பிற்கு நிகராய் இந்த அகிலத்தில் எமக்கு ஏதுண்டு
கள்ளமில்லா உள்ளமதை - காலன்
கொள்ளை கொண்டதேனோ?
ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஆறிடுமோ எம் துயரம்
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்.
இணுவில் கிழக்கு, இணுவில்.


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை செல்லத்துரை



சாவகச்சேரி கெருடாவிலைச் சொந்த இடமாகவும் டச்சு வீதி மற்றும் சாவகச்சேரி வடக்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை செல்லத்துரை 27.08.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா செல்லத்துரை யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான தெய்வானைப்பிள்ளை, சுப்பையா, சின்னத்துரை, பொன்னம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்பு சகோதரியும் வாசன் (கொலண்ட்), செல்வராணி (கனடா) காலஞ்சென்ற இந்திராணி, வசந்தகுமாரி (வசந்தி - நோர்வே) காலஞ்சென்ற தவமலர் (கொலண்ட்) ஆகியோரின் அன்பு தாயாரும் ரோகினி (கொலண்ட்), துரைராசசிங்கம் (கனடா), விஜயவாசன் (நகரசபை சாவகச்சேரி) துரைராசா (நோர்வே) சச்சி (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயரூபன், சுயந்தினி (லண்டன்), விஜேந்திரன், வசந்தா (விஜேந்திரா ஸ்ருடியோ சாவகச்சேரி), விஜயதாஸ் (STC சுப்பர் மாக்கற் சாவகச்சேரி) தனுசா, பிரசாந், சரண்யா, பிரவின், சுமி, சுஜி, சுபா (கொலண்ட்), மயூரன், பிரியா, தாரணி - செர்மிதன், மதுசன் (நோர்வே) விஜயரூபி-பிரகலாதன், விஜயசராஸ், நிலோன், நரோஜி, நிலான் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அகானா, பிரியனா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு சாவகச்சேரி வடக்கு மீசாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 613 6575

தகவல் :-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்வன அழிந்து வருவதே எலிக் காய்ச்சலுக்குக் காரணம்

கொழும்பு, ஓக 30

மனித செயற்பாடுகளின் காரணமாக ஊர்வன இனங்கள் அழிந்து வருவதே எலிக் காய்ச்சல் பரவிச் செல்வதற்கு காரணமாகி இருப்பதாக கால்நடை வைத்திய ஒன்றியத்தின் தலைவரான கால் நடை வைத்தியர் சமின் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வீடுகளின் சுற்றாடலில் மற்றும் செய்கை நிலங்களை அண்டி எப்போதும் நடமாடித் திரியும் எலிக் கூட்டங்கள் இன்று அதிகரித்திருப்பதாகவும், அதன் காரணமாகவே லெப்ரொஸ்பய்ரோஸிஸ் என்ற எலிக் காய்ச்சல் பரவும் ஆபத்து இருப்பதாகவும், கடந்த பல ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இதில் வேகமான வளர்ச்சியொன்று காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

ஊர்வன எலிகளின் செறிவைக் கட்டுப்படுத்துவதால் அவற்றைக் கபளீகரம் செய்பவையாக இயற்கையிலேயே செயற்படுவதாகவும், மனிதனுக்குத் தீங்கு விளைவிப்பவைகள் போன்றே தீங்கை விளைவிக்காத ஊர்வன இனங்களையும் கூட அழிக்கும் செய்ற்பாட்டில் பெரும்பாலானோர் ஈடுபடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எலிகளை உணவாகக் கொள்வதற்காகச் செய்கை நிலங்களை அண்டி நடமாடும் ஊர்வன இனங்கள் இவ்வாறு சுற்றாடல் தொகுதியில் இருந்து விலகிச் செல்வதன் காரணமாக எலிகளின் செறிவு அதிகரித்துத் தொற்று நோய்கள் பரவிச் செல்லும் ஆபத்து அதிகரித்திருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த-22)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# இலங்கையின் கௌரவத்துக்குரிய வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு



கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகவும் கௌரவத்துக்குரிய வங்கியாகத் தொடர்ந்து 11 ஆவது தடவையாகவும் நாட்டின் மொத்த கூட்டாண்மை நிறுவனங்களுள் மிகவும் கௌரவத்துக்குரிய இரண்டாவது நிறுவனமாக தொடர்ந்து ஐந்தாவது வருடமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள கூட்டாண்மை நிறுவனங்களுள் மிகவும் கௌரவத்துக்குரிய நிறுவனங்களைத் தரப்படுத்தும் எல்.எம்.டியின் தரப்படுத்தலிலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் மிகவும் நேர்மையான நிறுவனம் என்ற ரீதியில் வங்கி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளது.

அதேபோல் நிதிச் செயற்பாடுகளுள் முதலாமிடம் மற்றும் ஏனைய சில மதிப்பீடுகளை உள்ளடக்கி அதி சிறந்த நிறுவனங்கள் வரிசையிலும் இடம் பிடித்துள்ளது.

2015ஆம் ஆண்டில் இலங்கையின் அதிசிறந்த ஐந்து நிறுவனங்கள் வரிசையில் இடம்பிடித்துள்ள ஒரேயொரு வங்கியாகவும் கொமர்ஷல் வங்கி திகழுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மொத்த முகாமைத்துவ வரிசையில் கொமர்ஷல் வங்கி இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது.

மொத்த தரங்களைப் பேணுவதில் மூன்றாம் இடம், கண்டுபிடிப்புக்கள், கூட்டாண்மை கலாசாரம் மற்றும் தூரநோக்கு ஆகிய பிரிவில் நான்காவது இடம், சுறுசுறுப்பு மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு ஆகிய பிரிவுகளில் ஐந்தாம் இடம் என பல தெரிவுகளில் கொமர்ஷல் வங்கி இடம்பிடித்துள்ளது.

2005 இல் இந்தத் தெரிவுகள் தொடங்கப்பட்டது முதல் மிகவும் கௌரவத்துக்குரிய வங்கி என்ற நிலையை கொமர்ஷல் வங்கி தொடர்ந்து தக்கவைத்துள்ளது.

2015இல் முன்னணி ஐந்து கூட்டாண்மை நிறுவனங்கள் வரிசையில் இடம்பிடிக்க வங்கி பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளமையை அவதானிக்கின்ற போது எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜெகன் துரைரட்ணம்.

இவற்றுள் மிகவும் கௌரவத்துக்குரிய வங்கி என்ற எமது தொடர்ச்சியான தெரிவு, நிதிச் செயற்பாட்டில் முன்னணி வகிக்கின்றமை என்பன மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஏனைய பிரிவுகளிலும் நாம் மிகச் சிறந்த இடத்துக்குத் தெரிவாகியுள்ளமை எமக்கு மேலும் மகிழ்ச்சி அளிக்கின்றது என்று அவர் மேலும் கூறினார்.

எல்.எம்.டி தரமானது பொது மக்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை. அரச மற்றும் தனியார் பிரிவின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகள் உட்பட பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் உள் வாங்கப்பட்டே இந்தத் தெரிவுகள் இடம்பெறுகின்றன.

நிதி செயற்பாடு, தரம், முகாமைத்துவ செயற்பாடு, நேர்மை, புத்தாக்கம், கூட்டாண்மை கலாசாரம், கூட்டாண்மை சமூகப் பொறுப்பு, தூரநோக்கு, தேசத்தைப்பற்றிய கடமைப்பாடு என்பன தெரிவுக்காக எடுத்துக் கொள்ளப்படும் பிரதான விடயங்களாகும்.

2015 மதிப்பீட்டில் மேற் குறிப்பிட்ட பத்து விடயங்களில் ஒன்பது விடயத்தில் முதல் ஐந்து இடங்களுக்குள் இருக்கின்றமை அவதானிக்கத்தக்கதாகும். (த)

# பிளாட்டினம் விற்பனையாளர் விருதை வென்ற பஷன் பக்


இலங்கையின் மிகப் பெரிய சில்லறை ஆடை விற்பனை நிலையமான பஷன் பக். அண்மையில் கொழும்பு ல்டன் கிராண்ட் போல்ரூமில் இடம்பெற்ற ரெயின்கோ பிளாட்டினம் விருது விழாவில் ரெயின்கோவின் பிளாட்டினம் விற்பனையாளர் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டது.

அகயமு 2015 பிளாட்டினம் விற்பனையாளர் விருது என்பதே இவ்விழாவின் தொனிப்பொருளாக இருந்தது.




பஷன் பக்கின் சார்பில் இவ் விருதை அதன் பணிப்பாளர் ஷபீர் சுபியான் பெற்றுக்கொண்டார்.

ஆடைத்தொழிற்றுறையில் 21 வருடங்களுக்கும் மேலாக ஈடுபட்டுவரும். ஃபஷன் பக், அண்மையில் டிரயம்ப் இன்ரர் நெஷனலின் வருடாந்த விற்பனை மாநாட்டில் வென்ற விருதோடு கடந்த தசாப்தத்தில் பல்வேறுட்ட விருதுகளையும் வென்றுள்ளது. (த)




உங்களுடைய வெற்றிப்பாதைக்கு
அடி எடுத்து வையுங்கள்

## வாகன சேவையாளர் (Vehicle Service Man)

**அடிப்படைத் தகைமைகள்**

- க.பொ.த சாதாரண தரம் வரை கற்றிருத்தல்.
- வாகனங்களை கழுவுதல் மற்றும் சுத்தமாக்கல் போன்றவற்றில் அனுபவம் இருத்தல்.
- 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல்.

**ஏனைய தகைமைகள்**

- வேலைப்பளு அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களிலும் சேவையாற்ற கூடியவராகவும் இலக்கினை நோக்கி பயணிக்க கூடியராகவும் இருத்தல்.

இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பவும்.

முகாமையாளர் (மனித வளம் மற்றும் முகாமைத்துவம்)
යුනයිටඩ් මෝටර්ස් ලංකා පීඑල්සී

பிரதான சேவை நிலையம்:
145, மஜீட் பிரதேசம், ஒருகொடவத்தை
தொலைபேசி: 0773 118 626
மின்னஞ்சல்: workshop@unitedmotors.lk
இணையத்தளம்: www.unitedmotors.lk




## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணம், கண்டி கிளைகளில்.

**செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்**

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும்
  பிள்ளைகளுக்கு (6-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000.

70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830-1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்ட்ன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830-1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900-1730
ஞாயிறு: 0900-1600 (சிறுவர்களுக்கு மட்டும்)

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மடுப்பதியை நினைவூட்டும் சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலம்

**மன்னார் மடுப்பதியை நினைவூட்டும் தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களில் ஒன்றான சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலப் பெருவிழா ஆவணி மாதம் 5 ஆம் திகதி கொண்டாடப்பட்டதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலமானது வேலணை ஊர்காவற்துறை வீதியில் புளியங்கூடல் சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் பரந்த வளாகத்தைக் கொண்டு அமைந்துள்ளது.

விசுவாசத்தின் விளை நிலமாகத் திகழ்கின்ற தீவுப்பகுதியில் ஊர்காவற்துறை – கரம்பொன் – நாரந்தனை – மண்டைதீவு – புங்குடுதீவு – நெடுந்தீவு – சாட்டி ஆகிய 7 பங்குகள் அமைந்துள்ளன. யாழ் மறைமாவட்டத்தின் அங்கீகரிக்கப்பெற்ற பிரசித்தி பெற்ற மூன்று யாத்திரைத்தலங்களாக சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலம் – சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம் – கரம்பொன் வேளாங்கன்னி அன்னை யாத்திரைத்தலம் ஆகிய யாத்திரைத்தலங்கள் அமைந்துள்ளன. யாழ் – மன்னார் – திருமலை – மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்களான மேதகு ஜெ.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை – மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை – மேதகு எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை – மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை – மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை – மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை ஆகிய அனைத்து ஆயர்களுமே தீவுப்பகுதி மண்ணின் மைந்தர்கள்.

இந்தக் கட்டுரைக்கான தகவல்களை சின்னமடு செபமாலை மாதா ஆலய வர்லாற்றுக் கை நூலில் அருள்திரு ஞா.விக்ரர் பிலேந்திரன் அடிகளார் எழுதிய சரவணை சின்னமடு செபமாலை அன்னை ஆலயத்தின் குறுகிய வரலாறு என்ற ஆக்கத்தில் இருந்தும் சின்னமடு பரிபாலகர் ஜி.பீற்றர் அடிகளாரிடம் இருந்தும் பெற்றுக்கொண்டோம்.

தீவுப்பகுதியில் குறிப்பாக ஊர்காவற்துறையை அண்டிய பகுதியில் கத்தோலிக்க மதம் போர்த்துக்கேயர் காலம் முதல் பரப்பப்பட்டு ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டாலும் ஆங்கிலேயர் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. 1894 ஆம் ஆண்டுக்கு முன்னதாக இங்கு ஆலயம் எதுவும் அமைக்கப்படவில்லை என அறியவருகிறது. சந்திரசேகர அடிகளார் ஊர்காவற்துறை நாரந்தனைப் பகுதிக்குப் பொறுப்பாகப் பணியாற்றிய காலத்தில் (1893 – 1902) தமக்கு பல வருடங்களுக்கு முன்னர் பணியாற்றிய விஸ்திரினி அடிகளார் (1846 – 1848) திருமுழுக்குக் கொடுத்த மக்கள் கத்தோலிக்கர் அல்லாதவர்கள் போன்று வாழ்ந்து வருவதை அறிந்து அம்மக்களுக்கு கல்வி அறிவைப் ஊட்ட ஒரு பாடசாலையையும் விசுவாசத்தில் வளர ஒரு ஆலயத்தையும் அமைப்பது தேவை என்பதை உணர்ந்தார். இதற்கென நாரந்தனைப் பகுதியில் செல்வாக்கு மிக்கவரும் பிரபல பதிவுக்காரரும் வைத்தியருமான நீக்கிலாப்பிள்ளை பேதுருப்பிள்ளை என்பவரின் பெரு முயற்சியோடு சரவணை சின்ன விதானையார் சந்தியில் வந்த செல்லப்பர் என்பவரின் காணியில் (வேலணை ஊர்காவற்துறை வீதியில்) பத்து ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. 1894 ஆம் ஆண்டு பாடசாலை அமைக்கும் பணி மாத[illegible]

பில் ஆரம்பிக்கப்பட்டது. சந்திரசேகரம் அடிகளாரும் மாதகல் பாவிலுப்பிள்ளை சட்டம்பியாரும் சரவணைக் கட்டையரும் இதன் பின்னர் தற்போதுள்ள சின்னமடு ஆலயத்திற்கு மேற்கே பனைமரத் தூண்களைக் கொண்டு கிடுகினால் தட்டி கட்டப்பட்ட பனை ஓலையால் வேயப்பட்ட ஆலயத்தை அமைத்தனர்.

ஊர்காவற்துறை புனித யாகப்பர் ஆலயமும் சந்திரசேகரம் அடிகளாரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தமையால் அங்கு பாவனையற்று இருந்த மாதா சொரூபத்தை தொம்மைக்குட்டி என்பவரும் மேற்குத் தெருவைச் சேர்ந்த அண்ணாவி மனுவல் என்பவரும் ஆலய மூப்பர் யாக்கோப்பிள்ளை என்பவரதும் அடைப்பனார் பஸ்தியாம்பிள்ளை என்பவரினதும் ஒப்புதலைப் பெற்று சந்திரசேகரம் சுவாமியிடம் ஒப்படைத்தார். அரச பதிவாளர் பேதுருப்பிள்ளை மாதகல் பாவிலுப்பிள்ளைச் சட்டம்பியார் சரவணைக் கட்டையர் இவர்கள் முன்னிலையில் மாதா சொரூபத்தை ஆசீர்வதித்து மக்கள் வழிபாட்டுக்கு சந்திரசேகர அடிகளார் வைத்தார். இதுவே சரவணை சின்னமடு செபமாலை மாதா ஆலய வரலாறு என அறியப்படுகிறது.

1895 ஆம் ஆண்டு ஆடி மாதம் 14 ஆம் திகதி புதிதாக அமைக்கப்பட்ட கொட்டில் ஆலயத்தில் முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. 1895 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 4 ஆம் திகதி

டும் யாத்திரையாக வரத்தொடங்கினர். இவ்வாறு வருகின்ற யாத்திரிகர்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கு ஆங்காங்கு தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டன.

மருதமடு – தலைவில்லு போன்ற யாத்திரைத்தலங்கள் போன்று சின்னமடுவிற்கும் பெருந்தொகையிலான மக்கள் யாழ் மறைமாவட்டத்தில் இருந்தும் மற்றைய இடங்களிலும் இருந்தும் வரத்தொடங்கியதாக சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

சரவணை சின்னமடு – மன்னார் மருதமடுவிற்குப் பதிலான ஒரு சிறிய யாத்திரைத்தலம் என அக்காலத்தில் கருதப்பட்டமையால் சின்னமடு என்று அழைக்கப்படத் தொடங்கியது. 1909 ஆம் ஆண்டு ஆயர் யூலன் அவர்கள் இத்திருத்தலத்தை யாழ்.மறைமாவட்டத்தின் யாத்திரைத்தலமாக பிரகடனப்படுத்தினார். 1894 ஆம் ஆண்டு சந்திரசேகர அடிகளார் சின்னமடு யாத்திரைத்தலத்தை சுற்றியுள்ள பகுதிகளை வாங்கி ஆலய வளாகத்தைப் பெருப்பித்தார். 1925 ஆம் ஆண்டு மொத்தமாக 16 ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு யாழ்.மறைமாவட்டம் 2 ஆயிரத்து 300 ரூபா வழங்கியது.

1893 முதல் 1908 வரையும் நாரந்தனைப் பங்கு ஊர்காவற்துறைப் பங்குடன் இணைக்கப்பட்டிருந்தது. 1908 ஆம் ஆண்டு நாரந்தனைப் பங்கு பிரிக்கப்பட்ட போது சரவணை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்*



இரண்டாவது திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட போது 33 பேர் திருமுழுக்குப் பெற்றனர். 1806 ஆம் ஆண்டு முதல் தடவையாக பெருந்தொகையான மக்கள் இப்புதிய திருத்தலத்தை நோக்கி திருச்செபமாலை ஓதிக்கொண்டும் பிரார்த்தனை பாடிக்கொண்டும் யாத்திரையாக வந்தார்கள் என சுவாமி ஞானப்பிரகாசர் தெரிவிக்கிறார்.

மனித சஞ்சாரம் அற்று பாலைவனம் போல் கவனிப்பார் அற்று திறந்த வெளியாகக் கிடந்த இடம் இப்புதிய யாத்திரைத்தல அமைப்பினால் பெருந்தொகையான மக்கள் கூடும் ஒரு அன்னையின் பதியாக புதுப்பொலிவு பெற்றது. 1896 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஆவணி மாதம் 5 ஆம் திகதி செபமாலை அன்னையின் பெருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் நாரந்தனை – சுருவில் – கரம்பொன் – ஊர்காவற்துறை – சாட்டி – அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து மக்கள் கூடினாலும் 1896 ஆம் ஆண்டின் பின்னர் மாதகல் – இளவாலை – சில்லாலை – ப[illegible] இருந்தும் யா[illegible] தொகையான மக்கள் மாட்டுவண்டியிலும் [illegible]

செபமாலை மாதா ஆலயம் நாரந்தனைப் பங்கின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. 1925 ஆம் ஆண்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு தற்காலிக ஆலயமாக திகழ்ந்த போதிலும் பின்னர் தங்குமிடமாக மாற்றப்பட்டதாக சுவாமி ஞானப்பிரகாசர் தெரிவிக்கிறார். பலிப்பீடத்திற்கு முன்பு சிமெந்து நிலத்தில் 1948 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆலயத்தின் முகப்புப் பக்க வாசலில் 1952 என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இரண்டு குறிப்புக்களும் இக்காலப்பகுதியில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்றன என்பதைச் சுட்டி நிற்கின்றன. 2000 – 2001 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற திருத்த வேலைகளில் இக்குறிப்புக்கள் அழிந்து போயின. 1894 ஆம் ஆண்டு சந்திரசேகர அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே இன்றும் ஆலயத்தின் அருகாமையில் தொடர்ந்து இயங்கிவருகிறது. தற்போதுள்ள பாடசாலை அதே இடத்தில் அமைக்கப்பட்ட மூன்றாவது பாடசாலை என அறியவருகின்றது.

[illegible] பின்னர் பேருந்து வசதிகள் அமைக்கப்பட்டமை – பண்ணை புங்குடுதீவுப் பாலங்கள் அமைக்கப்பட்டமை – குறிகட்டுவான் [illegible]

போன்ற காரணங்களால் இங்கு வருகை தருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. ஒரு காலத்தில் ஆவணி மாதத்திலும் ஐப்பசி மாதத்திலும் திருவிழாக்கள் இடம்பெற்றுள்ளன. ஆவணி மாதத் திருவிழாவிற்கு மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளில் இருந்தும் ஐப்பசி மாதத்திருவிழாவுக்கு சில்லாலை பண்டத்தரிப்பு இளவாலை மாத கல் ஆகிய பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்தார்கள் என அறியவருகின்றது. ஆலயத்தில் காணப்படும் மரத்தினாலான சித்திர வேலைப் பாடுகள் கொண்ட திருப்பலிப்பீடம் சில்லாலை வைத்தியர் இன்னாசித்தம்பி அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அது தற்போது சிம்மாசனத்தின் இடப்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் கோட்டையைக் கைப்பற்றும் நோக்குடன் ஊர்காவற்துறையில் தரையிறங்கி முன்னேறிய பின்னர் இவ் ஆலயத்தில் தஞ்சம் அடைந்த 150 குடும்பங்களைப் பராமரிக்கும் நலன்புரி நிலையமாக சின்னமடு ஆலயம் செயற்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு தீவக மக்கள் குடியமர்ந்த பின்னர் ஜே.ஜே.மௌலிஸ் அடிகளார் ஐந்து ஆண்டு இடைவெளியின் பின்னர் மீண்டும் வழிபாடுகளை ஆரம்பித்தார். 2000 – 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடக்கிற்கான புனர்வாழ்வு புனருத்தாரண சபையினால் இவ் யாத்திரைத்தலத்துக்கென 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அதில் 38 இலட்சம் ரூபாவிற்கு புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக அந்தக் காலப்பகுதியில் பணியாற்றிய எரிக் றொசான் அடிகளார் தெரி விக்கிறார்.

இக்கட்டுமானப் பணிகளின் போது ஆலயத்தின் நடுப்பகுதியில் இருந்து தூண்கள் மாற்றியமைக்கப்பட்டு திருப்பண்ட பாதுகாப்பு அறை தவிர்ந்த ஏனைய அனைத்துப் பகுதிகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. பழைய ஆலயம் அமைந்திருந்த அதே அத்திபாரத்தைக் கொண்டே புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் நீளத்திலே அகலத்திலே மாற்றம் ஏற்படுத்தாமல் ஆலயத்தின் இரு பக்கங்களிலும் பத்தடிக்கு ஒன்றாக கொங்கிறீற் தூண்கள் அமைக்கப்பட்டு அவற்றிலே முகட்டு இரும்புப் பட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆலயத்தின் நீளம் 140 அடியாகவும் அகலம் 40 அடியாகவும் அமைந்துள்ளது. ஏனைய புகழ் பெற்ற யாத்திரைத்தலங்களின் அமைப்பைப் போன்று பலிப்பீடமும் அதன் பின்புறமும் போதிய இடைவெளியுடன் சிம்மாசனம் போன்று அமைக்கப்பட்டுள்ளது. திருவிழாக் காலங்களில் மக்கள் பெரும் எண்ணிக்கையில்கூடுவதைக்கருத்தில்கொண்டு ஆலயத்தின் வடக்குப் பகுதியில் அழகான போட்டிக்கோ அமைக்கப்பட்டுள்ளது. புனரமைக்கப்பட்ட ஆலயத்தின் திறப்பு விழா 2001 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி ஜே.பி. செல்வராஜா அடிகளாரால் நடத்தப்பட்டது.

தற்போதைய பரிபாலகர் ஜி.பீற்றர் அடிகளார் சின்னமடு அன்னை மேல் பக்தி கொண்டு ஆலய வழிபாடுகளை மிகவும் சிறப்பாக நிறைவேற்றுவதிலும் திருவிழாக்களை கோலாகலமாக கொண்டாடி திரண்டுவரும் பக்தர்கள் அன்னையின் அருள் பெற்றுச் செல்ல பெரும் துணை செய்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது. சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலத்திற்கு வந்து தமது இறுதி வேண்டுதலில் – கடைசியாய் என் அன்பான தாயே நான் உமது இன்ப சன்னிதானத்தை விட்டுப் பிரிய இருப்பதால் உமது பாதாரவிந்தத்தை முத்திசெய்து உமது ஆசீர்வாதத்தைக் கேட்கிறேன். அந்த ஆசீர்வாதம் என் மேலும் எனக்குள்ள யாவற்றின் மேலும் இருப்பதாக – என்று வேண்டி திரும்பவும் அன்னையின் பதிக்கு வரும்வரை அன்னையின் வரம்வேண்டிச் செல்கின்றனர்.

சின்னமடு அன்னை தம் தாய்க்குரிய அன்போடு அனைத்து தமிழ் மக்களையும் அரவணைத்து ஆசீர் வழங்கி பாதுகாத்து சுபீட்சமான ஒரு எதிர்காலத்துக்கு அழைத்துச் செல் வாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொய்வு நோயும், வேதி மூச்சு உட்செலுத்திகளின் பிரயோகமும்

மருத்துவர்:
சி.யமுனானந்தா MBBS, DTCD

(கடந்தவாரத் தொடர்ச்சி)

**5. நெஞ்சு இறுக்கமாகுதல்**


ஓரளவு வளர்ந்த பிள்ளைகள் இந்த நிலையைக் கூறக்கூடியவர்களாக இருப்பர்.

தொய்வு நோய்நிர்ணயம் செய்வதில் ஏனைய நோய் நிலைகளை அறிய வினவ வேண்டிய கேள்விகள்.

1. இந்த நிலை எப்பொழுது ஏற்பட்டது?
2. எவ்வளவு காலம் பிரச்சினையாக உள்ளது?
3. அவ்வாறு என்ன காரணிகளினால் அதிகரிக்கின்றது?

**என்பவற்றை வினாவிய பின்னர் பின்வருவனவற்றை அறிதல் வேண்டும்.**

1. பிள்ளை இதற்கு முன் எவ்வாறு இருந்தது? அடிக்கடி இழுப்பு வருகின்றதா? சுவாசிக்கும் போது சத்தம் ஏற்படுகிறதா?
2. குழந்தைக்கு இடையூறாக, இருமல் குறிப்பாக இரவில், கடுமையாக அமைதல் அல்லது விடிய நித்திரை விட்டு எழும்பும் போது இருமல் ஏற்படுகின்றதா?
3. குழந்தையின் நித்திரை இருமலினால் குழம்புகின்றதா?
4. குழந்தை விளையாடிய பின்னர் உடற்பயிற்சியின் பின், அல்லது அழுதபின் இருமுகின்றதா?



**அடுத்து**

1. குழந்தை குறித்த பருவ காலத்தில் மூச்செடுக்கக் கஷ்டப்படுகின்றதா?
2. குழந்தைக்கு இருமல், இழுப்பு, நெஞ்சு இறுக்கமடைதல், வளியில் உள்ள மாசுக்களைச் சுவாசித்தல் பாதிப்பை ஏற்படுத்துகின்றதா? பொதுவாக புகை, வாசனை, புடங்கள், நாய், பூனை என்பவற்றின் மயிர்.
3. குழந்தைக்கு தடிமன் ஏற்படும்போது, நெஞ்சுச்சளி ஏற்படுகின்றதா?
4. குழந்தைக்கு இவ்வாறான அறிகுறிகள் நீங்குகின்றனவா?

மேற்கூறிய கேள்விகளின்போது ஆம் என்ற பதில் கிடைப்பின் தொய்வு நோயினதாகக் கருதப்படும்.

**தொய்வு நோயின் ஏனைய இயல்புகள்**

1. காய்ச்சலின்மை பொதுவாகக் காணப்படும். தொற்று நிலையில் தொய்வு வரும்போது காய்ச்சல் இருக்கும். வைரஸ் தொற்றின் பின் நீண்ட நாள்களுக்கான இருமல் அல்லது முட்டு இழுப்புக் காணப்படல் என்பன தொய்வு நோயின் அறிகுறி.

2. ஒவ்வாமை உடையோர்

தொய்வு அழற்சி நிலை யாரும் ஒருவருக்கு அல்லது குடும்பத்தில் காணப்படலாம்.

3. உடற்பயிற்சி செய்யும்போது சிரமம் ஏற்படும்

சிறு பிள்ளைகளில் சிரித்தல், அழுதல் என்பன அறிகுறிகளாகக் காணப்படும். இது தொய்வுக்கு அடையாளம்.

4. தூண்டிகள்

ஒவ்வாமை மூலம் ஆஸ்துமாவை ஏற்படுத்தக் கூடியவை: தூசு மகரந்த மணிகள், விலங்கின் மயிர்கள், கரப்பான் பூச்சி எச்சம், பங்கசு, குளிர்காற்று, புகை, சிகரெட் புகை, உண்ணிகள் நாற்றம், வாணவெடிப் புகை, நுளம்புத்திரிப் புகை.

**தொய்வு நோயைப் பரிசோதிக்கும்போது காணக்கூடியவை.**

1. சுவாசித்தலில் கஷ்டம்

வெளிச்சுவாசம் சத்தத்துடன், சுவாசத்தில் மேலதிக தசைகளின் செயற்பாடு.

குழந்தைக்குப் பால் குடிக்க கஷ்டம், நித்திரை கொள்ளக் கஷ்டம், அசௌகரியமான எளிதில் அழும்நிலை.

2. இருமல்

1. தொடர்ச்சியாகக் காணப்படல்
2. விட்டு விட்டுக் காணப்படல்
3. இரவில் காணப்படல்
4. உடற்பயிற்சியின்போது காணப்படல்

3. ஏனைய அழற்சி நிலைகள் காணப்படல்

எக்சிமா , மூக்கழற்சி, மழை பெய்தபின் ஏற்படும் காய்ச்சல், நிறை அல்லது உயரம் வளர்ச்சியை அறிய அறிகுறிகள் இல்லாது இடையே பரிசோதிக்கும் போது சாதாரணமாக குழந்தை இருக்கலாம்.

**தொய்வு நோயாளிகளில் பரிசோதிக்க வேண்டியவை**

அதி உச்சவெளி மூச்சு வீதம் (PEFR)

1. அதிஉச்சவெளி மூச்சு வீதம் B2 agonist பாவித்த பின் 15% அதிகரிப்பு குறைந்த நேரத்தில் தொழிற்படும்.
2. அதிஉச்சவெளி மூச்சு வீதம் 15% குறைவு உடற்பயிற்சியின் போது ஏற்படுகின்றது.
3. அதி உச்சவெளி மூச்சு வீதம் காலை, மாலை வேறுபாடு 10 % அதிகமாக இருப்பின் மருந்து எடுக்காதபோது
4. அதி உச்சவெளி மூச்சு வீதம் காலை 20 % காலை, மாலை வேறுபாடு சுவாசக்குழாய்ச் சுருக்கத்தளர்த்திகள் எடுக்கும்போது இருக்கும்.

குறைந்த அளவு காலையிலும், கூடிய அளவு 12 மணித்தியாலம் கழிந்த பின்பும் காணப்படும். இதைத்தவிர வேறு பரிசோதனைக்கு ஈடுபடத் தேவையில்லை. ஆய்வுகூடப் பரிசோதனைகள் தொய்வு நோயை இனங்காண உதவுவதில்லை. அதனை விடுத்து மருத்துவ சோதனை விவரத்தினால் நோய் நிர்ணயம் செய்யப்படல் வேண்டும்.

முதலாவது சிகிச்சையின்போது தொய்வு நோயாளி என அடையாளம் இடாது தொடர்ந்து சில காலம் அவதானித்து நோய் நிர்ணயிக்கப்படலாம்.

**தொய்வு நோயைச் சிறுவர்களில் நிர்ணயம் செய்தல்**

A. தொய்வு நோய்க்குரிய இயல்புகள் காணப்படல்

மூன்று தடவைகளுக்கு மேல் சுவாசப் பாதையில் சுருக்கம் ஏற்பட்டதுடன் தொய்வு நோய்க்குரிய ஏனைய இயல்பாகப் பின் வரும் பல இயல்புகள் காணப்படல்

காய்ச்சலின்மையுடன் இருமல்

ஒவ்வாமை இயல்பு உடைமை

ஒவ்வாத்தன்மை, பெற்றோர், குழந்தைகளில் காணப்படல்.

இரவில் நோய்த்தன்மை கூடுதல்

உடற்பயிற்சிச் செயற்பாடுகளின்போது அதிகரித்தல்

காலநிலை மாற்றத்தினால் அறிகுறிகள் அதிகரித்தல்

சுவாசவழிச் சுருக்க நிவாரணிகள் மூலம் குணமாதல். மேலும் சுவாச வழிச் சுருக்க தடுப்பு மருந்துகள் மூலம் குணமாதல்.

B. தொய்வு என நோய் நிர்ணயம் செய்தல்

குருதிப் பரிசோதனை நெஞ்சு ஊடுகதிர்ப் படம் என்பன உதவும்.

C. நோயின் தீவிர[illegible]

[illegible]

அல்லாத நோய்க்குரிய இயல்புகள் காணப்படல்.

1. குழந்தை 6 மாதங்களுக்கு முன்னரே சுவாசிக்கக் கடினம் ஏற்படுதல்.
2. அசாதாரணமான அறிகுறிகள்.
3. மீளமீளத் தொடங்கி அறிகுறிகள் தொடர்ச்சியாக இருத்தல்.

வேறு வேறு நோய் நிலைகள் உள்ளனவா எனக் கருதல் வேண்டும். ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

வேறு வேறு நோய்நிலைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தல்.

தொய்வு நோய் இருக்கும் எனக் கருதல்.

**ஆய்வுகள்**

சுவாசத் தொழிற்பாட்டுக் கணியங்களை ஆய்வுக்கு உதவியெனக் கருதுதல் அத்துடன் மருந்தை அளித்து நோய் குணமடைகின்றதா என அவதானித்தல். பின் தொய்வு நோய் நிர்ணயம் செய்தல்.

தொய்வு நோயை அடையாளம் காணுவதில் அவதானிக்க வேண்டிய மாற்றுநிலைகள்

1. சுவாசக் குழாய்ச் சுருக்கம்

ஆரம்பக் குழந்தைப் பருவத்தில் தொய்வையும், சுவாசக்குழாய் அழற்சியையும் வேறுபடுத்தக்கூடியனவாக அமையும். ஆஸ்துமா நோய் சிறுவயதில் அரிது. ஆகையால் மிகவும் அவதானமான மருத்துவ பரிசோதனை இன்றியமையாதது. நெஞ்சு ஊடுகதிர் படமும்*அவசியம். ஏனெனில் நிலைகளை கண்டறிய அவசியமானதாகும்.

2. குருதியில் இயோசினவில் கலங்கள் அதிகரித்த நிலை

இதன் அறிகுறிகள் தொய்வு போல் தோற்றம், காய்ச்சலும் இந்த நிலையைக் கண்டறிதல் கடினம். ஆனால் Eosionphil அளவு 3000/mm3அதிகமாயின் ஈயோசினோபீலியா.

3. காசநோய் எமது பிரதேசத்தில் பொதுவான நோய்.

ஆனால் தவறான நோய் நிர்ணயத்துக்கு உட்படலாம். சரியான மருத்துவப் பரிசோதனை, நெஞ்சு ஊடுகதிர் பரிசோதனை, நெருங்கிய உறவினருக்கு காசநோய் ஏற்பட்டமை என்பன காசநோய் நிர்ணயத்துக்கு உதவும்.

4. வேற்றுப் பொருள்கள் காணப்படல்

ஏதாவது சிறிய கடலை போன்ற பொருள்களை உட்கொள்ளும்போது புரைக்கேறல், சடுதியாக ஏற்படும் அறிகுறிகள், குறித்த பகுதியில் காணப்படும் அறிகுறிகள், அசாதாரண நெஞ்சு ஊடு கதிர்ப்படம் சிகிச்சைக்குப் பயன்தராமை இந்த நிலையைக் குறிக்கும்.

5. வைரஸ் தொற்றினால் ஏற்படும் அழற்சி நிலை

குழந்தைகள் திரும்பத்திரும்ப வைரஸ் தொற்று நோய்க்கு உள்ளாவதால் குறிப்பாக RSV(Respiratory Syncytical Virus) ஏற்படும் அறிகுறிகள் ஆஸ்துமா நோய் போலமையும். ஆனால் அவை அதிக காலத்துக்குப் பின் மறைந்து இல்லாது போய்விடும். தொடர் சிகிச்சையை அல்லது மருத்துவக் கண்காணிப்பின் அவசியம் தொய்வு நாட்பட்ட நோயாக அமைவதால் நீண்ட காலத்துக்கு மருத்துவசிகிச்சை அவசியம். ஒழுங்காக நோயாளி பார்க்கப்படல் வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளில் நோய் ஏற்படும்போது ஒழுங்காக இடைவெளியில் வைத்திய ஆலோசனை பெறப்படலை உறுதிப்படுத்தல் வேண்டும்.

முதலாவது பின்தொடர் சிகிச்சை முதல் கிழமையினுள் அமைதல் வேண்டும். ஆனால் அதற்குப் பின் நோய் அறிகுறிக்கு ஏற்ப அமையும். ஆரம்பத்தில் குழந்தைக்கு மருந்து ஒழுங்கான முறையில் அளிக்கப்படுகின்றதா என்பதை வைத்தியர் பரீட்சித்துப் பார்த்தல் அவசியம்.

3. வளர்ந்தோரில் தொய்வு நோய்

வளர்ந்தவர்களில் தொய்வு நோய் அவர்களின் அன்றாட வேலையைப் பாதிக்கலாம். சிறப்பாக மருந்துகளை உள்ளெடுப்பதால் எவ்வித சிரமமுமின்றி தமது கருமங்களை ஆற்றமுடியும். இளம் பெண்களில் தொய்வு நோய் அவர்களது திருமணத்தில் தாக்கத்தைச் செலுத்தலாம். சுவாச மூலம் உள்ளெடுக்கும் மருந்துகளால் தொய்வு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். திருமணத்துக்கு ஆஸ்துமா நோயை மறைக்க வேண்டிய அவசியமில்லை. சமூகத்தில் ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவருக்கு ஆஸ்துமா நோய்த்தாக்கம் உள்ளது.

பெரும்பாலான இளவயது தொய்வு நோயாளிகள் தமக்கு நோய்நிலை உள்ளதைக் கண்டறியாது இருப்பர். அடுத்து வைத்தியர்கள் ஆஸ்துமா நோய் உண்டெனக் கூறினாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவ்வாறு ஏற்றுக் கொண்டாலும் சுவாச மூலம் உள்ளெடுக்கும் மருந்துகளை உப யோகிக்க விரும்பமாட்டார்கள். இவை சிறந்த விழிப்புணர்வு மூலம் அகற்றப்படல் வேண்டும்.

6. ஆஸ்துமா நோய்க்கான சிகிச்சையில் மூச்சு உட் செலுத்திகளின் பயன்பாடு

இரண்டு வகையான வேதிமூச்சு உட்செலுத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. அளவிடப்பட்ட ஆவிநிலை வேதிமூச்சு உட்செலுத்திகள் (Metered Dose Inhaler)

இவ்வகை மூச்சு வாங்கியில் சிறிய குடுவையினுள் மருந்து உயர் அமுக்கத்தில் அடக்கப்பட்டுள்ளது. குடுவையில் உள்ள சிறிய திறக்கும் பகுதியை அமுக்கும்போது உள்ளிருக்கும் மருந்து ஒரு குறிப்பிட்ட அளவு மாத்திரமே ஆவிநிலையில் வெளிவரும்.

2. உலர்துகள் வேதிமூச்சு உட் செலுத்திகள்(Dry powder Inhalers)

இந்த ஆவிநிலைவேதி மூச்சினுட்செலுத்தி மருந்துகளை முதலில் கொண்டிருப்பதில்லை. இந்தக் கருவிக்கான மருந்து கூட்டுக்குளிசை வடிவிற் கிடைக்கும். மருந்தை நுண்ணிய துகள்களாக வெளிவிடும் பொறிமுறை இதில் உள்ளது.

வாய் வழியாக உட்கொள்ளும் மாத்திரைகளை விட மூச்சு உட்செலுத்திகள் சிறந்தவை ஆகும். நாம் குளிசைகள் பாவிக்கும்போது அது குடலினால் அகத்துறிஞ்சப்பட்டு குருதி மூலம் உடலின் எல்லாப்பகுதிக்கும் எடுத்துச்செல்லப்படுகின்றன. அந்த மருந்தின் ஒரு சிறுபகுதியே சுவாசக் குழாயினுள் சென்றடைகின்றது. குருதி மூலம் மற்றைய உடலுறுப்புக்களுக்குக் கொண்டு செல்லப்படும் மருந்து வாய்மூல மாத்திரைகளாயின் பல பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம்.

ஆனால் மருந்துகளை வேதிமூச்சு உட்செலுத்தி மூலம் பாவிப்பின் மிகவும் சொற்பமான மருந்தே பாவிக்கப்படுகின்றது. இது நேரடியாக வாயில் வைத்து சுவாசக்குழாய்க்குள் செலுத்தப்படுவதனால் தேவையான அளவு மருந்து நேரடியாகச் சென்றடைகின்றது. அத்துடன் குருதியில் கலக்கும் மருந்தின் அளவு மிகக் குறைவாக உள்ளது.

ஆவிநிலை வேதிமூச்சு உட்செலுத்தி பாவிக்கும் முறை

1. வாய்ப்புறத்தில் உள்ள மூடியை அகற்ற வேண்டும்.
2. மூச்சு வாங்கியைச் செங்குத்தாக தாங்கிப்பிடித்தபடி நன்கு குலுக்க வேண்டும்.
3. மெதுவாக ஆறுதலாக இயன்றவரை வெளிசுவாசிக்க வேண்டும்.
4. மூச்சு வாங்கியை பற்களுக்கிடையில் வைத்தபின் உதடுகளால் மூச்சு வாங்கியின் வாய்ப்பகுதியை மூடிக்கொள்ள வேண்டும்.
5. தலையை சிறிதளவு பின்புறம் சாய்த்து வாயினூடாக மெதுவாக சுவாசித்தபடி கொள்கலனின் மேற்பரப்பு மீது இறுக்கமாக கீழே அழுத்த வேண்டும். அப்பொழுது நிலையாகவும், ஆழமாகவும் சுவாசிப்பதைத் தொடர வேண்டும்.
6. இயலுமானவரை உட்சுவாசித்தபின்பு மூச்சு வாங்கியை வாயிலிருந்து அகற்ற வேண்டும். பத்து வினாடிகளுக்கு அல்லது வசதியான நேரத்துக்கு மூச்சை அடக்கி வைக்க வேண்டும்.
7. பின்னர் மெதுவாக வெளிச்சுவாசிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி எம்.பி மஸ்தான் தேசிய அரசுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக.30

வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான கே.கே.மஸ்தான் தேசிய அரசுக்குத் தனது ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள ஒரேயொரு முஸ்லிம் வேட்பாளரான மஸ்தான் முதற் தடவையாக இந்முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளவராவார்.

தனது தீர்மானம் குறித்துக் கருத்து வெளிப்படுத்தியிருந்த மஸ்தான், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சிக் கொள்கைகளை ஓராண்டுக்கோ, இரண்டு ஆண்டுகளுக்கோ தியாகம் செய்துவிட்டு நாட்டு நலனுக்காகத் தேசிய அரசொன்றை உருவாக்குவதற்கு ஒத்தாசை வழங்க வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தமது கருத்து வேற்றுமைகளை மறந்து தேசிய அரசுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டியுள்ளது- என்றார். (த-22)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



புலம் பெயர் உறவுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் "தாயக உறவு களைத் தலை நிமிரச் செய்வோம்" என்ற செயல் திட்டத்தின் வாயிலாக, அண்மையில் ஜேர்மனிய புலம் பெயர் உறவுகளால் அனுப்பி வைக்கப்பட்ட ஒரு தொகுதிப் பொருள்களை வட்டுக்கோட்டை பிரதேச வைத்திய சாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி திருமதி.காந்தநேசனிடம் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் வழங்கி வைத்தார். (ஐ)



வலி. மேற்கு பிரதேச சபையின் அராலி உப அலுவலகத்தில் பாட சாலை மாணவர் களுக்கான நூலகக் கண்காட்சி அண் மையில் நடைபெற் றது. (ஐ)



வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜினால் வடமாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 17 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயணிக்கும் பிரதான பாதையான வைரவபுளியங்குள குளக்கட்டின் திருத்த வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-402)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர். கண்ணகியம்மன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சங்காபிஷேகக் காட்சிகள். (ஐ)



சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் சிவகாமவல்லி சமேத நடராஜப்பெருமானுக்கு அண்மையில் புதிய ஸ்தூபி அமையப் பெற்று மஹா கும்பாபிஷேக விழா பிரதமகுரு. சிவஸ்ரீ.ந.இராசேஸ்வரக்குருக்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (ஐ)







சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி யாண்டவர் ஆலயத்தின் (மகா கும்பாபிசேகம் அமையில் இடம்பெற்ற போது... (ஜ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் துன்பப்பட்ட 56 பணியாளர் திரும்பினர்

கொழும்பு, ஓக.30

மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாகச் சென்று பல்வேறு துன்பங்களை அனுபவித்த 56 இலங்கைப் பெண்கள் நேற்று நாடு திரும்பினர். சவூதி மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் பணியாற்றிய அவர்கள், தாம் அனுபவித்த துன்பங்களை கட்டுநாயக்கவிமானநிலையத்தில் கண்ணீருடன் வெளிப்படுத்தினர். அத்துடன், மேலும் சுமார் 300 பணியாளர்கள் அங்குள்ள முகவர் நிலையத்தில் உள்ளனர் என்றும் அவர்கள் தகவல் வெளியிட்டனர்.

நேற்றுக் காலை இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானங்களில் இந்த 56 பேரும் இலங்கை வந்தடைந்தனர். கடந்த ஜனவரி மாதம் வெளிநாட்டு வேலைக்காகச் சென்றவர்களும் இவர்களுள் அடங்குகின்றனர். ஒரு குடும்பத்தில் பணிக்காக அழைத்துச்செல்லப்பட்ட இவர்கள், அங்கு பல்வேறு வீடுகளுக்கு பணிக்காக விற்கப்பட்டதாக தகவல் வெளியிட்டனர்.

குவைத்துக்கு என்று அழைத்துச் சென்று, அங்கிருந்து அறிவிக்காமல் எம்மை சவூதிக்கு அழைத்துச் சென்றனர். இரு மாத சம்பளம் வழங்கப்படவில்லை. இந்தத் துன்பங்களைக் கூறுவதற்கு எமக்கு அங்கு எவருமே இல்லை என்று பணிப் பெண் ஒருவர் தனது கவலையை வெளியிட்டார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட மற்றுமொரு பெண்,

முதலில் சென்ற வீட்டில் ஆடு மேய்க்கும் வேலை வழங்கப்பட்டது. 3 மாதங்கள் ஆடு மேய்த்தேன். இதையடுத்து, முகவர் நிலையத்திற்கு வந்த பின்னர், அங்கு எனது கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டு, மாதாமாதம் மூன்று வீடுகளுக்கு விற்றனர். சாப்பாடு கொடுக்காமல் வேலை வாங்கினர். இரண்டு மாதங்களுக்கு மட்டுமே சம்பளம் கிடைத்தது. பின்னர் முகவர் நிலையத்துக்குச் செல்ல, அடிவாங்கியாவது பணத்தைத் தேடி வாருங்கள் என்று கூறினர். அவர்களிடம் கடவுச்சீட்டை வைத்துக் கொண்டனர். என்னிடம் தரவில்லை என்று தனது கவலையை வெளியிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழிலுக்குச் சென்றவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். அவ்வாறு சென்ற பெண்ணொருவர் தனது கவலையை இவ்வாறு வெளியிட்டார்.

நாம் இரு வருட ஒப்பந்தத்தில்தான் தொழிலுக்குச் சென்றோம். ஒரு வீட்டிலிருந்து 6 மாதத்தில் வேறு வீட்டிற்குச் சென்றால், அங்கும் முழுமையாக இரண்டு வருடம் வேலை செய்யவேண்டும். வறுமையால் வெளிநாட்டுக்குச் செல்லும் நாம், இதுபோன்ற துன்பங்களால் வெறுங்கையுடன் நாடு திரும்பு வோம் என நினைத்துக்கூட பார்க்கவில்லை. முன்னரைவிட குவைத்தில் தற்போது பெரிய மாற்றமுள்ளது. பணம் பின்னால் செல்பவர்கள்தான் தற்போது உள்ளனர். தாம் செலவுசெய்த பணம் கிடைக்காவிட்டால், வேறொரு வீட்டுக்கும் எம்மை விற்றாவது அந்தப் பணத்தைத் தேடிக்கொள்ளப் பார்க்கின்றனர். துன்பமின்றி, கை, கால் பாதிப்பின்றி நாடு திரும்பியுள்ளேன். இன்னும் சுமார் 300 சகோதரிகள் அங்குள்ள எமது முகவர் நிலையத்தில் உள்ளனர். அவர்களுக்கும், இனிவரும் காலத்தில் வெளிநாடு செல்பவர்களுக்கும் நல்லது நடந்தால் நல்லது என்று நாம் கூறுகின்றோம் எனக் கண்ணீருடன் கவலை வெளியிட்டார்.

இவர்கள் அனைவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினரால் கட்டுநாயக்க விமானநிலையத்திலுள்ள உதவி வழங்கும் பிரிவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, தேவை யான உதவிகளை வழங்கி அவர்களின் வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டன. (த-சி)

*தொடர்ச்சிகள்*

## கோத்தபாயவுக்கு

ஆணைக்குழுவின் முன்னால் கோத்தபாய கடந்த திங்கட்கிழமை சாட்சியமளிக்கச் சென்றிருந்தார்.

இதன்போது அவருக்குப் பொலிஸ் அதிகாரி சல்யூட் செலுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான ஒளிப்படமும் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. குற்றச்சாட்டுக்காகச் சாட்சியம் அளிக்க வரும் ஒருவருக்குப் பொலிஸ் அதிகாரி ஒருவர், சல்யூட் செய்தமை தொடர்பில் பல தரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரச பாதுகாப்பு நிறுவனமான ரக்ன ஆரக்சக்க லங்கா நிறுவனத்தின் பணியாளர்களை கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுத்தியமை மற்றும் அரச நிதியைச் சொந்த தேவைக்குப் பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களே கோத்தபாய மீது சுமத்தப்பட்டுள்ளன. அது தொடர்பிலான விசாரணைக்குச் சென்றபோதே, பொலிஸ் அதிகாரி சல்யூட் செய்து மரியாதை கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## அஸ்பெஸ்ரஸ்

2018 ஜனவரி முதலாம் திகதி முதல் தடை உத்தரவு நடைமுறைக்கு வருமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார நலன் கருதியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(த)

## ஓமந்தை படை

கடந்த காலங்களில் அதனை அகற்ற எமது அமைப்பு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் தற்போதே குறித்த சோதனை சாவடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமும் அகற்றப்பட்டு அப்பிரதேச மக்களின் காணிகளை பாவனைக்கு கையளிக்க வேண்டும் என அப்ரில் அமைப்பு விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ரி)

## எதிர்க்கட்சித்

வடக்கு- கிழக்கின் பல கட்சிகளை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில், இலங்கை தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டது. இதன்படி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் களமிறங்கிய கூட்டமைப்பு 14 ஆசனங்களைச் சுவீகரித்ததோடு மேலதிகமாக இரண்டு போனஸ் ஆசனங்களையும் பெற்று 16 ஆசனங்களுடன் இம்முறை நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

IMMEDIATE VACANCIES
SALES EXECUTIVES
(NOTHERN / WESTERN Provinces)
- Should possess not less than **3 years** experience in **paints or hardware field.**
- Age below 30 years.
- Fluent in **all three** languages
- Candidates living in **above provinces** will be given preference
- Sound computer literacy in hardware and software would be an added advantage.
- Should have excellent sales negotiation skills with good proven track record.
- Should have a valid driving licence.

Apply with complete CV and **indicating the post** on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.
General Manager.
CAUSEWAY PAINTS
15, Noel Mendis Mawatha, Moderawila Industrial Estate, Panadura

WHAT TO DO AFTER O/L / A/L
கொழும்பில்...
Students Visa வெளிநாடு செல்பவர்களுக்கு
IELTS English Band 6 Guarantee
Available - Blooming Buds International IELTS Academy வழங்கும் IELTS பாடநெறி,முழுநேர பாடநெறியானது,திங்கள் தொடக்கம் சனி வரை தினமும் 6 மணித்தியாலங்களுக்கு நடைபெறும். இக்கற்கை நெறியை மேற்கொள்வதன் மூலம் 6.0 புள்ளி பெறுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும். இக்கற்கைநெறிக் கட்டணத்தை முழுமையாகச்செலுத்தினால் 10% கழிவு வழங்கப்படும்.
6.0 Guaranty After the Course
Blooming Buds International IELTS Academy
No.390/2/1, Baseline Road, Dematagoda. 0112677641 / 071 566 9641
JAFFNA BRANCH Thavadi Road, Suthumalai South, Manipai. 021 2256641
PUTHALAM BRANCH No.05, RathmalyayaColombo Road, Puthalam. 032 2266641

KANDY HOMES & CONSTRUCTION IN JAFFNA
இலங்கையில் வீடு / கட்டட நிர்மானத் துறையில் 15 வருட காலம் அனுபவம்
தமிழ் கலாசாரத்துக்கு அமைவான வடிவமைப்பு
5ஆவது ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக உங்கள் அனைத்து கட்டடத் தேவைகளையும் பூர்த்திசெய்து வருகின்றோம். வாஸ்துசாஸ்திர முறைப்படி அமைத்து தருகின்றோம்.



இல. 81, பலாலி வீதி, இலுப்பையடி சந்தி, யாழ்ப்பாணம்.
kandyhomes11@gmail.com
021 7917 623


இயந்திரமோ ஒன்று! வேலையோ பல !!
3D ஹீட் பிறஸ் மெசின்
விசேட விலைக்கழிவுடன்
கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!
Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication.. போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது



077 201 533
077 385 008
WINRICH INTERNATIONAL(PVT)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவதனில்



### செல்வி துஷாந்தி ஸ்ரீசோமாஸ்கந்தன்

(மாணவி வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர பாடசாலை தரம் - 7F)

தோற்றம்
06.12.2000

மறைவு
30.08.2012

எங்கள் அன்பின் குலக்குட்டி
அன்றொரு நாள் காற்றோடு ஒரு செய்தி காதோரம் கேட்டதம்மா
அன்றே நம் வாழ்வு கனவாகிப் போனதம்மா
நீ சென்ற வழிதேடி நெடுந்தூரம் தொடர்ந்தோமம்மா
போற்றாத தெய்வங்கள் புவி மீது உண்டோ ?
பொலிவோடு நோய் நீங்கி நீ வருவாய் என காத்திருந்தோம்
தேற்ற ஒரு மொழி இல்லை தேம்பும் மனதிற்கு




செ.ஸ்ரீசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
ஸ்ரீசோமாஸ் அரைக்கும் ஆலை
300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

என்றென்றும் உம்பிரிவால்
துயருறும் அன்பு அப்பா,
அம்மா, தம்பி, தங்கைமார்.

---

## வைரமுத்து சபாரத்தினம் (ஐயா மாஸ்ரர்)

(ஓய்வுபெற்ற அதிபர் - நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயம்)



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் சி.வை.சபா ரத்தினம் (ஐயாமாஸ்ரர்) 27.08.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - வள்ளியம்மை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் லலிதா (பிரதி அதிபர் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), யசோதா (கனடா), யோகலதா (பிரான்ஸ்), சிவகரன் (கனடா), சிறிகரன் (அதிபர் - யா/நயினாதீவு நாகபூஷணி வித்தியா லயம்) ஆகியோரின் அன்பு தந்தையும் ரவீந்திரராசா (அதிபர் -யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை), இளங்குமரன் (கனடா), திலகநாதன் (பிரான்ஸ்), ஆனந்தமதி (கனடா), கிருபாநந்தினி (ஆசிரியை -யா/புங்குடு தீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற குழந்தைவேல் மற்றும் அன்னலட்சுமி, இரத்தினசபாபதி, அன்னபூரணம், சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம் மற்றும் தனபாலசிங்கம் (கனடா), பரராசசிங்கம், மகேஸ்வரி, காலஞ்சென்ற சகாதேவன் மற்றும் காசிலிங்கம்(கனடா), பவானி அம்மா, காலஞ்சென்ற கோபாலபிள்ளை நடராசா, தங்கராசா மற்றும் ஞானபூங் கோதை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி, பரமேஸ்வரி, தனலட்சுமி, விஸ்வநாதன், கோமதி, செல்விக ராணி(கனடா) ஆகியோரின் சகலனும் வித்தியப்பிரதா, வித்தியசங்கர், வித்தியசங்கவி, வித்தி யராகவி, தாரணி, நாரணி, சுயேன், சனாத், சுலோஜினி, சாம்பவி, அச்சயன், பிரணவி, வைஸ்ணவி, ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை(31.08.2015) திங்கட்கிழமை நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சல்லிப்பரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம், நயினாதீவு.
தொடர்பு. 077 828 0739
077 808 7738

தகவல்:
குடும்பத்தினர்.

---

# வெளிவந்துவிட்டது

ஆவணி மாத

# இந்து மத இதழ்

அழகான ஆறுபடை வீடுகளுடன் கூடிய முருகனின் அட்டைப்படம்....
நல்லூர், செல்வச்சந்நிதி ஆலய வரலாறுகள், யோகர்சுவாமிகளின் மகத்துவம், குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? நல்வாழ்வு நிச்சயம் கிட்டும் பரிகார பூசை, பகழிக் கூத்தருக்குப் பரிசளித்த அழகன், பிள்ளையைப் பெத்தா கண்ணீரு தென்னையை வச்சா இளநீரு, சீதை வளர்த்த கிளி, நந்திக்கடலோரம் நமையாளும் கண்ணகை முதலிய இன்னோரன்ன பல்சுவை நிரம்பிய பகுதிகளுடன் உங்கள் கைகளில் தவழ உள்ளது.



# ஞானக்கதிர்

பிரதிக்கு முந்துங்கள்

வர்ணப்படங்கள் - வாழ்வுக்குகந்த சிந்தனைகள் வயது வேறுபாடின்றி
எல்லோரும் வாசிக்கக்கூடிய கையடக்கமான சஞ்சிகை

பிரபல புத்தகசாலைகள் 'உத... விற்பனை முகவர்களிடம் கேட்டுவாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூசிலாந்து விபத்தில் இலங்கையர் சாவு

வெலிங்ரன், ஓக. 30
நியூசிலாந்தில் இரண்டு கார்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
44 வயதுடைய பிரதீப் எதிரிசிங்க என்ற இலங்கையரே உயிரிழந்துள்ளார் என்று நியூசிலாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் ஏற்பட்டுள்ளது. (த)


## ஆலய வழிபடுவோர் சங்கத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஓக.30
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத் தேர்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை யாழ்ப்பாணம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் யு.யசோதா தெரிவித்துள்ளார்.
மேலும் வாக்களிப்பு தினத்தன்று வாக்காளர்கள் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் சென்று வாக்களிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (த-ரி2)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.30
அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
தினமும் பூசைகளின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் பிரதம மேற்பார்வையாளர் கு.கைலாசபிள்ளையின் சொற்பொழிவும் பி.ப 5.30 மணிக்கு மலையாளங்காடு ஐயனார் பஜனையும் நடைபெறுகின்றன.
உற்சவத்தின் இறுதிநாளான எதிர்வரும் 4ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறுவதுடன் கடந்த 25ஆம் திகதி வெளியிடப்பட்ட எம்பெருமான் பாடலுக்கு இசையமைத்தவர், பாடியவர், வெளியீட்டாளர் மற்றும் சொற்பொழிவாற்றியவர்களும் கௌரவிக்கப்படவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (த-ரி5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 29.07.2015 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**சின்னப்பொடி மணியம்**

தோற்றம் 01.07.1942 | மறைவு 29.07.2015

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

திருமதி
**சவுந்தரம் நாகலிங்கம்**

மலர்வு 24.02.1924 | உதிர்வு 28.07.2015



கடந்த 28.07.2015 சிவபத மடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தியைக்கேட்டு எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் இல்லத்தில் இன்று [30.08.2015] ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **தங்கேஸ்வரி சோமசுந்தரம்**

தோற்றம் 01.04.1943 | மறைவு 01.08.2015

கடந்த 01.08.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (30.08.2015) ஞாயிற் றுக்கிழமை காலை 7.00 மணியளவில் தம்பசிட்டி தெணி அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று நாளை (31.08.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்னையின் மரணச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து எமது துன்பத்தில் பங்கேற்று எம்மை ஆறுதல்படுத்தியோருக்கும், தொலைபேசி மூலம் அனுத்தாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தங்கவனம்"
அரசடி, ஆத்தியடி, பருத்தித்துறை.
பேரப்பிள்ளைகள்.
(55615) (45.3.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி அன்ரனற் இருதயநாதர்
(யோகமலர்) ஓவல்

இகவுலகில் முகிழ்வு 07.04.1955

பரவுலகில் அமர்வு 01.08.2015

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்"**
(யோவான் 11:25)

(இவ்வுலகைவிட்டு உமது வாசலண்டை வந்துள்ள அடியாளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவா உம்மிடம் தாழ்மையுடன் மன்றாடுகின்றோம்)

கடந்த 01.08.2015-அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி அன்ரனற் இருதயநாதர் அவர்களின் மறைவையொட்டி நேரிலும் தொலைபேசியூடாகவும் பத்திரிகையூடாகவும் எமக்கு ஆறுதல் கொடுத்த ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொது நிலையினர், உடன்பிறப்புக்கள், ஊரவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் எமக்கு எல்லா விதத்திலும் உதவிகள் புரிந்த அனைத்து நல்ல உள்ளங் களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் நாளை (31.08.2015) திங்கட்கிழமை காலை 06.00 மணிக்கு முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.42, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
கள்ளப்பாடு, முல்லைத்தீவு. (62503) (45.7.3)
கணவர் - 077 130 8661, 076 831 6063
பிள்ளைகள்.

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **பூமணி காசிநாதன்**

மலர்வு 16.05.1953

உதிர்வு 16.09.2000



அன்பிலே சிறந்தவளாய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினிலே நறுமணம் பரப்பி
இன்பதுன்பம் அனைத்திலும் உறுதுணையாய் நின்று
வழிகாட்டி இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல்
தாயாய் பரிந்து வளர்த்தெம்மை ஆளாக்கி வழிகாட்டி அன்புக் காட்டி
உறவுகளைப் பேணிடும் கருணை வடிவமாய் உரிமை உணர்வுடன் அன்பைப்
பகிர்ந்தே விண்ணக வாழ்வை நாடிச் சென்றீர்கள்

பதினைந்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றும் நீங்கள் விட்டுச்சென்ற அத்தனையும் வெறுமையாய்க் காண்கிறோம். இருப்பினும் உங்கள் நினைவு விருட்சமாய் பரந்து வளர்ந்து இன்னமும் வழிகாட்டிக் கொண்டே இருக்குதம்மா ஆண்டுகள் பல போனாலும் உங்கள் நினைவுகளே எம்மை வாழவைத்துக்கொண்டிருக்கின்றன.

தாயே நாம் பாசமுடனும் நன்றியுடனும் உங்கள் ஆத்ம சாந்திக்காய் தொடர்ந்தும் பிரார்த்தித்துக்கொண்டே இருப்போம். நாளை (31.08.2015) திங்கட்கிழமை கண்டி வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
(45.3.7)
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
பாசமிகு - கணவர்,
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்கு

நாவற்குழி வீதியில் சங்கம் நிறுவனத்திற்கு அருகில் 48x28 அளவு கொண்ட கடைக் கட்டடம் களஞ்சியமாகவோ காட்சியறையாவோ கடைகளாகவோ பாவிக்கக்கூடியது. 5 வாகன தரிப்பிடவசதியுமுண்டு. மேல் மாடி 3 அறைகள்,சமையலறை,2 குளியல்களிப்பறைவசதிகளுடன் வீடாகவோ காரியாலயமாகவோ பாவிக்க முடியும். இரண்டும் தனித்தனிப்பாதைகளுடன் வாடகைக்குண்டு.

**தொடர்பு: 077 771 1071**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு

NPVX-xxxx தொடர் இலக்கமுடைய சிவப்பு நிற TVS குட்டிப்பப் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 021 321 4098**
**075 543 7322**

கொக்குவில் கிழக்கு

## காணி விற்பனைக்கு உண்டு

அச்சுவேலி, நவக்கிரி, விளாத்தியடியில் 14 பரப்பு கல்லுக்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.இரண்டு பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்ப டும்.

**தொடர்பு:**
**076 838 2614 ,077 939 6578**

## திருமண சேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் பணி புரியும் அரச உத்தியோகஸ்தர்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மணமக்களுக்கு, மணமகன், மணமகள் தேவை. வெளிநாட்டில் ஸ்பொன்சர் உள்ள மணமக்களுக்கு, மணமகன்,மணமகள் தேவை. ஜாதக குறிப்பு, போட்டோ என்பவற்றுடன் சந்திக்க வேண்டிய நேரம் மு.ப 9.00 - 11.00 மணிவரை பி.ப 4.00 - 6.00 மணிவரை அத்துடன் ஜோதிடம் பார்க்கப்படும், ஜெனன ஜாதகம் கணித்தும் பலன்கள் பார்த்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு : திருமதி A.சாந்தகுமார்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
076 659 8034

## விற்பனைக்கு

ECG Machine, Patient Examination Bed, X' Ray Viewer, Excercise machine , Fax machine Photo Copy machine(Sharp), Computes, Printers Lamination machine போன்ற சகல பொருள்களும் நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 607 8888**

## யாழ்ப்பாணம் - மானிப்பாயில் ஆடைத்தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு

கொழும்பைத் தளமாகக் கொண்ட பிரபல்யமான Lee Hedges PLC நிறுவனம், தனது CSR திட்டத்தின் கீழ் ஆரம்பித்துள்ள உள்நாடு, வெளிநாடுகளுக்கு ஆடைகளைத் தைத்து ஏற்றுமதி செய்யும் ஆடைத் தொழிற்சாலைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* ஒப்புவெற்ற ஆசிரியர்/ மேற்றன்
* பயிற்றுவிப்பாளர்கள் (பெண்கள்)
* Juki இயந்திர இயக்குநர்கள் (பெண்கள்)

தங்குமிட வசதி வழங்கப்படும்.

உங்களது சுயவிவரங்களை pplh@leehedges.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் மூலமாக கீழ்க்காணும் முகவரிக்கோ 14 நாள்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

மனிதவள முகாமையாளர்,
Lee Hedges PLC (CSR Project)
இல 353, காலி வீதி, கொழும்பு - 03

## மலேசியா உடனடி வேலைவாய்ப்பு



**ஆண் சுத்திகரிப்பாளர்கள்**
**Male Cleaners**

தொகை - 20
சம்பளம் - RM 900 + OT

நிபந்தனைகள்
தங்குமிடம், வைத்திய வசதி இலவசம்.
ஒப்பந்தக்காலம் இரண்டு வருடங்கள். வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் கிழமைக்கு 6 நாட்கள். இலவச விமானச்சீட்டு ஒப்பந்தகாலமுடிவில் வழங்கப்படும். ஏனைய நிபந்தனைகளும் விதிகளும் மலேசிய நாட்டு சட்ட திட்டங்களுக்கமைவாக.

CV Collection only/ No Registration Fees will be charge

Hotline :-0770116117

AL/Advt/2248/9/15 LL No. 2248

**கெப்பிட்டல்**
ரெக்ரூட்மன்ட் இன்டர்நெஷனல் (பி) லிமிடெட்
# 130, 3RD Floor, Grandpass Road, Colombo-14
Tel: 0112478319, 0112478320, Fax: 0112478321 E-mail: capitalcolombo@gmail.com

## இலங்கை மின்சார சபை

கீழ் குறிப்பிடப்படும் பழைய முகவரிகளில் இதுவரை காலமும் தற்காலிகமாக இயங்கி வந்தஎமது அலுவலகங்கள் அனைத்தும் தற்போது பழைய பூங்காவில் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட எமது இலங்கை மின்சார சபைக்குரிய கட்டட வளாகத்தில் நிரந்தரமாக இயங்கத் தொடங்கியுள்ளன என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

| அலுவலகம் | பழைய முகவரி | புதிய முகவரி |
|---|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) | இலங்கை மின்சார சபை இல.500, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | இலங்கை மின்சார சபை 3 ஆம் மாடி, பழைய பூங்கா வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். |
| மனிதவள அலுவலர் (வடக்கு) | " | 3 ஆம் மாடி |
| மின் பொறியியலாளர் (கொள்வனவு) | " | 1 ஆம் மாடி |
| மின் பொறியியலாளர் (திட்டமிடல்) | " | 2 ஆம் மாடி |
| கணக்காளர் (வருமானம்) | " | கீழ் தளம் |
| கணக்காளர் (செலவீனம்) | " | கீழ் தளம் |
| பிரதம மின் பொறியியலாளர் (நிர்மாணம்) | இலங்கை மின்சார சபை இல.178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | 2 ஆம் மாடி |
| பிரதம மின் பொறியியலாளர் (பகிர்வுப் பராமரிப்பு) | " | 1 ஆம் மாடி |
| மின் பொறியியலாளர் (வர்த்தகம்) | " | 1 ஆம் மாடி |

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு), இலங்கை மின்சார சபை.

## வாழும் காலத்தை நீடிப்பதல்ல... அதனை மகிழ்ச்சியாக்குவதே எங்கள் பணி

certis lanka
Securing Your World



Ceritis Lanka ஹோம் நேர்ஸிங்கிலுள்ள நாம், உங்கள் குடும்பத்திற்கு மிகச் சிறந்தது எதுவென்பதில் அக்கறை கொண்டுள்ளோம். அதன் காரணமாகவே உடல் நல விடயங்களில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் உதவுவதற்காக எமது அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் மிகச் சிறந்த உடல்நலப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கு அனுபவமும் திறமையும் தேர்ச்சியும் அர்ப்பணிப்பும் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

நோயாளிகள், முதியோர், மாற்றுவலு உள்ள பிள்ளைகள், கைக்குழந்தைகள் ஆகியோருக்கு அவர்களின் இல்லங்களில் வைத்தே சிறந்த பராமரிப்பு வழங்கப்படும்.

- ✓ தகைமை பெற்றுப் பதிவுசெய்யப்பட்ட தாதிமாரின் திறன் மிக்க சேவையைப் பெறலாம்.
- ✓ சிரேஷ்ட தலைமைத் தாதிமார், உதவித் தாதிமார் கிரமமாக மேற்பார்வை செய்வதுடன் அன்றாடத் தேவைகளையும் ஒழுங்குகளையும் கவனிப்பார்.
- ✓ வேண்டுகோளின் பேரில், பதிவுசெய்யப்பட்ட தாதிச் சேவைகள் வழங்கப்படும்.
- ✓ 24 மணிநேரமும் அம்புலன்ஸ் மற்றும் தொடர்புடைய சேவைகள்.
- ✓ அழைப்பிலுள்ள வைத்தியர், அழைப்பிலுள்ள தாதி
- ✓ தொழிற்சாலைத் தாதிச் சேவை
- ✓ வயோதிபருக்கான மருத்துவ உபகரணங்கள் வசதியான விலைகளில் வழங்கப்படும்.

Certis Lanka Home Nursing & Swift Care (Pvt) Ltd.
No.01, Victoria Road, Jaffna.
**"A member of the Certis Group (Singapore)"**

24 மணிநேர வாடிக்கையாளர் சேவை 021 222 1922



**நாளைய தலைவர்களுக்கு வழங்கப்படும் கௌரவிப்பு**
**பிரணாம புலமைப்பரிசில்**
**தொடர்ந்தும் 15வது தடவையாகவும்!**

நீங்களும் பிரணாம புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பியுங்கள்!

2016 செலிங்கோ லைஃப் பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது

- ஆண்டு 5 புலமைப்பரிசில் - 2015
- க.பொ.த (சாதாரண தரம்) - 2014
- க.பொ.த (உயர் தரம்) - 2014
- தேசிய திறமை விருதுகள் - 2014/2015

நாளைய தலைவர்களுக்கு செலிங்கோ லைஃப்
பிரணாம புலமைப்பரிசில்

www.ceylincolife.com

செலிங்கோ லைஃப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைத்துப்பாக்கியால்

போது செய்திகள் வெளிவந்திருந்த நிலையிலேயே, கருணா அம்மான் தற்போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன், தேர்தலின்போது வெளிவந்த செய்திகள் தான் தெரிவித்தவை அல்ல என்றும் கருணா அம்மான் மறுத்துள்ளார்.

இந்தியாவின் புதியதலைமுறை தொலைக்காட்சிக்கு வழங்கிய நீண்ட நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த நேர்காணலில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தோல்விக்கான காரணம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேர்காணலில், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிங்களக் கட்சியில் (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில்) போட்டியிடுமாறு தன்னைக் கேட்டதாகவும், போட்டியிட்டு தோல்வியடைந்தாலும் தேசியப் பட்டியல் நியமனம் தருவதாகக் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ள கருணா, சிங்களக் கட்சியில் தமிழ்ப் பிரதேசத்தில் போட்டியிடுவது தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் என்பதாலேயே போட்டியிட மறுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

'போரின்போது ஹீரோவாக இருந்த நான் தேர்தலில் போட்டியிட்டுச் சீரோவாக விரும்பவில்லை' என்று குறிப்பிட்ட கருணா, இலங்கை அரசு தன்னைப் பயன்படுத்த ஒருபோதும் அனுமதிக்கவில்லை என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தந்திரோபாயம் சரியாக அமையாததனாலேயே அவர்கள் தோற்றனர் என்றும், தான் காட்டிக் கொடுத்து அவர்கள் தோற்றனர் என்று சொல்வது பிழை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தான் மிகச் சிறந்த போர் வீரன் என்று குறிப்பிட்டுள்ள கருணா, தனது வெளியேற்றத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் போரின் போது கையாண்ட அணுகுமுறையினாலேயே தோற்றார்கள் என்று தெரிவித்துள்ளார். மேலும், இந்தப் போருக்கு இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் நேரடியாக உதவி செய்தன என்றும், அவர்கள் போரை நிறுத்த முயற்சிக்கவில்லை எனவும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

போரின்போது தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். 'எனது சொந்த இனம். எந்த இனத்துக்காக நான் போராடினேனோ அந்த இனத்தவர்கள் கொல்லப்பட்டதை என்னால் ஏற்கமுடியாது' என்று அவர் தெரிவித் துள்ளார். மக்களின் இழப்புகளுக்கு, இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களும், விடுதலைப் புலிகள் கேடயமாக பயன்படுத்தியதுமே காரணமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஏற்பட்ட தனிப்பட்ட அரசியல் ரீதியிலான கருத்து வேறுபாடு காரணமாகவே பிரிந்ததாகவும், அதற்கு வேறு எந்தக் காரணங்களும் இல்லை என்றும் கருணா குறிப்பிட்டுள்ளார்.

'நோர்வேயில் 5 ஆம் கட்ட பேச்சு நடந்தது. அப்போது பேச்சுக்கு நடுநிலை வகித்த நோர்வேத் தரப்பினர், தொடர்ந்தும் இவ்வாறு பேச்சு இழுபட்டுச் செல்வதில் அர்த்தமில்லை. ஏதாவது ஒப்பந்தத்தை முன்வைத்துப் பேசுவோம் என்றனர். அதன்போது, சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நாம் கவனத்தில் கொள்கின்றோம் என்று எழுதப்பட்ட நான்கு வரி கொண்ட ஆவணத்தில் கையெழுத்திடுமாறு எங்களிடம் கோரினர். இதன்போது நான், பாலா அண்ணன் (அன்ரன் பாலசிங்கம்), உருத்திரகுமாரன், தமிழ்ச்செல்வன் ஆகியோர் பேசினோம். நான் பாலா அண்ணனிடம் கையெழுத்திடுமாறு ஆலோசனை கூறினேன். சமஷ்டியை ஏற்றுக்கொள்வதாக இல்லையே. அதைப் பற்றி ஆலோசிக்கின்றோம் என்றுதானே இருக்கின்றது. அதனால் கையெழுத்திடுமாறு கோரி, பாலா அண்ணன் கையெழுத்திட்டு ஆவணத்தை ஒப்படைத்தார்.

அதன் பின்னர், பாலா அண்ணன் வன்னிக்கு வந்து இதனைத் தலைவரிடம் (பிரபாகரனிடம்) ஒப்படைக்க மாட்டேன் என்றார். நான் கொண்டு செல்வதாகச் சொல்லி, வந்து தலைவரிடம் அதனைக் கொடுத்தேன். அவர் சமஷ்டி ஆலோசிப்பதாக யாரைக் கேட்டுக் கையெழுத் திட்டீர்கள் என்று கோபப்பட்டார். தனி நாடு தான் தீர்வு என்றார். இதன் பின்னர் மத்திய குழுக் கூட்டத்தை கூட்டி என்னைத் துரோகி என்றார்கள்.

நான் எத்தனையோ தடவை, தலைவரின் உயிரை, ஏனைய தளபதிகள் கைவிட்டுச் சென்றபோதும் காப்பாற்றியிரு க்கின்றேன். அதையெல்லாம் விடுத்து என்னைத் துரோகம் செய்ததாகச் சொன்னார். இதன் காரணமாகவே நான் விலகிச் சென்றேன்' என்று, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்றமைக்குக் கருணா விளக்கம் கொடுத்துள்ளார்.

மேலும் அந்த நேர்காணலில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் இராணுவத்தினரிடம் சரணடையமாட்டார். நான் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான போராளிகளுக்குச் சயனைட் குப்பி எடுத்துத் தந்தவர் அவர். அவரது தியாகங்களை மதிக்க வேண்டும். அவர் ஒருபோதும் இராணுவத்தினரிடம் சரணடையமாட்டார். அது உறுதி.

போரின் இறுதியில் பிரபாகரனின் மூத்த மகன் சாள்ஸ் அன்ரனி தாக்குதலில் சாவடைந்தார். அதன் பின்னர் அவரது மனைவி, மகள் சாவடைந்துள்ளனர். இறுதியில் பிரபாகரனும், அவரது கடைசி மகன் பாலச்சந்திரனும் தப்பித்துச் சென்றபோது, பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். பிரபாகரன் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அவரது கொலை செய்யப்பட்ட படத்தைப் பாருங்கள். அவர் வலது கைப்பழக்கம் உள்ள ஒருவர். அவரது வலது நெற்றியில் துப்பாக்கியால் சுட்டதனால், அவரது மூளையைப் பிய்த்துக் கொண்டு துப்பாக்கி ரவை வெளியேறியிருக்கின்றது. அவர் சாவடைந்திருக்கின்றார்.

காண்பிக்கப்பட்ட சடலம் பிரபாகரனது தான் என்பது உறுதியாக எனக்குத் தெரியும். எனக்கும் பிரபாகரனுக்கும் தெரிந்த ஓர் விடயத்தை வைத்தே அதை அடையாளப்படுத்தினேன். ஆயுதம் ஒன்று பரீட்சித்துப் பார்க்கும்போது பிரபாகரனின் வலது தொடையில் காயம் ஏற்பட்டிருந்தது. அது எனக்கும் பொன்னம்மானுக்கும் தெரிந்த விடயம். அந்த அடையாளத்தை வைத்தும், எனக்கு அவரை நீண்டகாலம் நெருக்கமாகத் தெரியும் என்பதை வைத்தும் அடையாளம் கண்டு கொண்டேன் – என்றார். (த-5)

## கொந்தளிக்கும்

எதிராகவே தமிழகத்தின் பல தலைவர்களும் தமது கண்டனங்களைப் பதிவு செய்துள்ளனர்.

'அமெரிக்கா அரசின் தமிழ் இனத் துரோகத்தைக் கண்டித்துத் தமிழக சட்டமன்றத்தில் கண்ட தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தவுள்ளேன். அதற்காகச் சட்டமன்றத்திற்குள் செல்லும் அனைத்து கட்சி சட்டமன்ற உறுப்பினர்களின் காலணிகளை துடைத்து தீர்மானம் நிறைவேற்ற உதவுமாறு கோரும் போராட்டமொன்றையும் நடாத்தவுள்ளேன்' என்று தாயக மக்கள் கட்சித் தலைவர் கி.வீரலட்சுமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோபால்சாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்க அரசின் மன்னிக்க முடியாத துரோகம். நடந்து முடிந்த தமிழ் இனப்படுகொலையை முழுமையாக மறைத்து, போர்க்குற்ற விசாரணையை கொலைகாரச் சிங்கள அரசிடமே ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர்.

ஈழத்தமிழ் இனத்தைக் கரு அறுக்க முற்பட்டுள்ள சிங்கள அரசோடு அமெரிக்க ஏகாதிபத்தியம் பகிரங்கமாகவே கைகோர்த்துவிட்டது. இனி உலக நாடுகளிலும் நீதியை எதிர்பார்க்க வேண்டாம். இந்திய அரசும் இதே துரோகத்தைத்தான் செய்யப்போகிறது. எனவே, ஈழத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவு களான தமிழர்கள், குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள், அமெரிக்க – இலங்கை சதித்திட்டத்தை முறியடிக்கவும், ஈழத்தமிழ் இனத்தை பாதுகாக்கவும் வீறுகொண்டு எழ வேண்டிய நேரம் – அர்ப்பணிக்கும் வேளை வந்துவிட்டது.

அமெரிக்க அரசின் தமிழ் இனத் துரோகத்தைக் கண்டித்து, ம.தி.மு.க. சார்பில், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குச் சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்துக்கு எதிரே கண்டன அறப்போர் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

'ஈழத்தில் நடந்த இனவழிப்புக்கு, உள்ளக விசாரணைக்கு ஆதரவாக எதிர்வரும் ஐ.நா. கூட்டத் தொடரில் அமெரிக்கா பிரேரணை சமர்ப்பிக்கவுள்ளது. இதனால் தமிழ்மக்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இந்த நடவடிக்கையானது குற்றவாளிகளே குற்றவாளிகளை விசாரிக்கும் நிலையாகும். இதனால் எந்த நீதியும் கிடைக்காது' என்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் விடுத்துள்ள அறிக்கையில், அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான மேலாதிக்கப் போட்டியில் ஈழத்தமிழர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். தெற்காசியப் பகுதியில் யாருடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவது என்னும் ஏகாதிபத்தியப் போட்டிக் களத்தில்தான் ஈழத்தமிழர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படும் நிலை தொடர்கிறது.

அமெரிக்க வல்லரசின் துரோகத்தைக் கண்டிக்கும் வகையிலும் போர்க்குற்றம் தொடர்பான சர்வதேசப் புலனாய்வு விசாரணையைக் கைவிடக்கூடாது என்று வற்புறுத்துகிற வகையிலும் வரும் 'ஓகஸ்ட் 30 – சர்வதேச காணாமல் போனவர்களின் தினம்' என்பதையொட்டி, ஈழத்தில் காணமல்போன சுமார் முப்பதாயிரம் தமிழர்கள் தொடர்பாகச் சர்வதேசப் புலனாய்வை நடத்திட ஐ.நா. சபை முன்வர வேண்டுமெனக் கோருகிற வகையிலும், எதிர்வரும் 3 ஆம் திகதி அன்று விடுதலைச் சிறுத்தைகளின் மாபெரும் ஆர்ப்பாட்டம் சென்னையில் நடைபெறும், என்று தெரிவித்துள்ளார்.

'ஐ.நா மன்றம் அமைத்த மூவர் குழுவினர் நடத்திய விசாரணையின் மூலம் இலங்கையிலே தமிழ் இனப்படுகொலை நடந்தது உண்மை என்பது வெளிப்பட்டது. 2014 ஆம் ஆண்டு மனித உரிமை சபையில் அமெரிக்க அரசு கொண்டு வந்த தீர்மானம், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களை விசாரிக்க சுதந்திரமான – நம்பகமான சர்வதேச விசாரணைக்குழு அமைக்கக் கோரியது.

தற்போது அமெரிக்க அரசின் முடிவு, நடந்து முடிந்த தமிழ் இனப்படுகொலையை முழுமையாக மூடி மறைத்து, போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசிடமே ஒப்படைக்க முயற்சி நடப்பதாகத் தெரிகிறது. அண்மையில் இலங்கைக்கு வந்துள்ள தெற்கு ஆசியாவுக்கான அமெரிக்க அரசின் வெளியுறவுத் துறை துணைச்செயலாளர் இதனை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று செய்தி வந்துள்ளது. இந்தச் செய்தி உண்மையாகி விடக்கூடாதென்றே நான் விரும்புகிறேன்; மாறாக உண்மையாக இருக்குமானால், வரலாற்று நிகழ்வுகளைத் திரித்திடும் அமெரிக்க அரசின் இந்த முயற்சியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று வலியுறுத்தி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு பசுமை தாயகம் சார்பில் மனு கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அந்த மனுவை வலியுறுத்தி பேசவுள்ளதாக, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். (த-5)

## ஓமந்தை

செல்வோரும் வெளிமாவட்டங்களிலிருந்து மேற்கூறப்பட்ட மாவட்டங்களுக்கு வருவோரும் இந்தச் சோதனைச் சாவடியில் படையினராலும் பொலிஸாராலும் சோதனை செய்யப்பட்ட பின்பே அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டே அனுமதிக்கப்பட்டன.

மேலும் வெளிநாட்டிலிருந்து வருகை தருவோர் பதிவு செய்யப்பட்டதுடன் குறிப்பிட்ட காலப் பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். பொருள்கள் ஏற்றி வரும் வாகனங்களும் பிறிதொரு இடத்தில் முழுமையாகச் சோதனையிடப்பட்டன.

இதனிடையே மகிந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலின்போதும் சில சோதனை நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டு வந்தன.

இறுதிப்போரின்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பலர் சர்ச்சைக்குரிய இந்த ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுக் காணாமல்போனமை குறித்து காணாமல் போனோர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பலர் சாட்சியமளித்திருந்தனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதியொருவர் கொழும்பு வந்திருந்த சமயம், இந்தச் சோதனை சாவடியில் பதிவு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு, மறுநாளில் இருந்து மீண்டும் பதிவு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்தச் சோதனை சாவடி அமைந்துள்ள பிரதேசம் பொது மக்களின் காணியாக காணப்படுவதைச் சுட்டிக்காட்டி காணி உரிமையாளர்களால் மனித உரிமை நிறுவனங்கள் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், வடக்கில் பல சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்ட போதிலும், ஓமந்தைச் சோதனைச் சாவடியில் மட்டுப்படுத்தப்பட்டளவு சோதனைகள், பதிவுகள் இடம்பெற்று வந்தன.

இந்தநிலையிலேயே,நேற்று ஓமந்தைச் சோதனைச்சாவடி ஊடாக வாகனங்கள் கட்டுப்பாடுகளின்றி நேர் வழியில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் அடுத்த மாதம் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை முன்வைக்கப்படவுள்ள நிலையில், இந்தச் சோதனைச் சாவடியில் சோதனையிடும் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் திருகோணமலையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி, இலங்கை இராணுவம் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும் என்றும், அதற்கு இலங்கை அரசு ஊக்கமளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தமையையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில் நேற்றுச் சனிக்கிழமை முதல் அனைத்துச் சோதனை மற்றும் பதிவு நடவடிக்கைகளும் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக இராணுவம் அறிவித்துள்ளது. (த)

## அரசமைப்பில்

மிக முக்கியமான மூன்று திருத்தங்களைச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த 20 ஆவது திருத்தச் சட்டம் உள்ளிட்ட முக்கியமான சில திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

முழுமையாக அரசியல் சாசனத்தை மாற்றவேண்டுமென பிரதமர் யோசனை முன்வைத்த போதிலும் ஒரே தடவையில் புதிய அரசியல் சாசனத்தை அறிமுகம் செய்வதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், சில முக்கிய திருத்தச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகத். தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சியை ஏற்படுத்தல், அதிகாரத்தைப் பகிர்தல் உள்ளிட்ட சில மிக முக்கியமான திருத்தச் சட்டங்கள் எதிர்வரும் மாதங்களில் நாடாளுமன்றில் சமர்ப்பித்து நிறைவேற்றப்படவுள்ளன.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் பல்வேறு தரப்பினரும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் காரணத்தினால் இவ்வாறு கட்டம் கட்டமாக அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (த)

## மைத்திரியுடன்

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியலில் கொள்கையும் ஒழுக்கமும் முக்கியம். கட்சித் தலைவரின் முடிவை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேசிய அரசில் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வது தொடர்பாக எந்த முடிவையும் எடுக்கவில்லை. நாம் கட்சியில் இருக்க வேண்டுமானால், கட்சித் தலைவரின் முடிவுகளை ஏற்றுச் செயற்பட வேண்டும். அதை ஏற்றுச் செயற்பட முடியாது போனால், அவர்கள் கட்சியை விட்டுப் போகலாம். இந்த இரண்டு தெரிவுகள் மட்டும் தான் உள்ளன, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து கொண்டாலும், தாம் எதிர்க்கட்சி வரிசையில் அமரவுள்ளதாக, மகிந்த ராஜபக்சவும், அவரது மகன் நாமல் ராஜபக்சவும் அறிவித்துள்ள நிலையிலேயே, சமல் ராஜபக்ச தேசிய அரசில் இணைந்து செயற்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (த-5)

## மகிந்த

8 ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலையில் புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு நடைபெறும். அதையடுத்து. மாலையில் ஜனாதிபதி தொடக்க உரை நிகழ்த்துவார். புதிய உறுப்பினர்கள் பதவியேற்ற பின்னரே, ஆசனங்களை ஒழுங்குபடுத்த முடியும்.

116 உறுப்பினர்கள் ஒரு பக்கத்தில் அமரமுடியும். தேசிய அரசில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகமாயின், மறுபக்கத்தில் ஆசனங்கள் ஒதுக்கப்படும்.

உறுப்பினர்களுக்கு மூப்பு வரிசைப் படியே ஆசனங்கள் ஒதுக்கப்படும். 1970 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தவர் என்பதால், அவருக்கு எதிர்க்கட்சி வரிசையில் முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# காண்டாவனம் நூல் அறிமுகம்

தூண்டி இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்துள்ள கவிஞர் சண்முகம் சிவலிங்கம் பற்றிய நினைவு கூரலும் , அவருடைய 'காண்டாவனம்' சிறு கதை நூல் அறிமுக நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.45 மணிக்கு அ.யேசுராசா தலைமையில், திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் நடைபெறவுள்ளது . இந்த நிகழ்வில் சிறப்புரையை உமாவர தராஜனும், கருத்துரைகளை தெ.மது சூதனன், தி. செல்வ மனோகரன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (த)

## தேவை

யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள பல மாடிகளைக் கொண்ட கட்டடத்தை நிர்வகிப்பதற்கு ஆள் தேவை. நிர்வாகத்திறமை உடையவர் விரும்பத்தக்கது. (இருபாலாரும்) தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு : 077 730 2343

## வீடு விற்பனைக்குண்டு

யாழ். புங்கன்குளம் சந்தியில் A9 வீதியில் அமையப் பெற்ற மூன்று பரப்பும் 9 குழியுமுடைய காணியும் மூன்று அறை 2 கோல் கிச்சின், பாத்றூம் மற்றும் கிணறு தனி வழிப் பாதையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

(சி.18287) (45.3.6) 076 547 2474

## புதிய கராத்தே வகுப்புக்கள் ஆரம்பம்

We teach exercise, International Syllabus kata and kumite
Time - 8.30 am Sunday
Nothern fitness
0770250339, 0766253689

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாடுகளுக்கு கல்வி கற்க அனுப்பும் நிறுவனமொன்றிற்கு ASST. MANAGER ஆகவும் RECEPTIONIST ஆகவும் பணிபுரிய பெண் ஒருவர் தேவை. ஆங்கில கணினி அறிவு அவசியம் 05.09.2015 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல, 5075
மே/பா உதயன் , 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலைவாய்ப்பு

வடகிழக்கில் திறந்துள்ள DIG நிறுவனத்திற்கு 29.08.2015 வரையறுக்கப்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன. நேர்முகப் பரீட்சைக்கு முந்துங்கள்.

* வயது 18-40 வரை
* தகைமை -O/L,A/L விரும் பத்தக்கது
* சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
* கவர்ச்சியான சம்பளம்
* இருபாலாரும்
* தங்குமிடவசதி ஏற்படுத்தி கொடுக்கப்படும்.
* வெளி விண்ணப்பதாரிகளும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
077 3561657 ,077 2854882

## மரண அறிவித்தல்

### திருமதி விமலா தேவி பெரியதம்பி

ஊர்காவற்துறை நாரந்தனை வடக்கை பிறப்பிடமாகவும் இந்தியா தமிழ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி பெரியதம்பி 28.08.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் விஸ்வநாதன் பெரியதம்பியின் அன்பு மனைவியும் மகிழ்ராஜ், கவிதராஜ், கஜேதராஜ் ஆகியோரின் அன்பு தாயும் சுகந்தினி, சிவசக்தி, மயூரா ஆகியோரின் மாமியும் இலகீசனின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 171, ஸ்ரீதேவி காடின் மெயின்றோட் வளசரவாக்கம் மின் மயாயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
00919710419778

## காணி கட்டடம் விற்பனைக்கு

யாழ் நகரில் இருந்து 1.5 km தூரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 6200 சதுரஅடி பரப்பளவுடைய தொழிற்சாலைக்கட்டடமும் அதனுடன் இணைந்த 16 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 331 3671
077 844 8360

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினிதேவி சிறீபத்மநாதன்



கோவில் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த சறோஜினி தேவி (27.08.2015) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பாலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகளும் சாவகச்சேரி கோவில் குடியிருப்பைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னக்கா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிறீபத்மநாதன்(ஓய்வு பெற்ற சிரேஷ்ட வரி மதிப்பீட்டாளர்) அவர்களின் அன்பு மனைவியும் யோகரட்ணம், இந்திராணி, லலிதாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான அழகரட்ணம் யோகேந்திரன், பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரதீபா, இராஜீவன்(முன்னாள் கொமர்ஷல் வங்கி வடபிராந்திய முகாமையாளர்), நிருஜா, யாதவன் ஆகியோரின் அன்புத்தாயாரும் சிறீபாலன்,கமலவாணி , Dr.இரவீந்திரராஜ், சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும் புவனேஸ்வரி, வாமதேவன், சண்முகசுந்தரம், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபாங்கன், சத்யா, பிரகதீசன், கவிதாஞ்சலி, பிரகலாதன், கௌத்ரிகா, செல்வாங்கன், அனிஸ், பிரஷாந்தி, அபிநயா, ஆரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் இல.435/27, கோயில் வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
இராஜீவன்(மகன்)
077 768 7821, 077 780 8165

நல்லூர்,
யாழ்ப்பாணம்.



## மருத்துவத்துறையில் வேலை வாய்ப்பு

நாங்கள் வேகமாக வளர்ந்து வரும் பல்தேசியக் கம்பனி, உலகளாவியரீதியில் 14 நாடுகளில் எமது சுகாதார சேவையை வழங்கி வருகின்றோம். இலங்கையின் வட கிழக்குப் பகுதியிலே எமது சேவைகளை விஸ்தரிப்பதற்கும் மேலதிக சேவைகளை வழங்கு வதற்கும் MBBS பட்டம் மற்றும் மருத்துவ துறை யில் அனுபவம் உள்ள வைத்திய அதிகாரிகளை தேடுகின்றோம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரிந் திருப்பது மேலதிக நன்மையாகும்.

பகுதி நேரமாகவும் முழு நேரமாகவும் இணையலாம். உடனடியாக ஆரம்பிக்க உள்ளோம்.

ஓய்வுபெற்ற வைத்தியர்கள் மற்றும் கனிஷ்ட வைத்திய அதிகாரிகளிடம் இருந்து விண்ணப் பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. தெரிவு செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சி கரமான சம்பள பொதி காத்திருக்கின்றது.

Please forward us your CV to: crohhan@gmail.com
Please call 0765440770 for more details.

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### திருமதி கமலாதேவி விஜயராசா



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 | 10 |
| 11 | 08 |
| 1942 | 2015 |

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபம் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் வேறு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.

## அடிப்படைச் சம்பளத்துடன் ரூபா 60,000/- இற்கும் மேற்பட்டு மாதாந்தம் சம்பாதியுங்கள் நிலையான தொழிலொன்று உங்கள் நகரத்திலேயே

வருவோம் உங்கள் நகரத்துக்கு நாம் கை கொடுப்போம் புதிய வேலைவாய்ப்பொன்றுக்கு.........
நாம் தேடுவது உங்களையே

மில்விக் லங்கா தனியார் நிறுவனத்துடன் இணைந்து டயலொக் நிறுவனத்தின் புதிய சேவையொன்றை மேம்படுத்தல் (சிம்காட்களை விற்பனை செய்வது தொடர்பாக அல்ல) மற்றும் அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு செயற்றிறன் மிக்க கவர்ச்சியான தோற்ற முள்ளவர்கள் தொடர்பாக வெற்றிடங்கள்

எம்மைப்பற்றி...............

எமது நிறுவனம் மின் தொலைத் தொடர்புகள் மற்றும் அதனோடு சம்பந்தப்படும் பன்முக செயற்பாடுகள் கொண்ட நிறுவனமொன்றாகும். விசேடமாக ஸ்ரீ லங்கா டயலொக் நிறுவனத்துடன் இணைந்து எமது உற்பத்திகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

### தேவையான தகுதிகள்:-

* 18 வயதுக்கு மேற்பட்ட
* பெண்கள் / ஆண்கள் இருதரப்பினரும் விண்ணப்பிக்கலாம்
* காப்புறுதி உற்பத்திகளை விற்பனைசெய்யும் அனுபவம் மேலதிக தகுதியொன்றாகும்.
* பாடசாலைக் காலத்தை அரைவாசியாகவோ அல்லது முழுமையாகவோ நிறைவு செய்துள்ளோர் தொடர்பாக

### விண்ணப்பதாரிகள் எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள்.......

யாழ்ப்பாணம்,காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, கிளிநொச்சி, கோப்பாய், மானிப்பாய்,நல்லூர், பருத்தித்துறை,மன்னார்,முல்லைத்தீவு ,வன்னி, வவுனியா, ஹற்றன், கல்குடா,மட்டக்களப்பு, மூதூர்.திருகோணமலை, அம்பாறை,பொத்துவில், திருக்கோயில்,கம்பளை,நாவலப்பிட்டி, மாத்தளை,பிபிலை,மொனராகலை,நுவரெலியா, தலவாக்கலை, சிலாபம், நாத்தாண்டியா, வென்னப்புவ

விண்ணப்பதாரிகள் தொடர்பாக கவரச்சிகரமான சம்பளங்கள் மற்றும் ஏனைய விசேட கொடுப்பனவுகள் பலவும் உரித்தாகும்.

BIMA
c.rohan@milvik.se
மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் Tel: 0770-854 654

## 7 ஆம் ஆண்டு நினைவலைகளும் 25 ஆவது பிறந்த நாளும்



| மண் மகிழ | மனம் நெகிழ |
|---|---|
| 30 | 15 |
| 08 | 08 |
| 1990 | 2008 |

### செல்வி பத்மஜா கணேசலிங்கம்

பாசமலராய் எங்கள் குறை தீர்க்க வந்த குல விளக்கே!
மொட்டாகி மலராகி நறுமணம் பரப்பும் வேளை தனில் நீ!
எங்கள் வாழ்வையே இருளாக்கி இறைவன்
பாதமலர் சேர்ந்தனையோ!
ஏழு அல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நாம் மறவோம்!
உன் நினைவில் வாழ்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளச் சிறுவனை சந்தோசப்படுத்திய ரொனால்டோ




உலகின் முன்னணி உதைபந்து நட்சத்திரமான கிறிஸ்டியானோ ரொனால்டோ, நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட ஒரு சிறுவனுக்கு தனது கையெழுத்திட்ட ரியல் மட்ரிட் ஜெர்சியை அனுப்பி அந்தச் சிறுவனை சந்தோசப்படுத்தியுள்ளார்.
போர்த்துக்கல் நாட்டின் மற்றும் ரியல் மட்ரிட் கழக அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்தில் ஏற்பட்ட நில நடுகத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்குப் பண உதவிகளையும் வழங்கியிருந்தார்.
இந்த நிலையில், அங்கு ஜெடின் என்ற 13 வயதுச் சிறுவனுக்கு ரொனால்டோ ஜெர்சியை அனுப்பி அந்தச் சிறுவனைச் சந்தோசப்படுத்தியுள்ளார். அவன் உதைபந்து மீது தீராத ஆசை கொண்டு, தெரு ஓரங்களில் மக்கள் வாழ்ந்து வந்தபோதும், சேதமான தெருவில் உதைபந்து விளையாடிக்கொண்டிருந்தான்.
இதைப் பார்த்த ஒளிப்பதிவாளர் ஒமர் ஹவானா, பத்திரிகையாளர் மகாரிடா மோடா ஆகியோர் இந்தச் சிறுவன் நிலை குறித்து ரொனால்டோவின் முகவர் ஜோர்ஜ் மெண்டெசிடம் கூறியுள்ளனர்.
இதன்மூலம் சிறுவன் பற்றி அறிந்த ரொனால்டோ, ஜெட்டினுக்கு தனது கைப்பட எழுதிய ஜெர்சியை அனுப்பி வைத்துள்ளார். அதில் ஜெட்டின், நீ வலிமையாக இருக்க எனது வாழ்த்துக்கள் என்று கூறித் தன் கையெழுத்தைப் பதிவு செய்துள்ளார்.
இது குறித்து ஜெட்டின் கூறுகையில், நான் ஜெர்சியை பெற்றவுடன் ஆச்சரியத்தில் உறைந்து போனேன். ஒரு நாள் ரியல் மட்ரிட் அணிக்காக விளையாட விரும்புகிறேன். ஏனென்றால், நான் உதைபந்தை விரும்புகிறேன் எனத் தெரிவித்துள்ளான்.
ரொனால்டோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வகையில் உதவி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(த)

# திருக்குமாரன், யங்கம்பன்ஸ் அபார ஆட்டத்தால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக. 30
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமாரன் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமாரன் அணி மோதிக் கொண்டது. இதில் உரும்பிராய் திருக்குமரன் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் அணி 6:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

# உதயசூரியன், சென்.யூட் அணிகள் இறுதிக்கு

யாழ்ப்பாணம்,ஓக.30
செம்மலை உதயசூரியன் அணி, முல்லைத்தீவு சென்.யூட் அணி ஆகியவை இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.
அலம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகம் மரியாம்பிள்ளை சூசைப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் 11பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டங்கள் கடந்த புதன் கிழமை இடம் பெற்றன.
இதில் முதலாவது அரையிறுதியாட்டத்தில் செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் அணி மோதிக் கொண்டது. இதில் செம்மலை உதயசூரியன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் முல்லைத்தீவு சென். யூட் அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர்றாங் அணி மோதிக் கொண்டது. இதில் முல்லைத்தீவு சென்.யூட் அணி4:2என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# சிறந்த வீரராக மெஸ்ஸி



ஐரோப்பிய உதைபந்து சம்மேளனம் சார்பில் வழங்கப்படும், 2014 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் தேர்வுக்கான போட்டியில், பார்சிலோனா மற்றும் ஆர்ஜென்ரினாவின் அணித் தலைவரான லயனல் மெஸ்ஸி தேர்வு செய்யப்பட்டார்.
இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் தேர்வுக்கான போட்டியில் மெஸ்ஸி, ரொனால்டோ, சுவாரேஸ் ஆகியோர் இருந்தனர்.
ஒருங்கிணைந்த ஐரோப்பிய உதைபந்து சம்மேளனம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஐரோப்பிய அணியில் சிறந்து விளங்கும் வீரர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்படும். அந்த வகையில், 2014-2015ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் தேர்வுக்கான போட்டியில் மெஸ்ஸி, ரொனால்டோ, சுவாரேஸ் ஆகியோர் இருந்தனர். இதில் ஆர்ஜென்ரினா வீரர் மெஸ்ஸி மற்ற இருவர்களையும் பின்னுக்குத் தள்ளி விருதைப் பெற்றார்.
கடந்த 2010-2011ஆம் ஆண்டு இதே விருதை பெற்ற மெஸ்ஸிக்கு இது 2ஆவது முறையாக கிடைக்கும் விருதாகும். ரொனால்டோ கடந்த ஆண்டு இந்த விருதை பெற்றிருந்தமை குறிப்பிடதக்கது.

(த)

# வென்றது கல்வளை விநாயகர்

யாழ்ப்பாணம்,ஓக.30
அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல் இளைஞர் கழகமும் இணைந்து யாழ்.உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் கழகமைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் அணி மோதிக் கொண்டது. இதில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# சமநிலையில் முடிந்த ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஓக. 30
வவுனியா லீக்கின் முதற் தர அணிகளுக்கு இடையிலான பண்டார வன்னியன் வெற்றிக் கிண்ணத்துகாக 7பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபைமைதானத்தில்இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

(த-23)

# இந்தியா பாகிஸ்தான் தொடர் நடைபெறாது

இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெறவே மாட்டாது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.
சர்வதேச கிரிக்கெட் பேரவையின் எதிர்கால திட்ட அட்டவணைப்படி இந்தியா பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் இந்த ஆண்டு இறுதியில் நடைபெற வேண்டும். இந்த தொடரை ஐக்கிய அரபு எமிரேட்சில் டிசெம்பர் மாதம் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டது.
தீவிரவாதத் தாக்குதல் மற்றும் எல்லையில் அத்துமீறல் காரணமாக பாகிஸ்தானுடன் விளையாட மாட்டோம் என்று இந்திய கிரிக்கெட் சபை ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டது.
இந்த நிலையில் இது குறித்து அக்தர் கூறுகையில், எல்லையில் தீவிரவாதிகளின் தாக்குதலால் பதட்டமான சூழ்நிலை உள்ளது. இதனால் இந்தியா கடும் அதிர்ச்சியில் உள்ளது. எனவே இரு அணிகள் இடையேயான கிரிக்கெட் போட்டிக்குவாய்ப்பே இல்லை.
விளையாட்டில் அரசியலை கலக்கக் கூடாது என்று எல்லோருக்கும் தெரிவிக்கின்றேன். ஆனால் துரதிஷ்டவசமாக எல்லையில் அமைதி நிலவாத நிலையில் விளையாடுவதற்கு இது சரியான நேரமில்லை எனத் தெரிவித்தார். (த)

# மன்னார் லீக் ஆட்டங்களில் வெற்றியீட்டிய அணிகள்

மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டங்களில் விடத்தற் தீவு புதிய ஐக்கிய அணிக்கும் பள்ளிமுனை எஸ்.எல்.எவ். அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புதிய ஐக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
பெரியகாமம் எவர்கிறீன் அணிக்கும் அச்சங்குளம் சென். ஜோசப் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அச்சங்குளம் சென். ஜோசப் அணி1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மளிகைப்பிட்டி சிந்தி விநாயகர் அணிக்கும் காந்தான் குளம் சென். ஜோசப் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்து. ஆட்டத்தின் வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மளிகைப்பிட்டி சித்தி விநாயகர் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி வெற்றது.
ஈச்சிலம்பற்றை மருதம் அணிக்கும் ஜோசவாஸ் நகர் நற்கருணை நாதா அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜோசவ் வாஸ் நகர் நற்கருணைநாதா அணி2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய மோதல்கள்

வடமராட்சி, ஓக. 30
பருத்தித்துறை லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் மூன்றாம் சுற்று ஆட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை முதல் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இதில் மாலை 4 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாடடுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (த-108)

------

வடமராட்சி, ஓக. 30
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(த-108)

-----------

வவுனியா, ஓக. 30
வவுனியா லீக்கின் முதற் தர அணிகளுக்கு இடையிலான பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்காக 7பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கோல்டன் பிரதர்ஸ் அணியை எதிர்த்து வட தாரகை அணி மோதவுள்ளது.

(த-23)

-----------

யாழ்ப்பாணம்,ஓக. 30
வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப் பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. (த-23)

-------------


யாழ்ப்பாணம்,ஓக. 30
அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல் இளைஞர் கழகமும் இணைந்து யாழ். உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து துணைவி சென்நீயூஸ்ரார் அணி மோதவுள்ளது
தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி அணி மோதவுள்ளது.

(த-23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரியோ ஒலிம்பிக்கின் பின்னர் எதிர்காலம் தீர்மானிக்கப்படும்

சீனாவில் பீஜிங் நகரில் நடைபெற்று வரும் உலகச் சம்பியன்ஷிப் போட்டி



யின் போது உலகின் அதிவேக மனிதன் என மீண்டும் நிரூபித்த உசைன் போல்ட், ரியோ ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு எனது எதிர்காலம் தீர்மானிக்கப்படும்எனதெரிவித்துள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு ரஷ்யாவில் உள்ள மொஸ்கோ நகரில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4 *100 மீற்றர் ஓட்டங்களில் தங்கப் பதக்கம் வென்ற உசைன் போல்ட், தற் போது பீஜிங் நகரில் நடைபெற்று வரும் உலகச். சம்பியன்ஷிப் போட்டியிலும் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் வெற்றி பெற்றுள் ளார். இதுவரை உலகச் சம்பியன்ஷிப் போட்டியில் 10 தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் தனது ஓய்வு குறித்து அவர் கூறுகை யில்,

ரியோ ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு மேலும் ஒரு வரு டத்திற்கு நான் விளையாட வேண்டும் என என்னுடைய அனுசரனையாளர்கள் விரும்புகிறார்கள். ஆனால், லண்டனில் நடக்கும் உலக சம்பியன்ஷிப் (2017) போட்டியில் பங்கேற்பதில் நீ தீவிரமாக இருக்கவில்லை என்றால், நான் போகச் சொல்லமாட்டேன் என்று எனது பயிற்சியாளர் கூறினார்.

மேலும் ஓராண்டுக்கு என்னால் ஓட முடியும் என்று நினைத்தால் ஓடுவேன். எனவே, ரியோ ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு நான் என்ன நினைக் கிறேனோ என்பதைப் பொறுத்துதான் எதிர்காலம் இருக்கும். போட்டியில் கவ னத்துடன் சென்றுகொண்டி ருந்தால், தொடர்ந்து விளையாடுவது உறுதி. எனவே, ரியோவில் எப்படி விளையாடுக்றேன் என்பதை பார்க்க வேண்டும். என தெரிவித்துள்ளார்.

எனவே, 2017ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலக சம்பியன்ஷிப் தடகளத்தில் உசைன் போல்ட் பங்கேற்பது சற்று சந்தேகமாகவே உள்ளது. (த)


## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு தேவை.
தொடர்பு : 077 58 25588

## பிரத்தியேக வகுப்புகள்

O/L விஞ்ஞானம், கணிதம்
துரித மீட்டல் வகுப்புகள் (தமிழ், ஆங்கில மொழி மூலம்)
குழு, தனி வகுப்புகள் வீடு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 2473201

## IIS இடமாற்ற அறிவித்தல்

இல 100 மணிக்கூட்டு வீதியில் இயங்கி வந்த IIS நிறுவனம் தற்போது புதிய பல தொழில்நுட்ப சேவை / அறிமுகங்களுடன் தனது 20ஆம் வருடத்தில் இல 209 மானிப்பாய் வீதி (வைத்தீஸ்வராக் கல்லூரிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தனது சேவையினை மாற்றியுள்ளது என்பதனை மாணவர்கள்,பெற்றோர்கள், நலன்விரும்பிகளுக்கு அறியத்தருகின்றோம்.

"IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

IIS இல 209 மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555

## தேவை

ஸ்ரான்லி வீதியிலுள்ள நியூ கமல் செரமிக்ஸ் நிறுவனத்துக்கு எழுதுவினைஞர்கள்(பெண்கள்) தேவை.
தொடர்பு: 021 222 4544

## தென்னந்தோட்டம் விற்பனைக்கு

இயக்கச்சியில் A-9 பாதை அருகில் 48.2 ஏக்கர் நிலம் 2 கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
கேந்திரராஜா - 001 416 321 6411
ஸ்ரீஸ்கந்தராஜா - 021 321 6155

## கூழ்-KOOL

சைவம், அசைவம்
சனி, ஞாயிறு மு.ப. 10.30 தொடக்கம் ஏனைய தினங்கள் ஓடர்கள் செய்து தரப்படும்.
விருந்து @ யாழ்பாடி
இல. 49, 51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. - 021 222 6868, 0759875800, 0777 340026

## வீடு வாடகைக்கு

யாழ். பருத்தித்துறை வீதி, நல்லூரில், பாரதியார் சிலைக்கு அருகில், தனியார் நிறுவனங்கள், சிறு குடும்பத்தினர் அல் லது வேலை செய்யும் பெண்களுக்கு ஏற்ற விசாலமான சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகொள்ள: 021 2223558

## பிரத்தியேக வகுப்பு

வீட்டிற்கு வந்து Spoken English மற்றும் கணினி வகுப்புகள் கற்றுத்தரப்படும்.
(கணினி ஆசிரியரால் எடுத்துவரப்படும்)
தொடர்பு: 072 186 7203

## ALL OUT
Pest control service

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்
தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

## FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH IN NORTH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எமிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி, அரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 12.09.15 சனி 8 மணிக்கு | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம் 12.09 @ 4pm | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம் 16.09 @ 4pm
Bus நிலையம் → அரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

10/08/2015 ஆம் திகதியில் நடந்த ஜேர்மன் செல்பவர்களுக்கான A1 பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்று சித்தியடைந்த வர்களின் விவரங்கள்
60 வதிலிருந்து 83 வரையான புள்ளிகள் பெற்ற மாணவர்கள்



GERMAN LANGUAGE ACADEMY
ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம். 077 9707322

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில்

## SPOKEN English
With Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் மாணவர்களின் . ஆங்கில அறிவுக்கேற்ப Basic, Intermediate, Advance என தனித்தனியாக நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது

Full time 3 Months | Part time : 6 Months

Hot Line : 0777-596148

BRITISH COLLEGE OF EDUCATION
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113, 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523
39, Convent Rd, Mannar. Tel: 023-4924124, 077-1113205
10, Vaverset Place, Colombo-06. 585, Peradeniya Rd, Kandy.
முல்லைத்தீவிலும் 20.09.2015 இல் புதிய கிளை திறக்கப்படவுள்ளது

## CIMA-UK ENGINEERING-USA
## BIT - University of Colombo

புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 10 [illegible]. புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

## ATMC AUSTRALIAN TECHNICAL & MANAGEMENT COLLEGE
Jaffna Campus


நேர்மையான......
செலவு குறைந்த.....
பாதுகாப்பான வழியில்.....

ஆஸ்திரேலியா செல்வதற்கு
அழையுங்கள்:- 077 933 93 53
■ O/L 5 பாடச் சித்தியுடன் - யாழ் மண்ணில் 1 வருடம் படித்துவிட்டு செல்லலாம்.
■ A/L 3 பாட சித்தியுடன் - யாழ் மண்ணில் 6 மாதங்கள் படித்துவிட்டு செல்லலாம்.
நேரடியாக செல்ல முடியும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
1952
08
14

ஆண்டவன் அடியில்
2015
08
02



கடந்த 02.08.2015 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்ப தலைவர்
அமரர்
**சின்னத்துரை தனபாலசிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 01.09.2015 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

துன்னாலை மேற்கு,
கரவெட்டி.


குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 30.08.2015

# எல்லாம் நல்லா நடக்க வேணும் காத்திருக்கும் கிராமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் நல்லா நடக்கவேணும்

## காத்திருக்கும் கிராமம்

செ.உமாசுதன்
ப.வயோர்தன்

யாழ்ப்பாணத்தின் எழில் கொஞ்சும் மீனவக் கிராமங்களில் ஒன்று வளலாய். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் பலராலும் அறியப்பட்ட 90களின் பின்னர் ஏறத்தாழ 25 வருடங்களாக அறியப்படாமல் இப்போது கொஞ்சம் அறியக் கூடியதாய் உள்ள கிராமம். எமது வாசகர்களுக்கு போரின் வடுக்களையும், அதன் அச்சங்களையும் வலியோடு சுமந்து நிற்கும் அந்தக் கிராமத்தின் தரிசனத்தைக் காட்டுவதற்காக நாம் அங்கு சென்று கொண்டிருந்தோம்.

காலைச் சூரியன் கடலன்னையின் மடியில் இருந்து புதிதாய் பிறந்து செங்கதிர்களின் அலங்கரிப்போடு வான வீதியில் மெல்ல மெல்ல நடை பயின்று கொண்டிருந்தபொழுது, ஆவணி மாத வான் மழையின் தூறல்கள் தாய் மண்ணை ஸ்பரிசிக்க வெயிலின் வெம்மையாலும் சுடுகலன்களின் கந்தக செறிவாலும் கருகிக் கிடக்கும் பற்றைகளுடான அசுரர்களின் காலடித் தடங்களின் பாடுகளைச் சுமந்த பாதைகள். பாதையின் இரு மருங்கிலும் சிறிய சிறிய குடிசைகள். குடிசைக்ளில் ஓலைகளும், தகரங்களும், ஆங்காங்கோ தறப்பாள்களுமாக வீட்டின் கூரைகள். பாதையின் முடிவு நீண்டது. ஆனால் எழில் பரப்பும் பலாலி, மயிலிட்டி போன்ற மீனவக் கிராமங்களை முழுங்கியபடி இந்தப் பாடுகள் சுமந்த பாதைகளின் ஓர் அந்தம் அசுரர் காலடித் தடத்தின் கீழ் எல்லையிடப்பட்டு ஒளியின்றி இருண்டு கிடக்கிறது.

போரின் கோரத் தாண்டவத்தாலும், இராணுவ அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டு 1990களின் நடுப்பகுதியில் தாய் மண்ணின் அரவணைப்பில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட குழந்தைகளில் ஒரு குறித்த தொகையினர் மாத்திரம் அந்தக் கிராமத்தில் தற்போது இருக்கின்றனர். அவர்கள் யாருடைய உதவியுமின்றி கூலி வேலைகளுக்குச் சென்று உழைத்துக் குடும்பங்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் ஒருவராக தியாகராஜா தேவமலர் (வயது 60). இடம்பெயர்வின் ஓராண்டு கழிவதற்குள் இவரது துணைவர் இயற்கையெய்திவிட்டார். இரண்டு பெண் பிள்ளைகளும், மூன்று ஆண் பிள்ளைகளும் இவருக்குண்டு.

காதலித்துத் திருமணம் செய்து ஏழ்மையிலும் இனிமையாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த இவர்களுக்கு இராணுவ ஆக்கிரமிப்பு, அதை தொடர்ந்த இடம் பெயர்வு துன்பங்களின் சுமையை அதிகம் தந்தது. வறுமையின் கோரப்பிடி இறுக்கியது. கிராமத்தின் நிலங்களும், மேற்கெல்லையில் அமைந்தவளமானவயல்நிலங்களும்இராணுவத்தினரின் எறிகணை வீச்செல்லைகளாக, வழமையாகச் செய்யும் கடற்றொழிலும் இல்லாமல் போனது.

இவை நடந்து 25 வருடங்கள் ஆகிவிட்டன. தற்போது போதிய குடிதண்ணீர் வசதியோ அன்றி மலசலகூட வசதியோ, மின்சார வசதியோ, போக்குவரத்து வசதியோ இன்றி இருக்கும் பற்றைகள் சூழ்ந்த தங்களுடைய சொந்த மண்ணில் வாழ்வதற்கு இவர்கள் பழகிக்கொண்டிருக்கிறார்கள்.

"இரண்டு அறை, ஒரு குசினி, ஒரு சாப்பாட்டறை எண்டு எங்களுக்குப் பெரியவீடு இருந்தது. 90ஆம் ஆண்டு ஆனி 13ஆம் திகதி சொந்த மண்ணைவிட்டு சொத்து, சுகங்களை இழந்து, அகதி என்ற நாமத்தோட இடம் பெயர்ந்து ஊர் ஊராய் போனோம். இப்ப 25 வருடங்களுக்குப் பிறகு 2005ஆம் ஆண்டு பங்குனி 13ஆம் திகதி மீண்டும் எங்கட சொந்தத் தாய் வீட்டுக்கு வந்திருக்கிறம். கோயில் மாதிரி இருந்த எங்கட வீட்டை ஆமிக்காரர் இடிச்சுப் போட்டாங்கள்.

"மலிஞ்ச காலம் எண்டாலும் நிறைய மீன் பிடிப்பம். கருவாடு போடுறது, மீன்களை பெட்டிகளில் ஐஸ்போட்டு கொழும்புக்கு அனுப்புறது, என்று பெரிய முதலாளியாய் இருந்தனாங்கள். எல்லாம் இடம் பெயர்வோடை தொலைஞ்சு போச்சுது. பிள்ளைகளைப் படிக்க வைக்க வேணும். பட்டினியில் இருந்து பாதுகாக்க வேணும் எண்டதுக்காக போன இடங்களில்லை எங்கட வல்லமையாலை தொழில் செய்தம். பிள்ளையளை வளர்த்து கலியாணமும் செய்து குடுத்திட்டம்" எனக் கூறினார். வார்த்தைகள் அவரிடமிருந்து விரக்தியுடன் தெறிக்கின்றன.

வளலாயின் இன்னொரு குடும்பத்துப் பெண் திரேஸம்மா. இவருக்கு வயது 70. இவரது கணவன் மரியதாஸ். 1965ஆம் ஆண்டு 20 வயதிலை இவர்களுக்குத் திருமணம் ஆனது. மூன்று பிள்ளைகள் இவருக்குண்டு. இடம் பெயர்வின் காட்சிகளை பச்சையாக இன்னும் நினைவில் கொண்டிருக்கிறார். 90களின் இடம்பெயர்வும் அதன் பின்னான நிகழ்வுகளின் அனுபவங்களையும் சொல்லுங்கள் என்று கேட்டோம்.

"நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இங்கைதான். இது என்ர தாய்வீடு" என, முகத்தில் ஆங்காங்கே பரவிக்கிடக்கும் முகச் சுருக்கங்களுக்கு இடையே துன்பமும், மகிழ்ச்சியும் கலந்த ஒரு சிறு புன்முறுவல் தந்தார்.

"செத்தாலும் சொந்த மண்ணில சா கவேணும் எண்டு வன்னிக்கு போகேல்லை. பொலிகண்டி, கரவெட்டி எண்டு மாறி மாறி அங்கலாய்த்துக் கொண்டு திரிஞ்சம். இப்ப 25 வருசத்துக்குப் பிறகு இங்க வந்திருக்கிறம். அந்த நாளையிலை ஊரிலை தேங்காய் 2 ரூபா, 3 ரூபா விற்றது. இடம்பெயர்வோடை போன இடங்கள்ள 30 ரூபா, 40 ரூபா குடுத்து வாங்கினம். சரியான கஷ்டம். பல நாள்கள் பீற்றூட்டை மட்டும்தான் காய்ச்சி பிள்ளையளுக்கும் குடுத்து நாங்களும் மிச்சம் மீதியை சாப்பிட்டு காலத்தை ஓட்டினம்" என்கிறார்.


"ஆரம்பத்திலை பாடசாலைகளிலும் பிறகு முகாம்களிலும் இருந்து சொல்ல முடியாத துன்பங்களை அனுபவிச்சம். ஊரிலை இருக்கேக்க கரைவலை தொழில் செய்தனாங்கள். கடற்கரையிலை மீன் தட்டிக் கொடுத்தல், வலை முடித்தல் எண்டு கூலி வேலையும் செய்தனாங்கள். வள்ளச் சொந்தக்காரன் மண்ணெண்ணெய்க் காசைக் கழிச்சுக் கொண்டு தாங்கள் மூன்று பங்கு வருமானத்தை எடுத்துப்போடுவினம். எங்களுக்கு ஒரு பங்கு மட்டும் தருவினம். சிலநேரம் 100 ரூபா. சில சமயம் 50 ரூபா. பல நாள்களில் மீன்வித்து முடிய 5 நாள் கழிச்சும் கூலி தருவினம். இப்படி எங்கட வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்க கஷ்டப்பட்ட எங்களுக்கு கடவுள்தான் துணை. இப்பவும் இப்பிடியே தான் போகுது வாழ்க்கை. பலாலி, மயிலிட்டித்துறை, காங்கேசன்துறை விட்டால் தான் எங்களுக்கு நிம்மதி. இப்ப வந்த அரசு நல்ல அரசு எண்டு சொல்லிச்சினம். கடவுள் துணையோடை எல்லாம் நல்லா நடக்க வேணும்" என பெருமூச்செறிய தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்கிறார்.

வளலாயின் இன்னோர் குடும்பத்துப் பெண் உதயகுமார் அனிதா. இவருக்கு வயது 38. சொந்த இடம் பலாலி. இடம்பெயர்வின் பின்னர் பல இடங்கள் தாவி துன்பங்களின் வலியை சிறுவயதிலேயே சுமந்த ஒருவர். தற்போது திருமணம் முடிந்து வளலாயில் வசிக்கிறார்.

சொந்த ஊரைவிட்டு மக்கள் இடம்பெயர்ந்தவர்களில் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவர். பலாலியில் இருந்து இடம்பெயரும் போது, இவருக்கு வயது 12. இப்போது திருமணம் முடித்து 4 பிள்ளைகள் இருக்கின்றனர். மூன்று ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும்.

(03 ஆம் பக்கம் பார்க்க...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> தன் பழம் பெருமை எல்லாவற்றையும் நிலத்திற்குத் தாரை வார்த்துவிட்டு தரை மட்டத்துடன் கிடக்கிறது விடுதி. அதன் வடிவங்கள் சிதைக்கப்பட்ட ஊசலாடும் உயிரோட்டமான கற்களாக மண்ணில் பரவிக் கிடக்கின்றது.

# எல்லாம் நல்லா நடக்கவேணும்

## தொடர்ச்சி.....

*(02 ஆம் பக்கத் தொடர்ச்சி..)*

25 வருடங்களின் பின்னர் தனது மூத்த மகனுக்கு 14 வயதாகியிருக்கும் போது, மூன்றாவது தலைமுறையின் காலடித்தடங்களை இங்கு பதியச் செய்திருக்கின்றார். கடற்றொழில், கூலித் தொழில் செய்து வருகின்ற 500 ரூபா வருமானத்தில் தன்குடும்பத்தை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்.

இன்னொருவர் துரைசிங்கம் மீரரீட்டா. இவருக்கு வயது 60. பிள்ளைகள் இல்லை. கணவன் துரைசிங்கத்துக்கு 65 வயது. தற்போது கால் நடக்க முடியாமல் ஓர் இடத்திலே முடக்கப்பட்டிருக்கின்றார். இவரைப் பராமரிக்கின்ற வேலைகளைச் செய்வது மாத்திரமன்றி, குடும்பத்தை வழி நடத்துவதற்காக கூலி வேலைகளையும் தேடி செய்து கொண்டிருக்கிறார்.

துரைசிங்கம் நலமாக இருந்தபோது, கடற்தொழில் செய்துவந்தார். கட்டுமரத்திலே கடலுக்குச் சென்று இறக்கம் குறைந்த இடங்களில் பறவை வலைகளை வீசி 2 மணித்தியாலங்கள் காத்திருந்து மீன்பிடித்து வருமானம் ஈட்டி வந்தார். நாளொன்றுக்கு 200 ரூபா வருமானம் கிடைக்கும். சில நேரம் ஒண்டும் இருக்காது. "நான் மீன் வியாபாரம் செய்கிறேன். சிலசமயம் 500 ரூபா கிடைக்கும், சிலநேரம் 300 ரூபா கிடைக்கும்" என்கிறார் மீரரீட்டா.

இன்னும் பல சோகங்கள் இருப்பதாக அறிகிறோம். காலை எழுந்து அவசர அவசரமாக வேலைக்குச் சென்று மீண்டும் இரவு ஏழு மணிக்கு வீடு திரும்புகின்றனர் சிலர். பலர் கடலை நம்பிக்காத்திருக்கின்றனர். வாரத்தின் ஏழு நாள்களும் வேலைதான். ஓய்வாக ஓரிடத்தில் உட்கார்ந்திருப்பதாகத் தெரியவில்லை. எதுவும் அறியாத பிஞ்சுகள் தங்கள் பெற்றோர்கள் நடந்து வந்த பாதையின் வலி நிறைந்த தடங்களில் இன்று அங்கும் இங்கும் அங்கலாய்த்து மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கின்றன.

வளலாய் கிராமத்தின் கிராம சேவகர் எஸ்.பி.சாந்தரூபனைச் சந்தித்தோம். 90களில் இடம்பெயர்ந்து 25 வருடங்கள் கழிந்த நிலையில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தொடர்பிலும் விடுவிக்கப்பட்ட இடங்களின் அளவு பரிமாணங்கள், செய்து கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் தொடர்பிலும் கேட்டோம்.

ஆரம்ப காலத்தில் (90களில்) 250 குடும்பங்கள் வரை இருந்தன என்றும் தற்போது 50 குடும்பங்கள் நிரந்தரமாக மீளக்குடியமர்ந்துள்ளன என்றும் தெரிவித்தார். யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஜெசிக்கா நிறுவனத்தினால் 30 தற்காலிக வீடுகளும், மாற்றுத்திறனாளி ஒருவருக்கு காருண்யா பவுண்டேசனால் ஒரு வீடும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய குடும்பங்கள் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றன. ஒரு லட்சத்து நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மூன்று பொதுக் கிணறுகளும், 3 மலசல கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கிராம சேவகர் தெரிவிக்கின்றார். காணி துப்புரவுக்கு பரப்பு ஒன்றுக்கு 1,750 ரூபாவும், மூடப்பட்ட கிணறுகளை தூர்வாருவதற்கு 14,000 ரூபாவும் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டதாம்.

மகிந்த அரசிலே 230 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. மைத்திரி அரசு பொறுப்பேற்றதும் 177 ஏக்கர் விடுவிக்கப்பட்டது. இன்னும் 200 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சொந்த நிலங்களுக்கு இந்த மக்கள் வந்துள்ளபோதும், அடிப்படை வசதிகள் இங்கு இல்லை. தற்போது தொழில் புரியும் இடங்களிலும் வேறொருவரின் கீழேயே தொழில் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இந்த மக்களுக்கு இருக்கிறது.

மீள்குடியமர்வின் பின்னராக யு.எஸ்.எயிட் நிறுவன நிதியுதவியுடன் சேவா லங்கா நிறுவனம் கடலோரமாக மூன்று இடங்களில் வான் தோண்டும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. எல்லா இடங்களாலும் கப்பலைக் கரைக்குக் கொண்டு வர முடியாத காரணங்களால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வளலாய் கிராமத்தின் மேற்கெல்லைகளில் விவசாய நிலங்கள் இருக்கின்றன. அங்கு மக்கள் மீளக் குடியமர்ந்தால் விவசாய உள்ளீடுகளைக் கொடுத்து உதவி செய்வதாகவும் அதற்கான அடிப்படைத் தரவுகளை சேவா லங்கா சேகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

90களில் இந்தக் கிராமம் அழகிய எழில் கொஞ்சும் கடலோர மீனவக் கிராமமாக இருந்ததற்கான தடயங்கள் பல ஆங்காங்கே கடலோரமாக மண்ணோடு மண்ணாகப் பரவிக்கிடக்கின்றன.

சேர் சிற்றம்பலம் கார்டியனருக்கு சொந்தமான பாம் பீச் விருந்தினர் விடுதி கம்பீரமாக நிமிர்ந்து நின்ற ஒன்று. மூன்று மாடிக் கட்டடங்களைக் கொண்ட அதன் ஒரு தண்ணீர் தாங்கி மட்டும் நினைவுகளின் எச்சத்தைத் தாங்கிக் கொண்டு இன்று ஒளியிழந்து நிற்கிறது.



பலாலி விமான நிலையத்துக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகள் யாழ்ப்பாணத்தில் எங்கு தங்குவது என்று கேட்டால் சொல்லப்படுகின்ற ஒரேயொரு இடமாக இருந்தது இந்த பாம் பீச் விடுதிதான். அப்பொழுது யாழில் வேறு பெரிய விடுதிகள் இருந்திருக்கவில்லை.

தன் பழம் பெருமை எல்லாவற்றையும் நிலத்திற்குத் தாரை வார்த்துவிட்டு தரை மட்டத்துடன் கிடக்கிறது விடுதி. அதன் வடிவங்கள் சிதைக்கப்பட்ட ஊசலாடும் உயிரோட்டமான கற்களாக மண்ணில் பரவிக் கிடக்கின்றது.

இதேபோன்று அங்கிருந்த [illegible] ஆலயமும் இடம் தெரியாமல் சிதைக்கப்பட்டு இருக்கின்றது. அதன் எச்சமாக சிறிய் ஆலயம் ஒன்று கடலோரமாய் காட்சி தருகின்றது. மக்களைத் துன்பங்களில் இருந்து இரட்சித்து காத்து வருகின்றது.

மகிந்தவின் ஆட்சி முடிவுறுத்தப்படுவதற்கு சிலகாலம் முன்பதாக இந்தப் பிரதேசத்தில் 300 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு சிங்கள மக்களைக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் புதிய அரசின் தோற்றம் அதை இடைநிறுத்திய தாகவும் அங்குள்ள அனைத்தும் அறிந்த, அனுபவத்தில் பழுத்த முதியவர் உளக்குமுறலோடு தெரிவித்தார்.

துன்பத்தின் வடுக்களைச் சுமந்த தழும்புகளை தன்மீது சுமந்தபடி கடலன்னையின் அரவணைப்பில் தினமும் கண்விழித்து துயில் கொண்டு மீண்டும் எழுகிறது கிராமம் என்றோ ஒருநாள் விடியும் என்ற நம்பிக்கையோடு.

கடலோரமாய் படகருகில் வீற்றிருந்த பெரியவர் ஒருவர் கீழ்வரும் பாடலைவாயில் முணுமுணுத்துக் கொண்டு, கடலன்னையின் அரவணைப்பிற்காய் காத்திருக்கின் றார்.

*கட்டுமரமே கட்டுமரமே......*
*விட்டு வைத்ததே அலையுனையே......*
*கட்டியணைத்த கடலன்னை......*
*தவிக்கவிட்டாள் இன்றென்னை......!!*
*முற்ற மணலில் முழு நிலவில்......*
*சுற்றி இருப்போம் அந்த சுகம் எங்கே.....*
*பட்டம் வலித்து கிட்டி அடித்து*
*ஆடி வரும் குயில் திடலெங்கே......*
*அன்று கொடுத்தாள்...... இன்று எடுத்தாள்......*
*அன்னை கடல்தாய் அரவணைப்பாள்...*
*அரவணைப்பாள்......!!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசு நம்பக்கூடியதா?

அதிரன்



நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு சாதனை மிக்க தேர்தலாக நோக்கப்படுகின்றது. இலங்கையில் இம்முறை நடைபெற்ற தேர்தல் சர்வதேச நாடுகளின் பாராட்டை இலங்கை அரசு பெறும் அளவுக்கு நீதியானதும் நேர்மையானதுமாக நடந்து முடிந்திருக்கின்றது. இந்தத் தேர்தலின் கதாநாயகன் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவே.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு நீதியான – நேர்மையான தேர்தலை நடத்திக் காட்டவேண்டும் என்று அவர் கொண்ட குறிக்கோள் வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது. வன்முறைகள் இல்லாத– நம்பகத்தன்மையான தேர்தலை நடத்துவதற்காகத் தனக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் கையிலெடுத்துக்கொண்டு அவர் செயற்பட்ட விதம் சர்வதேசக் கண்காணிப்பாளர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.

இந்தவருட ஆரம்பத்தில் இருந்த நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இன்று இலங்கை தெற்காசியாவுக்கு மட்டுமன்றி, முழு உலகுக்குமே நம்பிக்கையளிக்கின்ற நாடாகத் திகழ்கின்றது. சர்வாதிகாரப்போக்கில் வீறு நடைபோட்டு குடும்ப அரசியலைக் கோலோச்சிக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்சவையும் அவரது அடிவருடிகளையும் ஒரு தடவையல்ல இரு தடவைகள் எட்டுமாத கால இடைவெளியில் பல்வேறு சவால்களின் மத்தியிலும் ஜனநாயகரீதியான தேர்தலில் தோற்கடித்ததன் மூலமே இது சாத்தியமானது.

நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் முன்னெப் போதுமில்லாத மிகக் குறைவான வன்முறைச்சம்பவங் களுக்கு மத்தியிலும் தேர்தல் விதிமுறை மீறல்களுக்கு மத்தியிலும் பெருமளவுக்கு நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்று முடிந்ததை அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் கட்சிகளின் அங்கத்தவர்களிடையே ஒரு சில வன்முறைகள், கட்சிகளில் தோற்றவர்களால் முன்வைக்கப்படும் விருப்பு வாக்கு மோசடிக் குற்றச்சாட்டுகள், தேசியப்பட்டியல் நியமனங்கள் தொடர்பான இழுபறிகள் – குழிபறிப்புகள் குறித்த செய்திகள், அமைச்சரவை நியமன ஒதுக்கீடு – அதில் நிலவும் குறைபாடுகள், நடைமுறைச் சிக்கல்கள், கட்சிகளுக்குள் இடம்பெறும் தேர்தலின் பின்னரான உட்பூசல்கள் போன்ற பல செய்திகள் தற்போது ஊடகங்களை ஆக்கிரமித்த வண்ணம் உள்ளன.

ஜனவரி 8இற்கு முன்னர் ஊடகங்களை ஆக்கிரமித்திருந்த செய்திகளுடன் பார்க்கையில் இது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமானது. மனித உரிமை மீறல்கள், இராணுவ மயமாக்கல், குடும்ப ஆட்சி ஊழல் மோசடி, சர்வாதிகார தீர்மானங்கள் சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறைகள், திட்டமிட்ட குடியேற்றங்கள் என இந்த நாட்டில் வாழ்வதற்கான நம்பிக்கைகளை சிதைத்துவந்த செய்திகளுடன் பார்க்கையில் இன்றோ நல்லாட்சி தொடர்பான நேர்மையான விமர்சனங்கள், பொறுப்புக்கூறல் குறித்த ஆரோக்கியமான கலந்துரையாடல்கள், உண்மையான நல்லிணக்கம் குறித்த தேடல்கள் ஊடகங்களிலும் சிவில் சமூகத்தினர் மத்தியிலும் அரசியற் கட்சியினர் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்றமை வரவேற் கத்தக்க மாற்றமாகும்.

இவ்வருடத்துக்கு முன்னரான காலப்பகுதியில் இலங்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பாக பகிரங்கமாக கருத்துகளைக் கூறுவதே தேசத்துரோகமாகப் பார்க்கப்படுமளவுக்கு நிலைமையை ஆட்சியாளர்கள் மோசமாக்கி வைத்திருந்தனர். போரின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம். இது தொடர்பில் நம் பிக்கையான சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மை வெளிக்கொண்டு வரப்படவேண்டும் என ஐ.நா நிபுணர் குழுவினரே தெரிவித்தபோதும் முன்னைய அரசு அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காது அராஜகப் போக்கில் நடந்துகொண்டது. இதன் விளைவாக ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நடத்தப்பட்ட சர்வதேச விசாரணை அறிக்கையின் பிரதி இவ்வாரத்தில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்த தீர்மானத்தை நிறைவேற்றுவதில் பிரதான பங்கை வகித்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஸா பிஸ்வால் தனது இலங்கைக்கான பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார். இம்முறை அவரது இலங்கைக்கான பயணம் மிக முக்கியமானதொன்றாக நோக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்கா இப்போது தனது நிலைப்பாட்டை மாற்றி போர்க் குற்றம் தொடர்பில் இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை வந்த நிஷா பிஸ்வால் தனது பயணத்தின் முடிவில் இதனைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். சர்வதேச தரத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உள்ளக விசாரணையை இலங்கை மேற்கொள்ளுமாயின் அதனை அமெரிக்கா எற்றுக்கொள்ளும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்த விசாரணையை மேற்கொள்ள இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

நிஷா பிஸ்வாலுடனான சந்திப்பில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால இலங்கை மேற்கொள்ளவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையின் நகலை நேரடியாகக் கையளித்துள்ளார். தென்னாபிரிக்கப் பாணியில் அமைந்துள்ள அந்தப் பொறிமுறை குறித்து நிஷா பிஸ்வால் திருப்தி வெளியிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இந்த உள்ளக விசாரணை மூலம் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்குமா என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

நம்பகரமான உள்ளகப் பொறிமுறை மூலமாக நின்று நிலைக்கக்கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனவாதத்தை வெற்றிகொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் கட்சிகளின் குறுகிய அரசியல் சிந்தனைகளை முறியடித்து மக்களின் நம்பிக்கையை குறிப்பாக தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய உள்ளகப் பொறிமுறை மூலம் இந்த சிக்கலான விடயத்திற்குத் தீர்வு காணமுடியுமா?

சர்வதேச விசாரணையின் தேவையை தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்ற போதும் தற்போதுள்ள யதார்த்த நிலையை உள்வாங்கி சர்வதேச பங்கு பற்றுதலுடனான அன்றேல் சர்வதேசத்தின் வகிபாகத்துடன் கூடிய உள்ளகப் பொறிமுறைக்கு சார்பான கருத்தைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நம்பிக்கையுடன் வெளியிட்டிருக்கின்றது. இந்த நம்பிக்கையைத் தொடர்ச்சியாகத் தக்கவைத்து உள்ளகப் பொறிமுறை மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க இந்த அரசு அர்ப்பணிப்புடன் நடந்துகொள்ளுமா? இதனை தொடர்ச்சியாக அவதானித்து அழுத்தம் கொடுத்து அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் விடயத்தில் அர்த்த பூர்வமான பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதன் மூலமே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கைகளைத் தக்கவைக்க முடியும்.

நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத மிகக் குறைவான வன்முறைச்சம்பவங்களுக்கு மத்தியிலும் தேர்தல் விதிமுறை மீறல்களுக்கு மத்தியிலும் பெருமளவுக்கு நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெற்று முடிந்ததை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்

நாட்டில் நல்லாட்சியைத் ஸ்தாபிப்பதில் சிறுபான்மை இனத்த வர்கள் பெரும் பான்மையின மக்களுடன் கைகோர்த்துள்ள இவ்வேளையில், போரின்போதும் அதற்குப் பின்னரும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்துவது அவசியமாகும். உண்மைகளை எவ்வளவு ஆழத்தில் மூடி மறைத்தாலும் அது தனக்கே உரிய கம்பீரத்துடன் என்றாவது ஒருநாள் வெளிவரும் என்ற ஆழமான நம்பிக்கை உள்ளது. ஆனால், உண்மைகள் வெளிவருவதில் ஏற்படும் தாமதமானது பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி கிட்டுவதைக் கேள்விக்கு உரியதாக்கிவிடும். ஏனெனில், தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமானதாகும். போரின் போது இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பான உண்மைகள் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை மூலம் வெளி வரும் என்று தமிழ்மக்கள் மட்டுமன்றி, மனச்சாட்சியுள்ள மக்கள் யாவரும் நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புகள் பொய்த்து விடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணரத் தவறும் நுகர்வுக் கலாசார ஆபத்து!

■ சிறிதுரை



மட்டுமீறிப் பெருகியிருக்கிற நுகர்வுக் கலாசாரம், ஒரு முறை பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிகிற சமூகப் பொறுப்பற்ற மனோபாவம், சூழல் நலம் பற்றிய விழிப்புணர்வின்மை, சோம்பல் மனப்பான்மை, வணிகப் பேராசை, தடுமாறிக் கொண்டிருக்கும் புறத்தூய்மை நிர்வாக முறைகள், அறப் பார்வைகள் ஏதுமற்ற அறிவியல் வளர்ச்சி, அரசுகளின் தொலைநோக்குப் பார்வையின்மை போன்றவற்றுக்கெல்லாம் ஒற்றைச் சான்றாகி இன்று நமது சமூகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன பலதரப்பட்ட நெகிழிக் (பிளாஸ்டிக்) கழிவுகள்.

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பரவிப் படர்ந்து குவிந்திருக்கின்ற விதவிதமான நெகிழிக் கழிவுகள் எனும் அசுகளிடமிருந்து அவ்வளவு எளிதில் விடுபட முடியாதவர்களாக நாம் மாறியிருக்கிறோம்.

அதிலும், பிளாஸ்டிக் பைகள் என்றழைக்கப்படுகிற நெகிழிப் பைகள் இல்லாமல் வாழவே முடியாது என்கிற இழிநிலை, இன்றைய நமது மக்களிடையே வலுப் பெற்றிருக்கிறது.

மருத்துவக் கருவிகள் போன்ற அவசியத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கவேண்டிய நெகிழி வகையினங்கள் தேநீர் குவளைகளாகவும் பயன்படுத்தப்பட்டு எவ்விதக் குற்ற உணர்வுமின்றி அந்தந்த இடங்களிலேயே வீசியெறியப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உணவு விடுதிகளில் இருந்து வாங்கி வரப்படுகிற ஒரு வேளை உணவின் கூறுகள் பதினைந்துக்கும் மேற்பட்ட நெகிழிப் பைகளில் அடைக்கப்படும் கொடுமையும் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

உண்டு முடித்த பின்பு கழிவுகளாக மாறுகிற அத்தகைய வெற்று நெகிழி உறைகள் குப்பைத் தொட்டிகளில் வீசப்படுகின்றபோது அவை நழுவிப் படபடக்கின்றன, நீரில் பயணிக்கின்றன, காற்றில் பறக்கின்றன.

ஒருவரது ஒருவேளை உணவிலேயே இத்தனை நெகிழிக் கழிவுகள் என்றால் ஒரு பெரிய உணவு விடுதியின், ஒரு மாநகரத்தின் அனைத்து உணவு விடுதிகளின், ஒரு நாட்டின் அனைத்து உணவு விடுதிகளின் வழியாக ஒவ்வொரு நிமிடமும் வெளியேறும் நெகிழிக் கழிவுகள் எவ்வளவு இருக்கும் என்பதை அவரவர் கணக்குக்கே விட்டுவிடுவோம்.

மெல்லிய நெகிழி உறைகளில் தனித்தனியாகக் கட்டப்படுகிற அனைத்துப் பொருள்களையும் மீண்டும் ஓர் உறுதியான பெரிய நெகிழிப் பையில் மொத்தமாகப் போட்டுத் தருகிறார்கள். அத்தகையத்தாய் பைகள் அந்தந்த நிறுவனங்களின் முதன்மையான விளம்பரங்களாக நுகர்வோராலேயே காட்சிப்படுத்தப்படுகின்றன.

உண்ட ஓரிரு மணி நேரத்துக்குள் செரிமானமாகியும், சிறுநீராகியும் விடுகிற உணவுப் பொருள்களைத் தாங்கி வருபவை, நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆனாலும் தானாகவும் அழியாத, தரையில் புதைந்தாலும் மக்காத நெகிழி வகைய்ினங்க்ள்தான் எனும் நிலை மிகக் கொடூரமானதொரு முரண் ஆகும்.

மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்களின் வாழ்வியலுக்கு உயிராதாரமாக விளங்கும் நீர்நிலைகளும், நிலப்பரப்புகளும், காற்று மண்டலமும் நெகிழிப் பொருள்களின் குப்பைகளால் எத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கின்றன என்பதையெல்லாம் சான்றுகளோடு விளக்கி சூழலியல் அறிவியலாளர்களும், அமைப்புகளும் வெளியிடுகிற தகவல்கள் பேரதிர்ச்சிகளைத் தருகின்றன.

பறவைகளும், மீன்களும், கால்நடைகள் உள்ளிட்ட பிற உயிரினங்களும்கூட நெகிழிக் கழிவுகளை உண்டு மாண்டு போவதை அவற்றின் வயிறுகளைத் திறந்து காட்டியே நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள் அறிவியலாளர்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் உலகெங்கிலும் ஆங்காங்கே வீசியெறியப்பட்டு பசிபிக் பெருங்கடலைச் சென்றடைந்த நெகிழிக் குப்பைகள் ஒன்றுசேர்ந்து அமெரிக்க, ஆசிய கண்டங்களுக்கு இடையே ஹவாய் தீவு முதல் ஜப்பான் வரை வட பசிபிக் பெருங்கடலில் ஒரு குப்பைத் தீவாக மாறியிருப்பதை கடலியல் ஆய்வாளர் சார்லஸ் மூர் என்பவர் கண்டறிந்து வெளியிட்டிருக்கும் செய்தி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி இருக்கிறது.

அத்தீவுக்கு பசுபிக்கின் மிகப் பெரும் குப்பைகளின் சேர்க்கை (Great Pacific Garbage Patch) என்று பெயரிடப்பட்டிருப்பதாகவும், சுமார் 10 கோடி டண் நெகிழிக் குப்பைப் பொருள்கள் அங்கு திரண்டிருக்கலாம் என் றும் பல அதிர்ச்சித் தகவல்களைப் பட்டியலிட்டு முன்வைக்கிறார்கள் சூழலியல் ஆர்வலர்கள்.

யாழ்ப்பாணம் நகரத்தின் கழிப்பிடமாகி இருக்கும் காக்கைதீவு வெளியும் இதற்குக் கிஞ்சித்தும் குறைந்ததில்லை. நன்றாக இருந்த ஒரு நிலப்பரப்பை, குப்பை கொட்டுகிறோம் என்கிற பேரில் நெகிழிக் கழிவின் இரக்கமற்ற கல்லறையாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். அங்கு குவிந்திருக்கும் துர்நாற்றக் குப்பை மேடுகளில் பல கோடிக் கணக்கில் படபடத்துக் கொண்டிருப்பவை எந்தக் காலத்திலும் மண்ணில் மக்க முடியாத நெகிழிக் கழிவுகளேயாகும்.

உலக அளவில் நெகிழியின் பயன்பாடுகள் கடந்தஐம்பது ஆண்டுகளாகத்தான் நெடுவடிவம் எடுத்துள்ளன. இந்த ஐம்பது ஆண்டுகளில் அதற்கு எதிரான விழிப்புணர்வும் ஏற்பட்டு சீனா, அயர்லாந்து, வங்கதேசம், அமெரிக்கா போன்ற நாடுகளில் அவற்றின் பயன்பாடு கணிசமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இருந்தவரையில் இலங்கையின் வடக்கு கிழக்கிலும் இது பற்றிய விழிப்புணர்வு இருந்தது. வந்த புதிதில் இது பற்றிக் கதைத்ததோடு அந்த விடயத்தையே மறந்து விட்டது வடக்கு மாகாண சபை.

> “ யாழ்ப்பாணம் நகரத்தின் கழிப்பிடமாகி இருக்கும் காக்கைதீவு வெளியும் இதற்குக் கிஞ்சித்தும் குறைந்ததில்லை. நன்றாக இருந்த ஒரு நிலப்பரப்பை, குப்பை கொட்டுகிறோம் என்கிற பேரில் நெகிழிக் கழிவின் இரக்கமற்ற கல்லறையாக மாற்றிக் கொண்டிருக்கிறோம்.

ஆபத்தின் அளவு குறித்த விழிப்புணர்வு இல்லாமலேயே நெகிழிப் பொருள்களின் மிகவும் குறிப்பாக, உணவுப் பொருள் சார்பு நெகிழிப் பொருள்களின் உற்பத்தி அசுர வேகத்தில் நடக்கிறது.

பெட்ரோலியப் பொருள்களில் இருந்து உற்பத்தியாகிற நெகிழி வகையினங்கள் வெண்பாறைக் கட்டிகளைப் போன்று தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு பல லட்சக்கணக்கான தேநீர் கோப்பைகளாகவும், பல்வேறு வகை நெகிழிப் பைகளாகவும், புட்டிகளாகவும் நாடெங்கிலும் விநியோகம் செய்யப்படுகின்றன. ஆனால், மீண்டும் அவை தயாரித்தவர்களை நோக்கி எப்போதும் திரும்பி வருவதேயில்லை. இது குறித்து, இதுவரை முன்வைக்கப்பட்ட அத்தனைத் தீர்வுகளும் வெறும் கண்துடைப்புதான்.

அசுரத்தனமாக உற்பத்தி முறைகளையும், அவற்றின் வணிக முறைகளையும் கட்ட விழ்த்து விட்டுவிட்டு, விழிப்போடிருக்கும்படி நாம் மக்களுக்கு மட்டும் அறிவுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

2002ஆம் ஆண்டில் தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட நெகிழிப் பயன்பாடு, கட்டுப்பாட்டுச் சட்டம் 2003ஆம் ஆண்டே பின்வாங்கிச் சென்றுவிட்டது. இது குறித்து நமது அரசுகள் பெரிதாக அலட்டிக் கொள்வதேயில்லை.

குப்பைகளாகிவிட்ட நெகிழிப் பொருள்கள் உள்ளிட்ட திடக் கழிவுகளை எரிக்கக்கூடாது என்கிறார்கள். நெகிழிப் பொருள்களை எரிக்கும்போது உண்டாகும் டையாக்சின் உள்ளிட்ட கொடிய நச்சுக் காற்றுக்கூறுகள் புற்றுநோய் உள்ளிட்ட கொடிய பல நோய்களுக்கு வழிவகுக்கின் றன என்பதே அதற்கான காரணம்.

எனவே, நெகிழிக் கழிவுகளை எரிக்கக்கூடாது. மண்ணில் புதைத்தாலும் அவை எத்தனை நூறு ஆண்டுகளானாலும் மக்கப் போவதில்லை என்பதோடு மண் வள்த்தையும் நாசப்படுத்தி விடுகின்றன.

துணிப் பைகளையோ அல்லது பிரம்புக் கூடைகளையோ திரும்பத் திரும்பப் பயன்படுத்துவதுபோல் நெகிழிப் பை களை மீண்டும் மீண்டும் பயன்படுத்த யாரும் விரும்புவதில்லை. ஏனெனில், ஒரு முறை மட்டுமே பயன்படுத்தித் தூக்கி எறியுங்கள் அல்லது உடைத்துப் போடுங்கள் என்பதே நாகரிக அறிவுறுத்தலாகவும், வசதியான நாகரிகமாகவும் இருக்கிறது.

ஒருசில மணி நேரங்களில் உற்பத்தியாகிவிடுகிற வேகம் மலைப்புத் தருகிறது.

உலக அளவில் நெகிழிப் பொருள்கள் பயன்பாட்டைப் பொறுத்த வரை தொலைநோக்குப் பார்வைகளுடன் கூடிய சமூக அறிவியல் தோற்றுப்போய், வணிக அறிவியல் வெற்றி பெற்றுவிட்டது. நெகிழிப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள், பயன்பட்டுக் கழிந்த நெகிழிப் பொருள்களை மீண்டும் விலைக்கு வாங்கிக் கொள்வதாக அறிவிக்கின்றன. அந்த உடன்படிக்கையின் பொருட்டே, புதிதாக உற்பத்தியாகிற நெகிழிப் பொருள்களின் மீது கூடுதல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்தக் கொள்கையை உற்பத்தியாளரே பொறுப்பேற்கும் கொள்கை (Extended Producer Responsibility-EPR) என்கின்றனர். ஆனால், நடைமுறையில் இத்திட்டம் 5 சதவீத அளவுக்குக்கூட வெற்றிபெற்று பயன் தருவதில்லை. நெகிழிக் குப்பைகளின் பெருக்கத்தைத் தவிர்க்க அவற்றின் உற்பத்தி நிறுவனங்கள் முன் வைத்திருக்கிற சூழல் நலக் கருத்துகளால் கடுகளவும் பயன் விளையவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இன்றைய நடைமுறையில் நெகிழிக் கழிவுகளை, மிகவும் குறிப்பாக உணவுப் பொருள்கள் சார்ந்த நெகிழிக் கழிவுகளை சேகரித்துச் சந்தைப்படுத்துவதில் முறையான வணிக ஒருங்கிணைப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. உடைந்த நெகிழிகளை வாங்குகிறார்கள் தான் என்றபோதும் அதற்குப் பதிலாகவும் புதிய நெகிழிகளைத்தான் கொடுக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது.

நெகிழிகள் ஏதேனும் ஒரு பொருளின் கவசமாக அவை பரவலாகவும், பரபரப்பாகவும், பெருமளவிலும், பெரு விருப்பத்துடனும்

ஆக எரிக்கவும், புதைக்கவும், மீண்டும் பயன்படுத்தவும் முடியாத நெகிழிக் காகித வகையினங்களை மறு சுழற்சி செய்வதன் வாயிலாகவே மோட்சம் பெறச் செய்ய வேண்டும். இதிலும் துயரம் என்ன வென்றால், மறு சுழற்சி செய்வதற்கு மூன்று மடங்கு பணம் செலவு செய்யவேண்டியிருப்பதுடன் நெகிழியின் தரமும் குறைந்து போய்விடும் என்பது தான்.

இதுவரை உலக அளவில் ஒரு விழுக்காடு அளவுக்கே நெகிழிப் பொருள்கள் மறுசுழற்சி செய்யப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, நெகிழிப் பொருள்கள் மறுசுழற்சியாவதும் கண்துடைப்புத்தான். அப்படியெனில், இதற்கு என்னதான் தீர்வு எனில் அவற்றின் உற்பத்தி, வணிகப் பயன்பாடு, நுகர்வோரின் வீசியெறியும் மனோபாவ வாழ்க்கை முறை இந்த மூன்று களங்களிலும் மிக உறுதியான நெருக்கடிகள் தோற்றுவிக்கப்பட்டு அதேவேளையில் இயற்கை சார்ந்த அறிவியல்பூர்வமான மாற்றுக் கண்டுபிடிப்புகளையும், தாவரங்களின் பொருள்களில் பொட்டலங்கள் கட்டப்படுகிற தொழில்நுட்பங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். இப்படிச் செய்வதுதான் உண்மையான அறிவியலாக இருக்க முடியும்.

துணிப் பைகளையும், சணல் பைகளையும், பிரம்பு, ஓலைக் கூடைகளையும் தொடர்ச்சியாகக் கையாள்வதற்கும், அப்படிக் கையாண்ட பிறகு பாதிப்புகள் ஏதுமின்றிக் கழித்துக் கட்டுவதற்கும் நூறு விழுக்காடு உகந்தவையல்லவா?

இயற்கையை, உயிரினங்களின் வாழ்வியலை சிதைத்துச் சீரழிக்காத வகையில் உணவுப் பொருள்களை வழங்கும் பொட்டல விநியோகத்தில், நமது அறிவியல் ஏன் வெற்றிபெறவில்லை? இனியாவது சிந்தித்துச் செயற்படுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலத்து ஊற்று

தொடர்கதை

தேவி பரமலிங்கம்

கந்தையர் வீட்டை வேலுப்பிள்ளை மாஸ்டர் போய்ச் சேர்ந்தபோது, மதியம் பின்தள்ளப்பட்டு பொழுதும் சாய்ந் து கொண்டு வந்தது. நீண்ட இடைவெளிக் குப் பின்பு அவரைக் கண்டதும், விசாலாட்சிக்கு மகளைப் பற்றி கேட்டறியலாம என்னும் சபலம் எட்டிப் பார்த்தது. அதற்கிடையில் வெளியில் போயிருந்த கந்தையரும் வீடு திரும்பி இருந்தார்.

"ஆ.... ஹா... என்ன மாஸ்டர்! கனநாளைக் குப் பிறகு இங்கால வந்திருக்கிறியள் போல கிடக்கு?" மாஸ்டரைக் கண்டதும் கந்தையர் குசலம் விசாரித்தார்.

"ஓமோம்... பெத்த தகப்பன் இருக்கேக்க அந்தப் புள்ளைக்கு நானொரு தகப்பனாகி விட்டனே... அந்தக் கடமேல புள்ளை பெத்திருக்கெண்டு பாக்க வந்தன்... அதோடை இஞ்சாலேம் வந்திட்டுப் போவமெண்டு தலை வைச்சன்..."

வேலுப்பிள்ளை மாஸ்டர் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினார். அவர் சொல்லியதில் இருந்து சங்கதியை கந்தையரும், விசாலாட்சியும் ஏககாலத்தில் புரிந்து கொண்டனர்.

"பாமா... புள்ளை பெத்திட்டாளா...?"

தன்னுள் கேட்டுக் கொண்ட விசாலாட்சி மனதில், அபரிமிதமான பாசவுணர்வும் பொங்கிற்று.

"அவளின்ர கதையை மாஸ்டர்... இஞ்சை சொல்லாதேங்க... வேறையேதன் கதையைக் கதையுங்க..."

கந்தையருக்கு மகள் மீது பற்றுணர்வு எட்டிப் பார்த்தாலும், மறுகணமே விழித்த சுய கௌரவம் அவருடைய வாயால் அந்த வார்த்தைகளைத்தான் தெறித்து விளவும் செய்திருந்தன.

"ஏன்ராப்பா அப்புடிச் சொல்லுறாய்... என்ன இருந்தாலும் உன்னுடைய மகள்தானே...!"

"அந்த எண்ணத்தையே விட்டு வருடமொண்டாகுது. இப்ப வந்து புது உறவைச் சொன்னாப்போல முடிஞ்சிடுமே...!"

மாஸ்டரின் வார்த்தைகளில் வந்த சூசகத்தைப் புரிந்து கந்தையர் கூறி மழுப்பினார்.

"எப்ப மாஸ்டர்... பாமாவுக்குப் புள்ள புறந்தது...?"

இதுவரை அடக்கி வைத்த நெஞ்சுள் இருப்புக் கொள்ளாத துடிப்பு, விசாலாட்சியைக் கணவன் முன்பாகத் துணிந்து கேட்க வைத்தது.

"அது விசாலாட்சி... போன புதன்கிழமை..."

ஞாபகப்படுத்தி பாமா பிரசவித்த தினத்தைக் கணக்குப் பார்த்து அவளுடைய கேள்விக்குப் பதில் சொன்னார் மாஸ்டர்.

"கண்டறியாத கேள்வி... விசாலம் அங்காலபோ முதல்ல... விசாரிக்கிறஅளவுக்கே நடந்து கொண்டவள் அவள்...?"

மனைவி மீது சீறிச்சினந்தார் கந்தையர். சீறிச்சினந்தும் விசாலாட்சி சென்றுவிடவில்லை. ராஜன் அறையில் நித்திரையில் கிடந்தான்.

"கந்தையா ஏன் கோவிக்கிறாய்? நடந்ததேதோ நடந்து போயிட்டு... அப்புடி இந்தச் சமூகத்தில் ஒண்டும் நடக்கேல்லையே... ஆன உன்ரை குடும்பத்தில மட்டும்தானே நடந்திருக்கு..."

சாதகமான வழியில் அவரை வழிப்படுத்த கூறி வைத்தார் மாஸ்டர்.

"அதனாலதானே இந்தச் சமூகமே ஒழுங்கில்லாமல் கெட்டுப் போய்க்கிடக்கு... அதெப்புடியோ என்ர மோள் முகத்தில கரியைப் பூசிப்போட்டு ஓடிப் போன பின்னால... எனி எனக்கவள் மகளில்லை... எண்டைக்கு இந்த வீட்டை விட்டுப் போனாளோ அண்டைக்கெடுத்த முடிவு இதுதான்..."

கந்தையரின் கதைகளைக் காதுகளில் வாங்கிய வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு. வேறு விதமாக விளக்கினாலே அவரின் எண்ணங்களை மாற்ற முடியுமென்றும் தோன்றியது.

"கந்தையா நீ படிச்சனி... விளங்கவேணும் இந்தச் சமுதாய அமைப்புக்களைப் பற்றி... நாங்க எல்லாக் காலங்களிலும் எல்லாத்தேம் கண்டிருக்கிறம்... எல்லாம் இருந்தேபோல இருப்பதில்லை. மாறுபட்டுக் கொண்டே வந்திருக்குது இல்லையே...!"

"..."

"அதுபோலதான் இந்த அமைப்புக்களும் ஒரு கால கட்டத்தில் வாழ்ந்தவர்களிடையில் தோன்றிய ஒண்டு இன்னொரு காலத்தில் அழிஞ்சிடும். சுருக்கமாகச் சொன்னா சாதியளும் அழிஞ்சிடும்."

"என்ன சொல்லுறியள் மாஸ்டர்...?"

"அவசரப்படாமல் கேள் கந்தையா. சாதியள் பொருளாதார வகுப்படிப்படையில் ஆரம்பமாகின. வருவாய்க்காகச் செய்து வந்த் தொழிலடிப்படையில் சாதியை வகுத்திருக்கினம். இல்லாமல் மனிதருக்கிடையே எப்புடிச் சாதி வந்து புகுந்தது?"

கேள்விக்குறியுடன் நீண்ட பேச்சைச் சற்றே நிறுத்தினார் வேலுப்பிள்ளை மாஸ்டர்.

"இருக்கலாம்.... நடைமுறையிலுள்ள வாழ்க்கையில் கிஞ்சில் தனங்கள் நடப்பதால் எவ்வித ஒழுங்கையும் சமுதாயத்தில் கடைப்பிடிக்க ஏலாமல் விடுமெண்டதை ஒத்துக்கொள்ளுறியளா?"

தர்க்க ரீதியில் அபிப்பிராயத்தை வேலுப்பிள்ளை மாஸ்டரிடம் தூக்கிப் போட்டார் கந்தையர்.

"எதை ஒழுக்கமெண்டுறாய்... ஒரே சாதியுள் வாழ்வதையா... மக்களை வழிப்படுத்தியவர்களே வருமானத்தைக் கருதி வகுத்த பம்மாத்துதான் இதெண்டதை உணரமுடியாமல் இருக்கா...."

வேலுப்பிள்ளை மாஸ்டர் அடிப்படை மாற்றத்துக்கான கற்பிதங்களைக் கூறவருவதை கொஞ்சம் புரிந்து பேச்சுக்களுக்கு காது கொடுத்துக் கொண்டிருந்தார் கந்தையர்.

"முதலாளித்துவ அமைப்பே மக்களிடையில் சாதி முறைகளைத் தோற்றுவித்து வருமானத்தைப் பெருக்கச் சுரண்டிக் கொண்டிருந்தது. கொஞ்சமும் அதை அறியமுடியாத மக்களை மேலும் அறியமுடியாத மூடர்களாக்கியதால் சாதியை மனிதர்களிடையில் தொடரச் செய்து சுரண்டலைத் தொடரவும் முடிந்தது." விளக்கம் கூறிக் கொண்டு வந்தார் மாஸ்டர்.

"மாஸ்டர் நீங்க எதுக்கோ எதையோ சொல்லுறியள்...." இடையில் குறுக்கிட்டுக் கந்தையர் சொன்னார்.

"கந்தையா வேறெதையுமே சொல்லேல்ல. உன்ர விசயத்துக்கே வாறன்.... வடிவாக் கவனிச்சுக் கேள்."

"சாதியாலதான் மக்களைப் பிரிச்சு வைச்சார்களே ஒழிய.... மக்களில் சாதியால் தரம் பிரிக்கப்பட்டவர்களில்லை. என்பதும் எங்களால புரியக்கூடியதாக இருக்கேக்கை ஏன் நாங்க மாறக்கூடாது. புதிய சமுதாயத்தை உருவாக்க உத்வேகம் கொண்டுள்ள காலத்தில உன்னைப்போல பிரகிருதிகள் வாழ்ந்து கொண்டிருப்பதும் விந்தைதான்."

> “சாதியாலதான் மக்களைப் பிரிச்சு வைச் சார்களே ஒழிய.... மக்களில் சாதியால் தரம் பிரிக்கப்பட்டவர்களில்லை. என்பதும் எங்களால புரியக்கூடியதாக இருக்கேக்கை ஏன் நாங்க மாறக்கூடாது. புதிய சமுதா யத்தை உருவாக்க உத்வேகம் கொண் டுள்ள காலத்தில உன்னைப்போல பிரகிருதிகள் வாழ்ந்து கொண்டிருப்பதும் விந்தைதான்.”

நீண்ட பேச்சைப் பேசியதால் மாஸ்டருக்கு அசதியாகவும் இருந்தது. விளக்கம் இல்லாதவர்களால் பிழையான கருத்து வளர்வதைத் தடுக்கவே இந்தளவுக்கு சிரத்தை எடுக்கவும். மாச்சல் படவும் ஏதுவானது.

"நீங்க சொல்லுறே சரி மாஸ்டர். இந்தச் சமுதாயம் இன்னும் மாறவில்லையே. அதனாலதானை நாங்க அப்புடி வாழ வேண்டியிருக்கு?" கந்தையரின் கூற்று எவ்வளவுக்குப் படிந்து வந்துவிட்டாரென்பதை மாஸ்டருக்கு உணர்த்தியது.

"அப்புடியில்லைக் கந்தையா! உன்னைப் போல சில்ராலை மாற்றம் ஏற்படாத மாதிரித் தெரிஞ்சாலும், சமுதாயம் எவ்வளவோ மாறீட்டுது. மாறிக்கொண்டே இருக்குது. மாறவும் போகிறது. அப்போ உன்னைப் போன்றவர்களும் மாற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு வருவியள்."

வேலுப்பிள்ளை மாஸ்டர் சரியாகக் கூறிவந்ததால் கந்தையரிடம் குடிகொண்டிருந்த சுயகௌரவம் விலகிக்கொண்டிருந்தது. மகளில் பாசமும் ஏற்பட்டு வலுவேத்தியது. மாஸ்டர் நியாயப்படுத்திக் கொண்டதன்படி பாமாவில் தவறில்லை; என்று யோசித்த அவதரியத்தில் மகள்மீது பாசவுணர்வு அதிகரித்தது.

"சரி...! இப்ப என்ன சொல்லுறாய்....?"

நிலவிய மௌனத்தைத் திரும்பவும் கலைத்தார் வேலுப்பிள்ளை மாஸ்டர்.

"நாங்க என்னத்தைச் சொல்லுறே மாஸ்டர்....?"

திடுக்குற்ற கந்தையர். சிந்தனையால் விடுபட்டு இப்படி மழுப்பினார். இவற்றைப் பார்த்தும், கேட்டும் கொண்டிருந்த விசாலாட்சிக் குக் கணவரிடத்தில் தோன்றிய மாற்றத்தை உணர்ந்து மகிழ்ச்சி பிறந்தது.

"ஒருக்காப் பாத்துக்கொண்டு வந்தாத்தா னென்னப்பா.....?"

விசாலாட்சியில் கந்தையர் முன்புபோல் எரிந்து விழவில்லை. இந்த அறிகுறிகள் வேலுப்பிள்ளை மாஸ்டருக்கு எடுத்த காரியம் வெற்றி அளிக்கும் என்றே உணர்த்தின.

"சரி எதுக்கும் நாளைக்கு விடிய யோசிப்பம்." கந்தையர் பேச்சுக்களுக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

"இனியென்ன விடிய யோசிக்கிறது! யோசனை மாறக்கூடாது. இப்ப இருட்டி விட்டதால விடியக்கிளம்ப வேண்டியதுதான்." அழுத்திச் சொன்னார் மாஸ்டர்.

.......................................................

"இப்ப எப்புடி ஆக்களைக் கூட்டி வந்திருக்கிறனோ இல்லையோ....?"

மறுநாள் விடியலில் கந்தையர் தம்பதியை வெள்ளவத்தைக்குக் கூட்டி வந்திருந்த வேலுப்பிள்ளை மாஸ்டர் கணேசன் பாமா தம்பதியரிடம் தனது கெட்டித்தனத்தை நிரூபித்து நின்றார். அவருடைய பேச்சை ரசித்த இருவரும் கந்தையர் தம்பதியைப் பார்க்கையில் அவர்களும் இவர்களைப் பார்த்துச் சிரித்தனர். விசாலாட்சி குழந்தையைத் தூக்கி வைத்திருந்தாள்.

சின்னத்தங்கம் குசினியில் பம்மரமாகச் சுழன்று கொண்டு நின்றாள்.

கந்தையரின் கவனமெல்லாம் விசாலாட்சியின் கைகளில் இருக்கும் பேரனைப் பார்த்துப் பூரிப்பதில் இருந்தது. ராஜன் பாப்பாவைப் பார்ப்பதற்காக துள்ளிக்கொண்டே நின்றான்.

கணேசனும், பாமாவும் அங்கே நிகழ்ந்து கொண்டிருக்கும் குதூகலத்தில் திளைத்து போயினர்.

மனதினில் சிறுமையையோ, பெருமையையோ தேடிக் காண்பது எண்ணங்களிலும், இயல்புகளிலும் இருந்துதான்.

குதூகலத்தின் பிதாமகனார், வேலுப்பிள்ளை மாஸ்டர் அவ்வேளை இந்த வார்த்தைகளைச் சொல்லி வைத்தார்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சங்கா என்னும் சரித்திரம்

இலங்கை – இந்தியா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேச ஆட்டங்களுக்கு விடைகொடுத்தார் சங்கா. இலங்கைக் கிரிக்கெட்டின் வரலாற்றில் பல வீரர்கள் தமது திறமையை நிரூபித்து ஓய்வினை அறிவித்துள்ளனர். ஆனால் சங்காவின் ஓய்வு ஏற்படுத்திய தாக்கத்தினைப் போன்று வேறு எந்த வீரரதும் ஓய்வுச்செய்தி தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சங்காவுக்கு ஏன் இவ்வாறான ஒரு உயரிய கௌரவம் என்பதைப்பற்றி சிறிது அலசலாம்.








### தப்பிப் பிழைத்த பிராட்மன்

கிரிக்கெட்டின் பிதாமகன் என்று அழைக்கப்படும் ஆஸ்திரேலியாவின் பிராட்மன் டெஸ்ட் ஆட்டத்தில் 12 இரட்டைச்சதங்களை விளாசியிருந்தார். இந்த மைல்கல்லை நெருங்க முடியாது என்ற கருத்துக்கணிப்பே இவ்வளவு காலமாக இருந்து வருகிறது. சச்சின், பொண்டிங், லாறா போன்ற ஜாம்பவான்களே இந்த இலக்கை கிட்டவும் நெருக்கவில்லை. ஆனால் இந்த இலக்குக்கு மிக நெருக்கமாக வந்தார் சங்கா. 11 இரட்டைச்சதங்களை விளாசி 12ஆவது இரட்டைச்சதம் அடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டு இரட்டைச்சதப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

### உலகக்கிண்ண பிடியெடுப்பு

2007ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை ஆஸ்திரேலிய அணிகள் பலப்பரிட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்ற காரணமாக இருந்தவர் அப்போதைய ஆஸ்திரேலியாவின் இலக்குக் காப்பாளரும் அதிரடி வீரருமான கில்கிறிஸ்ட்தான். கில்கிறிஸ்டின் சதத்திலேயே இலங்கை சரணடைந்தது. ஆனால் கில்கிறிஸ்ட் பின்புறமாக தட்டிய பந்தை பாய்து பிடியெடுத்தார் சங்கா. பந்து மண்ணில் பட்டது சங்காவுக்கு மட்டுமே தெரியும். ஆனால் உண்மையை உடனடியாகத் தெரிவித்து கில்கிறிஸ்ட் தொடர்ந்து நிலைக்க காரணமானார். தொழில்நுட்பம் பெரும் வளர்ச்சியடையாத அந்தக்காலத்தில் சங்காவின் இடத்தில் வேறு எவரும் இருந்திருந்தால் இப்படிச் செய்வார்களா என்பது கேள்விக்குறியே.

### மஹெலயுடனான இணைப்பாட்டம்

கிரிக்கெட்டில் சங்கா சாதித்த மற்றொரு விடயம் மஹெலவின் நட்பு. சங்கா, மஹெல இருவரில் ஒருவர் மைதானத்தில் கண்ணுக்குத் தென்பட்டாலும் மிக விரைவாக அடுத்தவரைப் பார்துவிடலாம். ஒடைமாற்றும் அறை, மைதானம், இவை அனைத்தையும் தாண்டி மைதானத்துக்கு வெளியிலும் இருவரும் இணைபிரியா நண்பர்கள். இவர்களின் நட்புக்குசர்வதேச அளவில் மகுடம் பெற்றுக்கொடுத்திருக்கிறது இவர்களது உலக சாதனை இணைப்பாட்டம்.

### பாகிஸ்தானை மன்னித்தமை

பாகிஸ்தான் – இலங்கை அணிகளுக்கிடையிலான தொடருக்காக இலங்கையணி இறுதியாக பாகிஸ்தான் சென்ற வேளையில் இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் இலங்கை வீரர்கள் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. ஆனால் பாகிஸ்தானுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான இக்கட்டான நிலையில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு அந்த நாட்டின் அரசாங்கம் என்ன செய்துவிட முடியும் என்று கனவான் தன்மையுடன் தெரிவித்தார்.

### 4 தொடர் சதங்கள்

உலகக்கிண்ண ஆட்டத்தில் சதம் எடுப்பதை பாக்கியமாகக் கருதுவார்கள். இவ்வாறு ஒரு சதத்துக்காக தவமாய் தவமிருக்கும் பொழுது நடப்பு வருடத்தில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக நான்கு சதங்களை விளாசி உலக ரசிகர்களது புருவத்தை உயரச் செய்ததுடன் புதிய சாதனையையும் நிலைநாட்டினார்.

### நடுவர்களின் மரியாதை

ஒருவீரர் சர்வதேச ஆட்டங்களில் இருந்து விடைபெறும் வேளையில் களத்தடுப்பில் ஈடுபடும் வீரர்களே அவருக்காக இரு பக்கமும் அணிவகுத்து நின்று மரியாதை செலுத்துவார்கள். நடுவர்களும் வீரர்களுடன் வந்துநின்று மரியாதை செய்தமை உலக அரங்கில் இரண்டு தடவைகள்தான் நடைபெற்றுள்ளன. இவ்வாறான மரியாதையைப் பெற்ற முதல்நபர் சச்சின். இரண்டாமவர் சங்கா.

### தகுந்த நபருக்கு தகுதியான பதவி

சர்வதேச ஆட்டங்களில் இருந்து சங்கா விடைபெறும் நாளில் (கடந்த திங்கட் கிழமை) பெரும் எடுப்பில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி உட்பட பல பிரபலங்களும் கலந்துகொண்டனர். குறித்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி உரையாற்றும் பொழுது பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதுவராக சங்காவை வருமாறு கேட்டிருந்தார். வீரர் ஒருவர் ஓய்வுபெறும் வேளையில் அந்த நாட்டு அரசினால் இவ்வாறு உயர்பதவி வழங்கப்படுவது இதுவே முதல்முறை.

### இரண்டாவது இன்னிங்ஸ்

சங்கா தனது வாழ்க்கையில் முதலாவது இன்னிங்ஸையே முடித்துள்ளார் அவரது இரண்டாவது இன்னிங்ஸ் எனக்காகவும் எங்கள் குழந்தைகளுக்காகவும் அமையவேண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார் சங்காவின் மனைவி. இத்தகைய கருத்தையே சங்காவும் தெரிவித்துள்ளார். ஆனால் சங்கா இனிமேல் துடுப்பு மட்டையையே தொடமாட்டார் அவர் துடுப்பெடுத்தாடுவதை பார்க்க இயலாது என்று சங்காவின் ரசிகர்கள் கலங்கத் தேவையில்லை. இருக்கவே இருக்கிறது சர்ரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ ராதிகா

# குழந்தைகளை அடிக்காதீர்கள்!

கேட்கச் சகிக்காத ஓசையும், பார்க்கச் சகிக்காத காட்சியும் எது என்று யாராவது கேட்டால் இப்படிப் பதில் சொல்லலாம் – குழந்தையின் பிஞ்சு மேனியில் விழுகின்ற அடிச் சதமும், அதைத் தொடர்ந்து அந்தக் குழந்தை மலங்க மலங்க விழித்து அழத் தொடங்கும் காட்சியும் என்று.

பெற்றோர்களில் பலருடைய கோபதாபங்களுக்கும் வடிகால்களாக இருப்பவை குழந்தைகள்தான் என்றால், அது மிகைக் கூற்றாகாது.

சாப்பாடு சரியில்லாதது, எதிர்பாராத நேரத்தில் மின்சாரம் துண்டிக்கப்படுவது, பிடிக்க வேண்டிய பேருந்தையோ, தொடருந்தையோ தவற விடுவது, பிடித்த தொலைக்காட்சித் தொடரைப் பார்க்க முடியாமல்போவது போன்ற காரணங்கள் எதுவானாலும் சரி, திட்டுகளையும், அடிகளையும் வாங்குவது அவரவர் வீட்டுக் குழந்தைகள்தான் என்றாகி விட்டது.

ஒரு தனியார் மருத்துவமனையில் கண்ட காட்சி இது. குறும்புத்தனத்துடன் விளையாடிக் கொண்டிருந்த ஒரு மூன்று வயதுக் குழந்தை மருத்துவரின் அறைக்கு வெளியே விடப்பட்டிருந்த காலணிக்குள் தனது கால்களை ஆர்வத்துடன் நுழைத்துப் பார்த்தது. அடுத்த நொடி, குழந்தையின் முதுகில் அதன் தந்தை ஓர் அறை விட, வலி தாங்காமல் அந்தக் குழந்தை அழுது துடிக்க, சுற்றி இருந்த அனைவருக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது.

அடுத்தவர் காலணியை அணிந்து கொள்வது சரியில்லை என்று சொல்லிக் கொடுக்கக்கூடப் பொறுமையில்லாத தகப்பனின் ஆத்திரம் அந்தக் குழந்தையின் முதுகைப் பழுக்க வைத்து விட்டது.

மருத்துவமனைதான் என்றில்லை, பேருந்து, தொடருந்துப் பயணம், கோயில்களின் கூட்ட நெரிசல், கடைகள், உறவு வீட்டு நிகழ்வுகள் போன்ற பல சந்தர்ப்பங்களிலும் பெற்றோர்களின் மனக் குமுறல்களுக்கான வடிகால்களாக அமைபவர்கள் குழந்தைகள்தான்.

பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப படிக்கவேண்டும், நிறைய மதிப்பெண்கள் பெறவேண்டும், விளையாடாமல் இருக்கவேண்டும், சொல்லும் வேலைகளைச் செய்ய வேண்டும், இவற்றைச் செய்யத்தவறினால் அடி உதைகளை எதிர்கொள்ள வேண்டும் என்ற நிலையில் இன்றும் பல குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் இருக்கத்தான் செய்கின்றன.

பாடசாலைப் பரீட்சையில் மதிப்பெண் குறைந்தால் தேர்ச்சி அறிக்கை அட்டையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்லப் பயப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். அங்கு கிடைக்கப்போகும் அடி உதைகளை நினைத்தே அவர்கள் நடுங்குகிறார்கள். இப்படிப்பட்ட பெற்றோர்களுக்காகவே சில காலம் கடந்த சொலவடைகள் தங்கள் உயிரைத்தக்க வைத்துக் கொண்டு நடமாடுகின்றன. "அடியாத மாடு படியாது", "அடி உதவுவது போல் அண்ணன் தம்பிகூட உதவ மாட்டான்" என்பனவற்றைக் கூறியே குழந்தைகளின் மீதான பெற்றோரின் வன்முறைக்கு இங்கு நியாயம் கற்பிக்கப்படுகிறது.

மதிப்பெண் என்ற ஒற்றை மந்திரச் சொல்லை வெற்றி கொள்வதற்காக எமது கல்விச் சாலைகளில் வதைபடும் சிறுவர்களின் நிலை சொல்லி முடியாதது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவர்களை உடல் ரீதியாகத் தண்டிக்கக்கூடாது என்ற வழிகாட்டுதல்கள் பல இருந்தாலும், அவர்கள் தத்தமது ஆசிரியப் பெருமக்களால் தண்டிக்கப்படுவது பற்றிய செய்திகள் அவ்வப்போது வரத்தான் செய்கின்றன.

கல்விக் கட்டணத்தைச் செலுத்த இயலாத பெற்றோர்களுடைய இயலாமைக்கு அவர்களின் குழந்தைகளை உடல், மனரீதியாகத் தண்டிக்கும் தனியார் பள்ளி நிர்வாகங்கள் இன்றுவரை எந்தச் சட்ட, திட்டங்களுக்கும் அடங்குவதாகத் தெரியவில்லை.

அதிகச் செல்லம் கொடுப்பதால் பிடிவாத குணம், அடங்க மறுக்கும் தன்மை கொண்ட குழந்தைகள் ஒருபுறம் இருக்கத்தான் செய்கின்றன. அவர்களைச் சமாளிப்பது என்பது பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு பெரும் பிரச்சினைதான். அதுபோன்ற குழந்தைகளைக் காரணம் காட்டி, ஒட்டுமொத்தக் குழந்தைகளையும் அடித்தும், அடக்கியும்தான் வளர்க்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத வாதமாகும்.


செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான் என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும். பெற்றவர்களாயினும் சரி, ஆசிரியர்கள் உள்பட மற்றவர்களாயினும் சரி தத்தமது கோபதாபங்களைத் தங்களைவிட வலியவர்களிடம் காட்டமுடியாதபோது, தங்களை ஒருபோதும் எதிர்க்க முடியாத குழந்தைகளிடம் காட்டுவது எந்தவிதத்தில் சரியாக இருக்க முடியும்?

> "தங்களை எவர் அடித்தாலும் சிறிது நேரத்தில் அதை மறந்துவிட்டு, அடித்தவர்களிடமே மீண்டும் வந்து அவர்களைக் கட்டிக் கொண்டு சிரிக்கும் குழந்தைகளின் கள்ளம் கபடமற்ற முகங்களை ஒரு முறை நினைத்துப் பார்த்தால், மீண்டும் ஒருமுறை அவர்களை அடிக்கக் கை நீளுமா, மனம்தான் வருமா?

தங்களை எவர் அடித்தாலும் சிறிது நேரத்தில் அதை மறந்துவிட்டு, அடித்தவர்களிடமே மீண்டும் வந்து அவர்களைக் கட்டிக்கொண்டு சிரிக்கும் குழந்தைகளின் கள்ளம் கபடமற்ற முகங்களை ஒருமுறை நினைத்துப் பார்த்தால், மீண்டும் ஒருமுறை அவர்களை அடிக்கக் கை நீளுமா, மனம்தான் வருமா?

அது மட்டுமன்று, அடி உதைகளுக்குப் பழகிப் போகும் குழந்தைகளின் மனதில் நாளடைவில் பயம் விட்டுப் போகும். அடிதானே, வாங்கி விட்டுப் போவோம் என்ற மனோநிலைக்கு அவை வந்துவிடும் சாத்தியம் உண்டு. அவர்களே பிற்காலத்தில் வன்முறையாளர்களாக மாறுகின்ற அபாயத்துக்கும் சாத்தியம் இருக்கிறது.

நமது சமுதாயத்தில் ஏற்கெனவே வன்முறையில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை போதாதா, நாம் வேறு புதிய புதிய வன்முறையாளர்களை உற்பத்தி செய்வானேன்! எந்த நியாயமான காரணமானாலும் சரி, குழந்தைகளின் மேல் பெற்றோர்கள் வன்முறையைப் பயன்படுத்த வேண்டாம். எந்தப் பிரச்சினைக்கும் வன்முறை என்பது தீர்வாகாது. அதிலும், குழந்தைகளின் மீதான வன்முறை என்பது ஒரு தீர்வு அன்று, அதுவே ஒரு சமுதாயப் பிரச்சினையாகும்.



## அம்மா கண்ணகியே! கண் திற தாயே!

நந்திக்கடலுக்குச் சென்று
நண்டும், இறாலும் வாங்கி
தனியூற்றுச் சந்தையிலே
மீனும், தேனும், மரக்கறியும் வாங்கி
அருமையான சாப்பாடும், எருமைத் தயிரும்
நாம் சுவைத்துச் சாப்பிட்ட
அந்த நாள் ஞாபகம் – வந்து
என் கண்முன்னால் விரிகின்றது

முல்லைக் கடற்கரையில்
சிப்பி பொறுக்கி
சிறுநண்டைத் துரத்திச் சென்று
கடல்நீரில் [illegible]
உடுப்பெல்லாம் நனைந்து
நன்றாக அவஸ்தைப்பட்ட
அந்த நாள் ஞாபகம் – வந்து
என் கண்முன்னால் விரிகின்றது

வற்றாப்பளை அம்மன்
பொங்கல் கடைகளிலே
காரும், துவக்கும், றப்பர் கிளியும்
வாங்கித் தரச் சொல்லி
அம்மாவின் சிபார்சுடனே
அப்பாவை நச்சரித்த
அந்தநாள் ஞாபகம் – வந்து
என் கண்முன்னால் விரிகின்றது

வயல்வெளிக்குச் சென்று
வாலைக் கிளப்பியோடும்
பசுக்கன்றைத் துரத்திச் சென்று
அதைப்பிடிக்க முடியாமல்
களைத்துப்போய் வயல் வரம்பில்
உட்கார்ந்து கொண்ட
அந்தநாள் ஞாபகம் – வந்து
என் கண்முன்னால் விரிகின்றது

இன்றுவரை கேப்பாப்புலவில்
மீளக் குடியேற முடியவில்லை
அகதி நாமத்துடன் வற்றாப்பளையில்
வாழ்ந்து வருகின்றோம்
மண்ணின் மைந்தர்கள் நாம்
சொந்த மண்ணில் குடியேற
வற்றாப்பளைக் கண்ணகியே
வரம் தர வேண்டுமம்மா!

- கா.தவபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி அரசால் ஒருபோதும் கூட்டமைப்பின் பலம் மங்காது



சந்திரசேகர ஆசாத்

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 106 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 95 ஆசனங்களையும் வென்ற நிலையில் எந்த ஒரு கட்சியும் தனித்து அரசு அமைக்க முடியாத நிலை தோன்றியது. அந்த நிலையில் ஒரு தேசிய அரசு அமைக்கும் நோக்குடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. பத்து அம்சங்களைக் கொண்ட இந்த ஒப்பந்தம் இரண்டு வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும் எனவும் இரு தரப்பும் விரும்பினால் மேலும் அதை நீடிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் காலத்தின்போதே தாங்கள் ஒரு தேசிய அரசை அமைக்கப் போவதாகவும் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக்கிப் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கப் போகிறார் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் பிரதமராகும் கனவுடன் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றதும் புதிய ஆட்சியை தனியாக அமைக்கப் போவதாகக் கூறிவந்தனர். அவர்களின் கனவு நிறைவேற முடியாமலே கலைந்து விட்டது.

### விந்தை அரசியல்

இந்த நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் மகிந்த ராஜபக்ச கலந்து கொண்ட போதிலும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாகவோ எதிர்ப்பதாகவோ எந்தவிதக் கருத்தையும் வெளியிடவில்லை. இன்னும் அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் குள்ளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் கணிசமான செல்வாக்கைக் கொண்டுள்ளார் என்பது மறுக்க முடியாத விடயமாகும். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோதிலும் அந்தக் கட்சியிலுள்ள ஒரு சிலரும் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

குறிப்பாக மகிந்த ராஜபக்சவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச, தான் எதிர்க் கட்சியிலே செயற்படப்போகிறார் எனத் தெரிவித்துவிட்டார். மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இந்த உடன்படிக்கைக்குச் சம்மதிக்க ல்லை யெனத் தெரிவித்துள்ளார். தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, கூட்டணி அரசு அமைக்கப் பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராகி விடுவார் என்றும் அவர் வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிரான பரப்புரைகளைச் செய்து விடுவார் எனவும் கவலை தெரிவித்துள்ளார்.

இப்படியான அபிப்பிராயங்கள் வெளி வந்து கொண்டிருக்கும் நிலையில் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமாகிய மைத்திரிபால சிறிசேன விருப்பமானவர்கள் கூட்டணி அரசுடன் இணைந்து இயங்கலாமெனவும் விருப்பமற்றவர்கள் எதிர்க் கட்சியாக இயங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஒரே கட்சி ஒரே நேரத்தில் அரச கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் இயங்கக் கூடிய ஒரு விந்தையான அரசியல் இலங்கையில் அரங்கேறப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

இன்னொருபுறம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, திரிந்துவ யஹல உறுமயவின் தலைவர் உதயன்கம்மன்பில, ஜனநாயக சோசலிஸக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் ஆணைக்குத் துரோகம் செய்து விட்டதாகவும் தாங்கள் எதிர்க் கட்சியாகச் செயற்படப் போகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளனர். நாமல் ராஜபக்சவுடன் எத்தனை பேர் இவர்களுடன் இணையவுள்ளனர் என்ற விவரம் வெளிவரவில்லை. அதே வேளையில் மகிந்த ராஜபக்ச அமைச்சராகவோ எதிர்க் கட்சித் தலைவராகவோ செயற்படப் போவதில்லை எனவும் தான் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக மக்களுக்குப் பணியாற்றப் போகிறார் எனவும் தெரிவித்துள்ளார். அவர் எதிர்க் கட்சியில் இருந்தாலும்கூடக் கூட்டணி அரசில் அங்கம் பெறப்போகும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒரு பகுதியினரிடம் செல்வாக்குச் செலுத்துவார் என்பதை மறுத்துவிட முடியாது. ஆனால் அந்தச் செல்வாக்கில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும் வல்லமை திருமதி சந்திரிகா விஜய குமார ரணதுங்கவுக்கு உண்டு.

எப்படியும் எதிர்கால அரசியலில் ஒரு கயிறிழுத்தல் போட்டி இடம்பெறும் என்பதை எதிர்பார்க்கலாம்.

எப்படி இருந்தாலும் இலங்கையின் இரு பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த ஒரு கூட்டணி அரசை அமைத்து எதிர்வரும் இரு வருடங்களுக்கு ஆட்சியை நடத்தப் போவது என்பது உறுதியாகிவிட்டது.

### கூட்டமைப்பின் பலம்

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கில் 16 ஆச னங்களைப் பெற்று தமிழ் மக்களின் ஒரு வலிமையான சக்தியாக எழுச்சி பெற்றுள்ளது.

தேர்தல் இடம்பெறும்போதே ஐக்கிய தேசிய முன்னணிக்கு வலுவான ஓர் அரசை அமைப்பதற்கான பலம் கிடைக்காது எனவும், அந்தப் பலத்தை உருவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இப்படியான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேரம் பேசும் சக்தி அதிகரிக்கும் எனவும், இதன் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வுகளை நோக்கி நகரமுடியும் எனவும் நம்பப்பட்டது. ஆனால், இரு பெரும் கட்சிகளும் ஒரு தேசிய அரசை அமைக்கும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லாமற் போய்விடக் கூடும் எனச் சிலர் கருதக்கூடும்.

ரணில் விக்கிரமசிங்க ஒரு பழுத்த அரசியல்வாதி. தன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்காமலே தனது நோக்கங்களை நிறைவு செய்வதில் பல முனைகளிலும் வியூகங்களை வகுத்துச் செயற்படுபவர். கடந்த இடைக்கால அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அமைச்சரவையில் உறுப்பினராகி ஆட்சியில் பங்கு கொண்ட போதிலும் அவர்கள் மேற்கொண்ட இடையூறுகளையும் போட்ட முட்டுக் கட்டைகளையும் அவர் மறக்கமாட்டார். 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு மீண்டும் மீண்டும் திருத்தங்கள் கொண்டு வந்து இடையூறு மேற்கொண்டும் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியாது முட்டுக்கட்டை போட்டும் நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முயன்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அந்த ஆட்சிக்கு பலவிதமான தொல்லைகளைக் கொடுத் தனர். எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர், குறிப்பாக மகிந்த ஆதர வுக் கூட்டத்தினர் அரசில் ஆதிக்கம் வகிக்க ரணில் விக்கிரமசிங்கவோ மைத்திரிபால சிறிசேனவோ அனுமதிக்கப் போவதில்லை.

குறிப்பாக புதிய அரச மைப்பு உருவாக்கத்தின் போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ள மகிந்த ஆதரவுக் கோஷ்டியினர் பெரும் முட்டுக்கட்டை போடு வார்கள். அதிலும் இனப்பிரச்சினைத் தீர்வை முன்கொண்டு செல்லும் வகையிலான விதிகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவார்கள்.

> பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் காலத்தின்போதே தாங்கள் ஒரு தேசிய அரசை அமைக்கப் போவதாக வும் நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக்கிப் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கப் போகிறார் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் பிரதமராகும் கனவுடன் தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பும் தாங்கள் தேர்தலில் வெற்றிபெற் றதும் புதிய ஆட்சியை தனியாக அமைக்கப் போவதாகக் கூறிவந்தனர்.

இப்படியான நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியினர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள மைத்திரிபால ஆதரவாளர்கள் ஆகியோரால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுவிட முடியாது. எனவே அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை நாட வேண்டிய தேவை நிச்சயம் எழும்.

இந்த வாய்ப்பைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சரியான முறையிலும் தூர நோக்குடனும் பயன்படுத்த முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய இந்து நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் இனப்பிரச்சினைத் தீர்வில் தானும், ஜனாதிபதியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பங்காளிகளாகச் செயற்பட முடியும் எனவும் அதில் திருமதி சந்திரிகாவின் பங்கு முக்கியமானது எனவும் தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

எனவே கூட்டணி அரசு அமைக்கப் பட்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவம் குறைந்து விட்டது என்பது தவறான கணிப்பாகும். இது மேலும் வலுப்பெறும் என்பதுதான் உண்மை. எனினும் அது கத்தியில் நடப்பது போன்று கடினமானது.

தீவிர நிலைப்பாட்டுப் பக்கம் சறுக்கினாலோ அல்லது விட்டுக் கொடுப்புப் பக்கம் சறுக்கினாலோ பெரும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டி வரும். இந்த வாய்ப்பைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகவும் அவதானத்துடனும் விட்டுக் கொடுக்காமலும் கையாளும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



இனியவள்

# தாய் - மகள் உறவுகளின் நன்மைகள்

ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, ஒரு குழந்தைக்குப் பெற்றோர் என்பது வாழ்வில் மிகவும் அற்புதமானதொரு பயணமாகும். ஒரு பெண் எப்பொழுது முழுமையடைகிறாள் என்றால், அவள் தனது குழந்தைக்குத் தாயாகும்பொழுது தான். தாய்மை அடைதல் என்பது ஒரு பெண்ணுக்குள் உண்டாகும் அளவிட முடியாத ஆனந்த அனுபவ மாகும். பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், எவ்வித நெருடலுமின்றி வாரி அணைத்துக் கொள்ப வள்தான்தாய். அத்தகைய தாய் தனது தாய்மை உணர்வை வெளிப் படுத்தி, அல்லும் பகலும் வளர்ப்பாள். தன்னுடல் நோக தன்னை வருத்தி, கண் விழித்து, தன் சுகதுக்கம் பாராமல், தனது குழந்தையை வளர்த்தெடுக்கும் தாய்க்கு, பிறந்தது ஒரு பெண் குழந்தையாக இருந்தால், அக்குழந்தையால் அதிக நன்மைகள் கிடைக்கின்றன என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை யாகும். மகளைப் பெற்றுள்ள அன்னையா நீங்கள்? அப்படியென்றால், பெண் களுக்கான பொழுது போக்குகள் மற்றும் உணர்வுப் பரிமாற்றங் களுக்குவேறு ஒரு தோழியைத் தேட வேண்டிய அவசியமே கிடையாது. பெண் குழந்தை என்பது ஒரு தாய்க்குக் கூடுதல் சாதகமான விடயம். குழந்தையே அவ ளுக்கு ஒரு சிறந்த தோழியாக இருப்பாள். ஒரு தாய்க்கு ஆண் குழந்தையை விட பெண்குழந்தையிடம் தான், அதிக நெருக்கமாக மட்டும் இல்லாமல், ஒரு தோழியாகவும் இருக்க முடியும். இப் போது பெண் குழந்தையைப்பெற்ற ஒரு அன்னை யானவள் அடையும் நன் மைகளை இங்கே காணலாம்.

### தோழி

தொலைபேசியைத் தேடி எடுத்து தோழி யுடன் உரையாட வேண்டிய அவசிய மில்லை. மகளையே தோழியாக்கிக் கொண்டு, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். கணவரோ, மகனோ பெண்களின் பேச்சுக் கும் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்காமல் போகலாம். ஆனால் மகள் இருந்தாள் நிச்சயமாக உணர்வுகளை யும், பேச்சையும் காது கொடுத்துக் கேட்பாள்.

### ஓய்வு நேரம்

ஓய்வு நேரத்தை மிகவும் இனிமையாக செலவளிக்கலாம் என்பது ஒரு சாதகமான விடயம். ஓய்வு நேரத்தில் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதனைத் தயக்க மின்றி செய்யலாம். உதாரணமாக, இரு வரும் புதிய வகை உணவுகளைத் தயாரிக்க முய லலாம். அப்போது ஜோக்கடித்துக் கொண் டும், ஒருவரை ஒருவர் கிண்டல் செய்து கொண்டும் இருந்தால், நேரம் இனிமை யாகக் கழியும். மென்மையான நகைச் சுவைத் திரைப்படங்களையோ, நாடகங் களையோ மகளுடன் சேர்ந்து காணலாம்.

### ஆர்வங்கள்

தையல், சமையல், அலங்காரம் போன்ற வற்றில் ஆர்வம் இருந்தா ல், மகளுக்கும் ஆர்வம் இருக்கக் கூடும் அல்லது இவற் றைக் கற்றுக் கொடுக்கலாம். அப் பொழுது தான் இருவரும் அவற்றைப் பற்றி விவா தித்து கருத்துகளைப் பரி மாறிக் கொண்டு, இருவரும் சேர்ந்து செய்து மகிழ முடியும்.

### கருத்துப் பரிமாற்றம்

ஆடைகளிலும், அலங்காரப் பொருள் களிலும் நவீன பேஷன்கள் குறித்து விவாதித்துத் தெரிந்து கொள்ளலாம். புதிதாக வாங்கியுள்ள ஆடைகள் உங் களுக்கு எப்படி இருக்கின்றன, கச்சித மாகப் பொருந்துகின்றனவா என்பது குறித்த உண்மையான விமர்சனங் களை பெற்றுக்கொள்ளலாம். எந்த வகை ஆடைகள் உடலுக்கு நன்றாக இருக்கும் எவை நன்றாக இருக்காது என்பது போன்ற விடயங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

### அலங்கரிப்பு

வெளியிடங்களுக்கு செல்லும் போது, பெண் குழந்தைகள் இருந்தால், தனது அம்மா அழகாக இருக்க வேண்டுமென்று நினைப்பார்கள். மேலும் பல அலங் காரங்களையும் செய்து விடுவார்கள்.

# பெண்ணின் சிறப்பு

அரவணைப்பு என்பது வாழ்க்கைக்கு ஆதார மானது, ஆதரவளிப்பது. எல்லாவற்றையும் அரவணைத்து ஆலோசனை கூறி, வாழ் வதற்கும், வளர்வதற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் தயங்காமல் செய்யக் கூடியவள் பெண். இப்படிப் பிறருக்கு உதவி செய்து கொண்டு, அந்த உதவி செய்யும் குணத்தையே தான் வாழ்வதற்கும், பயன்படுத்திக் கொள்வதுதான் பெண்ணின் அடிப்படையான சிறப்பு குணம். உதவுவதன் மூலம் உயிர் வாழலாம் என்ற உண்மையை மனித வரலாற்றின் தொடக்க காலத்திலேயே பெண் அறிந்து வைத்திருந்தாள் உலகில் நிலைத்து வாழ்வதற்கு, தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என ஆணுக்கு வலியு றுத்தப்பட்டதை போலவே, பெண்ணுக்கும், உலகில் சுமூகமாக வாழ்வதற்கு இணக்கமாகவும், பிறருக்கு உதவும் நிலையிலும் இருக்க வேண்டும் என போதிக்கப்பட்டிருக்கிறது.


நல்ல பராமரிப்பாளனாக, நல்ல பாதுகாவலனாக, நல்ல தந்தையாக, நல்ல காதலனாக இருந்து மேற்கண்ட அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்த ஆண்தான் அவளுக்குத் தேவைப்பட்டான். இத்தகைய திறனுள்ள ஆடவனைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவளு டைய பாலுணர்வு மட்டுமின்றி, பராமரிக்கும் திறனும், பரிவும் மிகப் பெரிய ஆயுதங்களாக இருந்தன. பாலின் பத்தையும், பராமரிப்பையும் அந்த காலத்து பெண்கள் தான் தங்களுக்கு சாதகமான ஆயுதமாக பயன்படுத்தி னார்கள். திருமணத்துக்கு முன்பு வரை யாரென்றே தெரியாத ஒருவனுடன் திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும்போதே, புதிய சூழ்நிலையில், புதிய மனிதர்களோடு தான் இணைந்து போக வேண்டும் என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டுதான் தற்காலத்துப் பெண்ணும் செல்கிறாள்.

புதிய கணவனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் நிலையையும், கணவனின் கருத்துகளோடு ஒத்துப் போகும் பண்பையும் வளர்த்துக் கொள்கிறாள். தான் வேறு, தனது கணவன் வேறு என்ற எண்ணம் அகன்று, தனது; கணவனின் விருப்பமே தனது விருப்பம், அவன் நோக்கமே தனது நோக்கம், அவனது இலட்சியமே தனது லட்சியம் எனக் கருதி, அவனோடு தன்னை இரண்டற இணைத்துக் கொள்கிறாள்.

தனது கணவன் ஆறுதலாக, சுகமாக, மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரு சூழலை பெண் உருவாக்கி தனது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்கிறாள். இதன்மூலம் கணவன் தன்னை மீண்டும் மீண்டும் நாடி வரும் நிலையை உண்டாக்குகிறாள். தனது மென்மையான எண் ணங்களை வெளிப்படுத்த இயலாதவனாக ஆண் இருந்த போதிலும், குறிப்பால் அவனது எண்ணங்களை அறிந்து கொள்கிறாள். தன்னோடு இருப்பவர்களின் எண்ணங்களை யும் குறிப்பால் அறிய கற்றுக் கொள்கிறாள். பெண் எல்லாவற் றையும் காதலால் அளவீடு செய்பவள். இவர் நம்மை அதிகமாக நேசிக்கிறார் என நினைத்துக் கொள்வாள். அவளது விருப்பத்துக்கு மாறாக சிறிது நடந்து கொண் டாலும், நம் மீது இவருக்கு அன்பே இல்லை என முடிவு செய்வாள். ஏனென்றால் பெண் எல்லாவற்றையும் விட காதலுக்காகவே அதிகமாகக் கவலைப்படுகிறாள். ஆகவே, ஆண் எதைச் செய்தாலும் அதை அன்புடன், காதலுடன் செய்ய வேண்டும் என்று பெண் எதிர்பார்ப்பாள். வாழ்க் கையில் அரவணைப்புக்கு அடுத்து அவள் விரும்புவது காதலிப்பதையும், காதலிக்கப்படுவதை யும் தான் உடல் ரீதியாகத் தொடுவது, பற்றுவது, தழுவு வது, மனரீதியாக உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது, செயல்படுவது ஆகிய ஒவ்வொன்றையும் தனது தாயின் உணர்வின் மூலம் ஒவ்வொரு பெண்ணும் இயல்பாகப் பெறு கிறாள். ஆண் குழந்தை தனது தாயிடம் இருந்து விலகிச் செல் வதைப் போல், பெண் குழந்தை செல்வதில்லை. ஒவ்வொரு செயலையும் தாயிடம் இருந்து கற்றுக் கொள்கிறது. வாழ்நாள் முழுவதும் அவ ளது இந்த இயல்பு ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு அதிக பாதுகாப்பை அளிக்கிறது. காதலிக்கவும், காதலிக்கப்படவும் அவளுக்குச் சக்தியை அளிக்கிறது. பிறரை நேசிக்கவும், பராமரிக்கவும், பாதுகாக்கவும் திறனை அளிப்பதோடு, ஆண் மகனையும் அவள்பால் கவரச் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல்

## நடந்துள்ள சூழ்நிலை கண்காணிப்பாளர்கள் வெளியிட்ட கருத்துக்கள்

ரமயன

தேர்தல் பரப்புரைகளின்போது வேட்பாளர்கள் பரப்புரைகளுக்கென எவ்வளவு தொகை பணம் செல வழிக்கலாம், பணத்தை எந்தெந்த முறைகளில் பயன்படுத்தலாம் என்பவை குறித்த வரைமுறைகளை நிர்ணயிக்கக் கூடியதான தேர்தல் சட்ட விதிகள் இல்லாமை குறித்து பொதுத் தேர்தலின்போது கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த சர்வதேச மற்றும் உள்நாட்டுக் கண்காணிப்பாளர்கள் குறைகள் தெரிவித்துள்ளார்கள்.

கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த கண்காணிப்பாளர்கள் தமது பணிகளை கடந்த வாரம் முடித்துக்கொண்டபோது இந்தக் கருத்தை வெளியிட்டுள்ள அதேசமயம், இலங்கையில் உள்ள தேர்தல் சட்டமானது காலம் கடந்த ஒன்று. அது உடனடியாக சீரமைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்கள்.

அவர்கள் தெரிவித்துள்ள இன்னொரு முக்கிய விடயம் வாக்காளர்கள் வாக்களிக்கும் மையங்களுக்குச் செல்லாமல்விட்டாலும்கூட வாக்களிப்பதற்கான விதிமுறை இருக்க வேண்டும் என்பதாகும்.

இவ்வாறு தேர்தல் தொடர்பாகப் பல கருத்துக்களை வெளியிட்டுள்ள கண்காணிப்பாளர்கள் தேர்தல் தினத்தில் அமைதியான சூழ்நிலை நிலவியுள்ளமை குறித்துத் திருப்தி தெரிவித்த அதேநேரம், அவ்வாறான ஓர் அமைதி நிலவியமைக்கு காரணமாய் இருந்துள்ள தேர்தல் ஆணையாளர் மற்றும் பொலிஸ் தரப்பினர்களையும் பாராட்டத் தவறவில்லை.

வேட்பாளர்களின் பரப்புரை செலவுகள் விடயத்தில் வரைமுறையில்லாமையினால் பரப்புரைகளில் சமாந்தர நிலைமை காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள். சுதந்திரமான தேர்தல் ஆணையம் நிறுவப்படுவதன் அவசியத்தையும் பரப்புரை முறைகளில் கட்டுப்பாட்டுத் தன்மைகள் இருப்பதையும் வலியுறுத்தியுள்ளார்கள்.

பொதுநலவாய அவதானிகள் குழு, ஐரோப்பிய ஒன்றிய அவதானிகள் அமைப்பு போன்றவைகளைச் சேர்ந்த ஏறத்தாழ 180 சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேர்தல் அவதானிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்துள்ளார்கள். இவர்களில் பலரும் தேர்தல் வாக்களிப்புக்கு முன்னரே வந்துவிட்டமையால் பரப்புரைகள் நடைபெற்ற முறைகளையும் அவதானித்துள்ளார்கள். சுமார் 31,000 உள்ளூர் கண்காணிப்பாளர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுநலவாய அவதானிகள் குழுவின் தலைவராக வந்திருந்த டாக்டர் ஜோர்ஜ் அபேலா தேர்தலுக்கு பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கூறுகையில், தேர்தல் நடைபெற்ற சூழ்நிலையானது குறிப்பிட்டுக்கூறும் வகையில் அமைதியாகவும் சமாதானமான முறையிலும் இருந்தது எனச் சொன்னார். இது மிக அண்மித்த காலத்தில் நடந்த தேர்தல்களைவிட மேலானதாக இருந்ததை அவர் பாராட்டிக் கூறினார்.

தேர்தல் சட்டங்கள் மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டதால் பரப்புரை சூழ்நிலையானது மிக அமைதியாகக் காணப்பட்டதாக டாக்டர் அபேலா கூறினார். இருந்தபோதிலும் சில வன்செயல்கள் இடம்பெற்றமை, அரச வளங்கள் பயன்படுத்தப்பட்டமை, பரப்புரை அலுவலகங்கள் தாக்கப்பட்டமை, தேர்தல் தொடர்பான சில இறப்புக்கள் நிகழ்ந்துள்ளமை போன்ற சம்பவங்கள் குறித்து பொநலவாய கண்காணிப்புக் குழுவினர் கவலை தெரிக்காமல் இருக்கவில்லை.

### அலுவலர்களுக்கு பாராட்டு

வாக்களிப்பு நிலைய கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டிருந்தமையும் வாக்களிப்புக் கடமைகளுக்கென அலுவலர்கள் முன்கூட்டியே கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் பாராட்டுக்குரியது. தங்களை அது கவர்வதாய் இருந்தது என்றும் டாக்டர் அபேலா கூறினார். வாக்குகள் எண்ணுவதும் விருப்பு வாக்குகள் எண்ணுவதும் வெளிப்படையாக நடைபெற்றன. அந்த நேரங்களில் வாக்கு எண்ணும் அலுவலர்கள் புத்திசாதுரியமாகச் செயற்பட்டார்கள். வாக்குகள் எண்ணப்பட்டபோது தேர்தல் முகவர்களும் குடிமக்கள் கண்காணிப்பாளர்களும் பிரசன்னமாய் இருந்தமை அந்தப் பணியின் வெளிப்படைத் தன்மையை மேலும் அதிகரிப்பதாய் இருக்கிறது என்றார் டாக்டர் அபேலா.


ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர் குழுவுக்கு கிறிஸ்டியன் பிரேடா தலைமை வகித்தார். ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கும் அவர், தேர்தல்கள் சரியான முறையில் நடந்தது. சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு பெரும்பாலும் அமைதியாக நடந்து முடிந்தது – என்றார். ஆனால் இரு தரப்பினருமே தேர்தல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

### பரப்புரைகளுக்கான நிதி வரைமுறை

தாம் அவதானித்த முக்கிய விடயங்களில் ஒன்று, பரப்புரைக்கான நிதிச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள். சில வேட்பாளர்கள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை அடிக்கடி பயன்படுத்தியமையைக் காணமுடிந்தது. இந்த மாதிரி பரப்புரைகள் மிகவும் அதிக செலவை ஏற்படுத்துவதாகும். இது வேறு சில வேட்பாளர்களுக்குப் பின்னடைவை ஏற்படுத்துவதாக இருந்திருக்கும் என்று டாக்டர் அபேலா தெரிவித்தார். இந்தத் தேர்தலின்போது வேட்பாளர்களில் 10 வீதத்துக்குக் குறைவானவர்களே பெண்களாய் இருந்துள்ளனர். பெண்கள் தேசிய மட்டத்தில் அரசியலில் போதுமான அளவு பங்கு ஆற்றும் வகையில் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் இரு தரப்பினரும் வலியுறுத்தினார்கள்.

### உள்ளூர் கண்காணிப்பாளர்கள் வெளியிட்ட கருத்து

உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்களாகச் செயற்பட்ட சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான அமைப்பும் (CAFFE), சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் [illegible] (PAFFREL) தேர்தல் [illegible]ாரதூரமான வன்செயல்களோ, தேர்தல் சட்டமீறல்களோ இன்றி நடந்தி-




ருப்பதாக தெரியவந்துள்ளது என்று கருத்[து] வெளியிட்டுள்ளன. தேர்தல் சட்டத்தி[ல்] மாற்றங்கள் செய்யப்பட வேண்டு[ம்] என்பதையும் அவை வலியுறுத்தியுள்ள[ன]. பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணியாளர் ரோகன ஹெட்டிஆராச்சி கூறுகையில், வேட்பாளர்களின் பரப்புரை செ[ல]வினங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டு[ம்] – என்றார்.

உடல் நிலை மற்றும் பல்வேறு காரண[ங்]களால் வாக்களிப்பு மையங்களுக்[குச்] செல்லமுடியாமல் போகும் வாக்காளர்க[ள்] வாக்களிப்பதற்கான வழிமுறைகள் செ[ய்]யப்பட வேண்டும். அத்துடன் வேட்பாள[ர்]கள் போட்டியிடுவதற்கென செலுத்து[ம்] வைப்புப் பணம் அதிகரிக்கப்பட வேண்டு[ம்]. இது ஜனநாயகத்தை உறுதி செய்வதுட[ன்] வாக்குச் சீட்டின் நீளத்தைக் குறைப்[ப]தாகவும் இருக்கும் என்றார் அவர்.

தேர்தல் ஆணையாளரையும் பொலி[ஸ்] திணைக்களத்தையும் அமைதியான தே[ர்]தல் ஒன்றை நடத்தி முடித்ததற்காக க[ண்]காணிப்பாளர்கள் பாராட்டியுள்ளார்கள். தேர்தல் தினத்தன்று தேர்தல் முறைகே[டு]களிலும் வேறுவகைகளிலும் செயற்பட்[ட]தாய் இருந்த 35 பேரை பொலிஸார் கை[து] செய்திருந்தார்கள். ஒன்பது வாகனங்க[ள்] கையகப்படுத்தப்பட்டன. வாகன ஊர்[வ]லங்கள் நடத்த முயன்றவர்கள் தடுக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கைகளுக்[கு] உட்படுத்தப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடிவு

திருமதி இராஜினிதேவி சிவலிங்கம்

பிரபல வர்த்தகர் முருகானந்தத்தைத் தெரியாதவர்கள் யாழ். மாவட்டத்தில் எவரும் இருக்க முடியாது. நகரத்தின் மையத்தில் இருக்கும் பார்வதி ரெக்ஸ்ரைஸ்ஸ், பார்வதி உணவகம் என்பவற்றின் உரிமையாளர். திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது அழகிய பெரிய வீட்டில் இன்று ஒரே ஆரவாரம். வீடு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காரணம் இன்று அவர் புதிதாக ஆரம்பித்த 'றைஸ்மில்' திறப்பு விழாவையொட்டி தனது வீட்டில் விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

அவரது தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் அனைவரும் விருந்திலே கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்திருந்தார்.

சிறு வயதிலேயே தந்தையை இழந்த முருகானந்தம் தம் தாயார் பார்வதியின் அரவணைப்பிலே வளர்ந்தவர். தன்னை வளர்த்து உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த தாயார் பார்வதியின் பெயரிலேயே புடைவைக் கடை, உணவகம் இப்போது திறந்திருக்கும் றைஸ் மில் ஆகியவற்றை ஆரம்பித்திருந்தார்.

தன் மகன் மீது கொண்ட அளவற்ற பாசத்தால் முருகானந்தத்தை யாரும் நெருங்க விடாமல் வளர்த்த பார்வதி, அவரும் யார் மீது அன்பு செலுத்துவதையும் விரும்பவில்லை. மகனுக்குத் திருமணம் நடந்த பின்னரும் கூட பார்வதி யின் அதிகாரம் பன்மடங்குக் கூடியதென்றே கூறலாம்.

முருகானந்தத்தின் மனைவி சறோஜா ஏழை வீட்டுப் பெண். கணவன் பேச்சிற்கும், பார்வதியின் அதிகாரத்துக்கும் கட்டுப்பட்டு வாழ்ந்த வாயில்லா ஜீவன். திடீரென ஒரு நாள் வள விலே உள்ள மாமரத்தில் தூக்குப்போட்டு இறந்து விட்டாள் என்ற செய்தி வந்தபோது ஊரிலே பலரும் பலமாதிரிக் கதைத்தார்கள். சிலர் "பார்வதி ராட்சசி மருமகளைக் கொன்று விட்டு தூக்கிலே தொங்கவிட்டிருப்பாள்" என்றார்கள். வேறு சிலர் "முரு கானந்தம் முரடன் தாயின் பேச் சைக் கேட்டு சறோஜாவை அடித்திருப்பான் எங்கோ படாத இடத்தில் பட்டு அந்தப் பெண் செத்துப்போயிருக்கும். அதை மறைக்கத் தாயும் மகனும் மரத்தில் தூக்கியிருப்பினம்" என்றார்கள். இவ்வாறு பலரும் பலவிதமாகக் கதைத்தாலும் சறோஜா என்ற பெண்ணின் சாவு தற் கொலை என முடிவாயிற்று.

> மாநிறம். நீண்ட நாசி. அழகிய நீண்ட விழிகள். ஏழ்மையான வடிவம். வெளிறிய மங்கல் நிறஆடை. இவை அனைத்துக்கும் சொந்தக்காரியான அந்த இளம் பெண்ணைப் பார்த்துத் திகைத்தவர் இந்த அழகிய பெண் யாராக இருக்கக் கூடும் என்று சிந்திக்கத் தலைப் பட்டார்.

சறோஜாவின் சாவுக்குப் பின் முருகானந்தம் வேறு திருமணம் செய்யவில்லை. பார்வதியும் சறோஜா இறந்து ஓரிரு வருடங் களில் நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டாள். முருகானந்தம் தன்னந் தனியாக அந்தப் பெரிய வீட்டில் வாழ்ந்து வந்தார். வீட்டைக் கூட்டிப் பெருக்குவதற்கு முத்தம்மா என்னும் ஏழைக் கிழவியை ஒழுங்கு செய்தார் முருகானந்தத்தின் கணக்குப் பிள்ளை.

கணக்குப் பிள்ளை கருணாகரன் இரக்கமுடையவர். முருகானந்தத்தின் முரட்டுக் குணத்துக்கும் அவ ரின் தாயார் பார்வதியின் அரக்கத் தனத்துக்கும் உணர்ச்சி வசப்பட்டு கோபப்படாது முருகானந்தத்துக்குத் துணையாக இன்றுவரை நின்று பிடிப்பவர். சறோஜா இறந்த பின்னர் தாய் பார்வதியையும் பறிகொடுத்து நாற்பத்தைந்து வயதை எட்டியிருக்கும் முருகானந்தத்துக்கு எப்படியும் ஒருதிருமணத்தைச் செய்துவிட வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினார்.

முருகானந்தம் எவ்வளவு வசதி படைத் தவராக இருந்த போதிலும் அவரது குண இயல்பை அறிந்தவர்கள் அவருக் குப் பெண் கொடுக்க விரும்பவில்லை. ஏற்கனவே சறோஜாவை அவரே கொன்று விட்டார் என்ற பேச்சும் பரவலாக அடிபட்டதால் அவருக்கு யாரும் பெண் கொடுக்க முன்வரவில்லை.

தனக்கு யாரும் பெண் கொடுக்க தயங்குவதை அறிந்த முருகானந்தம் உலகிலுள்ள அனைத்துப் பெண்களையும் அழித்து விட வேண்டும் எனக் கறுவிக் கொண்டார்.

தன்னைத் திருமணம் செய்து கொள்ளவற்புறுத்திய கணக்குப் பிள்ளையை அழைத்து "ஐயா! நான் உடனடியாகத் திருமணம் செய்ய வேண்டும்.... எந்த ஏழை வீட்டுப் பெண்ணாயிலும் பரவாயில்லை நீங்கள் ஒழுங்கு செய்யுங்கள்" எனக் கூறினார்.

முருகானந்தம் தனக்குத் தகுதியான சம அந்தஸ்துடைய பெரிய குடும்பத்திலேயே பெண் எடுக்க விரும்புவார் என்று எண்ணிய கணக்குப்பிள்ளைக்கு அவர் இவ்வாறு கூறியதும் பெரும் நிம்மதியாக இருந்தது.

முருகானந்தத்தின் வசதியான வாழ்க்கைக்கு எந்த ஏழை வீட்டுப் பெற்றோரும் நான் நீ எனப் போட்டி போட்டுப் பெண் கொடுக்க முன்வருவர் என்பது கணக்குப் பிள்ளையின் மனக் கணக்கு.

இரண்டு நாள்களாக முருகானந்தத்தின் வீட்டைப் பெருக்க வரும் முத்தம்மா வரவில்லை. அவளது வீட் டுக்குச் சென்று ஏன் வர வில்லை என விசாரிப்பதற்காக அவள் வீட்டுக்குச் சென்றார் கருணாகரன்.

"முத்தம்மா .... முத்தம்மா...." என்ற அவரது குரலைக் கேட்ட … யிலிருந்து ஓர் … சுமார் பதினேழு அல்லது பதினெட்டு வயதுக்குள் இருக்கலாம். அழகே உருவான அந்த இளம் பெண்ணைக் கண்டதும் ஒரு கணம் திகைத்து விட்டார் கணக்குப்பிள்ளை.

மாநிறம். நீண்ட நாசி. அழகிய நீண்ட விழிகள். ஏழ்மையான வடிவம். வெளிறிய மங்கல் நிறஆடை. இவை அனைத்துக்கும் சொந்தக்காரியான அந்த இளம் பெண்ணைப் பார்த்துத் திகைத்தவர் இந்த அழகிய பெண் யாராக இருக்கக் கூடும் என்று சிந்திக்கத் தலைப்பட்டார். முத்தம்மாவுக்கும் இவளுக்கும் என்ன உறவு என எண்ணியவர் அவளையே உற்று நோக்கினார்.

"அவவுக்குக் காய்ச்சல். இரண்டு நாளா படுக்கையை விட்டு எழும்பேல்ல. இப்பதான் கண் விழிச்சவ. காய்ச்சல் இப்ப விட்டிருக்கு. நீங்கள் யாரெண்டு சொல்லிறது?" தனக்கு முன்னால் வந்து பணிவோடு கதைத்த அந்தப் பெண்ணைக் கனிவோடு பார்த்த கணக்குப்பிள்ளை, "முதலாளி வீட்டுக் கணக்குப்பிள்ளை வந்திருக்கிறார் எண்டு முத்தம்மாவுக்கு சொல்லம்மா...." என்றார்.

"முதலாளி வீட்டுக் கணக்குப்பிள்ளையாம். உங்களைப் பார்க்க வந்திருக்கிறார். வரட்டாம்." உள்ளே முத்தம்மாவிடம் அந்தப் பெண் கூறுவது கணக்குப் பிள்ளையின் காதுகளில் தெளிவாக விழுந்தது.

பரபரப்புடன் வெளியே வந்த முத்தம்மா, "வாருங்கோ ஐயா...! எனக்கு இரண்டு நாளா நல்ல காய்ச்சல். அதாலதான் வேலைக்கு வரமுடியேல்ல. இண்டைக்கு கொஞ்சம் காய்ச்சல் விட்டிருக்கு நாளைக்கு எப்பிடியும் நான் வேலைக்கு வருவன்." மூச்சு வாங்கக் கூறினாள். அவளுக்கு இருமலும் வந்துவிட்டது. கணக்குப் பிள்ளைக்கு அவளின் நிலைமைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"வான்மதி.... வான்மதி.... கதிரையைக் கொண்டு வந்து வெளியில போடம்மா" என்று வீட்டினுள்ளே பார்த்து முத்தமா கூவவும் உள்ளேயிருந்து அழகுப் பதுமையாய் கதிரையை வெளியே எடுத்து வந்து போட்ட வான்மதி, "இருங்கோ ஐயா!" என்றாள். உடனேயே வீட்டுக்குள் சென்றுவிட்டாள்.

கதிரையிலமர்ந்த கணக்குப் பிள்ளை முத்தம் மாவிடம் "யார் இந்தப் பெண்?" என்றார். "நான் இதுவரை பார்த்ததில்லையே, உன்ரை சொந்தக் காரர் யாராவதுவந்திருக்கினமோ...." எனக் கேட்டார்.

"ஐயா! இவள் என்ர மகன்ர மகள். இவளின்ர தகப்பனும்தாயும் முல்லைத் தீவில் ஷெல் பட்டு செத்துப் போய்ச்சினம். நல்ல வசதியாயிருந்ததுகள். வான்மதியும் அவளின்ர தம்பி குமாரும் படிச்சுக் கொண்டிருந்த பிள்ளையள். தாயும் தகப்பனும் செத்ததால அநாதையளாய் நிண்டது களை நான் கூட்டிக்கொண்டு வந்திட்டன். அதுகளை வளர்க்கக் கிழவி என்னால ஏலுமா ஐயா? அதுதான் ஐயா வீட்டில வேலைக்கு வாறனான்.

இப்ப இரண்டு நாளும் நான் வேலைக்கு வராததால வீட்டில் எல்லாரும் பட்டினி...." என்று நீட்டி முழக்கினாள்.

முத்தம்மாவின் பரிதாப நிலையைப் பார்த்தவர் ஒரு முடிவுக்கு வந்தவராக, "முத்தம்மா நான் ஒரு நல்ல விசயம் உன்னோடை கதைக்க வேணும். நீ இன்னும் எவ்வளவு நாள்களுக்கு உந்த இரண்டு பிள்ளையளையும் பார்ப்பாய்? உனக்கும் வயசாகிப் போச்சு. எங்கண்ட முதலாளிக்கு ஒரு கலியாணம் செய்ய நான் முயற்சி எடுக்கிறன். பேசாமல் உன்ர பேர்த்தி வான்மதியை அவருக்கு செய்தா உனக்கு நின்மதி. குமாரின்ர படிப்பையும் தொடரலாம் என்ன சொல்கிறாய்..." கணக்குப்பிள்ளை ஆர்வத்தோடு கேட்டார்.

முத்தம்மா சங்கடப்பட்டாள். ஒருபக்கம் முதலாளிக்கு நாற்பத்தைந்து வயதாகின்றது அவரது மகள் வயதை ஒத்த வான்மதியை எப்படி திருமணம் செய்து கொடுப்பது? என்கிற பச்சாதாபம். மறுபக்கம் பேர்த்தி வசதியாக வாழ இதைத் தவிர வேறு வழி என்கிற நப்பாசை ஒருபுறம். பரிதாபம் ஒரு புறம். கணக்குப்பிள்ளையிடம் "ஐயா! வான்மதியிடம் ஒரு வார்த்தை கேட்டிட்டு முடிவு சொல்லிறன்" என்றாள்.

( 20 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்

## facebook

## காதலை சொல்லவது எப்படி ..?



நான் இருக்கும் போது உங்க அப்பா ஏன் மாப்பிளை தேடனும்..

உங்க வீட்ல மாப்பிள்ள பாக்க ஆரம்பிச்சதும் என் போட்டோவ கொடுத்துறு இந்தா வச்சுக்க..

உங்கம்மா எனக்கு மாமியாரா வந்தா நான் சாமியாராப் போக மாட்டேன்..அவ்வ்

உங்கள பாத்தா என் 1st Wife மாதிரியே இருக்கு.பை தி வே எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல

உன் கையால அடிவாங்கனும்... வாழ்க்கை பூரா உன்கிட்ட அடிவாங்கனும்... அடிப்பியா?

உன் குடும்ப அட்டையில் என் பெயரையும் இணைத்துக் கொள்ள ஆசை

என் வாழ்க்கைய கெடுத்துக்க நான் முடிவு பண்ணிட்டேன்... ஐ. லவ் யூ

உங்க அம்மாவுக்கு நான் மருமகனா வரணும்? பொண்ணு நீயோ உன் தங்கட்சியோ அது தெரியாது..

உங்க கிட்ட புருஷன் வேலை காலி இருக்குன்னு சொன்னங்க. இந்தாங்க அப்ளிகேஷன்

நான் இத சொல்லியே ஆகனும்.. உந்தங்கச்சி அவ்ளோ அழகு

நீயில்லாமலும் நான் உன்னுடந்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன், விரும்பினால் நீயும் சேர்ந்து என்னுடனேயே வாழலாம்..

வார்த்தகளில் சொல்ல முடியாது என் காதலை, என்னோடு வா வாழ்ந்துகாட்டுகறேன்..

"நம்ம தலைவரை கட்சியை விட்டு நீக்கிட்டாங்களா... ஏன்?"
"தாதா சாகேப் பால்கே விருதுக்கு, அவருக்குத் தெரிந்த இரண்டு 'தாதா'க்கள் பெயரை பரிந்துரை செய்தாராம்!"



"எதிர்க்கட்சித் தலைவர் ரொம்பவும் ஆடம்பரப் பிரியராம்..."
"அதுக்கு..?"
"அவரோட உருவ பொம்மையை பெட்ரோலுக்கு பதிலா நெய் ஊற்றி எரிக்கச் சொன்னாராம்!"




"நம்ம கட்சியை உடைக்க சதி நடக்குதுன்னு எப்படிச் சொல்றே..?"
"எதிர்க்கட்சியிலிருந்து விலகி பத்து கார்ப்பெண்டர்கள் நம்ம கட்சியில சேர்ந்திருக்காங்களே..."

### தத்துவம் மச்சி தத்துவம்

**வானிலை ஆராய்ச்சி மையத்துல வேலை பார்க்கறவரா இருந்தாலும் கட்சி சின்னத்துக்குத்தான் ஓட்டு போட முடியும்; புயல் சின்னத்துக்கு ஓட்டு போட முடியாது!**

- டி.வி.யில் வானிலை அறிக்கை மட்டுமே பார்ப்போர் சங்கம்

## பியூட்டிஃபுல் மனைவி



**ஒரு** லேட் டைட்லே மனைவியோட மொபைல்ல "பீப்" சத்தம் கேக்குது.
கணவன் எழுந்து அந்த மொபைலைப் பாத்துட்டு கோபமா மனைவிகிட்ட "யார் இது.. இந்த நேரத்திலே உன்னை பியூட்டிஃபுல் ன்னு சொல்லுறது..."ன்னு கேக்கிறான்.
மனைவி "அட...! யாருடா அது...!! நம்மளையும் யாரோ அழகுன்னு சொல்றாங்களே..."ன்னு ரொம்ப ஆச்சரியமாய்(!!!) எந்திரிச்சு மொபைலைப் பாத்துட்டு... அவரைவிடக் கோபமாய்க் கத்தினாங்க..
"அட லூசுப் புருஷா... மொதல்ல உன் கண்ணாடியை எடுத்து மாட்டிட்டுப் பாரு... அது பியூட்டிஃபுல் (beautiful) இல்லே. பேட்டரிஃபுல் (battery full)"



**மிருதுளா**
சேனல் மாற்றி மாற்றி நியூஸ் பார்க்கும் ஜந்துக்கு ஆண் என்று பெயர்.

**கிலவர்**
எல்லோருக்கும் நல்லவர்களாகத் தன்னைக் காட்டிக் கொள்பவர்கள் நேரிடை நயவஞ்சகத் துரோகிகளை விடவும் மீகுந்த ஆபத்தானவர்கள் என்றே சொல்கிறான் புத்தன்!

**கரிகாலன்**
நிறைய நாள்கள் விடுமுறையில இருந்துட்டு வேலைக்கு வந்தது எப்பிடி இருக்குதுன்னா முதலாம் வகுப்பில சேர்த்திட்டு அம்மா போன பிறகு வருகிற அதே உணர்வு

**புதியவன்**
என்ன மாதிரி சாமி படம் போட்ட நோட்டு வாங்கு, அப்பதான் படிப்பு நல்லா வரும்னு சொன்னவன் இன்னிக்கு வெட்டியா சுத்திகிட்டு இருக்கான்.




**Sangeetha**
காவி உடுத்திட்டு, கமரா போனும், கேமியோ காரும் உங்களுக்கு எதுக்கு போய் புத்தர் செய்ததுபோல தியாகம் செய்யுங்கடா சொம்புகளா..







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் முகம் வெள்ளையாக...

பெண்களுக்கு வெள்ளையாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் அதிகம் இருக்கும். பெண்கள் தங்களின் சரும நிறத்தை அதிகரிப்பதற்கு கடைகளில் விற்கப்படும் கண்ட கண்ட கிறீம்களை வாங்கி அன்றாடம் பயன்படுத்துவார்கள்.

அப்படி பயன்படுத்துவதால், அது தற்காலிகமாக சருமத்தின் நிறத்தை அதிகரித்துக் காட்டலாம். ஆனால் சோப்புப் போட்டு முகத்தை கழுவி விட்டால், அது போய்விடும். இதனால் பல பெண்கள் தங்களின் சரும நிறத்தையும், அழகையும் அதிகரிக்க முடியாமல் தவிக்கின்றனர். பால் பவுடரில் எலுமிச்சை சாறு மற்றும் தேன் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து, பின்னர் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரிப்பதை உங்களால் உணர முடியும். ஓட்ஸை முதல் நாள் இரவிலேயே ஊற வைத்து, மறுநாள் காலையில் அதனை அரைத்து பேஸ்ட் செய்து, புளித்த தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்துக் கழுவ வேண்டும். இப் படி தொடர்ந்து செய்து வந்தால், நல்ல பலனை விரைவில் காணலாம். உருளைக்கிழங்கிலும் ப்ளீச்சிங் தன்மை அதிகம் உள்ளது. ஆகவே உருளைக் கிழங்கை பேஸ்ட் செய்து, அதனை தினமும் முகத்தில் தடவி நன்கு ஊற வைத்து கழுவினால், முகம் பொலிவோடு மின்னும். மஞ்சள் மற்றும் தக்காளி மஞ்சள் மற்றும் தக்காளிச் சாற்றினை ஒன்றாக கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மாஸ்க் போட்டு வந்தால், அது சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும். ; பாதாம் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி மசாஜ் செய்து நன்கு ஊற வைத்தால், முகத்தில் குருதி ஓட்டம் அதிகரித்து, முகம் பிரகாசமாக இருக்கும். கடலை மாவில் மோர் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகத் தில் தடவி உலர வைத்துக் கழுவ வேண்டும். இப்படி அன்றாடம் செய்து வந் தால், சருமத்தின் நிறம் அதிகரிக்கும். வாழைப்பழத்துக்கும் சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும் தன்மை உள்ளது. அதற்கு நன்கு கனிந்த வாழைப்பழத்தை மசித்து, அதில் தேன் மற்றும் 1 கரண்டி புளித்த தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி மாஸ்க் போட வேண்டும். எண்ணெய்ப் பசைச் சருமம் உள்ளவர்கள், சந்தனப் பொடியை நீரில் கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மாஸ்க் போட்டு வந்தால், சருமத்தின் நிறம் அதிகரிப்பதை நன்கு காணலாம். மேலும் இந்த மாஸ்க் முகத்தை புத்துணர்ச்சியுடன் வெளிக் காட்டும்.

# சுருட்டை முடி பராமரிப்பு எப்படி?

சுருட்டை முடி உடையவர்கள் சுந்தர அழகு மிக்க பாக்கியசாலிகள். அதை சிலர் இயற்கையாக பிறப்பிலேயே பெறுகின்றனர். இன்னும் சில சுருட்டை முடியை பெருவதற்கு அழகு நிலையம் சென்று, இதைப் போன்று தற்காலிகமாகவோ அல்லது நிரந்திரமாகவோ செய்து கொள்ளும் வசதி வந்துவிட்டது. இந்த முடியை கொண்டு நாம் எந்த வகை அலங்காரத்தையும் செய்ய முடியும். ஆனால் இத்தகைய தலை முடியை சீவுவது சிறிது கடினம் தான். அதுமட்டுமல்லாமல் அதைச் சுத்தமாகவும் சிக்கல் இல்லாமலும் பராமரிப்பது மேலும் கடினமான விடயமாகும். இத்தகைய முடியை உடைய பெண்கள், இதை எப்படி முறையாக பராமரிக்க முடியும் என்று தெரிந்து கொள்ள ஆசைபடுவீர்கள்.

கண்டிஷனர் படர்ந்து விரியும் கூந்தலை கட்டுப்படுத்துவது கடினம் தான். ஆகையால் கண்டிஷனரால் இதைச் சிறிதளாவு கட்டுப்படுத்த முடியும். குளித்த பின் இதைப் போட்டால் சிறந்ததாகும். கடைகளில் கிடைக்கும் கண்டிஷனர் அல்லது வீட்டில் உள்ள பொருள்களைக் கொண்டு இதைச் செய்யலாம். தேன், முட்டை, அப்பிள், சீடர் வினிகர் மற்றும் தேயிலை ஆகிய பொருள்களைக் கொண்டு இதனைச் செய்ய முடியும்.

சுருள் முடியைச் சீவுதல் : சுருட்டை முடியை கொண்ட நீங்கள் பெரிய பற்கள் உடைய சீப்பைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்தவும். இவை முடியின் சிக்கல்களை எளிதாக அகற்ற உதவும். முடி உடைவதையும் தடுக்கும். இதனால் முடி கூடிய வரை பாதுகாப்பாக இருக்கும்.



# முந்திரி பிஸ்தா ரோல்



## தேவையான பொருள்கள்

*முந்திரி – ஒரு கப்*
*பிஸ்தா – 3 தேக்கரண்டி*
*சர்க்கரை – முக்கால் கப்*
*பொடித்த சர்க்கரை – ஒன்றரைத் தேக்கரண்டி*
*ரோஸ் எசன்ஸ் – ஒரு தேக்கரண்டி*
*நெய் – ஒரு தேக்கரண்டி*
*ரோல்: தேவையான அளவு*

## செய்முறை:

ரோல் செய்ய தேவையானவற்றைத் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும். அதனை 100 டிகிரியில் முற்சூடு செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு தட்டில் முந்திரியைப் பரப்பினால் போல் போட்டு பத்து நிமிடம் அவனில் வைத்து எடுக்கவும். அதன் பின்னர் பிஸ்தாவையும் ஒரு தட்டில் வைத்து 2 நிமிடம் வைத்து எடுக்கவும். பின்னர் முந்திரி, பிஸ்தா இரண்டையும் எடுத்து ஆற வைக்கவும். ஆறியதும் எடுத்து



தனித்தனியே ஒரே சீராக நைசாக பொடித்து வைத்துக் கொள்ளவும். பிஸ்தா பொடியுடன் பொடித்த சர்க்கரையை கலந்து வைத்துக் கொள்ளவும். (விரும்பினால் பச்சைக் கலரை சேர்த்துக் கொள்ளலாம்.) சர்க்கரையை ஒரு பாத்திரத்தில் போட்டு நான்கு தேக்கரண்டி தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்துக் கரைய விடவும். கரைந்து ஒரு கம்பி பதம் வந்ததும் அடுப்பிலிருந்து இறக்கி வைத்துப் பொடித்த முந்திரியையும் எசன்ஸையும் சேர்த்து நன்கு ஒன்று சேர கட்டியில்லாமல் கிளறவும்.

ஆறியதும் வெதுவெதுப்பான நிலையில் கையில் நெய் தடவிக் கொண்டு அதைப் பிசையவும் (கெட்டியாக இருக்கும்).

பின்பு ஒரு பொலித்தீனில் நெய் தடவி விட்டு முந்திரிக் கலவையில் பாதியை எடுத்து அதில் தட்டவும். ஒரு ஓரத்தில் பிஸ்தா பொடியை வைக்கவும். பிஸ்தா பொடியை வைத்து, ரோலாகச் சுருட்டி ஒரு விரல் அளவுக்குத் துண்டுகள் போட்டு வைக்கவும். இதே போல் மீதி இருக்கும் கலவையிலும் செய்யவும். சுவையான ரிச்சான முந்திரி பிஸ்தா ரோல் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**30.08.2015 முதல் 05.09.2015 வரை**

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

குரு, சுக்கிரன், புதன், ராகு நற்பலன் தருவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்டபடி, புதிய மு ற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களிடம் ந் நந்த கருத்து வேறுபாடு மறையும். வீடு, வாகனத் ில் பராமரிப்புச் செலவு ஏற்படும். புத்திரர்களின் செயல்பா டு கண்டு பெருமை கொள் வீர்கள். மனைவியின் விரு பம் அறிந்து நிறைவேற்று வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப் டியாக உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலு கை கிடைக்கப் பெறுவர். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர் ள் படிப்பில் மட்டும் கவனம். முருகன் வ பாடு, செயலில் வெற்றியளிக்கும்.

### இடபம்

செவ்வாய், சுக்கிரன், சனி, கேது ஆகியோர் நன்மை தருவர். தடை நீங்கி முன்னேற்றம் வாழ்வில் உருவாகும். கடந்தகால உழைப்பின் பயனைத் தற்போது அனுபவிப்பீர்கள். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நண்பர்களுடன் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு. புத்திரருடன் கருத்து பேதம் ஏற்படலாம் கவனம். மனைவியின் ஆலோசனையை ஏற்பது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு பணி இலக்கை எட்டிப் பிடிப்பர். பெண்கள், தாய்வீட்டினரின் அன்பைப் பெறுவர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து முன்னேறுவர். லட்சுமி வழிபாட்டால், நன்மை ஏற்படும்.

### கடகம்

குரு, சுக்கிரன், ராகு ஆகியோரால் நன்மை கிடைக்கும். அனைவரிடமும் இனிமையுடன் பேசி மகிழ்வீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது நல்லது. தாயின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். புத்திரரின் செயல்பாட்டைத் தக்க அறிவுரை கூறி நல்வழிப்படுத்துவீர்கள். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். பெண்கள் ஆடம்பரத்தில் நாட்டம் கொள்வர்.

### மிதுனம்

சூரியன், சுக்கிரன், புதனால் நற்பலன் உண் ாகும். நீண்டநாள் எதிர்பா ர்ப்பும் கூட, அதிர்ஷ்டவசமாக நிறைவேறும். தாய்வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். புத்திரர், உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். மறைமுக எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகிச் செல்வர். மனைவியின் அன்பைக் கண்டு மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்களுக்கு சமூகத்தில் மரியாதை கூடும். மாணவர்கள் பெற்றோரின் மனம் மகிழும் விதத்தில் படிப்பர். விநாயகர் வழிபாடு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும்.

### சிங்கம்

சுக்கிரன், சனி இருவராலும் நன்மை அதிகரிக்கும். அன்பால் அனைவரையும் கவர்வீர்கள். வாழ்வில் முன்னேற்றத்துக்காகப் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தான, தர்மத்தில் மனம் ஈடுபடும். வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்வது நல்லது. புத்திரர்களின் செயல்பாடு கண்டு மனம் மகிழ்வீர்கள். மறைமுக எதிரிகளின் தொல்லை மறையும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து சிறப்பர். சிவன் வழிபாடு, முன்னேற்ற வாழ்வு தரும்.

### கன்னி

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருவார். உறவினர்களிடம் கருத்து வேறுபாடு மறைந்து நிம்மதி பிறக்கும். குடும்பத்தில், சுப விடயம் குறித்த பேச்சு அடிக்கடி நடந்தேறும். வாகனத்தில் மிதவேகத்தைக் கடைபிடிப்பது நல்லது. புத்திரரின் வளர்ச்சிக்குத் துணைபுரிவீர்கள். அலைச்சலால் சோர்வுக்கு ஆளாக நேரிடும். மனைவி ின் செயலைக் குறை சொல்வதைத் தவிர்க்கவு ம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் டைக்கும். பணியாளர் விண்ணப்பித்த கடனு வி பெ ுவதில் தாமதம் உண்டாகும். பெண்க ் உற ினர்களுடன் சுற்றுலா செல்வர். மா வர்க ் படிப்பில் சாதனை படைக்க முய வர். வைரவர் வழிபாடு, தொழிலில் வளர்ச்சி அளிக்கும்.

### துலாம்

குரு, சூரியன், சுக்கிரன், கேது அளப்பரிய நற்பலன் தருவர். எண்ணிய எண்ணம் எளிதில் நிறைவேறும். பணவரவும், புகழும் வந்து சேரும். இஷ்டதெய்வ அருள் பலம் துணை நிற்கும். அரசு சார்ந்த நன்மை பெறுவீர்கள். புத்திரரின் எதிர்கால நலனுக்காக முயற்சியில் ஈடுபடுவீர்கள். உடல்நிலை ஆரோக்கியமாக இருக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், ஆதாயமும் உண்டாகும். பணியாளர்கள், பணி விடயமாக அடிக்கடி வெளியூர் செல்ல நேரிடும். பெண்கள் அடிக்கடி விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர். மாரியம்மன் வழிபாடு, சுப பலன் அளிக்கும்.

### தனுசு

குரு, சுக்கிரன், புதன், சனி ஆகியோரால் நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் விரைவில், சுப நிகழ்ச்சி நடத்தும் சூழல் உருவாகும். பூர்வீகச் சொத்து மூலம், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகன பயணத்தின் மூலம், இனிய அனுபவம் காண்பீர்கள். புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். மனைவி வழி உறவினர்களுடன் இணக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக இலாபம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் நிம்மதியான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் கல்வியில் மேம்படுவர். இராமரை வழிபட்டால், நன்மை உண்டாகும்.

### விருச்சிகம்

சூரியன், புதன், ராகு மூவராலும் நன்மை மேலோங்கும். சிறு முயற்சியிலும் கூட நன்மை காண்பீர்கள். சுப விடயத்தில் நல்ல முடிவை எட்டுவீர்கள். குடும்பச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும். மற்றவர் குடும்ப விடயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் தேவை. புத்திரர்கள், உங்களின் சொல்லுக்கு மதிப்பு கொடுப்பர். எதிரிகள் பலமிழந்து போவர். மனைவியின் கவனக்குறைவால் சிரமத்துக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப் படுத்துவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் போட்டிகளில் பங்கேற்று வெற்றி காண்பர்.

### மகரம்

சுக்கிரன், கேதுவினால் நற்பலன் கிடைக்கும். வாக்கு ஸ்தானம் மற்றும் அதன் அதிபதி சனி பகவானை, செவ்வாய் பார்ப்பதால், நிதானமுடன் செயல்படுவது நல்லது. கடந்த கால நற்செயலுக்கு, உரிய பலன் தேடி வரும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது. புத்திரர் படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். எதிர்ப்பாளரின் கெடு செயல் பலமிழக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் குழந்தைகளின் வளர்ச்சி கண்டு மகிழ்வர். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபட வேண்டாம்.

### மீனம்

சூரியன், சந்திரன் இருவராலும் நற்பலன் பெறுவீர்கள். ஆர்வமுடன் புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உடல்நலனுக்காக மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம். குடும்பச் செலவுக்காக கடன் வாங்க நேரிடும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. மனைவியின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் அடுத்தவர் குடும்ப விடயத்தில் தலையிடுவதைத் தவிர்க்கவும். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர். சனீஸ்வரர் வழிபாடு, துன்பம் போக்கும்.

### கும்பம்

செவ்வாய், குரு, புதன் மூவராலும் தாராள நன்மை கிடைக்கும். பணிகளில் நேர்த்தி மிகுந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். வீட்டுத்தேவைகளை ஆடம்பர முறையில் நிறைவேற்றுவீர்கள். புத்திரர்களின் செயல்பாடு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைவதால், இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் புதிய தொழில் நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் [illegible] ...வர். காமதேனு வழிபாட்டால், செல்வ வளம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால்மீகி!



நீண்டுயர்ந்த பெருமரங்கள் சூழ்ந்திருந்த காடு அது. விலங்கினங்கள் மிகுந்த பாதுகாப்போடு வாழ்ந்து வரும் சூழ்நிலை அந்தக்காட்டில் நிலவிக் கொண்டிருந்தது. மிருகங்களை வேட்டையாடி ஜீவனம் நடத்தி வரும் வேடர்கள் பலரும் அந்தக் காட்டில் மிருகங்களைத் தேடி அலைந்து திரிந்து கொண்டிருந் தனர். அந்த வேடர் கூட்டத்தில் ஒருவனாக அலைந்து கொண்டிருந்தான் கௌசிகன் என்னும் பெயர் கொண்ட வேடன் ஒருவன். மிருகங்களை வேட்டையாடுவதோடு மட்டும் அவன் நின்று விடுவான். வேட்டையில் தனக் குத் தேவைப்பட்ட மிருகம் கிடைத்து விட்டால்போதும்,அத்துடன்திருப்தி அடைந்து வீட்டுக்குச் சென்றுவிடுவான். நாள்கள் சில சென்றன. வழக்கம்போல் வேட்டைக்குச் சென்ற கௌசிகனுக்கு அன்றைய தினம் வேட்டையில் எதுவும் கிட்டவில்லை. வெறுங் கையோடு வீடு திரும்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும் போல் தோன்றுகிறதே... என்று மனக் கவலை கொண்டான் கௌசிகன்.

ஏமாற்றம் அடைந்தவனாய், ஒரு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்தான். கண் பார்வையால் காட்டைச் சுற்றி நோட்டமிட்டான். பச்சைப் பசேல் என்று விளங்கிய மரங்களைத் தவிர அவன் கண்களுக்கு எதுவும் தென்படவில்லை!

சிறிது நேரம், அவ்வாறே அமர்ந்து தனது பார்வையைச் சுழல விட்டான்.அப்போது...! சற்று தொலைவில் மூன்று பேர் தலையில் மூடையைச் சுமந்த வண்ணம், அந்த வழியாக வந்து கொண்டிருப்பது அவனது கண்ணில் பட்டது. உடனே மரத்தை விட்டுக் கீழே இறங்கி, சற்றுத் தள்ளியிருந்த ஒரு புதரில் ஒளிந்துக் கொண்டான். டேய்! கௌசிகா! இன்று நீ வெறுங்கையோடுதான் திரும்பப் போகிறாய்! வந்து கொண்டிருக்கும் நபர்களின் தலையில் உள்ள மூடைகளைக் கைப்பற்றிக் கொள் என்று அவன் மனம் உறுத்தியது.

கௌசிகன் யோசிக்க ஆரம்பித்தான். வேட்டைத் தொழிலோடு, இந்தப் புதிய தொழிலையும் அதாவது வழிப் பறிக் கொள்ளையையும் மேற் கொண்டால் என்ன? என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தது. அவ்வளவு தான்...! புதரை விட்டு வெளியே வந்து மரத்தின் பின்புறம் ஒளிந்து கொண்டான். வழிப் போக்கர்களின் வருகையை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான். மூடையைச் சுமந்து வந்த வழிப் போக்கர்கள் அந்த மரத்தை நெருங்கினர்! நல்ல வேளை! ஆபத்தான இடத்தைத் தாண்டி விட்டோம். இனிப் பயம் ஏதுமில்லை! என்று வழிப் போக்தர்களில் ஒருவன் கூறினான். அப்போது, எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்? என்று ஒரு சத்தம் கேட்க, வழிப் போக்கர்கள் சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பிப் பார்த்தனர்! வேட்டைக்காரக் கௌசிகன் கொலை வெறியோடு அவர்கள் முன்னே நின்று கொண்டிருந் தான்! அவனது கையில் வில் லும், அம்பும் மற்றும் கொலைக் கருவி களும் இருந்தன. அவனது கருவிகளும் அவனது பார்வையும் வழிப் போக்கர்களை பயத்துக்கும், பீதிக்கும் ஆளாக்கின. அவர்களிடம் இருந்த மன உறுதி குலையத் தொடங்கியது. என்ன செய்வது என வழி தெரியாமல் விழி பிதுங்கி நின்றனர். ஆயுத பாணியான கௌசிகனை நிராயுத பாணிகளான வழிப் போக்கர்கள் எதிர் கொண்டு வெற்றி பெற முடியுமா என்ன? கௌசிகன், வழிப் போக்கர்களை மிரட்டிப் பயமுறுத்தி, அவர்களிடம் இருந்த மூடைகளை மிக எளிதில் கைப்பற்றிக் கொண்டான். பிறகு என்ன? மூடைகளுடன் வந்த வழிப் போக்கர்கள் வெறுங் கையோடு சென்று கொண்டிருந்தனர். கௌசிகனோ, வெறுங்கையோடு போக வேண்டியவன். கை நிறைய பொருள் களைச் சுமந்து சென்று கொண்டிருந்தான். அந்தச் சம்பவத்திலிருந்து, கௌசிகனுக்கு வேட்டையாடுவதில் மனம் செல்லவில்லை. மனிதர்களை மிரட்டிக் கொள்ளை அடிக்க ஆரம்பித்தான். அதற்காகக் கொலைகளையும் செய்யத் தொடங்கினான். இப்படியாக, கௌசிகனுடைய வாழ்க்கை காட்டில் தொடங்கி, வேட்டையாடுவதில் தொடர்ந்தது. பின்னர் வழிப்பறியும், கொள்ளை, கொலைகளும் அவனுக்குப் புதிய வாழ்க்கையாக மாறி விட்டன. மனிதப் பண்புகளுக்கு அப்பாற் பட்ட முறையில் கௌசிகன் இப்படி வாழ்க்கை நடத்திக்கொண்டு வந்த வேளையில்...! ஒரு நாள் நாரதர் காட்டில் அவனைச் சந்தித்தார்.

நாரதர் கௌசிகனைப் பார்த்து, மானிடப் பிறவியே! நீ ஆரம்பத்தில் மிருகங்களைக் கொன்று தீர்த்தாய்! இப்போது மனிதர்களின் பொருள்களைக் கொள்ளையடிப்பதோடு, அவர்களது உயிர்களையும் பறிக்கின்ற கொலைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டி ருக்கிறாய்! இப்படியே பாவ மூடைகளை அதிகரித்துக் கொண்டே போகிறாயே? ஏன் இவ்வாறு செய்கிறாய்? நீ செய்வதெல்லாம் தவறு என்று உன் மனதுக்குப்படவில் லையோ? என்று கேட்டார். என் மனைவி மக்களைக் காப்பாற்ற வேண்டாமா? அதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன் என்று கூறினான் கௌசிகன். அப்படியா? இறைவன் உன்னை இரு கரங்களுடன் படைத்துள்ளானே! அவற்றைக் கொண்டு நேர் வழியில் உழைக்க முடியாதா உன்னால்? வலுவான உனது கரங்களைக் கொண்டு மரம், மட்டை வெட்டி, அவற்றை விற்றுப் பிழைப்பு நடத்த முடியாதா உன்னால்? அதை விட்டு விட்டு உனது கரங்களால் மனிதர்களின் தலையை வெட்டியா, உனது தலையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்? இவ்வாறு கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார் நாரதர். ஆனால், கௌசிகனோ, எனது குடும்பத்தைக் காப்பாற்றவே நான் இவ்வாறு செய்கிறேன் என்று தனது பழைய பதிலையே திரும்பத் திரும்பச் சொன்னான். நாரதரும் கௌசிகனை விடுவதாக இல்லை. மீண்டும் நாரதர் அவனைப் பார்த்து, அப்படியா! நீ சொல்வது சரியென்றே வைத்துக் கொள்வோம். ஆனால், ஒன்று நீ செய்யும் இந்தப் பாவத்தில் உனது குடும்பத்தினரும் பங்கு பெறுகிறார்களா? என்று அவர் களிடம் கேட்டுப் பார் என்று கூறினார்.

நாரதரிடம் விடை பெற்றுச் சென்றான் கௌசிகன்!



தனது கணவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பது பற்றி கௌசிகனின் மனைவி கேட்டதுமில்லை அவன் சொன்னதுமில்லை. ஆனால், நாரதரிடம் விடை பெற்றுச் சென்ற கௌசிகன் தனது மனைவியிடம் ஆசையோடு, நான் செய்யும் தொழிலில் உனக்குப் பங்கு உண்டல்லவா? என்று கேட்டான்.

என்ன தொழில் என்று தெரிந்தால் அல்லவா, நான் உங்கள் கேள்வி களுக்குப் பதில் கூற முடியும்? என்று எதிர் கேள்வி கேட்டாள் கௌசிகனின் மனைவி. தான் செய்து கொண்டிருக்கும் தொழிலைப் பற்றி மிகவும் வெளிப்படையாக ஒளிவு மறைவின்றித் தனது மனைவியிடம் எடுத்துக் கூறினான் கௌசிகன். அவன் கூறி முடிப்பதற்குள், அவள் எரிமலை போல வெடித்தாள். கணவனை எரித்து விடுவது போலச் சீறினாள்!

எனக்கென்ன தலை எழுத்தா? உனது பாவம் உன்னோடு தான். உன்னுடைய இலாபத்திலும் எனக்குப் பங்கு வேண்டாம் உன்னுடைய பாவத்திலும் எனக்குப் பங்கு வேண்டாம்! நீ பாவம் செய் அல்லது எது வேண்டுமானாலும் செய். அது பற்றி எனக்கு கவலை இல்லை. நீ என்னைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறாய்.

அதனால், என்னைக் காப்பாற்ற வேண்டியது உன்னுடைய பொறுப்பு! பாவ மூடைகளைப் பங்கு போடும் எண்ணம் எனக்கு வேண்டாம். அந்தச் சுமையை நீயே தாங்கிக்கொள் அதன் விளை வுகளையும் நீயே ஏற்றுக்கொள் என்று ஆவேசமாகக் கூறினாள்.

தனது மனைவியின் ஆவேசக் குரலில் பொதிந்திருந்த கருத்துரைகள் கௌசிகனின் உள் மனதைத் தட்டி எழுப்பியது. அவனவன் சுமைகளை அவனவன் தான் சுமக்க வேண்டுமே தவிர, வேறு எவரும் சுமக்க மாட்டார்கள் என்பதை உணர்ந் தான் கௌசிகன். அந்த ஒரு நொடியில், ஏதோ ஒரு புள்ளியில் மன மாற்றம் அடைகிறான்.

அந்த நொடியில் அவனது வாழ்க்கை மாற்றத்துக்கு உள்ளாகி விடுகிறது. கௌசிகன் வால்மீகி முனிவராகிறார். பின்னர் அவரால் இராமாயணம் படைக்கப்பட்டது.



ந.யோகப்பிரியா,
தரம் - 5சி,
யா/சென் பெனடிற் றோ.க.த.க. வித்தி.



ஆர் நிருசாளினி,
தரம் 4 ஏ,
திருக்குடும்ப கன்னியர் மடம்.

## மீண்டும் வருவோம்



அன்புடைய ஆசிரியர்களுக்கும்
எனதருமை நண்பர்கட்கும்
கனிவுடனே வணக்கம் கூறி
கவிதை சொல்ல இங்கு வந்தேன்

புலமைப் பரீட்சையாம்
புலமைப் பரீட்சை
ஊரையெல்லாம் சேர்த்து
உருள வைக்கும் பரீட்சை

பரீட்சை மேல் பரீட்சை வைத்து
பரீட்சைக்காக ஆயத்தம் செய்தீர்
நாங்கள் ரெடி நாங்கள் ரெடி
நன்றி பல உங்களுக்கு

உண்ண நேரமில்லை
உறங்க முடியவில்லை
விளையாட அனுமதியில்லை
விரும்பிப் படிக்க ஆசையுமில்லை

மனனம் செய்த பாடல்களை - நாம்
மகிழ்ந்து பாட வேண்டுமே...
ஒப்புவித்த விளையாட்டுக்களை - நாம்
ஓடி விளையாட வேண்டுமே

எது எப்படியோ...
பத்து நாளும் இனி
பறந்து போகும்

ஒகஸ்ட் 23 வரும்
ஓராயிரம் கனவுகளுடன்

வருவோம் வருவோம் - மீண்டும்
வருவோம்
எமது கைகளில்
மிட்டாய்களுடன்

*தே.ஆனந்ராம்,*
*தரம் 5 ஏ, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடத்தின் மகத்துவம்!

ம.சுசித்ரா

“ஒரு நாள் மாலை, வீதியோரத்தில் நான்கு பேரைக் கண்டோம். அவர்களில் ஒரு பெண் மிகவும் மோசமான உடல் நிலையில் இருந்தார். அந்தப் பெண்ணை இல்லத்துக்கு பாதுகாப்பாக நான் அழைத்துச் செல்கிறேன், நீங்கள் மற்ற மூவரை கவனித்துக்கொள்ளுங்கள் என என்னுடன் வந்த கன்னியாஸ்திரீகளிடம் சொன்னேன். அந்தப் பெண்ணைப் பத்திரமாக அழைத்துச்சென்று படுக்கையில் கிடத்தினேன். அப்போது அவர் முகத்தில் அழகான புன்னகை மலர்ந்தது. என் கையைப் பிடித்துக்கொண்டு நன்றி எனும் ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிவிட்டு இறந்துபோனார். அந்தச் சம்பவம் என் ஆழ்மனதைக் கிளறியது. அவர் இடத்தில் நான் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன் எனக் கேட்டுப்பார்த்தேன். உடனடி பதில் கிடைத்தது. எனக்குப் பசிக்கிறது, நான் செத்துக்கொண்டிருக்கிறேன், குளிர்கிறது, வலிக்கிறது இப்படி ஏதாவதொன்றைச் சொல்லி என் பக்கம் கவனம் திருப்ப நிச்சயம் முயற்சித்திருப்பேன். ஆனால், அந்தப் பெண் எனக்கு அவருடைய அன்பைக் கொடுத்தார். முகத்தில் புன்னகையோடு இறப்பைத் தழுவினார். ஏழை மக்கள் மிகவும் உயர்ந்தவர்கள். அவர்களால் நமக்கு அழகான பல விடயங்களைச் சொல்லித்தர முடியும்.” – 1979 டிசம்பர் 10இல் நோபல் பரிசு வழங்கப்பட்ட போது அன்னை தெரசா ஆற்றிய உரை இது.

வாழ்வின் விளிம்பில் தத்தளித்தவர்களை, தொழு நோயாளிகளை, எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை, முன்னாள் பாலியல் தொழிலாளர்களை, அகதிகளை, மனநிலை பாதிக்கப்பட்டவர்களை, அநாதை மற்றும் பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளை, முதியோர்களை அரவணைத்தவர் அன்னை தெரசா.

### எங்கிருந்தோ வந்தார்

மாசிடோனியாவில் ஸ்காபியே என்னும் சிற்றூரில் (இன்றைய தலைநகரம்) 1910 ஆகஸ்ட் 26இல் பிறந்தார் ஆக்னஸ் கான்ஸா போஜாயூ (பின்னாளில் அன்னை தெரசா). அல்பேனியாவின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக இயங்கிய தந்தையைத் தன் எட்டு வயதில் இழந்தார். ஏழ்மையான சூழலில் பல சிக்கல்களுக்கு இடையில் மகளுக்குத் தொண்டாற்றும் உணர்வை ஊட்டி வளர்த்தார் அவருடைய தாய்.

கொன்வென்ட்டில் பள்ளிப் படிப்பு முடித்து 18 வயதை எட்டியபோது, கன்னியாஸ்திரீயாக முடிவெடுத்தார். 1928இல் அயர்லாந்து சென்று தேவாலயப் பணிகளில் ஈடுபட்டபோது, சகோதரி மேரி தெரசா எனும் பெயர் சூட்டப்பட்டார். அடுத்த ஆண்டு மேற்படிப்பு மற்றும் துறவறப் பயிற்சிக்காக டார்ஜிலிங் அனுப்பப்பட்டார். 1931இல் இந்தியாவின் கொல்கத்தா புனித மேரி உயர்நிலைப் பள்ளியின் பூகோளம் மற்றும் வரலாற்று ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பொருளாதாரத்தில் பின்தங்கிய வங்காளக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து வறுமையை ஒழித்துவிடலாம் என இளம் தெரசா அப்போது நம்பினார். அர்ப்பணிப்போடு தன் ஆசிரியர் பணியைத் தொடர்ந்து 1944இல் அப்பள்ளியின் முதல்வரானார்.

### நீ யார்?

சலனமற்ற நீரோடைபோல ஓடிக்கொண்டிருந்த வாழ்க்கையை 1946 செப்ரெம்பர் 10 புரட்டிப்போட்டது. கொல்கத்தாவில் ரயில் ஏறியவர் இமயமலை அடிவாரத்தில் பயணித்தபோது மனதுக்குள் ஒரு குரல் ஒலித்தது. கொன்வென்ட் பள்ளியில் நல்ல வசதியாக இருந்துகொண்டு பாடம் கற்பிக்கத்தான் மாசிடோனியாவிலிருந்து இந்தியா வந்தோமா எனும் கேள்வி மின்னல்போலப் பாய்ந்தது. நலிவடைந்த மக்களுக்குப் பணி செய்துகிடப்பதே தன் வாழ்க்கையின் அர்த்தம் எனத் தோன்றியது. பள்ளி நிர்வாகத்திடம் தன்னை விடுவிக்கும்படி கேட்டார்.

1948 ஓகஸ்ட் மாதம் கொன்வென்ட் கன்னியாஸ்திரீ உடை துறந்து வெள்ளை–நீலம் இழையோடும் சேலைதான் இனி தன் உடை எனத் தீர்மானித்து அணிந்தார். கொன்வென்ட்டை விட்டு வெளியேறி கொல்கத்தா வீதிகளில் செய்வதறியாது உலாவினார். 1942–43இல் வங்காளப் பஞ்சம் தாக்கிய மக்களின் வாழ்வாதாரமற்ற நிலையை நேரடியாகக் கண்டார். போதாதற்கு இந்தியா–பாகிஸ்தான் பிரிவினையால் வேர் இழந்த இலட்சக் கணக்கான மக்களின் துயர்மிகு வாழ்வும் அவரை உலுக்கியது. எங்கு பார்த்தாலும் நோய், ஆதரவற்ற நிலை, சாவு. அந்தத் தருணத்தில் தன் வாழ்வின் இலக்கு தெரசாவுக்குத் துல்லியமாகப் புரிந்தது. ஆறு மாதங்கள் அடிப்படை மருத்துவப் பயிற்சி பெற்ற பின்னர் கொல்கத்தா குடிசைப் பகுதிக்குள் நுழைந்தார். ஆனால், கையில் பணம் இல்லை. உதவ, இணைந்து களத்தில் இறங்கவும் எவரும் இல்லை. இருப்பினும் அவருடைய அளப்பரிய பங்களிப்பான தி மிஷனரிஸ் ஒஃப் சாரிட்டி அறக்கட்டளையை நிறுவத் தூண்டிய முக்கியச் சம்பவம் வேறு.



கொன்வென்ட்டில் பள்ளிப் படிப்பு முடித்து 18 வயதை எட்டியபோது, கன்னியாஸ்திரீயாக முடிவெடுத்தார். 1928இல் அயர்லாந்து சென்று தேவாலயப் பணிகளில் ஈடுபட்டபோது, சகோதரி மேரி தெரசா எனும் பெயர் சூட்டப்பட்டார். அடுத்த ஆண்டு மேற்படிப்பு மற்றும் துறவறப் பயிற்சிக்காக டார்ஜிலிங் அனுப்பப்பட்டார். 1931இல் இந்தியாவின் கொல்கத்தா புனித மேரி உயர்நிலைப் பள்ளியின் பூகோளம் மற்றும் வரலாற்று ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பொருளாதாரத்தில் பின்தங்கிய வங்காளக் குடும்பங்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்து வறுமையை ஒழித்துவிடலாம் என இளம் தெரசா அப்போது நம்பினார். அர்ப்பணிப்போடு தன் ஆசிரியர் பணியைத் தொடர்ந்து 1944இல் அப்பள்ளியின் முதல்வரானார்.

1948இல் ஒரு நாள், உயிரிழந்துகொண்டிருந்த ஒரு மனிதனைத் தெருவில் கண்டு உடனடியாக அவரைப் பொது மருத்துவமனைக்குக் கொண்டுசென்றார் தெரசா. ஆனால், அவர் இறக்கும் தறுவாயில் இருந்ததால், ஒரு படுக்கையை வீணாக்க விரும்பவில்லை என்ற பதிலோடு அனுமதி மறுக்கப்பட்டது. சினம் கொண்ட தெரசா மருத்துவமனை வாசலில் போராட்டத்தில் இறங்கினார். வேறு வழியின்றி மருத்துவமனை அவரை அனுமதித்தது. ஆனால், சில மணி நேரங்களில் அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, தனி ஓர் இடத்தை உருவாக்கி ஆதரவற்றவர்களுக்கு அடைக்கலமும் சாவின்பிடியில் இருப்பவர்களுக்குச். சிகிச்சையும் அளித்துக் கண்ணியமான இறப்பைப் பெற்றுத்தரவும் முடிவெடுத்தார் தெரசா என்கிறார் இந்தியாவின் முன்னாள் தலைமைத் தேர்தல் அதிகாரியும் அன்னை தெரசாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவருமான நவீன் பி.சாவ்லா.

பலரிடம் பிச்சை கேட்டு, ஒருவழியாக உள்ளூர் அரசிடம் ஒப்புதல் பெற்றுச் சொற்ப நன்கொடை திரட்டி திறந்தவெளிப் பள்ளி ஒன்றையும் ஆதரவற்றவர்களுக்குப் பாதுகாப்பு இல்லம் ஒன்றையும் கொல்கத்தாவில் நிறுவினார்.

### தாயன்றி வேறில்லை

1950இல் வத்திகனின் ஒப்புதல் பெற்று, புனிதமேரி பள்ளியின் முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என மொத்தம் 13 பேர் கொண்ட குழுவோடு தி மிஷனரிஸ் ஆஃப் சாரிட்டி நிறுவினார். 10ஆண்டுகளில் உலகம் முழுவதிலுமிருந்து பெருத்த ஆதரவும் நன்கொடையும் வந்து குவிந்தன. தன்னைத் தேடிவந்த பணத்தைக் கொண்டு தொழுநோயாளிகள் குடியிருப்பு, அநாதை இல்லம், பல நூறு அடிப்படை மருத்துவ உதவி மையங்களை நிறுவினார் தெரசா. முறைப்படுத்தப்பட்ட மருத்துவமனையை நிறுவினால், அங்கு தன்னார்வத்தில் தொண்டுபுரிய அனைவரிடமும் எதிர்பார்க்க முடியாது. சம்பளத்துக்குத் தாதிகள் நியமிக்கப்பட்டால் சிகிச்சைக்குச் செலவு அதிகமாகும். பின்பு தெரு வோரம் சிதறிக்கிடப்பவர்களை யார் பராமரிப்பது என்ற எண்ணத்தில்தான் அன்னை தெரசா அடிப்படை மருத்துவச் சேவை மையங்களை மட்டுமே உருவாக்கினார். இப்படி அயராது பாடுபட்டுத் தன் இறப்புக்கு முன்னர் 4,000 அறக்கட்டளைகளை 123 நாடுகளில் நிறுவினார். அதேபோல 13 பேருடன் தொடங்கப்பட்ட தொண்டு நிறுவனத்தில் இன்று 1 லட்சத்துக்கும் அதிகமான தன்னார்வ ஊழியர்கள் இடைவிடாது செயல்படுகிறார்கள்.

இன்றைக்கும் தெரசா மீது புழுதி வாரித் தூற்றுவோர் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதும், தெரசாவின் மறைவுக்குப் பின்னரும் அவர் உருவாக்கிய அமைப்புகள் என்னவெல்லாம் செய்துகொண்டிருக்கின்றன என்பதுமே அவர் மீதான விமர்சனங்களுக்குப் பதில். 20ஆம் நூற்றாண்டின் அற்புதமான மனிதரில் ஒருவர் அவர். விளிம்புநிலை மனிதர்களுக்கு இன்னும் பல நூற்றாண்டுகளுக்கான அன்பையும் சேவையையும் அதற்கான உந்துதலையும் அவருடைய பெயர் என்றும் கொடுத்துக்கொண்டேயிருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ஸுடோ ஸ்வாமி

“

இந்தமுறை வெளியாகியுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், நடை பெற்று முடிந்த தேர்தலில் தோல்விய டைந்த 11 பேர், தேசியப் பட்டியல் வசதியைப் பயன்படுத்தி நாடாளுமன்றில் இடம்பிடிக்கின்றனர். இதில் ஐ.ம.சு.மு.வி லிருந்து ஏழு பேரும் த.தே.கூ.விலிருந்து இருவரும் ஐ.தே.மு.விலிருந்தும் ஜே.வி. பி.யிலிருந்தும் தலா ஒருவருமாக மொத் தம் 11 பேர் நுழைவது ஆங்காங்கு எதிர்ப்பலைகளை தோற்றுவித்திருக்கிறது.



# மக்கள் ஆணையை மறுதலிக்கும் தேசியப் பட்டியல் தெரிவுகள்!

மக்கள் ஐக்கிய முன்னணி கட்சியின் பிரதித் தலைவரான சோமவீர சந்திரசிறி, கடந்த புதன்கிழமை அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றினை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 12 தேசியப் பட்டியல் நியமனங்களை உள்ளடக்கி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தும்படி கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மனுதாரரான சோமவீர சந்திரசிறியின் பெயர், தேர்தலுக்கு முன்பு வெளியிடப்பட்ட ஐ.ம.சு.முவின் தேசியப் பட்டியலில் காணப்பட்டபோதிலும், தேர்தலின் பின்னர் வெளியிடப்பட்ட குறித்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்படவில்லை. மாறாக, தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர்களின் பெயர்களும் வர்த்தமானி அறிவித்தலில் தேசியப் பட்டியல் நியமனங்களாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை எதிர்த்தே அவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினை குறைத்ததுபோல தேசியப் பட்டியல் மூலமான நாடாளுமன்ற நுழைவினையும் ஒழிக்கவேண்டும் அல்லது திருத்தவேண்டும் என்னும் கோரிக்கை அண்மைக் காலமாக வலுப்பெற்று வருகிறது. காரணம், எந்த நோக்கத்திற்காகத் தேசியப் பட்டியல் நுழைவு ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கத்திற்கான தடத்திலிருந்து அது மாறிப் பயணிக்கிறது அல்லது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கை நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 13 வீதமானோர் தேசியப் பட்டியல் மூலமான வாய்ப்புடனேயே நாடாளுமன்றத்தினுள் நுழைகின்றனர். எனினும் தேசிய பட்டியல் ஊடான நுழைவு சர்ச்சைக்குரிய வகையில் பயன்படுத்தப்படுவதை கருத்தில் கொண்டு, தேசியப் பட்டியல் முன்மொழிவுகளுக்கான வரையறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்னும் கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்தமுறை வெளியாகியுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், நடைபெற்று முடிந்த தேர்தலில் தோல்வியடைந்த 11 பேர், தேசியப் பட்டியல் வசதியைப் பயன்படுத்தி நாடாளுமன்றில் இடம்பிடிக்கின்றனர். இதில் ஐ.ம.சு.மு.விலிருந்து ஏழு பேரும் த.தே.கூ.விலிருந்து இருவரும் ஐ.தே.மு.விலிருந்தும் ஜே.வி.பி.யிலிருந்தும் தலா ஒருவருமாக மொத்தம் 11 பேர் நுழைவது ஆங்காங்கு எதிர்ப்பலைகளை தோற்றுவித்திருக்கிறது.

அரசமைப்பிற்கு இது முரணான ஒன்றாக இல்லாதபோதிலும் நாடாளுமன்றிற்கான கொல்லைப்புறக் கதவாகத் தேசியப் பட்டியல் முறைமை அமைந்து விடுவதாகக் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

நிறைவேற்று அதிகார முறைமையினை அறிமுகப்படுத்திய ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினாலேதான் இந்த தேசிய பட்டியல் வழி நாடாளுமன்ற உறுப்பினர் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுத்தேர்தலில் கட்சிகள் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்பவே தேசியப் பட்டியல் ஒதுக்கமான 29 ஆசனங்களும் கட்சிகளிடையே பகிரப்படுகின்றன. படித்தவர்கள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோரை நாட்டின் உயர்பீடத்திற்குள் ஈர்ப்பதற்காகவே இந்த முறைமை நடைமுறைக்கிடப்பட்டது. ஆனால் அந்த நோக்கத்தினை கேலிக்குள்ளாக்கும் வகையில் அண்மைக்கால மற்றும் தற் போதைய நியமனங்கள் அமைந்திருப் பது பலரிடமும் விசனத்தைத் தோற்று வித்திருக்கிறது.

அத்தகைய தேசியப் பட்டியல் முறைமையைப் பயன்படுத்தி நாடாளுமன்றிற்கு வந்து நாட்டுக்கு அளப்பரிய பணியாற்றியவர்கள், தேசியப் பட்டியலுக்கு ஊடாக நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்துப் பின், தொடர்ந்துவந்த தேர்தல்களில் போட்டியிட்டு மக்கள்ஆணையை பெற்றுக்கொண்டவர்கள் என்றெல்லாம் சில நல்ல சம்பவங்களும் தேசியப் பட்டியல் நியமனங்களுக்கு பின்னால் உண்டு.

தேசிய பட்டியல் பிரதிநிதித்துவ முறைமை தோல்வியடைந்தவர்களுக்காக உருவாக்கப்படவில்லை. அது புத்திஜீவிகளுக்காகவும் கல்விமான்களுக்காகவும் உருவாக்கப்பட்டது. அதனால் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களைத் தேசியப் பட்டியலூடாக உள்ளீர்க்கும் நடவடிக்கையை தாம் வன்மையாக கண்டிப்பதாக சமூக நீதிக்கான இயக் கத்தின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

தோல்வியுற்ற வேட்பாளர்களைத் தேசியப் பட்டியலுக்குப் பட்டியலிடுவது தேர்தல் சட்டங்களுக்கு அமைவான போதிலும் நெறிதவறிய நடைமுறை என்கிறார் கபே இயக்க அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன்.

மக்களின் ஆணையைப் புறந்தள்ளி உறுப்பினர்கள் [illegible] தெரிவித்திருக்கும் [illegible] அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, தேசியப் பட்டியல் நியமனங்களுக்கான தகைமைகளை வரையறுக்கவேண்டிய காலம் கனிந்திருக்கின்றது என்று கூறுகிறார்.

மட்டக்களப்பில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய ஹிஸ்புல்லாவிற்கு தேசியப் பட்டியல் நியமனம் கிடைத்ததைத் தொடர்ந்து நடந்தேறிய வன்முறைச் சம்பவங்களில் கர்ப்பிணிப் பெண்ணொருவர் தாக்கப்பட்டது உட்பட உடைமைகளுக்கு சேதாரம் விளைவிக்கும் அட்டகாசங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

நாளைமறுதினம் கூடவிருக்கும் நாடாளுமன்றிற்கு சர்ச்சையை தோற்றுவித்தபடி செல்லும் தோல்விகண்ட உறுப்பினர்கள் இவர்கள்தான்.

ஐ.ம.சு.மு: எஸ்.பி. திசாநாயக்கா (கண்டி), மஹிந்த சமரசிங்க (களுத்துறை), விஜித் விஜயமுனி சொய்ஸா (மொனராகல), திலங்க சுமதிபால (கொழும்பு), லக்ஸ்மன் யாப்பா அபேவரத்தன (மாத்தறை), எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் (மட்டக்களப்பு), அங்கஜன் இராமநாதன் (யாழ்ப்பாணம்)

ஐ.தே.க: எம்.எச்.எம். நவவி (புத்தளம்) முன்னாள் அமைச்சர் ரிஷாத்தின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னொடிய [illegible]

ம.வி.மு: அனில் ஹந்துன்னெத்தி (மாத்தறை)

த.தே.கூ: சாந்தி சிறிஸ்கந்தராசா (வன்னி) துரைரட்ணசிங்கம் (திருகோணமலை)

புதிய நாடாளுமன்றத்திற்கான சபாநாயகராக அமைவார் என்று எதிர்பார்க்கப்படும் கரு ஜெயசூரியவே அடுத்த நாடாளுமன்றத்திற்கான முதல் உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்வாரென நம்பப்படுகிறது. ஆனால், கருஜெயசூரிய வாக்குகளால் அன்றி தேசியப் பட்டியல் மூலமாகவே இந்த முறை நாடாளுமன்றம் நுழைகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருத்தம் தேவை!**

தேசியப் பட்டியல் முறைமை எதற்காக அறிமுகம் செய்யப்பட்டதோ அதனை அடைவதற்கு தற்போதுள்ள அரசமைப்பின் 99ஏ பிரிவு திருத்தப்படவேண்டும். ஏனெனில், தேர்தலுக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்பட்ட தேசியப் பட்டியல் முன்மொழிவுகளுடன் எந்தவொரு தேர்தல் மாவட்டம் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுவிலிருந்தும் தேசியப் பட்டியலுக்கான நபர்களைப் பெயரிட முடியும் என்றே அந்தப் பிரிவு குறிப்பிடுகிறது.

தேசியப் பட்டியல் தெரிவுகளை ஒழுங்கமைப்பதற்கு அரசமைப்புத் திருத்தம் மாத்திரமன்றி சில சமூகநல அமைப்புக்கள் கோருவதுபோல சிலவகை அடிப்படைகளை வரையறுத்துக்கொள்வதும் காலத்தின் தேவையாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# வித்தியாசமான வர்த்தக சினிமா

அண்ணன் ஜெயம் ராஜா* (இப்போது மோகன் ராஜா) இயக்கத்தில் மீண்டும் இணைந்திருக்கிறார் ஜெயம் ரவி. ஆனால், இது வேற மாதிரி. தொடர்ந்து ரீமேக் படங்களாகவே அளித்து வந்த இந்த சகோதரக் கூட்டணி இப்போது முதல் முறையாக அசல் சினிமாவில் கரம் கோத்துள்ளது. கடல் படத்துக்குப் பிறகான அரவிந்த்சாமியின் மறுவருகையும் எதிர் பார்ப்பை சற்றே எகிறவைத்தது.

ஆனால், நம் எதிர்பார்ப்பையும் தாண்டி, நமக்கு சிறப்பு விருந்து அளிக்கும் 'தனி ஒருவன்', தமிழ் சினிமாவில் தனது அழுத்தமான கால்களைப் பதித்துள்ளான்.

தன் தந்தைக்காக கொலைப்பழி ஏற்கும் சிறுவனாக அரவிந்த்சாமிக்கு பின் கதையில் அறிமுகம். சிறார் சீர்திருத்தப் பள்ளியில் இருந்து திரும்பும் அவர், கடலைக் கடந்து அதிரடி கெட்டப்பில் வருகிறார். இம்முறை எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்துவிடுகிறார்.

பேராண்மையில் போராடிய ஜெயம் ரவிக்கு மீண்டும் செம தீனி கிடைத்துள்ளது. பொலிஸ் அதிகாரியாக அவர் மக்களுக்காகத் தனி ஒருவனாகவே சாகசங்கள் நிகழ்த்துகிறார். கதைப்படி தீய சக்திகளுக்கு எதிராக மட்டுமல்ல, படத்தையும் ரசிகர்களிடம் விறுவிறுப்பு குறையாமல் கொண்டுவந்து சேர்த்துவிட்டதில் ரவிக்கு ஜெயம்!

அரவிந்த்சாமியின் அத்தனை வியூகங்களையும் முறியடித்து நம் எதிர் பார்ப்புகளை நிறைவேற்றுபவர்தான் அதிரடி நாயகன் ஜெயம் ரவி. ஆனால், படம் முழுக்கவே நம்மை ஆக்கிரமிப்பது அரவிந்த் சுவாமியே!

இடைவேளைக்கு சிறிது நேரத்துக்கு முன்பான அரவிந்த்சாமியின் நுழைவு, கடைசி காட்சி வரைக்கும் அந்தப் பாத்திரத்துக்கு நீதி செய்துள்ளது. தமிழ் சினிமாவில் சமீபகாலத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒப்பிடத் தகுந்த உறுதியான வில்லன் சித்திரிப்பையும் கனக்கச்சிதமான வெளிப்பாட்டையும் பார்க்கவில்லை என்ற குறையைத் தீர்த்திருக்கிறது படம்.

நயன்தாரா வெறும் தமிழ் சினிமாவுக்கு ஊறுகாய் ஹீரோயினாக இல்லை என்பதை இப்படத்தில் மீண்டும் நிரூபித்து விட்டார்.

வசன உச்சரிப்பிலும், உடல் மொழியிலும் தன் சகல பிரதாபங்களையும் முன் வைக்கும் தம்பி ராமையாவின் நகைச் சுவை படத்தின் தடத்தை உறுத்தாத வண்ணம் நம்மை ஈர்க்கிறது. மற்றபடி நாசர், ஜெயம் ரவி நண்பர்களாக வரும் நான்கு பேர், வில்லனாக வரும் அரவிந்த சாமி என்று எல்லோருமே சரியாகப் பொருந்துகிறார்கள்.

நல்ல தொழில்நுட்ப ரீதியான ராம்ஜியின் ஒளிப்பதிவு, ஹிப் ஹாப் ஆதியின் பின்னணி இசை, கோபி கிருஷ்ணா எடிட்டிங் அனைத்துமே படத்தின் வேகத்தோடு பாய்ந்து வருகிறது.

ஓர் அதிரடி திகில் படம் என்றால் கண்டிப்பாக சலிப்பூட்டாத பாய்ச்சல் இருக்க வேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு சின்ன விஷயத்தையும் வைத்து படத்தில் அங்கங்கே திரைக்கதையில் இயக்குநரின் விளையாட்டு பளிச்.

தனி ஒருவன் அப்படி வேகமான படம் என்று இல்லாமல், படத்தில் நிறைய இடங்களில் இயக்குநர் தன்னோட புத்திசாலித்தனத்தையும் காண்பித்துள்ளார். அதற்காக படம் ஒரேயடியாகத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடக்கூடிய ஒன்று என்று சொல்லிவிட முடியாது.

படத்தில் சின்னச் சின்ன சறுக்கல்கள், முதல்பாதியில் அவ்வப்போது ஜெயம் ரவி கருத்து கந்தசாமியாக மாறிவிடுவது, அந்த ஒரே ஒரு பாடலகூட படத்தின் வேகத்தை குறைப்பது என்று தமிழ் சினிமாவின் இலக்கணங்களில் இருந்து இந்தப் படமும் முற்றாக விலகிவிட்ட ஒன்றல்ல. ஆனால் வித்தியாசமான கொடுக்கும் காசுக்குக் கொஞ்சம் நீதி செய்யக்கூடிய வர்த்தகத் திரைப் படம். வெளிவரும் பல படங்கள் கொடுக்கும் காசுக்கு நீதி செய்யாததை ஒப்பிடுகையில் இந்தப் படத்தைத் திரையரங்கில் சென்று பார்க்கலாம்.

ஜெயம் ராஜா எனும் இயக்குநர் எம்.ராஜா, கடந்த 4 வருடங்களாக இந்தத் திரைக் கதையைத்தான் எழுதிக்கொண்டிருந்தாரா? இவ்வளவு திறமையான திரைக்கதை ஆசிரியர் எதற்கு இவ்வளவு நாள் இந்த மாதிரி ஒரு சொந்தக் கதையை எடுக்காமல், மொழிமாற்றுப் படமாகவே இயக்கிக் கொண்டிருந்தார் என்று நிறைய கேள்விகள் எழுவதை தவிர்க்கமுடியவில்லை.

# தேசியக் கூட்டமைப்பும் தேசியப்பட்டியலும்

இலங்கையிலும் முன்னர் தொகுதிவாரியான சிக்கலற்ற தேர்தல் மூலமே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். முதுபெரும் ராஜதந்திரியும் முன்னாள் ஜனாதிபதியுமான ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சியில், 1978ஆம் ஆண்டு அரசமைப்புக் கொண்டு வரப்பட்ட போது தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, விருப்பு வாக்குமுறை என்பன புகுத்தப்பட்டன. இன்றுவரை தொடர்கின்றன. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் ஓர் அம்சமாகத் தேசியப் பட்டியல் மூலமும் 29 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கொள்கைகளின் அடிப்படையில் கட்சிகளுக்கிடையே கருத்துமோதல்கள், வாதப்பிரதிவாதங்கள், கடும் போட்டிகள் ஏற்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும். ஆனால் ஒரு கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களே விருப்பு வாக்கைப் பெறுவதற்காகத் தமது சக வேட்பாளர்களுக்குக் கடும் கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடுவது நமது தேர்தல் முறையில் மட்டுமே இருக்கக்கூடிய ஒன்று.

சிலர் தமக்கும் ஒருபுள்ளடி போடும்படி கேட்டார்கள். வேறுசிலர் மற்ற வேட்பாளர்களுக்குப் போடாமல் தமக்கு மட்டுமே புள்ளடி போடும்படி கேட்டார்கள். விருப்பு வாக்கு முறை புகுத்தப்பட்டமையே இக் கீழான நிலைமைக்கு காரணமாகும். பிறர் தலையீடு இன்றி விரும்பியவர்களுக்கு வாக்களிப்பதே விருப்பு வாக்காகும். எமது நாட்டு வாக்காளர்களும் வேட்பாளர்களும் இத்தகைய பக்குவ நிலையை இன்னும் அடையவில்லை என்றே தோன்றுகின்றது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் சம உரிமை உள்ள தனித்துவமான இனமாக வாழவிரும்பும் தமிழர்களைக் கரை சேர்க்கும் கப்பலாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் கருதுகிறார்கள். வாழ்வோ தாழ்வோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமிழர்கள் நம்பியுள்ளார்கள். நம்பியுள்ள தமிழர்களுக்குச் சேவை செய்யவெனப் புறப்பட்ட வேட்பாளர்கள் பலர், விருப்பு வாக்கு வேட்டையாடி சுயசேவைக்காய்ப் பாடுபட்டு கூட்டமைப்பின் உன்னத நோக்கத்தையே சிதறடித்தனர். இருந்தும் சம்பந்தர் ஐயாவுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நியமனம் நீதியானதா? நேர்மையானதா? என்பதும் சிந்திக்க வைக்கக்கூடியது. தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்களைத் தேசியப் பட்டியல் மூலம் உள்வாங்குவது மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயலாகும். தோற்கடிக்கப்பட்டவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக தேசியப் பட்டியல் முறை உருவாக்கப்படவில்லை. தேர்தலில் போட்டியிடாத கல்விமான்கள், புத்திஜீவிகள், துறைசார் விற்பன்னர்கள் ஆகியோர் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்தமுறை உருவாக்கப்பட்டது. இத்தகையோர் உள்வாங்கப்படுவதன் மூலம் நாடாளுமன்றம் வளப்படுத்தப்படுகின்றது.

ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மிகவும் சரியாகவே தேசியப் பட்டியலுக்கு முன்னுரிமை அடிப்படையில் முதலாவது பெயராகப் பேராசிரியர் சிற்றம்பலத்தின் பெயரைப் பரிந்துரை செய்திருந்தார்கள். உண்மையில் பேராசிரியர் வரலாற்றாதாரங்களுடன் தமிழிலும் ஆங்கிலத்திலும் துணிவாக வாதாடும் வல்லமையுடையவர். ஆனால் கடைசி நேரத்தில் அவருக்கு நியமனம் வழங்கப்படவில்லை. பதிலாகத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குக்கு ஒருவர் வன்னிக்கு ஒருவர் ஆக இருவர் என்றும், அவர்களில் ஒருவர் பெண்ணாக இருக்க வேண்டும் என்றும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுத்ததன்படி கிழக்கில் இருந்து துரைரட்ணசிங்கமும் வன்னியில் இருந்து சாந்தி ஸ்ரீஸ்கந்தராசாவும் நியமிக்கப்பட்டனர் எனச் சம்பந்தன் ஐயா நியாயம் கூறுகின்றார்.

தோல்வியடைந்தவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். ஜனநாயக முறையில் ஒரு வாக்கால் தோல்வியடைந்தாலும் அவர் தோல்வியடைந்தவரே ஆவார். தோல்வி அடைந்தவர்களுக்கு வாய்ப்பு வழங்கியதால் வாய்ப்பு வழங்கப்படாத ஏனைய தோல்வியடைந்தவர்களின் விமர்சனத்துக்கும் ஆளாக வேண்டியேற்பட்டது.

ஏனைய கட்சிகள் தோல்வி அடைந்தவர்களுக்கு தேசியப்பட்டியல் நியமனத்தை வழங்குவதை நாம் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழினத்தின் தலை நிமிர்வுக்காகத் தளராது புனித பணியாற்றுகின்றது. அதனால் தமிழினத்துக்கு உரிமைகள் கிட்டும்வரை அமைச்சுப் பதவிகளையோ ஏனைய உயர் பதவிகளையோ ஏற்பதில்லை எனத் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

இத்தகைய விழுமிய நோக்கங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலமையாளர்களையும் புத்திஜீவிகளையும் புறந்தள்ளித் தோல்வியடைந்தவர்களை நியமித்தமையை ஏற்கமுடியாதுள்ளது.

கலாநிதி சிற்றம்பலம் வரலாற்றுப் பேராசிரியர். பேராசிரியர் மட்டுமல்ல பெருமனதும் படைத்தவர். தோல்வியடைந்த வேட்பாளர்கள் போன்று அவர் பதவி கேட்டுப் போராடவில்லை. ஆரம்ப காலம் தொட்டே தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய போராளி யாகவே விளங்குகின்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் இராமனை நோக்கி வாலி கூறிய தீயன பொறுத்தி என்றான் சிறியன சிந்தியாதான் என்ற பாடல் வரிகளே ஞாபகத்திற்கு வருகின்றன.

***மு.தர்மலிங்கம் பருத்தித்துறை***

# தொடர்ச்சி... விடிவு

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"முத்தம்மா உன்ரை பேர்த்திக்கு இதை விட ஓர் அதிர்ஷ்டம் இனி வராது. நல்லா யோசிச்சு முடிவைச் சொல்லு..." எனக் கூறிய கணக்குப் பிள்ளை முத்தம்மாவிடம் விடைபெற்றார்.

முத்தம்மா தன் பேர்த்தியிடம் பக்குவமாக விடயத்தை கூறினாள். தனது இயலாமையையும் தங்கள் ஏழ்மையையும் வான்மதியின் மனதில் பதியும்படி எடுத்துச் சொன்னாள். முத்தம்மாவின் வார்த்தைகளைக் கேட்ட வான்மதி பாட்டி எனக்கெண்டு ஓர் ஆசையுமில்லை. நீங்கள் எங்களை வளர்க்க எவ்வளவு கஸ்ரப் படுகிறீங்கள்! இரண்டு நாள் நீங்கள் வேலைக்குப் போகாதபடியால் வீட்டில் சமையலே நடக்கேல்ல. குமாரை நான் எப்படியும் படிப்பிக்கவேணும். நீங்கள் கணக்குப்பிள்ளையிடம் திருமணத்துக்கு நான் சம்மதிச்சதாய் சொல்லுங்கோ" என்றாள். வான்மதி கூறியதைக் கேட்ட முத்தம்மா மகிழ்ச்சியுடன் கணக்குப் பிள்ளைக்கு விசயத்தை தெரியப்படுத்தினாள்.

இரண்டு நாள்களில் முருகானந்தத்துக்கும் வான்மதிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு வந்தவர்கள் வான்மதியின் அழகை வியந்து பேசியதுடன் அவர்களை தந்தையும் மகளும் போல் இருப்பதாக தம்முள் குசுகுசுத்துக் கொண்டனர். சிலர் முருகானந்தத்தின் காதில் விழும்படியும் கதைத்துச்சிரித்ததை அவரால் தாங்க முடியவில்லை. இவை ஒன்றையும் பொருட்படுத்தாது அமைதியாக கல்போல் நின்ற வான்மதி பலவித எதிர்பார்ப்புடன் தமக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தாள். அங்கே கடுகடுத்த முகத்துடன் கட்டிலில் அமர்ந்திருந்த முருகானந்தம் தன் எதிரே அழகே உருவாக நின்ற அந்தச் சின்னஞ் சிறிய பெண்ணை உற்று நோக்கினார். அவளின் அழகே வந்தவர்கள் தன்னை அவமானப் படுத்தக் காரணமானது என்ற கோபம் அவரது தலையைக் கிறுகிறுக்க வைத்திருந்தது. தலையணையும் போர்வையையும் எடுத்து அவளை நோக்கி வீசியவர் கீழே படுத்துக் கொள் என்று கூறி அவள் விக்கித்து நிற்க கட்டிலில் சாய்ந்து தூங்க ஆரம்பித்தார்.

ஆரம்பமே இப்படி இருந்தால் எதிர்காலம் எப்படியிருக்கும்? தன் அழகிய மனைவியை யாராவது பார்த்தால் அது தனக்கு ஆபத்தாகி விடும் என எண்ணியவர் அவளைப் பார்க்க யாரையும் அனுமதிப்பதில்லை. அவர் செய்த எல்லாக் கொடுமைகளைத் தம்பியின் கல்விக்காகப் பொறுத்துக் கொண்டாள் வான்மதி. அவளை அவசரப்பட்டு திருமணம் செய்து கொடுத்த துக்கத்தில் முத்தம்மாவும் கண் மூடி விட்டாள். நாளுக்கு நாள் வான் மதியைக் கொடுமைப்படுத்துவது முருகானத்தத் திற்கு வழக்கமாகி விட்டது. ஏதாவது குற்றத்தைச் சுமத்தி அவளுக்கு சிக ரெட்டால் கூட சுட்டு விடுவார் முருகானந்தம். கணக்குப்பிள்ளையும் வான்மதியின் நிலை கண்டு தன் செயலுக்கு வருந்தினார். புதிதாகத் திறக்கப் பட்ட, முருகானந்தத்தின் பார்வதி றைஸ்மில்லுக்கு மனேஜராக நியமிக்கப்பட்ட ராகவனிடம் வர்ன்மதியின் பரிதாப நிலையைக் கூறி வருத்தப்பட்டார்.

அன்று திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற விருந்துக்கு ராகவனும் வந்திருந்தான். முருகானந்தம் வீட்டில் பலரும் கூடியிருந்தனர். உணவு பரிமாறும் இடத்துக்கு வான்மதியை வரக்கூடாது என்பது முருகானந்தத்தின் கண்டிப்பான உத்தரவு. ராகவனின் கண்கள் அந்தப் பரிதாபத்துக்குரிய ஜீவனின் உருவத்தைத் தேடின. சமையலறையில் கூடமாட உதவி செய்தபடி இருந்தாள் வான்மதி. வெளியே தலை காட்டவில்லை. முருகானந்தம் தண்ணி கொண்டு வரும்படி சமையல்காரரை அழைத்தார். அவரே "அம்மா! ஜயா தண்ணிக்குக் கூப்பிடுகிறார். இதைக் கொண்டுபோய் குடுங்கோ. நான் கை வேலையாய் இருக்கிறன்...." என்று அவளை வில்லங்கத்தில் மாட்டி விட்டார். அவருக்கு தங்கள் குடும்ப விசயத்தைக் கூறக் கூடாது என்பதற்காக தண்ணியை எடுத்துக் கொண்டு ஹோலுக்குள் நுழைந்தாள் வான்மதி. சாப்பாட்டு மேசையைச் சுற்றிப் பலர் அமர்ந்திருந்தனர். பெரும்பாலானவர்கள் போதையில் மிதந்திருப்பது தெரிந்தது. சொல்லி வைத்தாற் போல் எல்லோருடைய கண்களும் வான்மதியைப் பார்த்தன. முருகானந்தத்தின் கண்கள் ஏற்கனவே போதையால் சிவப்பேறியிருந்தது.

இப்ப வான்மதியை கண்டதும் மேலும் சிவப்பேறியது. கையிலிருந்த உணவுக் கோப்பையை அவளை நோக்கி வீசியவர், "எளிய நாயே! உன்னை இங்க வரவேண்டாமெண்டு சொல்ல, நீ உன்ர அழகைக் காட்ட வந்தனியோ. உன்ர தம்பியையும் படிப்பை நிற்பாட்டி என்ரை மில்லில வேலை செய்யவிடப் போறன்" என்று ஆவேசம் வந்தவராகக் கர்ச்சித்தார்.

அவர் வீசிய அந்த மாபிள் கோப்பை அந்தச் சிறு பெண்ணின் காலைப் பதம் பார்த்தது. பெருக பெருக வெட்கம், வேதனை பொங்க மிரண்டு காலை விந்தியபடி நடந்து செல்லும் அழகே உருவான அந்த இளம் பெண்ணிற்காக ராகவன் உள்ளம் உருகித் தவித்தது.

விருந்துக்கு வந்த அனைவரும் போதையின் மயக்கத்தில் கதிரைகளில் சாய்ந்திருந்தனர். உறுதியான மனதுடன் எழுந்த ராகவன் சமையலறையை அடுத்திருந்த அறையை எட்டிப் பார்த்தான். காலில் ஏற்பட்ட காயத்துக்குத் துணியைச் சுற்றிவிட்டு முழங்காலில் முகத்தைப் புதைத்து விம்மி அழும் வான்மதியை நோக்கி நடந்தான்.

"வான்மதி இங்க நீ இருந்தா உன்னை அந்த மிருகம் கொன்று போடும். கணக்குப் பிள்ளை எல்லாம் சொன்னவர். நானும் நேரில பார்த்திட்டன். நான் உங்கன்ர மில் மனேஜர். நான் படிச்சிருக்கிறன். உ[illegible]னையும் கண்கலங்காமல் பாப்பன். உன்ரை தம்பியையும் படிக்க வைப்பன் என்னில நம்பிக்கை இருந்தா நான் உங்கன்ர வீட்டு வாசலில் உனக்காகக் காத்திருக்கிறன். உன்ர தம்பியோட நீ வா..." என்றான் வாஞ்சையோடு. அன்போடு கூறிய அந்த இளைஞனை ஏறிட்டுப் பார்த்தாள் வான்மதி. அவன் கண்களில் பெருகும் கருணையையும், அன்பையும் கண்டு ஒரு கணம் செயலற்று வாய்பேசாது மௌனமானாள்.

அவளிடமிருந்து பதில் எதுவும் வராததால் ஏமாற்றத்துடன் வாசலை நோக்கி விரைந்தவனின் முதுகை வெறித்தவள் முருகானந்தத்துடன் கடந்த ஆறு மாதமாக தான் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்த்தாள்.

அவர் செய்த கொடுமைகளையெல்லா[illegible] தம்பியின் எதிர்காலத்துக்காகச் சகித்துக் கொண்டதை எண்ணியவள், ஒரு முடிவோடு எழுந்தாள்.

முருகானந்தம் கட்டிய தாலியைக் கழற்றி அவர் படத்துக்கு முன்னால் வைத்தவள். தான் வீட்டிலிருந்து வரும்போது கொண்டு வந்த பெட்டியை எடுத்தாள். தூக் கத்திலிருந்த குமாரை எழுப்பியவள், அவன் மிரண்டு விழிக்க அவனை ஒரு கையிலும் பெட்டியை மறுகையிலும் பிடித்தபடி வாயிலுக்கு விரைந்தாள் வான்மதி.

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 384

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ✿ |
| 6 | | ✿ | 7 | | | ✿ | 8 |
| 9 | | 10 | | | ✿ | 11 | |
| | ✿ | 12 | | | 13 | ✿ | |
| ✿ | 14 | | ✿ | 15 | | 16 | |
| 17 | | ✿ | 18 | | ✿ | | ✿ |
| 19 | | | | ✿ | 20 | | 21 |
| 22 | | ✿ | 23 | | | ✿ | |

அனுப்புபவர் பெயர்:......................................

பூரணமான தபால் விலாசம்: ......................................

......................................

கையொப்பம்:......................................

**இடமிருந்து வலம்**

1.நாட்டில் இது நிகழ அரசு அனுமதிக்காது
6.வாழ்
7. கொடுக்கும்/வழங்கும்
9.அதிகாரவர்க்கம் அதிகம் பேசும் உயரிய ஆட்சி.
11. பெருக்கெடுத்து ஓடும்/ஓர் எண்
12. இந்தக் கருவியிலிருந்து இனிய இசையோசை வரும்
14. இறை நாமம்
15. கணவன் - மனைவியை இப்படியும் அழைப்பர்
17. திண்மம், திரவம் தாண்டிய நிலை
18. நல்லதைக் குறிக்கும் சொல்
19. மட்பாண்டம் வனைபவன்
20.சூழலுக்கு இது வேண்டும்.
22.சாப்பிடு
23.மோகம்

**மேலிருந்து கீழ்**

1. அக்கறையோடு பார்
2. நாட்டியம்
3. சாதகமாகப் பயன் தராது. மாறாகவே பயன் கிட்டும்
4. ஆசைப்படுதல்
5. தமது
8.ஒன்றின் மதிப்பு, பெறுமானம்
10. மிகுதியானது
13. காந்திஜியின் கடைசி வார்த்தை இது
14. சித்திரம் வரையும் திறன் கொண்டவன்
16. இலவம் மரத்திலிருந்து கிடைப்பது
17. வேள்வியில் சமர்ப்பிப்பது
18. ஒருவருக்கு நல்லது செய்தல்
20. வாயிலுள்ள உறுப்பு
21.ஒரு பறவை

---

உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன். அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 382 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) ஐம்பது (4)வாக்கு (6) திப்பிலி (7) பகுப்பு (9) பதம் (11) சிம்பு (12) ஈர்ப்பு (13)கொடு (14) கம்மல் (16)கவிதை (18) தலைவன் (20) தினம் (21) குனிதல்

**மேலிருந்து கீழ்**

(1)ஐப்பசி (2)பதிப்பு (3)துப்பு (4) வாலிபர் (5)குறும்பு (8) கும்பம் (10) தப்புவி (12) ஈடு (13) கொல்லை (14)கத்தி (15) மதம் (16) கன்னி (17)தையல் (19) வகு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 382 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

A.K.வஷ்னி.
இல 41/41 .ஒல்லி மோட்டை, சாவற்கட்டு.
மன்னார்.

**2 ஆம் பரிசு**

குகதாஸ் ஜனப்பிரியன்,.
12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு.
நெடுந்தீவு.

**3 ஆம் பரிசு**

முகுந்தன் கோபிகா
மே/பா M.ரஜினி,
பனிப்புலம், காலையடி, பண்டத்தரிப்பு

**4 ஆம் பரிசு**

செல்வன் உ.கனிஸ்ரன்
இல.79/9 புங்கன்குளம் வீதி.
அரியாலை, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**

யூ.ம.அ.யாழினி,
'பிருந்தாவனம்' காத்தார்
சின்னக்குளம் வீதி, வவுனியா.

**பாராட்டுப் பெறுவோர்**

ஜீ.ராஜாராம்,
C/1/6, வேலுவனராம மாடி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06

அ.அன்ரனி குரூஸ்,
பிரதான வீதி, தாழ்வுபாடு.
மன்னார்.

சே.ஆனந்தி,
இல. 107/3, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி இல.384 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (09.09.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.384 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 13.09.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 382 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராதனச் சின்னங்களையும் விட்டுவைப்பதாக இல்லை

## ஐ.எஸ்.தீவிரவாதிகளின் காட்டுமிராண்டித்தனம் ஐ. நா. செயலாளர் நாயகம் பெரும் கவலை



ஐ.எஸ்.(இஸ்லாமிய அரசு) தீவிரவாதிகள் செயற்படும் பகுதிகளில் பிடிபடும் எதிர்த் தரப்பினரைக் காட்டுமிராண்டித்தனமாகக் கொலைசெய்வதும் பெண்களை வன்புணர்வுக்கு உட்படுத்துவதுமாக உலகின் மொத்த வெறுப்பையும் சம்பாதித்து வருகிறார்கள். அவர்களின் காட்டுத்தர்பார் முறை முடிவுக்கு வருவதாயில்லை. தாம் ஆக்கிரமிக்கும் பகுதிகளில் உள்ள புராதன சின்னங்களையும் உலகப் பிரசித்தி பெற்ற கோயில்களையும் கோபுரங்களையும்கூட தகர்த்துப் பழம்பெரும் நாகரிகத்தின் அடையாளங்களையும் அழித்து வருகிறார்கள் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

அந்த வகையில்தான் அண்மையில் சிரியாவில் பழம்பெரும் நகரான பல்மைராவில் இருந்த புராதன கோயில் ஒன்றை குண்டு வைத்துத் தகர்த்தொழித்திருக்கிறார்கள்.

பல்மைரா நகரமானது ஐ.நா. யுனெஸ்கோ அமைப்பினால் உலக புராதன சின்னமாக அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுவரும் இடமாகும். உலக நாகரிகத்தின் ஆரம்பகால அடையாளங்கள் இங்கே புதைந்து கிடக்கின்றன. அவ்வாறு புராதன சொத்துக்களில் ஒன்றாகப் பேணப்படும் கோயில் ஒன்றே இப்போது ஐ.எஸ். தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டுள்ளது. இந்தக் கோயில் தகர்க்கப்பட்டிருப்பதை ஐ.நா. செயலாளர் நாயகம் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியா பல்மைரா நகரில் உள்ள பால் ஷாமின் (Baal shamin) கோயிலுக்குள் குண்டுகளை வைத்து வெடிக்கச் செய்து அதனை தகர்த்துள்ளார்கள் என்று செய்தி வந்தது.

சிரியாவின் பழம்பொருள்களுக்கான பொறுப்பாளர் கூறுகையில், பல்மைராவின் ஓய்வு பெற்ற அகழ்வாராய்ச்சியாளர் காலெத் அல் ஆசாத் என்பவர் கொல்லப்பட்டது குறித்தும் பான் கி மூன் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளார் என்றார். முன்னாள் அகழ்வாராய்ச்சியாளர் கழுத்தை அறுத்து கொலை செய்யப்பட்டதன் பின்னர் அவருடைய சடலம் துவம்சம் செய்யப்பட்டிருந்தது.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஐ.எஸ். தீவிரவாதிகளின் காட்டுமிராண்டித் தனமான செயல்களுக்கு உள்ளாகித் தவிக்கும் சிரியாவின் மக்கள் அனுபவிக்கும் கொடுமைக்கு புராதன சின்னமான பழம்பெரும்கோயில் தகர்க்கப்பட்டிருப்பது மேலும் ஓர் அடையாளமாகும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

புராதன கலாசார சின்னங்கள் அழிக்கப்படுவதும் ஒரு போர்க் குற்றமாகும் என்று பான் கிமூன் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகளின் அரசுகள் ஒன்றுபட்டு இந்த மாதிரி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



### சீன அதிபரின் அமெரிக்க வருகைக்கு வலுக்கிறது எதிர்ப்பு

சீன அதிபர் ஜி ஜிங்பிங் அடுத்த மாதம் வொஷிங்டனுக்கு வரவிருக்கும் நிலையில் அமெரிக்க அதிபர் அவருக்கு வெள்ளை மாளிகையில் இரவு விருந்தளிக்க இருப்பதை எதிர்வரும் அதிபர் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்கள் பலர் கண்டித்திருக்கிறார்கள்.

தேர்தலில் போட்டியிடவிருக்கும் பெரும் வர்த்தக தொழில் அதிபரான டொனால்ட் ட்ரம்ப் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில், சீன அதிபர் அமெரிக்காவுக்கு வரும்போது ராஜாங்க மரியாதையுடன் இரவு விருந்து அளிக்க ஏற்பாடு செய்வதைக் கடுமையாகக் கண்டித்தார்.

நானென்றால் அவருக்கு இரவு விருந்து கொடுக்கமாட்டேன், மக்டொனால் ஹம் பேர்கர்(ஒருவித இறைச்சியுடன் கூடிய றொட்டி) கொடுத்து நாங்கள் பணியில் இறங்க வேண்டும் என்று அவரிடம் கூறுவேன். ஏனென்றால் அவர்கள் தொடர்ந்து நாணய மதிப்பை குறைத்துக் கொண்டிருக்க முடியாது என்றார் ட்ரம்ப். சீனா தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்திருப்பதானது உலக சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. "அவர் என்ன செய்திருக்கின்றார் தெரியுமா? தொழில் வாய்ப்பு எல்லாவற்றையும் உறிஞ்சி எடுத்துவிட்டார். எமது நாட்டிலிருந்து பணம் எல்லாவற்றையும் உறிஞ்சி எடுத்துவிட்ட அவருக்கு இரவு விருந்து வைக்க வேண்டுமா?" என்று ட்ரம்ப் கேட்டார். சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான வர்த்தகப் போர் பற்றி அவர் குறிப்பிடுகையில், சீனத் தலைவர்கள் புத்திசாலிகள், எம்மவர்கள் அப்படியில்லை. நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்றே தெரியவில்லை என்றார்.

விஸ்கொன்சின் பிரதேச ஆளுநர் ஸ்கொட் வோக்கரும்கூட ஜி ஜிங்பிங்கிற்கு ராஜாங்க வரவேற்பளிப்பதை இரத்து செய்யும்படி கோரியுள்ளார். "அவர்களுடனான பல பிரச்சினைகள் அப்படியே கிடக்கும்போது எமது அதிபர் வழங்கும் மிகப்பெரிய கௌரவம் அவருக்கு ஏன் கொடுக்கப்படவேண்டும். எமது நாடுகளின் தலைவர்கள், அமெரிக்காவை ஆதரிப்பவர்கள் ஆகியோருக்குத் தான் வழங்கப்படவேண்டும். எம்முடன் மூலோபாய ரீதியில் போட்டிபோட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு அல்ல" என்றார்.

> சர்வதேச சட்டங்களின்படி நெதன்யாகு போர்க்குற்றங்களுக்காக கைது செய்யப்படலாம். 2014 ஆம் ஆண்டு 2,000 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டமைக்காக அவர் பிரிட்டனுக்கு வரும் போது கைது செய்யப்பட முடியும் என்று மோறன் தெரிவித்துள்ளார்.

### ஒபாமாவின் சாதனைகள்

ஒபாமா தமது இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கியதன் பின்னர் அவர் எவ்வளவு செயற்திறனுடன் பணியாற்றியிருக்கிறார் என்பதை பின்வருமாறு பட்டியலிட்டிருக்கிறார் வோஷிங்டன் போஸ்ட் நிருபர் ஒருவர்;

1. கியுபாவுடன் உறவுகளை வழமைக்கு கொண்டு வந்தார்
2. சீனாவுடன் காலநிலை உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டார்.
3. உயர் நீதிமன்றத்தில் ஓரினர் திருமணங்களை ஆதரித்து வெற்றிகரமாக வாதிட்டார்.
4. ரஷ்ய அதிபர் புடினுக்கு சிக்கல் ஏற்படுத்தும் வகையில் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்தார்.
5. கரியமில வாயு வெளிப்பாடு தொடர்பில் புதிய விதிமுறைகளை வெளியிட்டார்.
6. குடிவரவு தொடர்பான நிறைவேற்று பணிப்புரைகளை வழங்கினார்.
7. ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்தார். அதனை காங்கிரஸில் நிறைவேற்றும் நிலையில் இருக்கிறார்.
8. ஒபாமா கெயர் சுகாதார செயற்பாடுகள் தொடர்பாக மேலும் ஒரு வழக்கில் உயர் நீதிமன்றில் வென்றார்.
9. வொஷிங்டன் தேசியப் பூங்காவில் இரட்டை பண்டாக் கரடிக்குட்டிகள் பிறந்த நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

இப்படி இன்னும் சில விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒபாமா மேற்கொண்ட பல விடயங்களைத் தொடர்ந்து முன்னெடுக்க ஜனநாயகக் கட்சி வேட்பாளராக நியமனம் பெற்றுள்ள ஹிலாரி கிளின்டன் தீர்மானித்திருக்கிறார் என்று தெரிகின்றது. ஆனால் அதனை ஏனைய வேட்பாளர்கள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்றும் தோன்றுகின்றது.

ஒபாமாவின் முக்கிய செயற்பாடுகளை கிளின்டனும் முன்னெடுப்பாரானால் ஒபாமாவே மூன்றாவது தடவையும் பதவியில் இருக்கிறார் என்றாகிவிடும் என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

கிளின்டன் கியூபாவுடனான உறவுகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதை ஆதரிக்கின்றார். ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்துக்கும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளார். எதிர்த் தரப்பினரோ, அவர் பதவி ஏற்றவுடனேயே இந்த இரண்டு நடவடிக்கைகளையும் உடனடியாக இரத்துச் செய்து விடுவார் என அறிவித்துள்ளார்.

### உப ஜனாதிபதியும் தேர்தல் களத்தில்

அமெரிக்க உப ஜனாதிபதி ஜோபிடனும் அதிபர் தேர்தலில் குதிக்கும் நிலைப்பாடு ஒன்றுக்குச் சார்பாக நகர்ந்து வருகிறார் என அவதானிகள் கருதுகிறார்கள். அதற்கான சமிக்ஞைகளை அவர் வெளிப்படுத்தி வருகிறார் என அவர்கள் கூறுகிறார்கள். ஆதரவாளர்களுடன் ஆலோசனைகள் கலந்து வருவதும் தேர்தலில் போட்டியிட விரும்புகிறவர்கள் மேற்கொள்ளும் காரியங்களில் அவர் ஈடுபட்டு வருவதும் தெரியவந்துள்ளது என்கிறார்கள் அவதானிகள்.

பிடனுக்கு இப்போது 72 வயதாகிறது. கிளின்டனுக்கு 67 வயது. கிளின்டனைவிட அதிக காலம் பிடென் பொதுவாழ்வில் ஈடுபட்டு வந்துள்ளார். ஒபாமா நிர்வாகத்தில் இருவருமே உயர்மட்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார்கள்.

### சளிக்காய்ச்சலுக்கு தடைமருந்து வருகிறது

இன்புளுவென்சா என்று அழைக்கப்படும் சளி சம்பந்தமான காய்ச்சலுக்கு காரணமாக உள்ள நுண் கிருமிக்கு எதிரான தடுப்பு மருந்தொன்றை மிகவிரைவில் உருவாக்கும் நிலைக்கு விஞ்ஞானிகள் முன்னேறி இருக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது.

ஜோன்சன் அன் ஜோன்சன் நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகள் ஃபுளு காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வகையில் உடம்பில் பால் குத்துவதுபோல ஏற்றிக்கொள்ளக்கூடிய இந்த மருந்து பெரும்பாலும் உருவாக்கப்பட்டு விட்டதாக அறிவித்துள்ளார்கள். இந்த நோய்க்கு வருடம் தோறும் மருந்தேற்றிக்கொள்ள வேண்டிய அவசியத்தை இந்த மருந்து இல்லாமல் செய்துவிடும். இந்த நோயின் பலதரப்பட்ட தாக்கங்களுக்கும் இந்த மருந்து எதிராக செயற்படும் என்கிறார்கள் அவர்கள்.

எலிகளிலும் குரங்குகளிலும் இந்த மருந்தைச் சோதித்துப் பார்த்ததில் ஃபுளு நுண் கிருமியின் ஒருவகையிலான தாக்கத்தை மட்டுமன்றி அதன் பல்வேறு கூறுகளையும் எதிர்த்து நிவாரணம் அளிப்பதாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இப்பொழுது இந்த மருந்தின் நம்பகத் தன்மை மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது. மனிதர்களில் அது பயன்படுத்தப்படுவதற்கு இன்னும் அதிக பணிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

### போர்க்குற்றச்சாட்டு; இஸ்ரேல் பிரதமரை கைதுசெய்யக் கோரிக்கை

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அடுத்த மாதம் பிரிட்டனுக்கு வரும்போது அவரைக் கைது செய்யக்கோரி கையெழுத்து வேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் பிரஜையான டாமியன் மோறன் என்பவரால் இந்த கையெழுத்து வேட்டை கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டு அரசு இணையத்தள ஊடகத்தில் அஞ்சல் செய்யப்பட் டுள்ளது.

சர்வதேச சட்டங்களின்படி நெதன்யாகு போர்க்குற்றங்களுக்காக கைது செய்யப்படலாம். 2014 ஆம் ஆண்டு 2,000 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டமைக்காக அவர் பிரிட்டனுக்கு வரும் போது கைது செய்யப்பட முடியும் என்று மோறன் தெரிவித்துள்ளார்.

காஸா நிலப்பகுதியில் 51 நாள்கள் இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கையின்போது இந்த மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கையெழுத்திடும் மனுவில் இதுவரை 80,000 பேர் கையெழுத்திட்டுள்ளார்கள். எண்ணிக்கை 100,000 ஆகுமெனில் விண்ணப்பம் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் கூட்டணியினராலேயே திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டேன்

## தேர்தலின் பின் முதற்றடவையாக மனந் திறக்கிறார் சுரேஷ் அவருடனான சிறப்பு நேர்காணல்

சந்திப்பு - டிலீப்அமுதன்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தான் திட்டமிட்டப்பட்டு தனது கூட்டணியினராலேயே தோற்கடிக்கப்பட்டேன் என்று பகிரங்க மாகக் குற்றஞ்சாட்டுகிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன். "மக்கள் என்னைத் தோற்கடித்தார்கள், மக்கள் எனக்கு வாக்களிக்கவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். மக்களால் நான் நிராகரிக்கப் பட்டிருந்தால் அதனை நிச்சயம் ஏற்றுக்கொள் வேன். நீண்ட காலத்துக்கு முன்பாகவே திட்டமிட்டு சரியான முறையில் நிறைவேற்றி என்னைத் தோற்கடித்துவிட்டார்கள்" என்று கவலைப்படுகிறார்.

தேர்தலின் பின்னரான அரசியல் கள நிலவரம் குறித்து 'உதயன்' சார்பில் அவரைச் சந்தித்துப் பேசி னோம். பல்வேறு விடயங்கள் குறித்தும் மனந் திறந்து பேசினார். தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிநிற்கும் தனது நிலைப்பாடுகளை எடுத்துச் சொன்னார். செம்மைப் படுத்தப்பட்ட அவரது செவ்வி இங்கே...

*கேள்வி: இம்முறை வாக்களிப்பு மந்தமாகவே இருக்கும் என்று நம்பப்பட்டது. இதனால் கூட்டமைப்பு பின்னடைவை எதிர்நோக்கும் என்றும் கூறப்பட்டது. ஆனால் வாக்களிப்பு முடிவுகள் வேறு மாதிரியாக அமைந்தன. இந்த முடிவை கூட்டமைப்பு முன்னரே எதிர் பார்த்ததா?*

பதில்: தற்போது கிடைக்கப் பெற்ற முடிவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலுக்கு முன்னரே எதிர்பார்த்திருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம்தான் எமது எதிர்பார்ப்பு தவறாகியது. அங்கு 4 ஆசனங்களை நாங்கள் எதிர்பார்த்த போதும் 3 ஆசனங்களே எங்களுக்கு கிடைத்தன.

*கேள்வி : தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடும் போட்டியை வழங்கும் என்று பல தரப்பினாலும் எதிர்வுகூறப்பட்டிருந்தது. ஆனால் தேர்தல் முடிவுகள் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளன. இப்படி நடக்க என்ன காரணம்?*

பதில்: அவர்கள் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்) ஓர் ஆசனத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்திருக்கின்றார்கள். அவர்களின் முயற்சி தவறு என்று சொல்ல முடியாது. எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் கொள்கை ரீதியிலான வித்தியாசங்கள் பெரிதாக இருக்கவில்லை. இரு தேசம் ஒரு நாடு என்பதும், வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம் அதற்கான சமஷ்டி அமைப்பு என்பதற்கும் இடையில் பெரும் வித்தியாசம் இருக்கவில்லை. அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே தொடர்ந்து வாக்களிப்பது சிறந்தது என்று மக்கள் கருதியிருக்கலாம்.


மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறார்கள். பல இடங்களில் இதனை எனக்கு நேரடியாகவே மக்கள் சொன்னார்கள், சுரேஷ், இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். இந்தமுறையும் செய்யாவிட்டால், திரும்ப வரவேண்டாம். மக்கள் இறுதி சந்தர்ப்பத்தைத்தான் கொடுத்திருக்கின்றார்கள்.

*கேள்வி: கூட்டமைப்பு, முன்னணி இரண்டுமே தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தித்தான் வாக்குக் கேட்டன. கூட்டமைப்பு முதலிடத்தையும், முன்னணி ஐந்தாவது இடத்தையும் பெற்றுக் கொண்டிருக்கின்றது. இடையில் ஈபிடிபிக்கும் இரண்டு தேசியக் தேசியக் கட்சிகளுக்கும் மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். இதனை தேசியத்துக்கு அப்பால் மக்களின் கவனம் திசை திரும்பத் தொடங்கி விட்டது என்று கணிக்கலாமா?*

பதில்: தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திறம்படச் செய்யும் என்ற நம்பிக்கையில் இல்லாவிட்டாலும் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவோம், நாடாளுமன்ற ஆசனங்களைப் பிரித்துக்கொள்ளவேண்டாம் என்பதன் அடிப்படையில் மக்கள் கூட்டமைப்புக்குப் மிகப்பெரும் வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள். மக்கள் முன்னணிக்குச் சொல்லியுள்ளதெல்லாம், உங்களுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் இல்லை. நீங்கள் பொறுத்திருங்கள் என்பது தான்.

இந்த இரு கட்சிகளுக்கும் இடையில் வந்தவர்கள் என்று நீங்கள் கூறுபவர்களில் ஈ.பி.டி.பிக்கு இங்கு நிரந்தர வாக்கு வங்கி இருக்கின்றது. 2010ஆம் ஆண்டு தேர்தலில் 3 ஆசனங்களை கைப்பற்றியிருந்தார்கள். தற்போது அது ஓர் ஆசனமாகச் சுருங்கியிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் இங்கு சிறிய வாக்கு வங்கியைக் கொண்டிருக்கின்றது. முன்னர் மகேஸ்வரன், தற்போது மகேஸ்வரனின் மனைவியார் என்று அந்த வாக்கு வங்கி தொடர்ந்தும் இருக்கின்றது. ஒரு தொகுதி மக்கள், அவர்கள் வியாபாரிகளாகவும் இருக்கலாம், அந்தக் கட்சி மீது சிறிய நம்பிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் அவருக்கும் ஓர் ஆசனம் சென்றிருக்கலாம்.



யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 5 லட்சத்து 29 ஆயிரத்து வாக்காளர்கள் இருக்கின்றார்கள். வாக்களித்த 3 லட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்களில், 70 ஆயிரம் பேர் நாங்கள் பேசுகின்ற தேசியம் என்பதிலிருந்து விலத்தியிருக்கின்றார்கள். ஈ.பி.டி.பி, ஐ.தே.க, ஐ.ம.சு.மு போன்ற கட்சிகளுக்கு வாக்களித்திருக்கின்றார்கள்.

வேலை வாய்ப்பு, அபிவிருத்தி போன்ற விடயங்களை கூட்டமைப்பு செய்யாது. ஏனையோர் வருவதன் ஊடாக மாத்திரமே அதனைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் ஒரு தொகுதி மக்கள் அந்தக் கட்சிகளுக்கு வாக்களித்திருக்கலாம்.

*கேள்வி: தொடர்ச்சியாக 13 வருடங்கள் நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் பிரதிநிதியாக இருந்தவர் நீங்கள். இந்தத் தேர்தலில் மக்கள் ஏன் உங்களை நிராகரித்தார்கள்?*

பதில்: மக்கள் என்னை நிராகரித்தார்கள் என்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நான் திட்டமிட்ட வகையில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றேன். இது எனக்கு பல இடங்களிலிருந்து சொல்லப்பட்ட செய்திகள். என்னுடன் போட்டியிட்டவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள், திட்டமிட்ட வகையில் என்னைத் தோற்கடித்தார்கள் என்ற நம்பத் தகுந்த செய்தியும் எனக்கு கிடைத்துள்ளது.

மக்கள் என்னைத் தோற்கடித்தார்கள், மக்கள் எனக்கு வாக்களிக்கவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். மக்களால் நான் நிராகரிக்கப்பட்டிருந்தால் அதனை நிச்சயம் ஏற்றுக்கொள்வேன். நீண்ட காலத்துக்கு முன்பாகவே திட்டமிட்டு சரியான முறையில் நிறைவேற்றி என்னைத் தோற்கடித்துவிட்டார்கள்.

இதனை மக்கள் மன்றத்தில் வந்து நிரூபிக்க வேண்டும் என்று சொன்னால், நான் எல்லோரையும் சாட்சியத்துக்கு அழைத்து வரமுடியாது. கிழக்கு மாகாணத்தில் பார்த்தால் வெற்றியடைந்த யோகேஸ்வரன், தனக்கு எதிராகத் தமிழரசுக் கட்சியினரே வேலை செய்தனர் எனச் சொல்லியிருக்கின்றார். செல்வராஜாவும் அவ்வாறு கூறியிருக்கின்றார்.

இங்கு எனக்கு எதிராக, இன்று நேற்றல்ல ஒரு சில காலமாகவே வேலைகள் நடந்திருக்கின்றன. தேர்தலில் சுரேஷ் போட்டியிட்டாலும் வென்று வரக்கூடாது என்பதில் திட்டமிட்டு வேலை செய்திருக்கின்றார்கள். ஆகவே அந்த வகையில்நான் நான் தோற்கடிக்கப்பட்டேனே தவிர, மக்களால் நான் நிராகரிக்கப்படவில்லை.

*கேள்வி: நீங்கள் தோற்கடிக்கப்பட்டீர்கள் என்றால், எப்படி?*

பதில்: தோற்கடிப்பதற்குப் பலவற்றைச் செய்தார்கள். அதற்கு விருப்பு வாக்குகள் எண்ணிக்கை மோசடியும் அடங்கலாம். ஆனால் அது மாத்திரம்தான் தோற்கடிக்கப்படுவதற்கான காரணி என்றில்லை. தேர்தலை நடத்திய, யாழ். அரச அதிபரிடம் கேட்டால், நீதி மன்றம் செல்லச் சொல்வார். நீதிமன்றம் செல்வது என்றால் அதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. ஒரு வாரத்தினுள் செல்ல வேண்டும். நீதிமன்றத்துக்குச் சென்றாலும் நீண்ட காலம் இழுபடக்கூடிய செயற்பாடு. அங்கும் உடனடியாக தீர்வை எதிர்பார்க்க முடியாது.

*கேள்வி: ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தல், தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் எல்லாம், இலங்கை ஜனநாயக வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நீதியாக நடந்த முடிந்தாகச் சொல்லப்படுகின்றது. தேர்தல்கள் ஆணையாளரும் அதனைச் சொல்கின்றார். சுயாதீன கண்காணிப்பாளர்களும் அதனைச் சொல்கின்றார்கள். அப்படி இருக்கும்போது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் மோசடி இடம் பெற்றதாக நீங்கள் கூறுவது எப்படிச் சாத்தியமானது? அதனை ஏன் தேர்தல்கள் ஆணையாளருக்கு நீங்கள் தெரியப்படுத்தவில்லை?*

பதில்: எந்தவொரு தேர்தல் ஆணையாளரும் தான் பிழையாகத் தேர்தலை நடத்தியதாகச் சொன்ன வரலாறு கிடையாது. அதுபோலத்தான் தேசப்பிரியவும். தென்பகுதியிலுள்ள அரசியல்வாதிகள், பல இடங்களில் தேர்தல் சரியான முறையில் நடைபெற்றதாகக் கூறியிருக்கின்றார்கள். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. வன்முறையற்ற தேர்தல் என்று ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்களும் சொல்கிறார்கள். நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த மேற்பார்வை செய்கின்ற வெளிநாட்டவர்கள் யாரும், வாக்கு எண்ணிக்கை நடக்கின்ற இடங்களுக்குள் போகவும் முடியாது. அதனை மேற்பார்வை செய்யவும் முடியாது. அதன் ஆழ, அகலங்கள் அவர்களுக்குத் தெரியாது. எனவே அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக எண்ணிக்கை மோசடி நடைபெறவில்லை என்று கூறிவிட முடியாது. தென்பகுதியிலும், வாக்கு எண்ணிக்கையில் மோசடி நடந்ததாகச் சொல்கின்றார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும்.

அரச அதிகாரிகளும்கூட தமது பக்கத்தில் நடந்திருக்கக்கூடிய தவறுகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எனவே எல்லோரும் கூறுகின்றார்கள் என்பதற்காக எல்லாம் சரியான முறையில் நடந்தது என்று சொல்லிவிட முடியாது.

*கேள்வி : தேர்தல் அறிக்கையில் சமஷ்டித் தீர்வை முன்வைத்திருந்தீர்கள். தேர்தல் மேடைகளில் 2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு பெற்றுத் தருவதாகவும் பேசியிருந்தீர்கள். இவற்றையெல்லாம் எந்த அடிப்படையில் - என்ன வழிமுறையில் அடையப் போகின்றீர்கள்?*

பதில் : 2016இற்குள் தீர்வு என்பது சம்பந்தனின் தனிப்பட்ட கருத்து. ஆன்டால் தமிழ் மக்களுக்கான தீர்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது நாங்கள் கூட்டாக எடுத்த முடிவு. தமிழ் மக்களுக்கான குறைந்தபட்சத் தீர்வாக, வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம், தமிழ் மக்களின் இறைமையின் அடிப்படையில் அவர்களுக்கு இருக்கக் கூடிய சுயநிர்ணய உரித்தின் தத்துவத்தின் அடிப்படையிலான சுயாட்சி என்பன இருக்கவேண்டும். இவ்வாறான தீர்வு ஏற்பட்டால்தான் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

இதனை எவ்வாறு அடைந்துகொள்ள வேண்டும் என்பதை அடுத்தடுத்த கட்டமாக நாங்கள் பேச வேண்டும். அந்தத் தீர்வை 2016, 2017 இற்குள் கொண்டு வரமுடியுமா? இலங்கை அரசுடன் மாத்திரம் பேசுவதன் மூலம் சாத்தியமாகக்கூடியதா? சர்வதேச ஆதரவு முக்கியமா? சர்வதேச ஆதரவுத் தளம் முக்கியம் எனில் அதனை எவ்வாறு உருவாக்கிக்கொள்வது? பேச்சுக்கு மூன்றாம் தரப்பின் நடுவப்பணி தேவையா? என்ற கேள்விகளுக்கு விடை காணப்படவேண்டும். இந்த விடயங்களை முன்னகர்த்திச் செல்வதற்குரிய வியூகங்கள் - மூலோபாயம் வகுக்கப்படவேண்டும். நாங்கள் ஒரு கால அவகாசத்தை எல்லையாகப் போட்டு அவற்றைச் செய்யலாம்.

தீர்வுக்கான அடிப்படைகள் இவ்வாறு இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். அதனை அடைவதற்கு - எடுத்துக் கொ[illegible]வதற்கு, அதற்கான வழிமுறைகள் என்ன என்பது தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகவே இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை எதிர்காலத்தில் ஆராய்ந்து செயற்படுத்தும்.

*கேள்வி: இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காட்டிலும், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான, மீள்குடியேற்றம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனோர் விவகாரம் என்பவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாமையினால், கூட்டமைப்பின் மீது மக்களுக்கு அதிருப்தி இருக்கின்றது. இனி வரும் காலங்களில் இவற்றை எவ்வாறு செயற்படுத்தப் போகின்றது கூட்டமைப்பு?*

பதில்: இந்த விடயத்தில் நாங்கள் முன்னரே சில தவறுகளை விட்டிருக்கின்றோம். என்னைப் பொறுத்தவரையில், கூட்டமைப்பின் முன்னைய நடவடிக்கைகள் தொடர்பி[illegible] அதிருப்திகள் இருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலின்போது நாங்கள் சில முக்கிய விடயங்களை, எழுத்துமூலமோ அல்லது வேறு விதத்திலோ மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்க முடியும். ஆட்சி மாற்றத்துக்குப் பின்பாக மீள்குடியமர்வு என்பது முழுமையாக நடைபெற வேண்டும் என்று கேட்டிருப்போமாக இருந்தால், இன்றைக்கு மீள்குடியமர்வுக்குக் கொள்கை ரீதியிலான ஒரு முடிவு கிடைத்திருக்கும்.

அந்தக் கால கட்டத்தில் நாங்கள் தவறு செய்திருக்கின்றோம். நாங்கள் எந்தவிதமான முன்நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. நாங்கள் ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் மக்களை வாக்களிக்குமாறு கோரினோம். மக்களும் ஓர் ஆட்சி மாற்றம் தேவை என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில், எங்களுடைய மக்களின் முக்கியமான விடயங்களை வென்

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தக் கூட்டணியினராலேயே...



றெடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் கோரிக்களை முன்வைத்திருக்கவேண்டும். நான் நம்புகின்றேன். அந்த விடயத்தில் பிழை விட்டிருக்கின்றோம்.
யாராவது சொல்லக்கூடும். நாங்கள் அப்படிச் செய்தால், மைத்திரி வென்றிருக்க மாட்டார் என்று. மக்களினுடைய விடயத்தை கையாளப் போகின்றோமா? அல்லது தேசிய அடிப்படையிலான விடயம் முதன்மையாக இருக்கின்றதா? இந்தக் கேள்வி இன்னும் இருக்கிறது.
மீள்குடியமர்வு என்பது எமக்கு மாத்திரம் உரித்தான விடயமல்ல. முஸ்லிம் மக்கள், ஒரு பகுதி சிங்கள மக்கள்கூட மீள்குடியேற்றம் பற்றிப் பேசுகின்றார்கள். ஆகவே மீள்குடியேற்றம் என்பது பொதுவான பிரச்சினை. இதனை யாரும் எதிர்க்கப்போவது கிடையாது. தற்பொழுது ஆட்சி மாற்றத்தை உருவாக்கியுள்ளோம். ஆட்சி மாற்றம் வந்ததன் பின்னர் நூறு நாள் வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. அந்த நூறு நாள் வேலைத் திட்டத்தில் எங்களது காணிகளின் விடுவிப்பு சம்பந்தமாக எந்த விடயமும் உள்ளடக்கப்பட வில்லை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வற்புறுத்தலின் பிரகாரம் இரண்டு காணித் துண்டுகள் விடுவிக்கப்பட்டன. சம்பூரிலும் வலிகாமத்திலும் அவை விடுவிக்கப்பட்டன. இன்னமும் பல ஆயிரக்கணக்கான காணிகள் விடுவிக்கப்படவேண்டும். அவை விடுவிக்கப்படுமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் கொள்கை ரீதியாக இந்த விடயத்தில் முடிவெடுக்கப்படவில்லை.
ஆட்சி மாற்றத்தின் பின்னர், அரசு மாறியிருக்கின்றது. அதற்காக தமிழ் மக்கள் தொடர்பான இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல் மாறியிருக்கின்றதா என்றால், அதில் பெரிய மாற்றம் இல்லை. தற்போது அமைந்துள்ள புதிய அரசை கூட்டமைப்பு எவ்வாறு கையாளப் போகின்றது என்பது நெருக்கடியான விடயம். நாங்கள் எதிர்கொள்வது ஒன்றிரண்டு பிரச்சினைகள் மட்டுமல்ல.

*கேள்வி: தேசிய அரசில் கூட்டமைப்பு பங்கெடுக்குமா? பங்கெடுக்க வேண்டுமா? அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? புதிய அரசுடன் எவ்வாறு கூட்டமைப்பு செயற்படும் என்று, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் என்ற வகையில் நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?*
பதில்: சிங்கள அரசுத் தலைவர்கள் மீது நம்பிக்கை கொண்டோ, அல்லது தேசியக் கட்சிகளின் கொள்கைகளில் நம்பிக்கை வைத்தோ நாங்கள் வேலைகளை நகர்த்தினால் அவை தோல்வியில்தான் முடியும். அதனூடாக எதனையும் செய்ய முடியாது.
அமைச்சுப் பதவியினூடாக எதுவும் கிடைக்காது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இதனூடாக எந்தத் தீர்வையும் காணமுடியாது. இதனூடாக தீர்வைக் காண முடியுமாக இருந்தால் டக்ளஸ் தேவானந்தா அதனை எப்போதோ சாதித்திருப்பார். மகேஸ்வரன் ஏன் திருமதி மகேஸ்வரன்கூட சாதித்திருக்கலாம். இவர்கள் எல்லோரும் பல வருடங்களாக அமைச்சர்களாக இருந்தார்கள். அவர்களால் சாதிக்க முடியவில்லை. எதிர்காலத்திலும் சாதிக்க முடியும் என்று நம்பவில்லை.
சர்வதேச பங்களிப்பு - மேற்பார்வையின் கீழ் பேச்சு நடக்க வேண்டும். அதனூடாகத்தான் ஏதாவது கிடைக்கும்.
புதிய அரசமைப்புப் பற்றியும் பேசப்படுகின்றது. அதை உருவாக்குவது என்றால், நல்லாட்சிக்கான விடயங்கள் சேர்க்கப்படவேண்டும். தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாகவும் அரசமைப்பில் உள்வாங்கப்படவேண்டும். நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதற்கு முன்பாக, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த முடிவுகள் எட்டப்பட்டால் மாத்திரமே புதிய அரசமைப்பில் அவற்றைச் சேர்த்துக்கொள்ள முடியும்.

*கேள்வி: அமெரிக்காவின் இலங்கை தொடர்பான போக்கு மாற்றமடைந்திருக்கின்றது. கடந்த வாரம் இலங்கைக்கு வந்து சென்ற அமெரிக்காவின் நிஷா பிஸ்வால், உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லியிருக்கின்றார். இது கூட்டமைப்பு எதிர்த்த ஒரு விடயம். இனி என்ன செய்யப் போகிறீர்கள்?*
பதில்: நான் இந்தப் பேச்சில் பங்கெடுக்கவில்லை. தேர்தல் காலத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி இருக்கின்றோம். நிஷா பிஸ்வாலுடனான சந்திப்பில், உள்ளக விசா

> **முழுக்க முழுக்க அமெரிக்கா தனது சொந்த நலன்களிலிருந்து காய்களை நகர்த்துவது பச்சையாகத் தெரிந்த விடயம். அமெரிக்காவுக்கு இலங்கைக்கு சார்பாக நடக்க வேண்டிய தேவைகள் வந்திருக்கின்றது. அந்தத் தேவைகளைப் புரிந்து கொண்டு நாங்கள் தான் அடுத்த கட்டத்துக்குத் தயாராகவேண்டும், நகரவேண்டும். முடியுமா முடியாதா என்பதற்கு அப்பால் நகர்த்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். அதனைச் செய்யாமல் விட்டால் அல்லது தடையாக இருந்தால் மக்கள் எங்களை மன்னிக்க மாட்டார்கள்.**

ரணையை நிராகரிக்கின்றோம் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சொல்லியிருக்க வேண்டும்.
குற்றவாளிகளைக் கொண்டே குற்றங்களை விசாரணை செய்வது உலகத்தில் இல்லாத நடைமுறை. ஐ.நா. விசாரணை அறிக்கையில் என்ன இருக்கின்றது என்பது தெரியாது. அந்த அறிக்கை, எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தவில்லை என்றே வைத்துக் கொண்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக்கொள்ளப் போகின்றதா என்ற கேள்வி வரும்.
அந்த அறிக்கை உள்ளக விசாரணைக்கு பரிந்துரை செய்கின்றது. உள்ளக விசாரணை இலங்கையில் சரிவராத ஒன்று. விசாரணையின் நோக்கம், போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்களைத் தண்டிப்பது. இரண்டாவது போர்க் குற்றத்துக்கான காரணிகளை இனங்கண்டு அது மீண்டும் ஏற்படாமல் இருக்க வழி செய்வது. இலங்கையில் நடக்கும் ஓர் விசாரணையின் ஊடாக இவை சாத்தியப்படுமா ? இல்லை.
எனது அரசியல் அறிவிற்கு எட்டியவரையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்ட இந்த விசாரணை அறிக்கையை ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கு பாரப்படுத்த முடியும். அங்கு அது நிராகரிக்கப்படலாம். இலங்கை அரசு ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை. அதனால் எங்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த முடியாது. என்று இலங்கை சொல்லலாம். ஐ.நா. பாதுகாப்பு சபையும் நிராகரிக்கலாம்.
அப்படி நிராகரித்தாலும் ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கு இலங்கை விவகாரம் போவது என்பதே மிக முக்கியமான விடயம். அதனை நாங்கள் செய்யவேண்டும். பாதுகாப்பு சபையினால் அந்த அறிக்கை நிராகரிக்கப்பட்டாலும், 4 வருடங்களுக்குப் பின்னர் பாதுகாப்பு சபையினால் அது மீளவும் பரிசீலிக்கப்படலாம்.
அடுத்த மாற்று வழியாக இருப்பது, இலங்கை அரசுக்கு எதிராக, சர்வதேச விசாரணைக் குழுவை (ரிபியூனல்) உருவாக்குவது. இது ஏற்கனவே பல நாடுகளில், நடந்திருக் கிறது. நாம் கவனமாகக் காய்களை நகர்த்திச் சென்றால் இலங்கை அரசுக்கு எதிரான விசாரணைக் குழுவை உருவாக்க முடியும். அந்த முயற்சிகளைச் செய்ய வேண்டும். தமிழ் மக்களால் தேர்தலில் ஆணை வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே இதனைச் செய்ய முடியும்.

*கேள்வி: உள்ளகப் பொறிமுறையை கூட்டமைப்பு நிராகரித்தால், அமெரிக்கா தனது முடிவை மாற்றிக் கொள்ளும் என்று எதிர்பார்கின்றீர்களா?*
பதில்: அமெரிக்கா மாற்றவேண்டும் என்ற அவசியமில்லை. அமெரிக்கா மாற்றும் என்று எதிர்பார்க்கவும் முடியாது. முழுக்க முழுக்க அமெரிக்கா தனது சொந்த நலன்களிலிருந்து காய்களை நகர்த்துவது பச்சையாகத் தெரிந்த விடயம். அமெரிக்காவுக்கு இலங்கைக்கு சார்பாக நடக்க வேண்டிய தேவைகள் வந்திருக்கின்றது. அந்தத் தேவைகளைப் புரிந்து கொண்டு நாங்கள் தான் அடுத்த கட்டத்துக்குத் தயாராகவேண்டும். நகரவேண்டும்.
முடியுமா முடியாதா என்பதற்கு அப்பால் நகர்த்துவதற்கு முயற்சி செய்யவேண்டும். அதனைச் செய்யாமல் விட்டால் அல்லது தடையாக இருந்தால் மக்கள் எங்களை மன்னிக்க மாட்டார்கள்.
நாடாளுமன்றத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் 10 பேரைக் கொண்ட பங்காளிக் கட்சியாக இருக்கின்றது தமிழரசுக் கட்சி. ஆகவே, முன் முயற்சி எடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழரசுக் கட்சிக்கு இருக்கின்றது. இது தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய கடமையும் அதற்கு இருக்கிறது. அடுத்த கட்டமாக என்ன செய்யப் போகின்றோம் என்ற விடயத்தை மூடு மந்திரமாக வைத்திருக்க முடியாது. தாங்கள் என்ன பாதையில் செல்லப் போகின்றோம் என்பதை தமிழரசுக் கட்சி மக்களுக்குத் தெளிவாகச் சொல்லவேண்டும். தவறுவார்களாக இருந்தால், ஏனைய மூன்று கட்சிகளுக்கும் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களது தெளிவான முடிவை மக்களுக்குச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, முதலாவது நல்ல விடயம், தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுத்து எல்லோரும் கூட்டாக நாங்கள், என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றோம் என்பதைச் சொல்வது.
தமிழரசுக் கட்சி சரியான பாதையைக் காட்டத் தவறுமாக இருந்தால் ஏனைய மூன்று கட்சிகளும், தமது நாடாளுமன்ற - மாகாண சபை உறுப்பினர்களை இணைத்து, அமெரிக்காவுக்கு, சர்வதேசத்துக்கு, மக்களுக்கு உள்ளக விசாரணையை அல்லது சர்வதேச பங்களிப்புடனான உள்ளக விசாரணையை ஏற்க முடியாது என்று சொல்லவேண்டும்.

*கேள்வி: உங்களின் தேர்தல் அறிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் என்றுதானே குறிப்பிட்டிருக்கின்றீர்கள் ?*
பதில்: அந்த விடயத்தில், நான் சம்பந்தனிடம் ஒரு விடயத்தை வலியுறுத்திக் கூறியிருந்தேன். உள்ளகப் பொறிமுறையை நிராகரித்து, சர்வதேச விசாரணை என்ற ஒன்றையே வலியுறுத்த வேண்டும் என்றேன். அறிக்கை வராத நிலையில் நாங்கள் அவசரப்பட்டு அதனைச் சேர்த்துக் கொள்ளவேண்டாம் என்றார் சம்பந்தன். என்னுடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில், அந்த விடயத்தில் தெளிவாக இருக்கின்றேன்.

*கேள்வி: கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச பங்களிப்புடனான உள்ளக விசாரணையை ஆதரித்துள்ளாரே?*
பதில்: சுமந்திரன் கனடாவுக்கு - பிரிட்டனுக்கும் சென்றபோது தமிழ் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார். ஐ.நா. விசாரணை முடிந்து விட்டது. அடுத்த கட்டம் என்ன என்பதுதான் கேள்வி. உள்ளகப் பொறிமுறை ஒன்றின் மூலமாக அந்த விசாரணை முடிவுகளை நடைமுறைப் படுத்தவேண்டும். அப்படியில்லாவிட்டால், விசாரணை அறிக்கைக்கு ஒன்றும் நடக்காது. அறிக்கையை அலுமாரியில் வைத்து விட்டுப் போவார்கள். ஆகவே எங்களுக்கு இருக்கக் கூடிய ஒரே வழி உள்ளகப் பொறிமுறைதான் என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார். அவர் அடிப்படையில். வேறு மனோநிலையில் இருக்கின்றார். சம்பந்தனும் அப்படித்தான் இருக்கின்றாரா என்று தெரியாது. தங்களது நிலைப்பாட்டின் அடிப்படையில் கூட்டமைப்பை எப்படி வழி நடத்தப் போகின்றோம் என்பதை அவர்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்.
என்னைப் பொறுத்த வரையில், உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக் கொண்டால், ஐ.நா. கொடுக்கும் அறிக்கையின் பிரகாரம் விசாரணை நடக்கும். இதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எதுவுமே எட்டப்படாது.

*கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்யும் விடயம், தேர்தலுக்கு முன்னரான சில காலங்களில் மாத்திரம் பேசப்படும். அதனுடன் ஒரு சில நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர் அந்த விடயம் பற்றிய பேச்சே இருக்காது. ஏன் இந்த நிலை? கட்சியாகப் பதிவு செய்வதில் என்ன தடங்கல்? ஏன் தொடர் நடவடிக்கை இல்லாமல் இருக்கின்றது?*
பதில் : நீங்கள் சொல்வது போல இது தேர்தலுக்கு அண்மித்து வரக்கூடிய நிகழ்வு அல்ல. 2002 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, நானும் எனது கட்சியும் வலியுறுத்தி வருகின்ற விடயம். இதற்காக, தேர்தலுக்கு முற்பட்ட காலங்களில் நான் நிறைய விடயங்களைப் பேசியிருக்கின்றேன்.
இதில் உள்ள ஒரே ஒரு தடங்கல், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி கூட்டமைப்பின் பதிவுக்குத் தயாரில்லை என்பதே. இன்றும் அவர்கள் தயாராக இல்லை. 4 கட்சியும் சேர்ந்து கூட்டாக இருப்போம். தேர்தல் காலத்தில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவோம். அப்படியில்லா விட்டால், நாங்கள் ஒவ்வொருவரும் தனித்து தனித்து போட்டியிட வேண்டும்.
தமிழ் மக்களின் உரிமை சம்பந்தமான பிரச்சினையில் நாங்கள் கூட்டாகச் செயற்பட வேண்டும் என்று விரும்புகின்றோம். இப்போது, பல்வேறுபட்ட சிறிய போராட்டங்களாக இருந்தாலும், அதை யார் ஒழுங்கமைத்திருந்தாலும் எல்லோரும் பங்கெடுக்கின்றனர். கூட்டாகச் செயற்படுகின்றோம். அந்த வகையில் கூட்டாக இருப்பது நல்ல விடயம்தான். ஆனால் பதிவு என்று வருகிறபோது தமிழரசுக் கட்சி அதற்குத் தயாராக இல்லை.
சில மாதங்களிற்கு முன்னர் வவுனியாவில் நடந்த தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வதில்லை என்று முடிவு எடுத்திருக்கின்றார்கள்.
புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற கட்சிகள் இதனைப் பதிவு செய்ய வேண்டும் என்று சில முயற்சிகள் எடுத்தபோதும், அதுவும், தமிழரசுக் கட்சியின் முயற்சியின் காரணமாக தடைப்பட்டுவிட்டது. இந்த மூன்று கட்சிக்குள் ஒரு சிலர் மூளைச்சலவை செய்யப்பட்டு அவர்களும் அதனை நிராகரித்தன் காரணமாக கூட்டமைப்பை பதிவு செய்ய முடியவில்லை.

*கேள்வி: கூட்டமைப்பினுள் ஒற்றுமையில்லை என்று சொல்லப்பட்டு வருகின்றதே. ஏன் அதை போக்க முயற்சிக்கவில்லை. தமிழரசுக் கட்சி முட்டுக்கட்டை என்றால் ஏனைய மூன்று கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டியதுதானே? தமிழரசுக் கட்சியை இந்த இணக்கத்துக்குள் கொண்டு வருவதற்கு என்ன தடை இருக்கின்றது?*
பதில்: தமிழரசுக் கட்சியுடன் பேசுவதால் பயனில்லை. ஏனையோருடன் பேச வேண்டும். ஏனையோரில் ஒரு சிலர் தமிழரசுக் கட்சியினால் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளவர்கள். ஆகவே எதிர்காலத்தில் எவ்வாறு இயங்கப் போகின்றோம் என்பதை இனிமேல் தான் தீர்மானிக்க வேண்டும்.

*கேள்வி : எதிர்வரும் 30 ஆம் திகதி (இன்று) மூன்று கட்சிகளும் (தமழிரசுக் கட்சி தவிர) கூடி கொழும்பில் பேசவுள்ளதாகவும், இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் இணைத்து பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உண்மையா?*
பதில்: ரெலோ, வவுனியாவில் ஒரு கூட்டத்தை நடத்தியிருந்தது. கூட்டத்தில் சில முடிவுகளை எடுத்திருப்பதாக அவர்கள் எனக்குக் கூறினார்கள். அந்த முடிவுகள் தொடர்பாக எங்களுடன் பேச வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களின் கோரிக்கைக்கு அமைய அந்தச் சந்திப்பு எனது வீட்டில் நடந்தது. தாங்கள் எடுத்த முடிவுகள் சம்பந்தமாக, என்னுடனும் சித்தார்த்தனுடம் பேச வேண்டும் என்று கேட்டு, ஒரு சில விடயங்களைப் பேசினார்கள். ஆனால் அவை தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படவில்லை. தொடர்ந்து பேசுவோம் என்று முடிவெடுத்தோம்.
கூட்டமைப்புக்கு வெளியே உள்ள கட்சிகளை இணைப்பது பற்றி ஆராயவில்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமாக இருந்தால், யாரெல்லாம் ஒத்து வருகின்றனரோ அவர்கள் அனைவரையும் இணைத்துச் செல்ல வேண்டும். அதில் எந்தத் தவறும் கிடையாது. அது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கலாம் அல்லது போராளிகளாக இருக்கலாம் அவர்களை இணைப் பதில் தவறில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடல் தொடர்கிறது!

## அனைத்துலக காணாமற்போனோர் தினம் இன்று...!

தட்சா.ஜோ

எத்தனையோ தினங்கள் வந்துபோகின்றன. அப்பிடித்தான் இன்றும். இன்று அனைத்துலக காணாமற்போனோர் தினம். உலகெங்கும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. உலகின் பல நாடுகளிலும் காவற்துறையினராலோ அல்லது பாதுகாப்புப் படையினராலோ பல்வேறு காரணங்களுக்காகவும் கைது செய்யப்பட்டு காணாமற்போவோர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கொஸ்டாரிக்கா நாட்டில் 1981இல் தொடங்கப்பட்ட கைதாகிக் காணாமற்போவோரின் உறவினர்களின் கூட்டமைப்பு என்ற அரச சார்பற்ற அமைப்பினால் இந்தத் தினத்துக்கான அடித்தளம் இடப்பட்டது.

கைதாகி காணாமற்போவோரின் உறவினர்களின் கூட்டமைப்பு எனும் அரச சார்பற்ற அமைப்பு 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது லத்தீன் அமெரிக்காவில் சந்தேக நபர்கள் ரகசியமாக் கைது செய்யப்படும் முறைமையை எதிர்த்து முதன் முதலாக கோரிக்கை வைத்தது. கொஸ்டாரிக்காவில் இந்த அமைப்பு முதன்முதலில் உருவாக்கப்பட்டது. பின்னர் சர்வதேச மன்னிப்பு சபை, ஐ.நாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்பனவும், காணாமல் செய்யப்படுவோருக்கு எதிராகப் போராடத் தொடங்கின. இதையடுத்துக் காணாமல்போதல் சம்பவங்கள் தொடர்பில் மக்களிடையேயும் ஓரளவு விழிப்புணர்வு ஏற்பட்டது.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் எனப் பலரும் பல விதமான காரணங்களால் காணாமற் போய்விடுகிறார்கள். இந்த விடயத்தில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு அனுசரிக்கப்படும் ஒரு தினமே சர்வதேச காணாமற்போனோர் தினம். இந்தத் தினத்தின் பின்னணியில் இருக்கும் மனவலி கொடுமையிலும் கொடுமையானது!

அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் குறிப்பாக அனைத்துலக மன்னிப்புச் சபை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியன இந்த இரகசியக் கைதுகளுக்கு எதிராக அதிக அக்கறை எடுத்துச் செயற்படுகின்றன. அனைத்துலக காணாமற்போனோர் நாள் இந்த அமைப்புகளின் சேவை குறித்து பொதுமக்களுக்கு விளக்கவும் அவர்களுக்கு இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நிதி மற்றும் தன்னார்வலர்களை சேர்ப்பதற்கும் உதவுகிறது.

ஒரு நபரை விரும்பாத ஓர் அரசியல் தலைமை அல்லது ஓர் இராணுவத் தலைமை அவரை அவரது குடும்பத்திலிருந்து அல்லது வீட்டிலிருந்து தூக்கிச்சென்று விட்டாலோ அல்லது கைது செய்து விட்டாலோ, பல சமயங்களில் அதன் பின்னர் அவருடன் தொடர்பு கொள்வதற்கு அவர்களது குடும்பத்துக்கு எந்தவிதமான வழியும் இல்லாமல் போய்விடுகிறது. அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதுகூட தெரியாமல் போய்விடுகிறது. இதையே 'காணாமற் போதல்' என்கிற சொல் குறிக்கின்றது.

சில நாடுகளில் இந்தக் காணாமற்போகச் செய்வதையே ஓர் ஆயுதமாக உபயோகிக்கிறார்கள். 1998ஆம் ஆண்டிலும் 2006ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாணத்திலும்கூட இந்த ஆயுதம் பயன்படுத்தப்பட்டது. ஜனநாயக முறைமையை அல்லது விடுதலைச் சுதந்திரத்தைக் கோருபவர்களை அடக்கவோ, குற்றசெயல்களில் ஈடுபடுபவர்களை அடக்கவோ அல்லது பயங்கரவாதத்தை அடக்கவோ இந்தக் காணாமற்போதலை ஆயுதமாக்குகின்றனர்.

மனிதர்கள் காணாமற்போவது என்பது இன்றைக்கு நேற்று நடக்கும் விடயமில்லை. வரலாற்றுக் காலங்களில் நாடுகள் மற்றும் இனங்களின் இடையே நடந்த போர்களின் போதும் பலர் காணாமற்போய் இருக்கிறார்கள். முதலாம் உலக போர் காலக் கட்டத்தைவிட இரண்டாம் உலகப் போர் காலத்தில் லட்சக் கணக்கானவர்கள் காணாமற்போயுள்ளனர். இரண்டாம் உலக போரின் போது ஹிட்லரின் கொடூர நடவடிக்கையால் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்கள் காணாமற்போயிருக்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் சுவீடனை சேர்ந்த ரவுல் வாலண்பெர்க் என்பவர் காணாமற்போவோர் விடயத்தில் கூடுதல் அக்கறையுடன் செயல்பட்டுள்ளார். இவர் 20ஆம் நூற்றாண்டின் சிறந்த மனிதாபிமானி என வர்ணிக்கப்பட்டார். 1945, ஜனவரி 17இல் ரவுல் வாலண்பெர்க் ரஷ்ய படையால் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் அவரும் காணாமற்போனோர் பட்டியலில் அகப்பட்டுவிட்டார். இவர் அதன் பிறகு என்ன ஆனார் என்பது இன்றும் மர்மமாகவே உள்ளது. காணாமற்போனோர் தினத்தில் ரவுல் வாலண்பெர்க் குறிப்பாக நினைவு கூரப்படுகிறார்.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த 30 ஆண்டு கால உரிமைப் போராட்டத்தின் போது தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் காணாமற் போயிருக்கிறார்கள். ஊடகவியலாளர்கள் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர். இப்போதும் அவர்களைத் தேடிப் போராட்டங்கள் நடந்துகொண்டேதான் இருக்கின்றன. ஆணைக்குழுக்கள் விசாரிக்கின்றன. தேடல்கள் தொடர்கின்றன. ஆனால் தீர்வுகள் எவையும் கிடைக்கவில்லை.



காணாமற்போனவர்கள் இரகசிய சிறை கூடங்களில் அடைக்கப்பட்டோ அல்லது இரகசியமாக படுகொலை செய்யப்பட்டோ இருக்கக்கூடும் என்ற அச்சம் இருந்தாலும் திடீரென அவர்கள் தங்கள் முன் வந்து நின்று விடக்கூடும் என்கிற நம்பிக்கை அவர்களது உறவினர்களைத் தொடர்ந்து இயக்கிக் கொண்டே இருக்கின்றது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு முடிவுற்ற போரின்போதும் அதற்கு முன்னரும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமற் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அதற்குக் காரணமானவர்கள் எவரும் இதுவரையில் கண்டறியப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை.

ஆர்ஜென்ரீனாவில் 1976–83 காலப் பகுதியில் 30 ஆயிரம் பேர் கடத்தப்பட்டார்கள். அகதிகளுக்கான முகாம்களில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார்கள். போதைமருந்துக்கு ஊக்கப்படுத்தப்பட்டார்கள். சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு விமானங்களிலிருந்து ரியோ தொ ல பிளட்டா நதிக்குள் வீசப்பட்டார்கள். 1983ஆம் ஆண்டு 'நெவர் எகெய்ன்' எனும் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டபோது, ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுக்கள் அன்றைய இராணுவ அ[illegible]சியாளர்களின் மீது சுமத்தப்பட்டன. 20 வருடங்களுக்குப் பிறகே இதற்குரிய தண்டனை இராணுவ அதிகாரிகள் சிலருக்கு கிடைக்கப்பெற்றது.

இதேபோன்று பொஸ்னியா, கம்போடியா, ஈராக், கொரியா, ஆர்மெனியா, பாகிஸ்தான், துருக்கி, பிரேசில், சிலி, சஹாரா, உகண்டா, கொசோவா, ரஷ்யா, செனகல் என மேலும் பல இடங்களில் பலர் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர். காலம் கடந்து இந்தக் குற்றத்திற்காகச் சிலருக்குத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இன்று காணாமற்போனோர் நினைவு நாள். உங்களைச் சுற்றியும் இருக்கலாம் காணாமற்போனவர்கள், அவர்களின் குடும்பத்தினர். எமது நிறுவனத்திலும் ஒரு ஊடகவியலாளரை இன்றுவரை காணவில்லை....! காணாமல் ஆக்கப்பட்டுவிட்டார்...! தேடல் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org